கல்கி


யாத்திரை

இந்த இதழில் ஆரம்பம்





ஸ்வஸ்திக்



பர்:ப்யூம்டு காஸ்டர் ஆயில்

படியாத கேசத்தையும் படியச் செய்கிறது—நாள் முழுவதும் மழமழப்பாய் வைக்கிறது

நேர்த்தியாக வாரிவிடப்பட்
கவர்ச்சி மிக்க கேசம்...
கண்ணைக் கவரும் பளபளப்
புள்ள கரும் கேசம்—நாள்
முழுவதும் மழமழப்புடன்
திகழச் செய்வது ஸ்வஸ்திக்
பர்:ப்யூம்டு காஸ்டர் ஆயில்

Shilpi SOM 24 Tam

ஸ்வஸ்திக் ஆயில் மில்ஸ் லிட்., பம்பாய

கல்கி




நமது சகோதர மானிடர்களைப் பொறுத்த மட்டில் நாம் செய்யக்கூடிய மிகப் பெரிய பாவம் அவர்களை வெறுப்பதல்ல. அவர்களை அலட்சியப் படுத்துவது தான். —பெர்னுட்ஷா

பொருளடக்கம்

விசுவாவசு மாசி 2 ❋ பிப்ரவரி 13

கேரளம் தந்த பாடம்	—	3
ராஜாஜி என்ன சொல்கிருர்!	—	4
ஜீவா நினைவு நாள்	—	7
நேசக்கரம்	—	9
இந்தியா பாகிஸ்தான்...	—	13
அரசியலில் தனி மனிதன்	—	16
நவரச நிகழ்ச்சிகள்	—	18
அசலும் நகலும்	—	22
முருகன் புஜங்கப் பாமாலை	—	29
காலச்சக்கரம்	—	35
யாத்திரை	—	42
ஜீவகீதம்	—	50
ராணுவ சம்பிரதாயங்கள்	—	58
வெற்றித் திருநகர்	—	62
அகர சாதனை	—	70
சேவைக்கு ஒரு சகோதரி	—	81
அண்ணு (குறுநாவல்)	—	87
ஏதேனும் ஒன்று	—	114

''கல்கி''யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்களே; சம்பவங்களும் கற்பனையே


ரேஷன் கார்டு
கேரள எரிமலை
"இவையெல்லாம் ஒரு கட்டாகக் கட்டப் படாதவரையில் எனக்குக் கவலை யில்லை...."
எதிர்க் கட்சிகள்
PK

மலர் 25 ● இதழ் 29



கேரளம் தந்த பாடம்

ராஜாஜி

கஷ்டத்துக்கு ஆளானவர்கள் பலாத்காரங்களில் இறங்கிய பின்னரே சரியான நடவடிக்கை எடுப்பதெனச் சர்க்கார் வைத்துக் கொண்டிருப்பது மிகவும் துயரகரமானது. பலாத்காரத்தால்தான் தவற்றைத் திருத்த முடியும் என்று ஏற்பட்டுவிட்டதால் தீமையே விளைகின்றது. இப்போது கேரளத்தில் இதற்குப் புது உதாரணத்தைப் பார்க்கிறோம். அறிவுடைய பெருமக்கள் பலரும் உணவு தானியங்களுக்கு மண்டலக் கட்டுப்பாடும், உள்ளூர்க் கட்டுப்பாடுகளும் விதிக்கக் கூடாது என்று வலியுறுத்தியபோதிலும் உணவு விவகாரத்தில் முழு அதிகாரமும் மேற்கொண்ட மத்திய சர்க்கார் அந்தக் கோரிக்கையைக் கேளாமலே இருந்து வந்தனர். இப்போது நாம் கேள்விப்படுவது என்ன? பல பிரதேசங்களிலிருந்தும் கேரளத்துக்கு அரிசி அனுப்பப்படுகிறது. இன்னமும் முடிந்த அளவுக்கு உதவி செய்வதாக வாக்களித்திருக்கின்றனர். இந்த முடிவுகளுக்குக் கேரள மக்களின் பலாத்கார நடவடிக்கைகளே காரணம்.

இந்தியாவுக்குள் பாகிஸ்தான் ராணுவத்தினர் ஊடுருவல் செய்தபோது நாம் பாகிஸ்தானுடன் பேச்சு வார்த்தை நடத்த இணங்காதது ஏன்? ஆக்கிரமிப்பு நிலை உள்ளவரையில் காச்மீரத்தில் வாக்கெடுப்பு பற்றி ஆலோசனை நடத்த முடியாது என்று நாம் நிச்சயமாகக் கூறியது ஏன்? பலாத்காரத்துக்குப் பணிந்து கொடுக்கலாகாது, பயமுறுத்தலுக்கு இணங்கி விடக்கூடாதென்ற அறிவுடைய நீண்ட காலக் கொள்கையை ஒட்டியே இவ்வாறு கூறினோம். ஆயினும் இந்த ரீதியைப் பின்பற்றிக் கேரளம் பலாத்காரத்தில் இறங்கியதால் அதற்கு உடனடியாகச் சர்க்கார் உதவியிருக்கக் கூடாது என்று புத்தியுள்ள எவரும் கூற மாட்டார்கள். காச்மீரம், பாகிஸ்தான் பற்றிய விஷயம் எப்படியாயினும் நம் உள்நாட்டு மக்கள் உணவில்லாத கஷ்டத்துக்கு ஆளான போது அவர்களைக் காக்க முன்வராமல், 'பலாத்காரத்துக்குப் பணிய மாட்டோம்' என்ற கொள்கையைப் பிடித்துக் கொண்டிருந்தால் அது பொருந்தாது. ஆயினும், பலாத்காரத்துக்கு மட்டுமே பணிவது என்ற போக்கைக் கைவிட வேண்டும். இனியேனும் அடிப்படையில் தவறான உணவுக் கொள்கையை விடுத்து, உடனே சரியான நடவடிக்கை எடுக்க வேண்டும். இப்போது கேரள விஷயமாகச் செய்த குற்றத்தை மீண்டும் செய்யாமல் உரிய காரியங்களைச் செய்ய வேண்டும். இதில் மிக முக்கியமானது இந்தியா முழுவதிலும் இயல்பாக உணவுப் பொருள்கள் போக்குவரத்து நடைபெறுவதற்குள்ள தடைகளையெல்லாம் நீக்க வேண்டும்; சர்க்கார் புகுந்து செய்கிற அதிக்கிரமங்களை நிறுத்த வேண்டும்;- உணவு வியாபாரத்தில் ஊக்கத்தைக் குறைக்கலாகாது; இடையூறு செய்யும் கொள்கைகளை மறைமுகமாகவும் உத்தரவிடக் கூடாது. உபரியாக விளையும் ராஜ்யங்களில் விலைகளைக் கட்டுப்படுத்த வேண்டும் என்று எண்ணிக் கொண்டு அதற்காக மற்ற ராஜ்யங்களில் செயற்கைப் பஞ்சத்தை உண்டாக்குவது பாபம். இந்தத் தந்திரங்கள் பலன் தரமாட்டா. இந்தியா முழுவதும் ஒன்றே என்பதை நடைமுறையில் உணர்வோம். அரிசி எங்கு இயற்கையாகச் செல்ல வேண்டுமோ அங்கே செல்லவிடாமல் தடுப்பது குற்றம் எனக் கருதுவோம். மக்கள் — ஆணும் பெண்ணும் குழந்தையும் — பசியால் வேதனைப் பட்டு அரைப் பட்டினி கிடக்கவும், வயிறு நிரம்ப உண்டுவிட்டுத் தங்களிடம் உபதேசம் செய்பவர்களிடம் அவர்கள் துவேஷம் கொள்ளவும் வழி செய்கிற கட்டுப்பாடுகளை விதிக்கும் சர்க்காரை விட, இக்கட்டுப்பாடுகளை மீறி உணவு தானியங்களைக் கள்ளக் கடத்தல் செய்யும் விவசாயிகளே நாட்டின் நலனுக்கு

அதிகம் சேவை செய்கிறார்களோ என்றுகூட எண்ணத் தோன்றுகிறது.

எப்படியோ கேரளத்தில் சர்க்கார் பலாத்காரத்துக்கு வளைந்து கொடுத்துவிட்டது. அது வேறெதுவும் செய்வதற்கில்லாத சந்தர்ப்பம் இது. மற்ற எல்லா இடங்களிலிருந்தும் கேரளத்துக்கு அரசாங்கம் அரிசி அனுப்புகிறது. இதனால் நாட்டு அரசியலில் ஏற்பட்ட விளைவு என்ன? போலீஸ் ஸ்டேஷன்களையும், ரயில்வே சொத்துக்களையும் பஸ்களையும் கொளுத்தி ஒழுங்கீனங்கள் செய்தால்தான் சர்க்காரின் மீது மக்கள் கோரிக்கை அழுத்தமாகப் பதிகிறது என்ற உணர்வு கேரளத்தில் மட்டுமின்றி நாடெங்கிலும் உண்டாகியிருக்கிறது. அரசாங்கத்தின் சார்பில் பேசுபவர்களின் சக்தியற்ற கூப்பாடுகளும், காலங்கடந்து தருகிற உதவிகளும் சட்டத்துக்குட்பட்டு நடக்க வேண்டும் என்ற உணர்வை மக்களுக்கு ஊட்டிவிடா; பலாத்காரத்தில் மக்களுக்கு ஏற்பட்டுவிட்ட நம்பிக்கையைப் போக்கவும் இவை போதா. பலாத்காரத்துக்குக் காரணமாயிருந்தவர் எனச் சந்தேகிக்கப்படுவோரின் மீது விசாரணை நடத்தித் தண்டனை தருவதால் அவர்கள் தியாகிகளாகக் கருதப்படுவது தவிர நிலைமை வேறு விதத்தில் மாறாது. நாட்டில் உள்ள மிகவும் ஏழையான மக்களைப் பாதிக்கும் ஒரு ஜீவாதாரமான பிரச்னையில் சரியான நடவடிக்கையைச் சரியான காலத்தில் எடுக்காமலிருப்பது பயங்கரமான தவறாகும். சமுதாயத்துக்கு உகந்த மனிதாபிமானமுள்ள, தேசிய சேவை செய்கிறோம் என்று நம்பிக் கொண்டு ஆயிரக்கணக்கான மக்கள் — வயதானவர்களும் இளைஞர்களும், பெரிய மனிதர்களும், சாமானியமானவர்களும் — பலாத்காரத்தில் இறங்கிய பின்னர் சர்க்கார் தனது தவற்றைத் திருத்திக் கொண்டதாக மக்களை எண்ணச் செய்வது சுலபமல்ல.

கேரளத்தின் நிலை உள்ளங்கை நெல்லிக்கனி போல் தெரியும்போது, மக்கட் தொகையைக் கட்டுப்படுத்துவது, உணவுப் பண்டங்களைக் குறைவாக உபயோகிப்பது, உணவு வழக்கங்களை மாற்றிக் கொண்டு வெவ்வேறு தானியங்களை உண்பது ஆகிய மூன்று விஷயங்களைச் சர்க்கார் தலைவர்கள் போதிப்பதில் என்ன பொருள் இருக்கிறது? பிரச்னையைத் தீர்ப்பதற்கு இது பள்ளிக்கூடப் பையன் போடுகிற கணக்காக இருக்கிறதே யன்றி நிருவாக ஞானத்தைக் காட்டவில்லை. சாமானியப் பழக்கங்களையே மாற்றிக் கொள்ள முடியாதபோது நாற்பத்தைந்து கோடி மக்கள் உணவுப் பழக்கத்தை மாற்றிக் கொள்வது எளிதா? மக்கட் தொகையைக் கட்டுப்படுத்துவது பற்றிப் பேசுவது இப்போது உடனடியாகத் தீர்க்க வேண்டிய பிரச்னைக்கு உதவுமா? தேசத்தின் உற்பத்தியைப் பெருக்க வேண்டும், பாதுகாப்பைப் பலப்படுத்த வேண்டும் என்கிற தருணத்தில் மக்கள் உணவைக் குறைத்துக் கொண்டால் இந்த இலட்சியங்களை அடையத்தான் முடியுமா?

ராஜாஜி என்ன சொல்கிறார்?

காங்கிரஸ் கட்சி தனது தலைவரைத் தேர்ந்தெடுக்கும் விஷயத்தில் எதிர்க் கட்சித் தலைவரான ராஜாஜி எப்படி அபிப்பிராயம் தெரிவிக்கலாம் என்று ஒரு கேள்வி.

காங்கிரஸில் ஏகமனதாகத் தேர்தல் நடந்தால் அதைச் சர்வாதிகாரம் என்றும், போட்டியிருந்தால் அதைப் பிளவு மனப்பான்மை என்றும் ராஜாஜி இரு வேறு குரல்களில் எப்படிப் பேசலாம் என்று இரண்டாவது கேள்வி. இக்கேள்விகளுக்குப் பதில் கூறி நமது நேயர்கள் பலர் கடிதம் எழுதியுள்ளனர். இரண்டு கடிதங்களைமட்டும் இவ்விதழ் 'வட்டமேஜை'யில் காண்கிறோம். இது பற்றி நம் கருத்துக்களையும் தெரிவிக்கிறோம்.

முதல் கேள்வியைப் பார்ப்போம்: காங்கிரஸின் பார்லிமெண்டரிக் கட்சித் தலைவர் என்பவர் கட்சி விவகாரங்களைக் கவனிப்பதற்கு மட்டுமின்றி நாட்டின் ஆட்சி விவகாரத்தின் தலைமைப் பீடமாகிய பிரதமர் பதவிக்குத் தேர்ந்தெடுக்கப்படுபவர். அவர் காங்கிரஸ் கட்சிக்கு மட்டும் பிரதமரல்ல. எனவேதான் அரசியல் அறிவுள்ள எல்லாப் பத்திரிகை நிருபர்களும் எதிர்க் கட்சித் தலைவர்கள் அனைவரது அபிப்பிராயத்தையும் இவ்விஷயத்தில் கேட்டார்கள். அவை எல்லாச் செய்திப் பத்திரிகைகளிலும் பிரசுரமாகியுள்ளன.

அந்தச் செய்திப் பத்திரிகைகளில் எதுவுமே 'காங்கிரஸ் கட்சித் தலைவர் தேர்தல் பற்றி எதிர்க் கட்சித் தலைவர்கள் எப்படி அபிப்பிராயம் தெரிவிக்கலாம்?' என்று கேட்டதாகத் தெரியவில்லை.

நாட்டின் எதிர்காலப் பிரதமருக்கான தேர்தல் இது என்றபோதிலும் கூட, இந்நாட்டு அரசியல் வாழ்வில் தனி இடங்கொண்டுள்ள ராஜாஜி இவ்விஷயமாக மற்ற எதிர்க் கட்சித் தலைவர்களைப் போல் அதிகமாக எதுவும் கூறவில்லை. எது உசிதம், எது அரசியல் மரியாதை யென்பதெல்லாம் அந்த மகானின் பண்பட்ட உள்ளத்துக்கே தெரியும். எனினும் அவர் ஸ்ரீ நந்தா அவர்களே பிரதமராக நீடிக்கலாமெனக் கூறினார். இதற்கான காரணத்தையும் வெகு அழகாக வெளியிட்டிருக்கிறார்:

> "காங்கிரஸ் கட்சியின் அபேட்சகர்கள் யார் என்று கூடத் தெரியாத அப்போது, அக்கட்சியில் இன்னாரை ஆதரிக்கலாம் அல்லது ஆதரிக்கக் கூடாது என்ற கருத்து ஏதுமின்றி, தேசத்தின் பெரும் துக்க காலத்தில் பின்பற்ற வேண்டிய முறை இதுவே என்பதால் இவ்வாறு கூறினேன். தேசிய கௌரவம் தவிர இத்தலைவர் தேர்தலில் சுதந்திரக் கட்சிக்கு எவ்வித அக்கறையும் கிடையாது." (30-1-66 கல்கி; பக்கம் 6)

கௌரவத்தை உணரத் தெரிந்தவர் எவரும் இதனை ஒப்புவர்.

இனி இரண்டாவது கேள்வி: கேள்வி கேட்பவர்களை நோக்கியே நாம் பதில் கேள்விதான்

விடுக்க வேண்டியுள்ளது. 'ஏகமனதான தேர்தலைச் சர்வாதிகாரம் என்று ராஜாஜி எப்போது கூறினார்?' **உண்மையிலேயே** கட்சி அங்கத்தினர்களின் சுயேச்சைப்படி ஏக மனதாக ஒரு தேர்தல் நடந்தால் அதை ராஜாஜியும் சரி, ராஜாஜியளவுக்கு மதி நுட்பம் பெற்றிராத சாமானிய மனிதரும் கூடச் சரி, சர்வாதிகாரம் என்று சொல்ல மாட்டார்கள். ஆனால் **நிர்ப்பந்தத்தின் மீது** 'ஏகோபித்த முடிவு' காண வேண்டும் என்று செய்கிற முயற்சிகள் சர்வாதிகாரம் அன்றி வேறெதுவும் அல்ல. இத்தகைய சூழ்நிலையில் அந்த நிர்ப்பந்தத்தை மீறி 169 பேர் நடந்து கொண்டால் அது கட்சியிலுள்ள பிளவைக் காட்டுவதாகவும், அவர்களின் தலைவர், சர்வாதிகாரக் கெடுபிடிக்குப் பணியாததால் ஜனநாயகத்தை நிலைநாட்டியதாகவும் கூறுவது பொருத்தம்தானே? கட்சியின் ஐக்கியக் குலைவு பற்றி ஸ்ரீ மொரார்ஜி அவர்களைப் பிரேரித்த ஸ்ரீ ஹநுமந்தய்யா அவர்களே கூறிய பின் ராஜாஜி மீது பழி சுமத்திக் கண்டனம் செய்வதில் சிறிதும் பொருள் இல்லை.

''ஏ காங்கிரஸே! என் ஆலோசனைகளைக் கேள்! கேட்டு உன்னையே நீ அழித்துக்கொள்'' என்பதுதான் ராஜாஜி காங்கிரஸுக்குக் கூறும் ஆலோசனைகளின் உள்ளர்த்தம் என்பது காங்கிரஸாரின் வியாக்யானமானால் ஸ்ரீ நந்தர் பிரதமராயிருந்தால் கட்சியே அழிந்துவிடும் என்று எண்ணுகிறார்கள்? இன்னமும் ஸ்ரீ நந்தர் நாட்டின் அதிமுக்கியமான உள்துறை மந்திரி பதவி வகிப்பது இவர்களுக்குச் சம்மதம் இல்லை என்று பொருளா?'' என்று காஞ்சி ஸ்ரீ சடகோபன் 'சாணக்கிய'னில் கேட்டிருப்பது பொருத்தமாகவே உள்ளது.

ஜனநாயகத்தில் ஒரு கட்சி இன்னொரு கட்சியைத் தோல்வியுறச் செய்து ஆட்சி பீடத்திலிருந்து துரத்துவது ஒரு நியாயமான நோக்கம். அத்துடன் ஆட்சி நடத்தும் கட்சிக்குக் கட்சி நியாயங்களை எடுத்துக் காட்டும் ஓர் உரிமையும் உண்டு. இதைப் பத்திரிகை நடத்தும் ஆசிரியர்கள் அறிய வேண்டும்.


ஜயப்பிரகாசரின் அறிவுரை

கட்சிச் சார்பு எதுவுமின்றி, சிந்தனைத் தெளிவோடும், தைரியத்துடனும் நல்ல யோசனைகளைக் கூறி வருபவர்களில் ஸ்ரீ ஜயப்பிரகாச நாராயணருக்கு முக்கியமான இடம் உண்டு. சமீபத்தில் அவர் கல்கத்தாவில் பேசும்போது நெருக்கடி நிலைமையையும், பாதுகாப்புச் சட்டத்தையும் உடனடியாக ரத்து செய்ய வேண்டும் என்று வலியுறுத்தியிருக்கிறார். 'தாஷ்கெண்ட் பிரகடனத்துக்குப் பிறகு ஒரு நாள் கூட நெருக்கடி நிலைமையையோ, பாதுகாப்புச் சட்டத்தையோ நீடிப்பதற்கு நியாயமில்லை' என்கிறார் அவர். சாமானியச் சட்டங்களைக் கொண்டே தேசிய விரோதச் சக்திகளைச் சமாளிப்பதற்குப் போதிய இடமிருக்கும்போது, பாதுகாப்புச் சட்டத்தைப் பிரயோகிப்பது நம் ஜனநாயகத்துக்கே களங்கம் விளைவிக்கிறது என்கிறார்.

தேர்தலில் எதிர்க் கட்சிகள் சுதந்திரமாகச் செயல்படுவதற்கும் நெருக்கடி நிலைமை பாதுகாப்புச் சட்டம் இவற்றை நீக்க வேண்டியது அவசியம். ஆனால் இவையே ஆள்கிற கட்சியின் அதிருஷ்டக் கவசங்களாக இருப்பதால் அவர்கள் செவி சாய்க்க மறுப்பது இயற்கைதானே?

பி. ஸ்ரீ. க்குப் பாராட்டு

தில்லி சாகித்திய அகாதெமியார், தமிழ் இலக்கியத்துறைக்கான பரிசை இவ்வாண்டு ஸ்ரீ பி. ஸ்ரீ ஆசார்யா அவர்களுக்கு வழங்கிக் கௌரவித்திருப்பதை அறிந்து, தமிழ் கூறும் நல்லுலகமே பெருமகிழ்ச்சி அடையும். அவருடைய ''ஸ்ரீ ராமானுஜர்'' என்ற புத்தகத்துக்குப் பரிசளித்திருப்பதாகச் சொல்கிறார்கள் அகாதெமியார். ஆனால் பி. ஸ்ரீ ஆசார்யா அவர்களின் நாற்பது வருஷங்களுக்கு மேற்பட்ட அருந்தமிழ்த் தொண்டை உணர்ந்தவர்கள் ஸ்ரீ ராமானுஜர் என்ற நூலை முகாந்திரமாக வைத்துக்கொண்டு அவரது வாழ்க்கைப் பணியையே கௌரவித்திருக்கிறார்கள் என்பதை அறிந்து கொள்வார்கள். கம்பனும் மற்ற தமிழ்ச் செல்வங்களும் தமிழ் படித்த பண்டிதர்களுக்கே உரியதாக இருந்த காலத்தில் அவருடைய அற்புத வேகம் பொருந்திய தனியான வசன நடை மூலம் கம்பனைப் பாமரர்களும் ரசிக்கலாம் என்று நிலைநாட்டியவர் திரு பி. ஸ்ரீ ஆசாரியா அவர்கள். அவருடைய கம்ப சித்திரக் கட்டுரைகளைப் படிக்க அந்நாட்களில் தமிழ் கூறும் நல்லுலகில் ஒரு பெரும் கூட்டமே வாரந்தோறும் ஆவலாகக் காத்துக்கொண்டிருந்தது. அப்படியே அவரது திவ்விய பிரபந்த ஸாரம், தென்னாட்டுச் சிவநேசச் செல்வர்கள் ஆகிய கட்டுரைகளைத் தெவிட்டாத தேன் எனப் பருகி, தமிழில் இவ்வளவு அரும் செல்வங்கள் இருக்கின்றனவா என்று வியக்கும் வண்ணம் மேனாட்டு இலக்கியங்களை ரசித்தவர்களின் கண்களைத் திறந்து வைத்தவர் ஸ்ரீ பி. ஸ்ரீ. ஆசார்யா அவர்கள். அவருடைய சேவையைப் பாராட்டி சாகித்ய அகாதெமி தனக்கு நல்ல புகழைத் தேடிக் கொண்டுள்ளது.



நெஞ்சை உலுக்கும் உற்பாதம்

நினைக்கவும் நெஞ்சை நடுங்கச் செய்யும் உற்பாதம் அல்லவா நிகழ்ந்துவிட்டது! காஞ்சன்ஜங்கா என்ற ஏர் இந்தியா கம்பெனி விமானம் ஜினீவாவுக்கு அருகில் மாண்ட் பிளாங்க் சிகரத்தின் மீது மோதி நொறுங்கியதால் அதில் பிரயாணம் செய்த 117 பேர்களின் உயிர்களும் பறிபோயிற்று.

அப்பப்பா! எத்தனை தொழில் விற்பன்னர்கள், எத்தனை தொழில் பிரமுகர்கள் மாண்டுவிட்டார்கள்! என்ன பயங்கரம்! புதுமணமான ஓர் இளம் பெண் காத்திருந்து காத்திருந்து கணவனைக் காணும் ஆசையோடு சென்றவள் காலனின் வாயில் சிக்கிவிட்டாள்! பால் மணம் மாறாத பாலகர்களும் பகுத்தறிவில்லாத பிராணிகளும் பனிவாயில் பிராணனை விட்டுவிட்டன!


எச். ஜே. பாபா

'கெடுவாய் நமனே கெடுவாய்!'

ஏககாலத்தில் இத்தனை நபர்களை ஒரே விழுங்காக விழுங்கிவிட்ட நமனை வேறு என்ன கூறுவது?

அவனன்றி ஓர் அணுவும் அசையாது என்னும் பாரதத்தின் பழம் பெரும் இந்த விஞ்ஞான உண்மையை நினைவுகூர்ந்து மனத்தைத் தேற்றிக் கொள்ள முயன்றாலும் மனத்தில் ஏதோ ஒன்று நெருடத்தான் செய்கிறது.

'சாணிலும் உளன், ஓர் தன்மை அணுவினைச் சத கூறிட்ட கோணினும் உளன்' என்னும் பேருண்மையை அறிந்த பாரதமும் தன் இயல்புக்கேற்ப அணு ஆராய்ச்சியில் ஈடுபட்டுப் பணியாற்றி வருவது இந்த நமனுக்கு ஏன்தான் பொறுக்கவில்லையோ?

அணு சக்தியை ஆக்கச் செயல்களுக்கு மட்டுமே பயன்படுத்துவதாக விரதம் பூண்டு பாரதம் பணி புரிந்து வருவது பார் அறிந்த உண்மை. வளரும் விஞ்ஞான உலகத்திலே, அணு சக்தி ஆராய்ச்சியில் பாரத தேசம் மேனாடுகளுடன் ஓரளவு சமமாக நிற்கக் கூடிய திராணி பெற்றிருக்கிற தென்றால், அதற்கு முக்கிய காரணமாக விளங்கியவர் ஹோமி ஜஹாங்கிர் பாபா.

கிடைத்தற்கரிய இந்த விஞ்ஞானியையும் விமான விபத்தில் கூற்றுவன் கொண்டேகி விட்டான்! அணு ஆராய்ச்சியிலே நோபல் பரிசு பெற்ற விஞ்ஞானிகளே கூட அவரது நுண்ணிய அறிவாற்றலைக் கண்டு வியந்திருக்கிறார்கள். கலக்க மேற்படக் கூடாத வகையிலே அணுவின் கோணங்களுக்கும் பெயர் சூட்டிய பெருமை பாபாவையே சாரும்.

பம்பாயிலே அணு ஆராய்ச்சிக் கூடம் நிறுவி அதன் தலைவராகப் பணியாற்றி வந்த பாபாவின் அறிவாற்றலைக் கண்டு பண்டித நேரு போன்றவர்களே, 'நாமும் விஞ்ஞான மாணாக்கர்களாகி நாட்டுக்குச் சேவை செய்யக் கூடாதா?' என்று ஆசைப்பட்டார்கள்! ஏறக் குறைய ஏழாயிரம் பேர் அவர் தலைமை தாங்கிய அணு ஆராய்ச்சிக் கூடத்தில் பணியாற்றுகின்றனர். குரு — சிஷ்ய பாவம் வாழையடி வாழையெனக் கிளைக்க வேண்டும் என்பது நமது பாரதத்தின் பண்பாடு. அதைப் பின்பற்றி எத்தனையோ விஞ்ஞானிகளைத் தயாரித்திருக்கும் பாபா இறந்தும் இறவாதவர்.

பாரத நாட்டில் யாராகிலும் பெரியோர்கள் மறைந்துவிட்டால் உடனே அவர்களின் ஞாபகார்த்தமாக விடுமுறை விட்டு வேலையை நிறுத்திவிடுவது வழக்கமாகி விட்டது. ஆனால் எச். ஜே. பாபா அவர்களோ சோம்பி இருப்பதையோ விடுமுறை எடுத்துக்கொண்டு வேலை செய்யாமல் இருப்பதையோ விரும்பாதவர். தாம் மறைந்துவிட்டால் விடுமுறை விடுவதற்குப் பதில் வேலை செய்வதையே தமது ஆன்மா விரும்பும் என்று முன்பு கூறியிருந்ததால் பம்பாய் அணு சக்தி ஆராய்ச்சிக் கூடத்தினர் அத்தனை பேரும் அவர் மறைவைக் கேட்ட அன்றும் வேலை செய்தார்களாம். இதை நினைக்கும்போது துயரம் இன்னும் ஆழப் பாய்ந்து மனத்தின் அடித்தளத்தையே உலுப்புகிறது! லால் பகதூர் அவர்கள் மந்திரிப் பதவி அளித்தபோதும் 'வேண்டாம்' என்று கூறி விஞ்ஞான ஆராய்ச்சிக்கே தம்மை அர்ப்பணித்துக் கொண்ட விற்பன்னரை இழந்து விட்டோம். பாரதத்துக்கு ஈடு செய்ய முடியாத நஷ்டம்தான்!

காஞ்சன் ஜங்கா விமானத்துக்கு ஏற்பட்ட விபத்தின் விளைவாக நமக்கு உண்டான அதிர்ச்சியிலிருந்து நாம் இன்னமும் மீள்வதற்கு முன்பாகவே ஒரு ஜப்பானிய ஜெட் விமானம் கடலில் விழுந்து நொறுங்கிவிட, அதில் பிரயாணம் செய்த 133 பேர்களும் மாண்டு போனதாகச் செய்தி கிடைத்திருக்கிறது. இவ்விபத்துக்களில் மறைந்தவர்களின் சுற்றத்தாருக்கு நமது ஆழ்ந்த அநுதாபங்கள்.

ஜீவானந்தம் சிலைத் திறப்பு விழா

தமிழறிஞரும் தலைசிறந்த அரசியல்வாதியுமான திரு ப. ஜீவானந்தம் சிலைத் திறப்பு விழா தண்டையார்ப் பேட்டையில் சமீபத்தில் விமரிசையாக நடந்தது. திரு காமராஜ் தலைமையில் நிகழ்ந்த இவ் விழாவில் திருவாளர்கள் ராஜாஜி, ம. பொ. சி, அண்ணாத்துரை, சம்பத், ஈ. வெ. ரா, பி. சி. ஜோஷி ஆகிய சர்வகட்சித் தலைவர்களும் கலந்து கொண்டார்கள். 1. தலைவர் ராஜாஜியுடன் ம. பொ. சி. 2. ஜீவா சிலை. 3. திறப்பு விழாவில் காமராஜர். 4. ஜீவாவின் குடும்பத்தினர். 5. ஜீவா சிலையைச் சமைத்த சிற்பி திரு வெங்கடேசனை முதன் மந்திரி கௌரவிக்கிறார். 6. திரு பாலதண்டாயுதமும் ஈ. வெ. ராவும். 7. சி. வா. ஐ. வின் சொற்பொழிவு. 8. விழாவுக்கு வந்திருந்த திரளான கூட்டம்.

ஜீவா நினைவு நாள்

















★

திருவாக பீடம் நாட்டுச் சேவைக்குத் தன்னைப் புதிதாக அர்ப்பணித்துக்கொள்ள வேண்டுமாயின், அது பின்பற்ற வேண்டிய மூன்று முக்கியமான அம்சங்களை ராஷ்டிரபதி குடியரசு தினத்துக்கு முந்தைய நாள் மாலை தமது ரேடியோ உரையில் எடுத்துக் கூறியிருக்கிறார். அவையாவன :

(1) தலைவர்கள் மக்களால் நடத்தப்படுவதற்குப் பதில் அவர்கள் மக்களை நடத்திச் செல்ல வேண்டும்.

(2) மனிதனின் தனிப் பண்பை எந்த ஸ்தாபனமும் அழிப்பதற்கு விடக் கூடாது. அதிகார சக்தி முழுவதும் ஒரு சிறிய கோஷ்டியிடம் இருந்துவிடக் கூடாது; துவேஷங்களை உண்டாக்கும் கொள்கைகளைப் பின்பற்றக் கூடாது.

(3) நாகரிக வாழ்வின் இலட்சியங்கள் நிலைக்க வேண்டுமாயின் நாம் நமது அண்டை நாடுகளுடன் நட்புக் கொள்ள வேண்டும்; உலக சமுதாயத்துக்காக உழைக்க வேண்டும்.

★

எனக்கு வட இந்திய நண்பர்கள் எழுதும் கடிதங்களின் விலாசங்களைப் படம் பிடித்துப்



போட்டால்கூட நன்றாக இருக்கும் என்று தோன்றுகிறது. அவர்கள் ஹிந்தியின் லிபியாகிய தேவநாகரியிலேயே என்னுடைய விலாசத்தை எழுதுகிறார்கள். அவற்றைத் தபாலாபீசில் ஆங்கிலத்தில் சிவப்பு மசியால் மாற்றி எழுதித் தபால்காரர்களிடம் அனுப்புகிறார்கள். இதிலிருந்தே இந்தியாவின் உண்மையான தொடர்பு மொழி எது என்பதும் ஹிந்தியைப் புகுத்த விரும்புபவர்கள் தங்கள் மொழி பரவி விட்டதாகக் கொண்டுள்ள தற்பெருமையும் தெளிவாகின்றன. இவர்களுக்குத் தாங்கள் ஹிந்தியில் எழுதிய விலாசம் ஆங்கிலத்தில் மாற்றப்படுவது தெரிவதில்லை. தில்லியில்கூட தேவநாகரியில் எழுதப்பட்ட விலாசங்கள் தபாலாபீசில் உருது லிபிக்கு மாற்றப்படுவதாக நான் அறிகிறேன்.

★

''இந்திய விவசாயிகள் தங்களிடமுள்ள வசதியைக் கொண்டு நவீன உபகரணங்களை உபயோகிக்க முடிவதில்லை. இயந்திரப் பண்ணை ஸிண்டிகேட்டுகளை அமைத்தால் இந்த நிலையைத் தவிர்க்கலாம்'' என்று ஸ்ரீ ஆர். என். செட்டூர் ஸ்டேட் பாங்க் சஞ்சிகையில் எழுதியிருக்கிறார். இங்கே கூறப்படும் ஸிண்டிகேட்டுகளுக்குப் பதில் இயற்கையாகவே இருந்து வந்த பெரிய நிலவுடைமைகளை மூடச் சட்டங்கள் சிதைப்பதற்கு அநுமதித்து விட்டோம். பொருமையிலும் துவேஷத்திலும் பிறந்த அவசரச் ''சீர்திருத்த''ங்களால் நல்ல அமைப்புக்களை ஒரேயடியாக இழந்த பின் புலம்புவது பல தேசங்களின் தலைவிதியாகி விட்டது. விவசாயிகள் விஷயமறிந்தவர்களின் தலைமையை இழந்து, வர்க்கத் துவேஷத்தைப் பரப்பும் அரசியல்வாதிகளின் கையில் அடக்கமாகிவிட்டார்கள். அவர்களுக்கு உதவி வந்த பாங்கிகளின் சகாயத்தையும் இழந்து விட்டார்கள். முதலீடு செய்வதற்குத் தாங்கள் பெற்றிருந்த வசதிகளை இழந்து விட்டார்கள். பெரிய நிலச் சொந்தக்காரர்களை இலக்காகக்கொண்ட தவறான 'உச்சவரம்புச்' சட்டத்தால் இன்னும் பலவற்றையும் விவசாயிகள் இழந்துவிட்டனர். தங்கள் தேவைக்கு மேல் உபரியாக உற்பத்தி செய்பவர்கள் குறைந்து விட்டதால் நகர்ப்புறங்கள் தானிய சப்ளையின் முக்கிய ஆதாரத்தை இழந்துவிட்டன. இதனால் பருவ மழையின் மீது பழியைப் போட முடியாதபோதுகூட போதாக் குறை ஏற்படுகிறது. சீர்திருத்தமென்பது சுலபமான விளையாட்டல்ல என்பதையும், இதற்கு விவேகமும், சிந்தனையும் ஆலோசனையும் தேவை என்பதையும் புதிதாகப் பெரும் அதிகாரங்களைப் பெற்றுள்ள அரசியல்வாதிகள் உணர்ந்த பாடாக இல்லை.

★

ஆபத்து ஒன்றுடன் நாம் கணிசமான காலம் வாழ்ந்து விட்டோம் என்பதால் ஆபத்தே மறைந்து விட்டது என்றாகிவிடாது. இது அணு ஆயுத ஆபத்துக்கு மட்டுமின்றி சிகரெட் ஏற்படுத்தக் கூடிய புற்றுநோய் ஆபத்துக்கும் பொருந்தும். ஸையன்ஸ் நிபுணர்களும் புள்ளி விவர நிபுணர்களும் சிகரெட் பிடிப்பதால் புற்றுநோய் உண்டாகக்கூடும் என்று கூறிவந்ததன் பயப் பிடியிலிருந்து மக்கள் இப்போது விடுபட்டு விட்டதாகத் தெரிகிறது. அதிகமாகப் புகைப் பிடிப்பவர்களில் சிலருக்குப் புற்றுநோய் வரவில்லை என்பதாலும், புகையே பிடிக்காதவர்களுக்கும் புற்று நோய் உண்டாகிறது என்பதாலும் சிகரெட் ஆபத்து நீங்கி விட்டது என்று யாரேனும் எண்ணினால் அது மதியீனமேயாகும். இவ்வளவு காலமாக மிகவும் கவனமாகத் தகவல் சேகரித்து, அதிகார பூர்வமாக டாக்டர்களால் ஒத்துக்கொள்ளப்பட்ட சான்றுகளை எளிதில் தள்ளிவிடுவது அஜாக்கிரதையாகும். சிகரெட் புகைப்பதை நிறுத்துவதால் எவ்வித நஷ்டமும் இல்லை என்பதையும் இச்சந்தர்ப்பத்தில் நினைவு கொள்ள வேண்டும்.

ஏராளமான ஏழைகள் சிகரெட் வாங்குவதற்குப் பொருள் வசதி பெறாதவர்கள்.

முதற் பரிசு
பெற்ற
கட்டுரை

கைகொடுத்த தெய்வம்

நான் கேரளாவில் நீலேச்வரம் என்ற ஊரைச் சேர்ந்தவன். இப்பொழுது மைசூர் ராஜ்யத்தைச் சேர்ந்த ஷாஹாபாத்தில் ஹைதராபாத் ஸ்டேட் பாங்கின் கிளையில் டைப்பிஸ்டாகவும் கிளார்க்காகவும் வேலை பார்த்து வருகிறேன்.

1959ம் வருஷம் என்னை மத்திய அரசாங்கத்தின் தபால் தந்தி இலாகா ஒரு கிளார்க்கு வேலைக்குத் தேர்ந்தெடுத்ததினால் ஹைதராபாத்துக்கு வந்தேன்.

சகல விதமான யோக்கியதாம்சங்கள் எனக்கு இருந்தும் நான் வேலைக்குத் தேர்வு செய்யப்பட்டிருப்பதாக உத்தரவு வந்தும் அவர்கள் அனுப்பிய மருத்துவ அதிகாரியிடம் ஆரோக்கியத்துக்கான நற்சான்றிதழ் பெற்றும் எனக்கு அந்த வேலை கிடைக்கவில்லை. என்னை நேரில் பார்த்த சூபரின்டென்டென்ட் என்னை வேலையில் சேர்த்துக் கொள்ளாமல் வீட்டுக்குத் திருப்பி அனுப்பி விட்டார். காரணம் நான் பார்ப்பதற்கு ஒரு கை இல்லாமல் இருந்ததுதான்! ஆம்! எனக்குப் பிறவியிலிருந்தே இடது கை மூட்டுக்குக் கீழிருந்து கிடையாது.

பிறவியிலிருந்தே கையில்லாமலிருந்ததனால் நான் என்றுமே அந்தக் குறையை உணர்ந்ததில்லை. மற்ற எல்லோரையும் போலவே எல்லா வேலைகளையும் கஷ்ட-



நேசக்கரம்

மின்றிச் செய்துவிடுவேன். ஆனால் என் ஊனம் எனக்குக் கிடைக்கவிருந்த வேலைக்கே குறுக்கே வரும் என்று நான் நினைக்கவில்லை.

எனினும் ஆண்டவன் என்னைக் கைவிடவில்லை. ஆந்திராவிலேயே ரெவின்யூ இலாக்காவில் ஒரு டைப்பிஸ்டாக ஒன்றரை வருடம் வேலை பார்த்தேன். பிறகு இப்பொழுது ஐந்து வருஷங்களாக இந்தப் பாங்கில் வேலை பார்த்து வருகிறேன்.

செயற்கைக் கரம் ஒன்று வைத்துக் கொள்ள வேண்டும் என்ற ஆசை சின்ன வயசிலிருந்தே எனக்கு இருந்தது. ஆனால் என் குடும்பத்திலிருந்து அதற்கு வேண்டிய பண உதவி எனக்குக் கிடைக்கும்படியாக இல்லை. பாங்கில் எனக்கு அன்று கிடைத்து வந்த சம்பளமும் இன்று எனக்குக் கிடைப்பது போலன்றிச் சொற்பமாகத்தான் இருந்தது. பூனாவுக்குப் போய்ச் செயற்கைக் கை வைத்துக் கொண்டு வர 355 ரூபாய் தேவை. பிரதம மந்திரி ஏற்படுத்தியிருந்த நிவாரண நிதியைப் பற்றிக் கேள்விப்பட்டிருந்தேன். ஆனால் என் விண்ணப்பக் கடிதம் எந்த விலாசத்துக்கு அனுப்பப்பட வேண்டும் என்று தெரியவில்லை. பத்திரிகைக்காரர்களுக்குத் தெரிந்திருக்குமென்று நினைத்து, 'பிளிட்ஸ்' ஆசிரியர் ஸ்ரீ ஆர். கே. கரஞ்ஜியாவுக்கு ஒரு கடிதம் எழுதினேன். கொஞ்ச நாட்களுக்குப் பதில் ஒன்றும் வரவில்லை.

29–11–63 அன்று எனக்கு ஓர் அதிசயம் காத்திருந்தது. என் பேருக்கு டைப் பண்ணின ஓர் அழகான கவர் வந்திருந்தது. ஏதாவது வாழ்த்துக் கடிதமாயிருக்குமென்று பிரித்துப் பார்த்தேன். ஸ்ரீ கரஞ்ஜியாவிடமிருந்து அவர் கையொப்பமிட்டு வந்த கடிதம் அது. அவராகவே எனக்கு 355 ரூபாய் தருவதாயும், பதினைந்து நாட்களுக்குப் பூனாவில் தங்கி இருப்பதற்கான ஹோட்டல் செலவுகளையும் தருவதாகவும் பூனாவுக்குப் போய்க் கை வைத்துக் கொள்ள ஏற்பாடுகள் செய்யுமாறும் எழுதியிருந்தார். தாமதங்கள் ஏற்பட்டால் அதற்கு வேண்டிய சிபாரிசு உதவிகளையும் பண்ணுவதாக எழுதியிருந்தார். நான் எதிர்பார்க்கவேயில்லை. அது மட்டுமல்ல. எனக்கு அவ்வளவு பணம் அவசியமில்லை. நான் பூனாவில் ஒரு நண்பருடன் தங்க ஏற்பாடு செய்து கொண்டிருக்கிறேன் என்று எழுதியும்கூட எகிப்துக்குப் பயணப்பட்டுக் கொண்டிருந்த ஸ்ரீகரஞ்ஜியா அதையொட்டிய தமது பல்வேறு அலுவல்களுக்கிடையில் எனக்கு ரூபாய் நானூறு தந்தி மணியார்டரில் அனுப்புமாறு தமது காரியதரிசியிடம் ஞாபகமாகக் கூறிவிட்டு ஐக்கிய அரபுக் குடியரசுக்கு விமானம் ஏறியிருக்கிறார்.

செயற்கைக் கரம் வைத்துக் கொண்டு அவரை நேரில் போய்ச் சந்தித்து என்னிடம் மிச்சமிருந்த பணத்தை அவரிடம் நன்றியுடன் கொடுத்து அவரைப் பார்த்து வர பம்பாய் 'பிளிட்ஸ்' காரியாலயத்துக்குப் போயிருந்தேன். ஆனால் எனது துரதிர்ஷ்டம் அவரைச் சந்திக்க முடியவில்லை. அவரது அந்தரங்கக் காரியதரிசி திரு எஸ்.பி. அய்யரைப் பார்த்து நன்றி செலுத்தி வந்தேன். அவர்கூட என்னிடம் மிஞ்சியிருந்த தொகையை வாங்கிக்கொள்ள மறுத்து விட்டார்.

ஸ்ரீ கரஞ்ஜியா இந்தியா திரும்பி வந்த பிறகு ஒரு நன்றிக் கடிதம் அவருக்கு அனுப்பினேன்.

எனது இந்த அனுபவத்தில் சில விசேஷங்களைக் குறிப்பிட்டுச் சொல்ல வேண்டும். முதலாவதாக அவர் என் முதல் கடிதத்தைப் பார்த்துவிட்டு என்னைப் பற்றி யாரிடமும் எதுவும் விசாரித்ததாகத் தெரியவில்லை. என்னை முழுமையாக நம்பினார். இரண்டு, நான் உதவி கேட்காமலேயே எனக்குத் தேவைக்கும் அதிகமாகப் பணம் தந்து உதவினார். சிலபேர் சொன்னார்கள்: ''இதெல்லாம் ஒரு விளம்பரம். உனக்கு உதவி பண்ணிவிட்டு உன் போட்டோவை எடுத்து பிளிட்ஸில் போடுவாராயிருக்கும்'' என்று.

ஸ்ரீ கரஞ்ஜியா என் மனத்தில் அழியா இடத்தைப் பெற்றுவிட்டார். அவரைப் பற்றிப் பலபேர் பலவிதமாகச் சொன்னாலும் அவர் உள்ளுக்குள் இத்தனை நல்ல இதயம் படைத்தவர், பெருபகாரி என்பதெல்லாம் பலபேர்களுக்குத் தெரியாது. ஸ்ரீ கரஞ்ஜியா எனக்குக் கொடுத்தது செயற்கைக் கரமல்ல; நேசக்கரம்!

—என். ராமரத்தினம்

இரண்டாம் பரிசுக் கட்டுரை

திருப்பதி யாத்திரை

நான் சென்னையில் இருந்த சமயம். அதாவது, 1963ம் வருடம் ஜூலை மாதம் 10ந் தேதி, திருப்பதி திருமலையானைக் காண விரும்பி, திருப்பதி செல்லும் பஸ்ஸைப் பிடிப்பதற்காகத் தியாகராயநகரிலிருந்து பாரிஸ் கார்னருக்கு பஸ்ஸில் சென்றேன். ஆனால் பாரிஸ் கார்னருக்குச் சென்று பார்த்தால் அன்றைய தினம் திருப்பதி செல்லும் எல்லா பஸ்களிலும் இடம் முன்னதாகவே நிரம்பியிருந்தது. அதைக் கண்டு திரும்பவும் தியாகராயநகருக்குத் திரும்பி விடலாம் என்று நினைத்துக் கொண்டிருந்த அந்த நேரத்தில் ஒரு நண்பர் என்னிடம் தாமாகவே பேச்சுக் கொடுத்தார். அதன் மூலம் அவரும் திருப்பதிக்குச் செல்ல வேண்டியவர் என்றும், என்னைப் போலவே டிக்கட் கிடைக்கவில்லை என்றும் தெரிந்துகொண்டேன். பிறகு நானும் அந்த நண்பருமாகத் திருப்பதி செல்லும் வழியை ஆராய்ந்து கொண்டிருந்தோம். சிறிது நேரத்தில் அந்த நண்பரே என்னிடம் பேஸின் பிரிட்ஜுக்குச் சென்று அங்கிருந்து திருப்பதி செல்லும் பஸ் மூலம் நம் பயணத்தை மேற்கொள்ளலாம் என்று கூற நானும் அதற்குச் சம்மதித்தேன். நானும் நண்பரும் பேஸின்பிரிட்ஜுக்குச் சென்று அங்கிருந்து முதலில் காளஹஸ்திக்குச் செல்லும்பஸ்ஸில் ஏறினோம். வழியில் அந்த நண்பர் என்னைப் பற்றி அன்புடன் பல தகவல்களை விசாரித்தார். தம்மைப் பற்றிய விவரங்களையும் கூறினார். இவ்வாறு பேசிக்கொண்டே, நாங்கள் காளஹஸ்தி அடையும்போது மாலை மணி ஐந்து. காளஹஸ்தியில் வீற்றிருக்கும் எம்பெருமானை வணங்கிவிட்டு அங்கிருந்து திருப்பதி செல்லும் பஸ்ஸில் ஏறி, நன்றாக இருட்டியதும் கீழ்த் திருப்பதியை அடைந்தோம். நான் திருப்பதிக்குச் சென்றது அதுதான் முதல் முறை. என்னுடன் வந்த நண்பரோ தான் திருப்பதிக்கு மாதம் தவறாமல் வந்து செல்பவர் என்று கூறியிருந்தார். அதன்படியே திருப்பதி சென்றதும் நன்கு அந்த இடம் அவருக்குப் பழக்கப்பட்டிருந்ததால் பக்கத்திலிருந்த உணவு விடுதிக்குச் சென்று என்னையும் உடன் உண்ணச் செய்தார். பிறகு அன்றைய இரவை அங்குள்ள தர்ம சத்திரத்தின் மாடியில் கழித்தோம். மறுநாள் காலை நான்கு மணிக்கு எழுந்து திருமலையானைத் தரிசிக்க மேல் திருப்பதிக்குச் செல்வதாகத் திட்டமிட்டோம்.

மறுநாள் காலை நான்கு மணிக்கே எழுந்து பக்கத்தில் உள்ள மக்கடையில் ஆளுக்கு ஒரு டீ சாப்பிட்டுவிட்டு மீண்டும் இருப்பிடத்துக்கு வந்தோம். அந்தச் சத்திரத்தின் நடுவே அமைந்த குளிக்கும் அறைக்கு நான் குளிக்கச் சென்றேன்.

நான் குளிக்கச் செல்லு முன் என்னிடமிருந்த கடிகாரம், பணம், துணிப் பை எல்லாவற்றையும் என் நண்பரிடம் கொடுத்துச் சென்றேன். குளித்துவிட்டு வெளியில் வந்து பார்த்தால் நண்பரைக் காணவில்லை. அங்கும் இங்கும் தேடினேன். உபயோகமில்லை. சுமார் இரண்டு மணி நேரம் ஆகிவிட்டது. அப்பொழுதும் நண்பரைக் காணவில்லை. இப்பொழுதுதான் என் மனத்தில் பயம் ஏற்படலாயிற்று. நேரம் செல்லச் செல்லப் பயம் அதிகரித்தது. அழுகையாக மாறியது. அந்நேரத்திலும் என்னிடம் என் வேஷ்டி மடிப்பில் வைத்திருந்த ரூபாய் மூன்று இருந்தது. அதை வைத்துக் கொண்டு சென்னை திரும்பலாம் என்று ஒருபுறம் நினைத்தேன். அதே சமயம் இவ்வளவு தூரம் வந்தும் திருமலையானைக் காணாது செல்லக்கூடாது என்றும் மனத்தில் தோன்றியது. ஆனால் திருமலையானைத் தரிசிக்க மேல் திருப்பதிக்குச் சென்றுவர பஸ்ஸுக்கு என்னிடமிருந்த ரூபாய்



மூன்று போதுமானது; பிறகு ஊருக்குத் திரும்ப என்ன வழி என்ற கேள்வியும் உடன் எழுந்தது. முடிவில் ஆண்டவனைக் காணவேண்டும் என்ற ஆசையில் கையிலிருந்த பணத்தில் பாதியைக் கொடுத்து மேல் திருப்பதிக்குச் சென்றேன். தர்ம தரிசனம் காண வேண்டி நானும் ஒருவனாக மற்றவர்கள் அமர்ந்திருந்த வரிசையில் போய் உட்கார்ந்தேன். அப்பொழுது என் நிலைமை அருகில் இருந்தவர்களிடம் கூறி உதவியை நாடினேன். ஆனால் என் அருகில் இருந்தவர்கள் எனக்கு எவ்வித உதவியையும் செய்ய இயலாதவர்களாகவே இருந்தார்கள். இதைக் கண்டு என் மனம் மேலும் பரிதவித்தது. அன்றையப் பொழுது முடிந்தால் மறுநாள் அலுவலகம் செல்ல வேண்டும். இல்லையென்றால் முகாந்திரம் கேட்பார்கள்.

தர்ம தரிசனம் ஆரம்பமாகி விட்டது. நானும் மற்றவர்களுடன் நகர்ந்தேன். சிறிது நேரத்துக்கெல்லாம் ஆண்டவனின் முன்னிலையை அடைந்தேன். மனதார, கண்ணார, உளம் குளிரத் திருமலையானை வணங்கினேன். அப்பொழுது என் மனத்தில் எந்தக் கலக்கமோ, எந்த வேதனையோ இல்லாமல் இருந்தது. தரிசனம் முடிந்து கோவிலுக்கு வெளியில் வந்து கீழே செல்வதற்காக பஸ்ஸை எதிர்பார்த்துக் கொண்டு நின்றேன். அப்பொழுதுதான் திருமலையானின் அருளால் எதிர்பாராத நிகழ்ச்சி நடந்தது. என் பின்னால் நின்று கொண்டிருந்த மூன்று பேர்கள் என் முகத்தில் மண்டிக்கிடந்த துயரத்தைக் கண்டு என்னவென்று கேட்க என் நிலைமை எடுத்துக் கூறினேன். உதவி செய்யும்படியும் வேண்டினேன். முதலில் அவர்களும் தங்களிடம் பணம் இல்லையே என்றார்கள். பிறகு அவர்களே என் அலுவலைப் பற்றிக் கேட்க, நான் என் வேலையைப் பற்றியும் என் அலுவலக நண்பர்களைப் பற்றியும் கூறினேன். அதிர்ஷ்டவசமாகப் பெரம்பூரிலிருக்கும் என் அலுவலக நண்பர் அவர்களது நண்பர்களாகவும் இருந்தார். அதிலிருந்து அவர்களும் சென்னைவாசிகள் என்று தெரிய வந்தது. சுமார் பத்து நிமிடங்கள் அம்மூன்று நண்பர்களும் தங்களுக்குள் பேசிக் கொண்டார்கள். பிறகு என்னைப் பார்த்து ஒரு நண்பர், 'உங்களுக்கு உதவ எங்களுக்கு ஒரே வழிதான் இருக்கிறது. நாம் கீழ்த் திருப்பதிக்கு பஸ்ஸில் செல்வதற்குப் பதிலாக நடந்தே ஏழு மலைகளையும் கடந்தால், பஸ்ஸுக்குக் கொடுக்க வேண்டிய பணம் மீதமாகும். அதைக் கொண்டு நாம் நால்வரும் சென்னை சென்று விடலாம்' என்று சொன்னார். இதைக் கேட்டதும் நான் அடைந்த மகிழ்ச்சி என் வாழ்விலே நான் அடைந்த மகிழ்ச்சிகளில் முதன்மையானதாகும். உடனே நாங்கள் நால்வரும் கடும் வெயிலில் மேல் திருப்பதியிலிருந்து கீழ்த் திருப்பதிக்கு ஏழு மலைகளையும் நடந்தே கடந்து வந்தோம். பிறகு அந்நண்பர்களது உதவியாலேயே மாலையில் உணவு அருந்தி இரவு வண்டியில் திருப்பதியிலிருந்து கிளம்பி மறுநாள் காலை என் இருப்பிடம் வந்து சேர்ந்தேன். சென்னைக்கு வந்ததும் என் அலுவலக நண்பர் மூலமாக நான் பெற்ற உதவிப் பணத்தைத் திருப்பிக் கொடுத்து என் உளம் கனிந்த நன்றியை அவர்களிடம் தெரிவிக்குமாறு கேட்டுக் கொண்டேன்.

எனக்காக அம்மூன்று நண்பர்களும் கடும் வெயிலையும் பொருட்படுத்தாது ஏழு மலைகளையும் நடந்தே கடந்த தன்னலமற்ற உதவியை நான் என் வாழ்க்கையில் எவ்வாறு மறக்க முடியும்? உதவி சிறிதாயினும் அதன் நன்மையைப் பார்த்தால் வள்ளுவர்,

பயன் தூக்கார் செய்த உதவி நயன் தூக்கின்
நன்மை கடலிற் பெரிது

என்றது போல் கடலை விடப் பெரிதன்றோ?

இந்த என் கட்டுரையைக் கண்டாவது என் பொருள்களுடன் மறைந்தவர் அவைகளைத் திரும்பவும் அனுப்புவாரா?

—ரா. ராமகிருஷ்ணன்

நேசக் கரம்

முதற் பரிசு ரூ. 30	இரண்டாவது பரிசு ரூ. 20
பரிசு பெற்றவர் :	பரிசு பெற்றவர் :
திரு என். ராமரத்தினம்	திரு ரா. ராமகிருஷ்ணன்
(டைப்பிஸ்ட் கிளார்க்)	S/O அ. ராமச்சந்திர ஐயர்
ஹைதராபாத் ஸ்டேட் பேங்க்,	ரங்கநாதசுவாமி கோயில் வடக்குத் தெரு
ஷாஹாபாத், குல்பர்கா ஜில்லா	வீரவநல்லூர்
மைசூர் ராஜ்யம்	திருநெல்வேலி ஜில்லா

குடும்பத்தினர் அனைவரும் திட ஆரோக்கியத்துடன் திகழ

::பாஸ்::போமின்

உங்கள் குடும்பத்தினர் அனைவரும் வலிமையும் ஆரோக்கியமும் பெற்றுத் தெம்புடன் திகழ வைட்டமின் 'பி' காம்ப்ளெக்ஸ் மற்றும் பலவகை கிளிஸரோ ::பாஸ்பேட்கள் கலந்துள்ளது.


::பாஸ்::போமின் அருந்தி வந்தால் களைப்பும் சோர்வும் உங்களை அணுகாது. களைப்பை நீக்கும். பசியைத் தூண்டும். வலிவை பெருக்கும். நோய்களை எதிர்க்கும் சக்தியை அளிக்கும். குடும்பத்தினர் அனைவரும் ஆரோக்கியமாய் வாழ உதவுவது பழரச மணம் கமழும் பச்சை நிற வைட்டமின் டானிக் ::பாஸ்::போமின்.



SQUIBB A century of experience builds faith

திரு வி. பி. கார்னிக் பம்பாய் மா நிலத்தைச் சேர்ந்த வழக்கறிஞர். தொழிற் சங்கத் தலைவராகச் சுமார் முப்பத்தைந்து ஆண்டு அனுபவமுள்ளவர். இந்திய அரசியல் விஷயங்களில் ஆழ்ந்த அறிவும் சிந்தனையும் மிக்கவர். பிரபல தலைவர் எம். என். ராயுடன் பல்லாண்டு பழகியவர். "Radical Humanist" "Freedom First" பத்திரிகைகளிலும், இதர வார, மாத ஏடுகளிலும் அவருடைய சிந்தனைக் கட்டுரைகள் அடிக்கடி வெளிவருகின்றன. இக் கட்டுரையில் இந்தியா — பாகிஸ்தான் உறவுகளைப் பற்றி அவர் கூறும் விஷயங்கள் நமது மக்கள் கவனத்துடன் படித்துச் சிந்திக்கவேண்டியவை. பிப்ரவரி 11-ந் தேதியைத் தாஷ்கண்ட் தினமாகக் கொண்டாட வேண்டுமென ஸ்ரீ ஜயப்பிரகாஷ் நாராயணர் கோரியிருப்பதற்கு இசைய இக்கட்டுரையை மகிழ்ச்சியுடன் பிரசுரிக்கிறோம்.

— ஆசிரியர்



இந்தியா பாகிஸ்தான் தொடர்பு — சில தவறான கருத்துக்கள்

வி. ப. கார்னிக்

அறிவுக்குப் பொருந்திய வாதங்களுக்குப் பதிலாக அரைகுறை உண்மைகளும், தப்பபிப்பிராயங்களும் புகுந்து விடுவதால் தான் இந்தியா — பாகிஸ்தான் தொடர்பு பற்றிய விவாதம் பாழாகிறது. இவற்றில் சிலவற்றைப் பரிசீலித்துப் பார்ப்பதன் மூலம் ஓர் அர்த்தமுள்ள விவாதம் பிறக்கச் சாத்தியக் கூறு உண்டாகும்.

முதலாவதாக, பாகிஸ்தான் என்பது பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் ஒரு சிருஷ்டியே என்ற அரைகுறை உண்மை சர்வ வியாபகமாக உள்ளது. பிரிட்டிஷ் பார்லிமெண்டின் ஒரு சட்டப்படிதான் பாகிஸ்தான் பிறந்தது என்ற அளவில் மட்டுமே இது சரியாகும். ஆனால் மேற்படி பிரிட்டிஷ் சட்டத்தின் கீழ்தான் சுதந்திர இந்தியாவும் பிறந்தது. இந்திய தேசிய இயக்கத் தலைவர்களின் — முக்கியமாக பண்டித ஜவாஹர்லால் நேரு, ஸர்தார் வல்லபாய் படேல் ஆகியோரது — இணக்கத்தின் மீது தான் பாகிஸ்தான் பிறந்தது என்ற பிரத்தியட்ச உண்மையிலிருந்து யாரும் தப்பி ஓட முடியாது. இந்தியத் தலைவர்களின் இணக்கம் இல்லாவிடில் தேசத்தை இரண்டாகப் பிரித்து இரு பூரண சுதந்திர நாடுகளை உண்டாக்குவது ஒருகாலும் சாத்தியமாக இருந்திராது.

எனினும், சுயமான மன விருப்பத்துடனே இணக்கம் தரப்பட்டது என்று சொல்வதற்கில்லைதான். எப்படியாயினும் சூழ்நிலைகள் இந்தப் போக்கைப் பின்பற்றுமாறு தலைவர்களை வற்புறுத்தின. இந்திய தேசிய உணர்வுக்கு இது உண்மையிலேயே ஒரு படுதோல்விதான். முஸ்லிம்களையும் தனக்குள் தழுவுவதில் இந்திய தேசிய உணர்வு வெற்றி பெறவில்லை என்பதற்கே இது ஓர் அடையாளம். இதற்கான காரணங்கள் சரித்திரத்தில் ஆழப் புதைந்துள்ளன. பண்டைய ஹிந்து சமூகத்தின் அமைப்பில் முக்கியமாகப் புதைந்துள்ளன. நவீன காலத்தில் பிரிட்டிஷ் ஆட்சியை எதிர்த்துத் தேசப் போராட்டம் நடத்துகையில்கூட முஸ்லீம் சமுதாயத்தின் அச்சத்தைப் போக்கி அதனை இந்திய நாட்டின் அத்தியாவசிய அங்கமாக்கிக் கொள்ளச் சக்தியுடன் எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. காங்கிரஸ் கட்சிதான் மட்டுமே முஸ்லிம்கள் உள்ளிட்ட முழு இந்தியாவின் தனியொரு பிரதிநிதி என்று உரிமை பாராட்டியதால், முஸ்லிம்கள் மேன்மேலும் விலகிச் சென்றனர். காங்கிரஸுக்குப் போட்டியாக அவர்களும் தமக்கென்றே ஒரு தேசிய இயக்கத்தைத் தொடங்கும்படியாயிற்று. இதற்கு அரசியல் அரங்கில் உரிய இடத்தைத் தர அந்த நாளில் காங்கிரஸ் மறுத்தது பெருந் தவறாகும். இதன் விளைவாக முஸ்லிம் தேசிய இயக்கத்தின் அமைப்பாகிய முஸ்லிம் லீக் மேன் மேலும் பலம் பெற்றது. அந்தச் சோகக் கதையையெல்லாம் இங்கே திரும்பக் கூற வேண்டியதில்லை. கடைசியில் முஸ்லிம் லீகைக் காங்கிரஸ் அங்கீகரித்ததோடு மட்டுமின்றி, தேசப் பிரிவினைக்கு அதனோடு உடன்பாடு காணவும் நேர்ந்தது என்பது உண்மை. பாகிஸ்தான் தோன்றுவதற்கு நாமே அநுமதி தந்தபின் அது பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் சிருஷ்டி என்று குற்றம் சாட்டுவதில் பொருளில்லை.

இந்தியர்களும் முஸ்லிம்களும் ஒன்றாக வாழ முடியாது என்ற கருத்தில் 'இருதேசக் கொள்கை' பிறந்தது என்பதைப் பற்றி நிறையப் பேச்சு அடிபடுகிறது. பாகிஸ்தானின் ஸ்தாபகரான ஜின்னா அவர்கள் இருதேசக் கொள்கையை ஆதரித்து,* முஸ்லிம்களுக்குத் தனித் தாய்நாடு வேண்டும் எனக் கோரியது உண்மை. இந்திய தேசியவாதிகள்

எதிர்த்தும் அவர் தாம் கோரியதைப் பெறுவதில் வெற்றி கண்டார். ஆயினும் பாகிஸ்தான் கோரிக்கை நிறைவேறியபின் இருதேசக் கொள்கை சரித்திரத்தில் மட்டுமே முக்கியத்துவம் பெற்றதேயன்றி நடைமுறையில் அல்ல. பாகிஸ்தான் எப்படிப் பெறப்பட்டது, அது எப்படி ஓரமைப்பாகக் காக்கப்படும் என்பனவற்றை இந்தக் கொள்கை கூறுகிறது. மற்றபடி இந்தியா — பாகிஸ்தான் தொடர்பு பற்றிய விவாதத்தில் இதற்கு இடமில்லை. இருதேசக் கொள்கை சரியாயிருப்பினும் தவறாயிருப்பினும் அதனை உபயோகப்படுத்திக் கொண்டு இந்தியாவின்மீது ஆக்கிரமிப்பு நிகழ்த்துவதைப் பாகிஸ்தான் நியாயமாக்கிவிட முடியாது. இதேபோல் பாகிஸ்தானோடு நாம் சுமுக உறவு கொள்வதற்கு இதை ஒரு தடையாகவும் இந்திய தேசியவாதிகள் பிரயோகிக்க முடியாது. ஒருவேளை இந்தியாவில் உள்ள முஸ்லிம்கள் இந்தக் கொள்கையை ஆதரித்தால் அது ஓரளவு பொருத்தமாயிருக்கக் கூடும். ஆனால் வாஸ்தவத்தில் இந்திய முஸ்லிம்கள் இந்தக் கொள்கையை ஆதரிக்கவேயில்லை; அதோடு மட்டுமின்றி எதிர்ப்பதில் அவர்கள் தங்கள் முனைப்பை வெகுவாக வெளிப்படுத்தியிருக்கிறார்கள். ஹிந்து தேசியவாதிகளில் ஒரு சிறிய பிரிவினர் மட்டுமே இக்கொள்கையில் நம்பிக்கை வைத்து, இதன் அடிப்படையில் முஸ்லிம்களை இந்தியாவிலிருந்து வெளியேற்ற வேண்டுமெனக் கூறி வருகிறார்கள். இன்று பாகிஸ்தானிடம் விரோதம் பாராட்டுவதால் தேசப் பிரிவினை நடைமுறையாக்கிவிட்ட இரட்டை நாட்டுக் கொள்கையை இல்லாமற் செய்துவிட முடியாது. இந்தியாவுக்குள்ளேயே இந்தியர்களும் முஸ்லிம்களும் நன்கு இணைந்து ஒரு தேசமாக வாழ்வதால்தான் இருதேசக் கொள்கையை இல்லாமல் செய்ய முடியும்.

இந்தியத் துவேஷத்தில் பிறந்த பாகிஸ்தான் ஒரு நாளும் இந்தியாவுடன் நட்பை வளர்த்துக் கொள்ள முடியாது என்று வலியுறுத்தப்படுகிறது. பாகிஸ்தான் இந்தியாவுக்குத் தீங்கு செய்து கொண்டே இருக்கத்தான் வழி தேடும் எனப்படுகிறது. முதலில், இந்தியாவிடம் துவேஷத்தாலேயே பாகிஸ்தான் பிறந்தது என்பது சரியல்ல. முஸ்லிம்களுக்குத் தனி ராஜ்யம் வேண்டும் என்று முஸ்லீம் லீக் தலைவர்கள் வற்புறுத்தியதாலேயே பாகிஸ்தான் பிறந்தது. இந்தியாவில் பெரும்பாலாரான சமூகத்தின் ஆட்சி நடைபெறும் என்றும், இதன்கீழ் சிறுபான்மையோரான முஸ்லிம்கள் நியாயமான நலன்கள் பெற முடியாது என்றும் லீக் கொண்டிருந்த பயம்தான் காரணமேயன்றித் துவேஷமல்ல. இந்திய தேசிய காங்கிரஸ் தேச மக்கள் அனைவருக்கும் பிரதிநிதித்துவம் வகிக்கிறது என்பதைப் பாகிஸ்தானின் ஸ்தாபகர்கள் ஒப்புக் கொள்ளவில்லை. இதனால் காங்கிரஸ்—லீக் தலைவர்களிடையே கருத்து வேறுபாடுகளும், நல்லெண்ணமின்மையும் நிலவின. எனினும் முஸ்லிம் லீக் இந்தியாவைத் துவேஷித்தது என்று காட்டுவதற்கு ஆதாரமில்லை. மேலும், இரு நாடுகளும் சுதந்திர ஆட்சி தொடங்கியபோது அவையிரண்டும் நல்ல அண்டை நாட்டாராக வாழுவதாக ஒப்பந்தம் செய்து கொண்டன. இதுவே இந்தியா பாகிஸ்தான் இரு பக்கங்களிலும் நிலவிய உணர்ச்சி. பரஸ்பரம் நட்புடன் இருப்பது குறித்து ஜின்னா அவர்களும் லியாகத் அலிகான் அவர்களும் மிகவும் அழுத்தமாகப் பேசியிருக்கிறார்கள். இவ்வுணர்ச்சி இருதரப்பிலும் நிலவியதால்தான் பிரிவினை சம்பந்தமான சிக்கலான பிரச்னைகளில் பலவும் சிரமமின்றி, இரு நாடுகளுக்கும் திருப்திகரமாகத் தீர்க்கப்பட்டன.

சில காலத்துக்குப் பிறகு சரித்திரம் வேறு விதத்தில் திரும்பியது உண்மை. ஆயினும் இந்த வருந்தத்தக்க நிலையின் காரணங்களைப் பிற்காலப் போக்கில்தான் காண வேண்டுமேயன்றி, மூல உத்தேசத்திலிருந்து வலிந்து வருவித்துக் கொள்ளக் கூடாது. இரு தேசங்களையும் ஸ்தாபித்தவர்களின் மூல உத்தேசம் நண்பர்களாகவே பிரிந்து நல்ல அண்டை நாட்டினராக வாழ வேண்டுமென்பதுதான். பிறகு ஏற்பட்ட துரதிருஷ்டவசமான சம்பவங்களின் போக்குக்குப் பாகிஸ்தானே அதிகப் பொறுப்பேற்க வேண்டியிருக்கும். எனினும் அடிப்படையிலேயே அது தீயநோக்கம் கொண்டிருந்ததாகவும், எனவே நம்மிரு நாடுகளும் என்றுமே நட்பாக இருக்க முடியாது எனவும் கூறுவது தவறாகும்.

பாகிஸ்தான் ஒரு குறிப்பிட்ட மதத்தின் ஆட்சியில் உள்ள நாடு என்பதும் ஒற்றுமைக்குப் பெரும் தடையாகக் கூறப்படுகிறது. இஸ்லாம் ஒன்றே அங்கு அரசாங்க மதமாக அங்கீகரிக்கப்பட்டிருக்கிறது என்பதாலும், முஸ்லிம் அல்லாதரார் — முக்கியமாக ஹிந்துக்கள் — முஸ்லிம்களுக்குச் சமமான அந்தஸ்து வகிக்கவில்லை என்பதாலும் பாகிஸ்தானை ஒரு குறிப்பிட்ட மதத்தின் ஆட்சியில் உள்ள நாடு என்று பொதுவழக்கில் கூறுவது அநுமதிக்கக் கூடியதே. ஆயினும் அரசியல் ரீதியில் ஆழ்ந்து ஆராயும்போது பாகிஸ்தான் மத ஆட்சி நடைபெறும் நாடு என்ற இலட்சணை பொருந்தாது. குரான் அல்லது ஷரீயத்தின் சட்டப்படி நடைபெறுவதல்ல பாகிஸ்தான் ஆட்சி. அங்கு ஆட்சி அதிகாரம் மதத் தலைவர்களான முல்லாக்கள், மௌலானாக்கள் ஆகியோரின் கையில் இல்லை. இதை நாம் மறப்பதற்கில்லை. மேற்கத்தியக் கல்வி பயின்ற ஓர் உயர் வர்க்கமே அங்கு ஆட்சி நடத்துகிறது. இதன் தலைமையில் இருப்பவர் ஸாண்ட்ஹர்ஸ்டில் ராணுவக் கல்வி பயின்ற ஃபீல்ட் மார்ஷல் அயூப்கான் அவர்கள். பொருளாதார அபிவிருத்திக்கெனப் பாகிஸ்தானில் ஒரு திட்டமுள்ளது. கடந்த பதினெட்டாண்டுகளில் அது கண்டுள்ள சிறிதளவு அபிவிருத்தி இந்தியாவின் அபிவிருத்தியுடன் ஒப்பிடும்போது தாழ்ந்ததல்ல. தேசத்தை நவீனமாக்குவதற்குப் பாகிஸ்தான் ஆட்சி முயலுகிறது. எனவே, சமூக — பொருளாதார இலட்சியங்களிலும், அவற்றை அடைவதற்கான வழி முறைகளிலும் பாகிஸ்தானுக்கும்

வளர்ச்சி பெற்று வரும் மற்ற எந்த நாட்டுக்கும் அடிப்படையில் வித்தியாசம் எதுவுமில்லை.

இஸ்லாத்தை அரசாங்க மதமாக ஏற்றுக் கொண்டதன் விளைவாகப் பாகிஸ்தான் இஸ்லாம் ஆட்சியை விஸ்தரிக்க முயன்றிருந்தால் கதை வேறாக இருந்திருக்கும். ஆனால் இப்போது உள்ள நிலவரப்படி உலகத்திலுள்ள பல முஸ்லிம் நாடுகளில் அதுவும் ஒன்று. உலகில் பல முஸ்லிம் நாடுகள் இருப்பினும் அவை எதுவும் மதப் போர் புரிவதில் ஈடுபட்டில்லை; அவ்வாறு ஈடுபடும் உத்தேசமும் அவற்றுக்குக் கிடையாது. பாகிஸ்தான் மட்டும் இதற்கு மாறாகச் செயல்படும் என ஏன் கருத வேண்டும்? பாகிஸ்தான் காச்மீரத்தின் மீது கண் வைத்துள்ளது என்பதும், தனது எல்லையை ஒட்டினாற் போல் முஸ்லிம்கள் பெருவாரியாக அமைந்த அந்த ராஜ்யத்தைத் தன்னோடு சேர்த்துக் கொள்ள விரும்புகிறது என்பதும் உண்மை. ஆயின் இது பிரிவினையிலிருந்து எழுந்த ஒரு தொடர்புள்ள பிரச்னையே. இந்தியாவில் உள்ள முஸ்லிம்கள் நல்ல முறையில் நடத்தப்படவில்லை என்று பாகிஸ்தான் சில சமயங்களில் பேசி வருவது உண்மை. இது பாகிஸ்தானில் ஹிந்துக்கள் நடத்தப்படும் விதம் பற்றி இந்தியர்கள் கூறும் குறைபாடுகளின் பிரதிபலிப்பே. இந்த நடவடிக்கைகளைக் கொண்டு பாகிஸ்தான் 'ஜெஹாத்' என்கிற இஸ்லாமிய விஸ்தரிப்புப் போரில் இறங்கத் திட்டமிட்டிருப்பதாக அநுமானம் செய்வதற்கில்லை. மதப் போர் என்பது காலத்துக்கு ஒவ்வாத விஷயம். இருபதாம் நூற்றுண்டில் வாழும் எந்த நாடும் மதப் போர் தொடங்கவோ, நடத்தவோ எண்ணுது.

'பாகிஸ்தான் சர்வாதிகாரத்தில் உள்ள நாடு; நாமோ ஜனநாயகம். ஜனநாயகத்துக்கும் சர்வாதிகாரத்துக்குமிடையே எவ்வாறு நட்பு ஏற்பட முடியும்?' என்று பொதுவாகக் கேட்கப்படுகிறது. இது ஓர் அபத்த வாதம். ஏனெனில், இந்தியாவின் இன்றைய நேச நாடுகளில் சிலவே ஜனநாயகமாகும். மற்றவை சர்வாதிகாரத்தின் கீழ் உள்ளவையே. இவற்றில் சில பெயர்களை மட்டும் குறிப்பிடுவோம்! ருஷியாவையோ, யூகோஸ்லாவியாவையோ, எகிப்தையோ ஜனநாயகம் என்று சொல்ல முடியுமா? ஒவ்வொரு நாடும் தனது — அல்லது அதே போன்ற— அரசியல் அமைப்பைக் கொண்ட நாடுகளுடன்தான் நட்புக் கொள்ள முடியும் என வற்புறுத்தினால் சமாதான சக வாழ்வு என்பதற்குப் பொருளேயில்லாமற் போகும். ஒரு தேசத்தின் உள் விவகாரங்களில் பிறநாடு தலையிடக் கூடாது என்கிற கொள்கையும் (இக்கொள்கை பிரமாதமாகப் பறைசாற்றப்படுகிறது) அப்போது அர்த்தமற்றதாகும். எந்த நாடும் தனது அரசாங்க அமைப்பைச் சுயமாகவேதான் நிர்ணயித்துக் கொள்ள வேண்டும்; இவ்விஷயத்தில் அண்டை நாட்டினரோ, நட்பு நாட்டினரோ ஏதும் சொல்வதற்கில்லை. ஜனநாயகத்தைப் பின் பற்றுவதும் அதன் விஸ்தரிப்புக்கு உழைப்பதும் தனி விஷயம். ஆனால் பிறநாட்டுடன் நட்புக் கொள்ள இதனை ஒரு நிபந்தனையாக்குவது முற்றிலும் வேறு விஷயம்.

சர்வாதிகாரத்தில் பல விதங்கள் உண்டு. பாகிஸ்தானில் நடைபெறும் சர்வாதிகாரத்தை எவ்வித அதீத கற்பனையாலும் ருஷியா முதலிய கம்யூனிஸ நாடுகளின் சர்வாதிகாரத்தோடு ஒப்பிட முடியாது. பாகிஸ்தானில் தேர்ந்தெடுக்கப்பட்ட சட்டசபை உள்ளது. அது அவ்வப்போது கூடி, எல்லா முக்கியமான விஷயங்களையும் சுதந்திரமாக விவாதிக்கிறது. மாற்றுக் கருத்துக்களைச் சொல்லக் கூடிய — சொல்கிற — பல எதிர்ப்புக் கோஷ்டிகள் அங்கு உள்ளன. தம் கருத்துக்களை அரசாங்கம் ஏற்பதற்கு அவை பிரசாரமும் செய்கின்றன. சர்க்காரின் கொள்கைகளையும் செய்கைகளையும் சமயம்நேரும்போது வன்மையாகக் கண்டனம் செய்யும் பத்திரிகைகளும் அங்கு உள்ளன. பாகிஸ்தானைத் தூரத்திலேயே தள்ளிவைப்பதற்குச் சர்வாதிகார ஆட்சியை ஆதாரம் காட்டுவது எவ்வகையிலும் பொருந்தாது.

இக்கட்டுரை பாகிஸ்தானின் உள்நாட்டுக் கொள்கைகளுக்கோ வெளிநாட்டுக்கொள்கைகளுக்கோ பரிந்து பேசுவதற்காக எழுதப்பட்டதல்ல. இக்கொள்கைகளை அவற்றின் உண்மையான தரத்தைக் கொண்டே விவாதித்து, இந்திய நலன்களின் மீது அவை என்ன எதிர் விளைவுகளை ஏற்படுத்தும் எனக் காணலாம். இவ்விஷயத்துக்குப் புறம்பான தப்பபிப்பிராயங்களையும் அரைகுறை உண்மைகளையும் பிரச்னையின் மீது சுமத்தி நமது தொடர்பைக் குழப்பிப் பாழாக்காதிருப்போமாக. இரு நாடுகளிடையே வேண்டிய அளவு மனக் கசப்பும் விரோதமும் இருந்தாயிற்று. முன்கூட்டிய தப்பபிப்பிராயங்கள் வேறு இதோடு சேர வேண்டாம். உண்மையான பிரச்னை இதுதான்: பாகிஸ்தானோடு நட்புறவை வளர்த்துக் கொள்வது இந்தியாவின் நலனுக்கு உகந்ததா, உகாததா? இதற்கு யாரும் விடை கூற முடியும். அதனை எவ்வித பட்சபாதங்களும் இன்றி மனம் விட்டு விவாதிப்போம்.

○ ● ○ ● ○ ● ○ ● ○ ● ○

லால் பஹாதூர் நினைவுச் சின்னம்

வெறும் அன்னம் மந்திரத்தினால் பலி பிண்டமாகிப் பொருள் பெறுவது போல, ஸ்ரீ லால் பஹாதூர் அவர்களின் மறைவினால் தாஷ்கெண்ட் பிரகடனத்தின் வாசகம் புது சக்தியும் பொருளும் பெற்றுவிட்டது. அவர் தாமே பலிப் பொருளாகித் தாஷ்கெண்ட் பேச்சு வார்த்தையை ஒரு யக்ஞமாக்கிவிட்டார். அவரது மரணத்தின் முத்திரை பெற்றுவிட்ட சமாதான ஒப்பந்தம் ஓர் ஆன்மிக சக்தி பெற்றுவிட்டது. தாஷ்கெண்டில் உடல் என்ற கூட்டை உதறிச் சென்ற அபூர்வ ஆன்மாவுக்கு நாம் எழுப்பக்கூடிய நினைவுச் சின்னம் இந்தியா - பாகிஸ்தான் ஒற்றுமைக்கு வழி காண்பதுதான்.

ராஜாஜி

○ ● ○ ● ○ ● ○ ● ○ ● ○

சமீபத்தில் சென்னை சட்டசபை எதிர்க் கட்சித் தலைவர் திரு நெடுஞ்செழியன் அவர்களும் அவர் நண்பர்கள் சிலரும் பிரயாணம் செய்து கொண்டிருந்த கார் மீது சிலர் கல்லெறிந்து, மாற்றுக் கட்சியினர் மீது மதிப்பைக் காண்பித்த செய்தி பத்திரிகைகளில் வெளியாகி யிருந்தது எல்லோருக்கும் தெரியும்.

திரு நெடுஞ்செழியன் அவர்களையே சந்தித்து அவர் எப்படித் தம்முடைய மாற்றுக் கட்சிகளை மதிக்கிறார், அரசியல் கட்சிகளில் கொள்கைக்கு முதல் இடமா, -தனி மனிதனுக்கு முதலிடமா? என்பது மனமாற்றத்தையும் அவர்கள் அளிக்கும் வோட்டுக்களின் எண்ணிக்கையையும் பொறுத்ததுதான்.

''கருத்து வேறுபாடுகளுக்கு மதிப்பு அளித்து மனிதனுக்கு மனிதன் காட்ட வேண்டிய அன்பு, அருள், பற்று, நட்பு, உறவு ஆகியவற்றை ஒரு கட்சிக்காரர் மற்ற கட்சிக்காரருக்குக் காட்ட வேண்டியது சிறந்த ஜனநாயகப் பண்பாடாகும்.

அரசியலில்



அரசியலில் மாற்றுக் கட்சிகளை மதிப்பதில் பல வகையுண்டு. கருத்தைச் செலவழித்து எடை போட்டு மதிப்பிடும் தரமும் உண்டு: கட்சியின் தனிப் பிரதிநிதிகள் மீது கல்லெறிந்து மரியாதை காட்டும் ரகமும் உண்டு!

பற்றித் தெரிந்து கொள்ள எழுந்த அவாவின் விளைவே இந்தப் பேட்டி.

திரு நெடுஞ்செழியன் என்ன சொல்கிறார் பார்ப்போம்:

''ஜனநாயக நாட்டில் கட்சிகள் இருப்பதும், கட்சிகளிடையே கருத்து வேறுபாடுகள் நிலவுவதும் இயற்கை. ஆளும் கட்சி ஒரு புறமும், அதன் கொள்கைக்கும் குறிக்கோளுக்கும் திட்டத்துக்கும் மாறுபட்ட மற்ற கட்சிகள், எதிர்க் கட்சிகள் எனப் பெயர் பெற்று மறுபுறமும் நின்று பணியாற்றுகின்றன. இந்தக் கட்சிகள் இட மாற்றம் பெறுவது அவ்வப்போது பொதுமக்களின்

'' 'தன் தோட்டத்து ரோஜாதான் மணக்கும்; மாற்றான் தோட்டத்து ரோஜா என்றால் அது மணக்கவே மணக்காது' என்று கூறுவது அறிவுடைமையாகாது. மாற்றுக் கட்சிக்காரரின் கொள்கைகளும் பண்புகளும் நல்லனவாக இருந்தால் அவற்றை மதிக்கவும் தீயனவாக இருந்தால் அவற்றை வெறுத்தொதுக்கவும் கற்றுக்கொள்வது சிறந்த ஜனநாயகப் பண்பாடாகும். ஆனால் மாற்றுக் கட்சியில் உள்ள தனி மனிதரின் சொந்தக் குறைபாடுகளுக்கு முக்கியத்துவம் கொடுக்க முன்வந்து, அதன் அடிப்படையில் அவர் சார்ந்

இருக்கும் கட்சியைக் குறை கூறுவது என்பது பண்புக் குறைவான செயல். நாளையே அவர் மனம் மாறிக் கட்சி மாறலாம். அப்போது அவர் குறைபாடுகள் நிறைவடையுமா?

''ஒரு கருத்தை ஏற்றுக் கொள்வது என்பதும் ஒரு மனிதனை மதிப்பது என்பதும் ஒன்றல்ல; தனித் தனியானவையாகும். ஒரு கட்சிக்காரரின்

தனிமனிதன்

கருத்தை மற்றொரு கட்சிக்காரர் ஏற்றுக் கொள்ளாமல் இருக்கலாம். அதே நிலையில் அவரை மதிக்கலாம்; மதிக்க வேண்டும். கருத்திலே மாறுபட்டவர்களை வெறுக்க வேண்டியது இன்றியமையாமையில்லை. அதே நேரத்தில் அவருடைய தனிப்பட்ட வாழ்க்கையின் குறைபாடுகளைத் தேடிப் பிடித்துப் பெரிதாக்கி அவர் சார்ந்த கட்சிக்கு மாக கற்பிக்க முயற்சி செய்யாமல் இருப்பது இன்றியமையாததாகும். இந்தப் பண்புதான் ஜனநாயகத்தை வளர்க்கும்.

''ஜனநாயகத்தில் கருத்துக்கு முன்னால் கருத்தையும் சொல்லுக்கு முன்னால் சொல்லையும் எழுத்துக்கு முன்னால் எழுத்தையும் எடுத்துக்காட்டுக்கு முன்னால் எடுத்துக்காட்டையும், வாதத்துக்கு முன்னால் வாதத்தையும், நேர்மையாக, நாணயமாக, ஒழுங்காக, உண்மையாக வைத்துத் தம் கொள்கையிலே வெற்றி பெற முயலுவதுதான் ஒரு கட்சியைச் சார்ந்தவருக்கு அழகாகும். கருத்துக்கு முன்னால் கல்லையும், சொல்லுக்கு முன்னால் தடியையும், எழுத்துக்கு முன்னால் கத்தியையும், எடுத்துக்காட்டுக்கு முன்னால் துப்பாக்கியையும், வாதத்துக்கு முன்னால் சிறைச்சாலையையும் காட்டுவது அரசியல் அஞ்ஞானத்தைக் காட்டுமே யல்லாது அரசியல் பண்பாட்டின் அறிகுறியாகாது.

''கொள்கையிலும், அறிவிலும், ஆற்றலிலும், திறமையிலும், நம்பிக்கையற்றவர்தான் கல்லால் அடித்தல், சொல்லால் திட்டுதல், கத்தியால் குத்துதல் போன்ற தனி நபரைத் தாக்கும் இழி தகைமை கொண்ட வன்செயலில் இறங்குவார்.

''மாற்றுக் கட்சிக்காரனைக் கருத்தால் தன் கட்சிக்கு மாற்ற முயன்று தன்னுடைய கட்சியை வலுப்படுத்திக் கொள்வதுதான் முறையே தவிர, அவனைத் தனிப்பட்ட முறையில் தாக்குவதன் மூலம் அவன் கட்சி வலுவைக் குறைக்க நினைப்பது நீதியாகாது. ஆகவே அரசியலில் தனி மனிதன் தன்னுடைய அசாதாரண நல்ல குணங்களினால் முக்கியத்துவம் பெறலாமே தவிர தன்னுடைய குறைபாடுகளினால் அல்ல! அவனுடைய குறைபாடுகளை நம்பி மாற்றுக் கட்சிக்காரர்கள் தங்கள் பலத்தை வளர்க்கலாம் என்று நினைப்பதும் பண்பான செயலல்ல!

''அமரர் காந்திஜி, நேரு, அல்லது பெரியார் ராமசாமி போன்ற தலைவர்களின் படங்களை ஊராட்சி, நகராட்சி மன்றங்களில் பல சந்தர்ப்பங்களில் எங்கள் இயக்கத்தைச் சேர்ந்த பிரமுகர்கள் திறந்து வைக்கிறார்கள். மாறுபட்ட கொள்கையும், லட்சியமும் கொண்ட இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் அவர்கள் என்று நாங்கள் ஒதுங்குவதில்லை. ஆங்காங்கு தனி நபருக்கும் அவர் சாதனைக்கும் மதிப்புக் கொடுக்க நாங்கள் தயங்குவதில்லை. ஆனால் இதே வேளைகளில் நாங்கள் கலந்துகொள்ளும் இத்தகைய நிகழ்ச்சிகளை மாற்றுக் கட்சிக்காரர்கள் அறவே பகிஷ்கரிக்க முயலும்போது, அவர்கள் எங்கள் அளவுக்கு உள்ளத்தில் விசாலம் பெறவில்லையோ என்றுதான் நினைக்கத் தோன்றுகிறது.''

திரு நெடுஞ்செழியனிடம் விடை பெற்றுத் திரும்பியபோது அவரிடம் மாற்றுக் கட்சித் தலைவர்கள் ஏன் இவ்வளவு மதிப்பு வைத்திருக்கிறார்கள் என்ற ரகசியம் புரிந்தது. மாற்றாரை மதிக்கும் பண்புடையவரல்லவா அவர்!

—மேனு

பிரிட்டனில் கிரிஸ்டீன் கீலர் - ஃபோர்பியூமோ விவகாரத்தின்போது ஒரு பாராளுமன்ற உறுப்பினர் கூறியது: ''ஃபோர்பியூமோவை நாங்கள் தாக்குவது அவர் கிரிஸ்டீன் கீலருடன் தொடர்பு கொண்டிருந்தார் என்பதற்காக அல்ல. அது அவருடைய சொந்த விவகாரம். அதில் தலையிட எங்களுக்கு உரிமை கிடையாது. ஆனால் ஒரு ருஷ்ய ஒற்றனுடன் கிரிஸ்டீன் கீலர் நட்புக் கொண்டிருப்பதைக்கூட அறியாத அளவுக்கு அவர் கிரிஸ்டீனிடம் மோகம் கொண்டிருந்த அந்த மடமையைத்தான் கண்டிக்கிறோம்.''

அரசியலில் ஈடுபட்டுள்ள ஒரு தனிமனிதனுடைய சொந்த விவகாரங்களே நாட்டு நலனைப் பாதிக்கும்போது பார்த்துக் கொண்டு சும்மா இருக்கலாகாது என்பதை இது அழகாக விளக்குகிறதல்லவா?

- குட்டி கிருஷ்ணன்

காலை வேளை. 1956ம் ஆண்டு மார்ச் முதல் தேதி. மில்லன் என்ற அமைதி நிறைந்த ஒரு சிற்றூர். அங்குதான் ஹெர்ரிங்டன் தம்பதிகள் வசித்து வந்தார்கள். ஹெர்ரிங்டன் ஊரில் இல்லை. ஒரு வியாபாரக் கம்பெனியின் பிரதிநிதி என்ற முறையில் அவன் அடிக்கடி வெளியூர்களுக்குச் செல்ல வேண்டியிருக்கும். அவன் மனைவி விக்டோரியா மில்லன் ஆசுபத்திரி ஒன்றில் நர்ஸாகப் பணியாற்றி வந்தாள். அவள் மிகுந்த பயந்த சுபாவம் உள்ளவள். வீட்டில் சிறு சத்தம் கேட்டால்கூட அவள் நடுங்குவாள். வீட்டில் விக்டோரியாவும் அவளுடைய பதினொரு வயது மகன் ஜானியும்தான் இருந்தார்கள். விக்டோரியா சமையலறையில் காலை ஆகாரம் தயார் செய்து கொண்டிருந்தாள். ஜானி தன்னுடைய படுக்கை அறையில், சட்டை மாட்டிக் கொண்டிருந்தான்.



அன்று பக்கத்து ஊரில் ஒரு விளையாட்டு விழா ஏற்பாடாகியிருந்தது. அதில் ஜானி தன் பள்ளி நண்பர்களுடன் கலந்து கொள்வதாக ஏற்பாடு. அந்த உற்சாகத்தில்தான் ஜானி கால் சட்டைகளையும் மேல் சட்டைகளையும் பொறுக்கி எடுப்பதில் முனைந்திருந்தான்.

அப்போதுதான் வீட்டின் பின்பக்கக் கதவை யாரோ தட்டும் சத்தம் கேட்டது. 'அம்மா! அங்கே யார் என்று பார்' என்று இருந்த இடத்திலிருந்தே சொல்லிவிட்டு ஜானி தன் வேலையில் முனைந்தான்.

கதவைத் தட்டுவது ஜானியின் பள்ளிக்கூடச் சிநேகிதர்களில் ஒருவராக இருக்கலாம் என்றுதான் விக்டோரியா நினைத்தாள். ஆனால் அவள் கதவைத் திறந்தபோது அங்கு முன் பின் தெரியாத ஒரு குட்டை ஆசாமி நின்று கொண்டிருந்தான். அவன் உடைகள் கசங்கிக் கிழிந்து புழுதி படிந்திருந்தன. அவன் பார்வையில் ஒருவித வெறி. அவன் கையில் ஒரு சிறிய இரும்புத் தடி. அந்தத் தடிகூட ஹெர்ரிங்டனின் மோட்டார் ஷெட்டில் இருந்ததுதான்.

சட்டைப் பொத்தானை மாட்டிக் கொண்டிருந்த ஜானி, வீட்டின் பின்பகுதியிலிருந்து யாரோ தடாலென்று கீழே விழும் ஓசையைக் கேட்டான். அதைத் தொடர்ந்து அவனுடைய தாயாரின் அலறல் ஒலி தொடர்ந்தது. அப்புறம் ஒரே நிசப்தம். 'அம்மா' என்று கூக்குரலிடத்தான் முதலில் அவன் குழந்தை உள்ளம் நினைத்தது.

ஆனால் அப்படிச் செய்யாமல் அவன் நிதானமாக ஒருகணம் சிந்தித்தான்.

எதிர் அலமாரியில் ஒரு பெரிய துப்பாக்கி இருந்தது. ஹெர்ரிங்டன் ஊரில் இல்லாத போது அதை யாரும் தொடக் கூடாது என்று ஓர் ஏற்பாடு. ஆனால் ஜானி இப்போது அந்த ஏற்பாட்டை மீறத் துணிந்து விட்டான். அந்தத் துப்பாக்கியில் ஒரு தோட்டாவைப் போட்டு எடுத்துக்கொண்டு வெளியே வந்தான்.

பின்கட்டுக்குப் போவதா அல்லது அப்படியே வாசலில் கூக்குரலிடுவதா என்று அவனால் தீர்மானிக்க இயலவில்லை. ஆனால் அவன் கால்கள் அவனையறியாமலேயே பின்னால் இழுத்துக் கொண்டு போயின. அங்கு அவன் கண்ட காட்சி அவன் துணிவை அதிகரித்தது.


அவன் தாயார் கீழே விழுந்து கிடந்தாள். அவளுக்குப் பக்கத்தில் அந்தக் குட்டை ஆசாமி நின்று கொண்டிருந்தான். அவள் தலையிலிருந்து ரத்தம் கசிந்துகொண்டிருந்தது. அவன் கையிலிருந்த இரும்புத் தடியிலும் அந்த ரத்தக் கறை படிந்திருந்தது.

ஜானி துப்பாக்கியை நிமிர்த்தி அந்தக் குட்டையனை நோக்கிக் குறி பார்த்தான்.

''ஐயையோ! சுட்டு விடாதே'' என்று அந்தக் குட்டையன் கதவை நோக்கி நகர்ந்தான். தனக்குக் கிடைத்த ஒரே சந்தர்ப்பத்தை ஜானி நழுவ விடத் தயாராயில்லை. சுட்டு விட்டான்.

ஆனால் அவன் குறி தவறி விட்டது. குட்டையனின் கைச் சுண்டு விரலுக்கு மாத்திரம் சொற்பக் காயம். ஜானியின் துப்பாக்கியிலிருந்த ஒரு தோட்டாவும் வெடித்து விட்டது என்று நிச்சயித்துக் கொண்ட அந்தக் குட்டையன் நிதானமாக வந்து அந்தத் துப்பாக்கியைக் கையில் வாங்கிக் கொண்டான். ஜானி தன் தாயை எழுப்புவதில் முனைந்தான்.

அவன் தாயார் மயக்கம் தெளிந்து எழுவதற்குள்ளாகக் குட்டை



பயந்தால் முடியுமா?

கோமதிசுவாமிநாதன்



ஆசாமி தன்னைப் பலப்படுத்திக் கொண்டு விட்டான். ஞானியின் கையிலிருந்து நான் பறித்த துப்பாக்கிக்குத் தோட்டாவைத் தேடி மாட்டிக் கொண்டான். வீட்டிலிருந்த வேறு ஒரு கைத்துப்பாக்கியையும் தேடி எடுத்து வைத்துக் கொண்டான்.

மயக்கம் தெளிந்த விக்டோரியாவுக்கு ஞானியைக் கொண்டே தலையில் கட்டுப் போடச் செய்தான். அவன் கையிலிருந்த துப்பாக்கிகள் அவர்களைக் கூச்சல் போட்டு அக்கம் பக்கத்தவரை உதவிக்குக் கூப்பிட விடாமல் செய்தது. வேறு யாரும் அந்த வீட்டில் உள்ளவர்களைத் தேடி வருவதற்கு முன் அவன் அங்கிருந்து பத்திரமாக வெளியேறுவதற்கான வழிகளை ஆராய ஆரம்பித்தான். ஞானியின் உடுப்புகள் அவனுக்குப் பொருந்தியிருந்ததால் அவைகளை எடுத்து மாட்டிக் கொண்டான்.

அந்தக் குட்டை ஆசாமியின் பெயர் பொகாயர். ஒரு கொலைகாரனும்கூட. போலீசுக்கு அகப்படாமல் அங்கு வந்து ஒளிந்து கொண்டவன். மீண்டும் போலீசுக்கு டிமிக்கி கொடுத்து விட்டுத் தப்பத் துடிப்பவன்.

இரண்டு மூன்று நாட்களுக்கு முன்னால் பாஸ்டனுக்குச் சமீபத்தில்



ஒரு பெட்ரோல் பங்க் சொந்தக்காரரைத் துப்பாக்கியால் மிரட்டி நூறு டாலர்களையும் அங்கிருந்த ஒரு பியூக் காரையும் ஓட்டிக் கொண்டு கம்பி நீட்டினான் பொகாயர். அவனைப் பிடிக்கப் போலீசார் நடவடிக்கை எடுத்துக் கொண்டார்கள்.

முதல் நாள் மாலை தன் காரை நிறுத்த முயன்ற ஒரு போலீஸ்காரரைப் பொகாயர் சுட்டு வீழ்த்திவிட்டுக் காரை வேகமாகக் கிளப்பிக் கொண்டு போனான். இந்தச் செய்தியை வானொலி மூலம் போலீசார் பரப்பினர். மில்லன் நகருக்குப் பக்கத்தில், சாலையை ஒட்டியிருந்த பாலத்தில் இரண்டு போலீஸ் இலாகா கார்களை நிறுத்தி, பொகாயரைத் தடுக்கத் தயாராக இருந்தனர் போலீஸார். ஆனால் துணிச்சலான பொகாயர் இடைவெளியைப் பயன்படுத்திக் கொண்டு தன் காரை வளைத்தான். ஆனால் கார் பாலத்தின் சுவரில் மோதிக் கீழே பள்ளத்தில் விழுந்தது. ஆனால் கீழே விழுந்த காரில் பொகாயர் தென்படவில்லை. அவன் எப்படியோ காயம்படாமல் பாலத்திலிருந்த புதர்களில் பதுங்கியிருந்து விட்டு நள்ளிரவில் ஹொர்ரிங்டன் வீட்டு மோட்டார் ஷெட்டுக்கு வந்து விட்டான். காலையில் கதவைத் தட்டி உள்ளேயும் புகுந்து விட்டான்.

ஃ ஃ ஃ

பொகாயர் எப்படித் தப்புவது என்று ஒரு முடிவுக்கு வந்துவிட்டான். சில நிமிடங்கள் கழித்து ஹொர்ரிங்டன் குடும்பத்தினரின் செவர்லே மோட்டார் பிரதான ரஸ்தாவில் ஓடிக் கொண்டிருந்தது. விக்டோரியாதான் அதை ஓட்டினாள். அவளுக்கு அருகிலேயே ஜானியும் பொகாயரும் அமர்ந்திருந்தார்கள். பொகாயர் ஜானியின் உடைகளில் இருந்தாலும், அவன் குட்டையாக இருந்ததாலும் பார்ப்பவர்களுக்கு ஒரு தாயார் ஆனந்தமாகத் தன் மகன்களுடன் காரில் போய்க் கொண்டிருக்கிறாள் என்று தோன்றும்படியாக இருந்தது. ஆனால் விக்டோரியாவுக்கு ஒரே கிலி. பொகாயர் மறைவாகத் தன் கையிலிருந்த கைத்துப்பாக்கியை ஜானியின் விலாவில் பதித்திருந்தான். அவன் உத்தரவுக்கிணங்கி அவள் சொல்லுமிடத்துக்குக் காரை ஓட்டாமல் இடையே வெளி உதவியை நாட ஏதும் அவள் முயன்றால் அந்தக் கணத்திலேயே ஜானியைச் சுடத் தயங்க மாட்டான் என்று அவன் சொல்லியிருந்தான். அவன் அதைச் செய்யத் தயங்க மாட்டான் என்பதும் அவளுக்குத் தெரியும். எப்பொழுதுமே ஐம்பது மைல் வேகத்துக்கு மேல் காரை ஓட்டாதவள் அன்று எண்பது மைல் வேகத்தில் ஓட்டினாள்.

போக்குவரத்துப் போலீஸார் இடைவழியில் அந்தக் காரை நிறுத்தி விசாரித்தார்கள். பொக்காயரே தன் தாயாருக்கு ஏற்பட்ட தலைக் காயத்துக்காக டாக்டரிடம் போய்க் கொண்டிருப்பதாகச் சொன்னான். இதற்குள் காருக்கு வெளியே தொங்கிக் கொண்டிருந்த கையினால் விக்டோரியா அவசர சமிக்ஞைகள் செய்தாள். ஆனால் அந்தப் போலீஸ்காரருக்கு அப்போது ஒன்றும் புரியவில்லை. காரைப் போக அனுமதித்து விட்டார். அப்புறம்தான் அவருக்கு, தமக்குப் பதில் சொன்ன ஆசாமியின் முகம் சரியானபடி நினைவுக்கு வந்தது. முதல் நாள் போலீஸ்காரரைக் கொன்று விட்டுத் தப்பிய பொக்காயர் என்று புரிந்தது. அத்துடன் கார் ஓட்டிய பெண்மணியின் சமிக்ஞைகளும் புரிந்தன. அந்தக் கணத்திலேயே போலீஸ் நிலையங்களுக்கு ரேடியோமூலம் செய்தி பரப்பப்பட்டது. 'அந்தக் குறிப்பிட்ட செவர்லே காரில் பொக்காயர் துப்பாக்கியுடன் போய்க் கொண்டிருக்கிறான். அவனது துப்பாக்கி முனையில் ஒரு சிறுவன் எந்த வினாடியிலும் பலியாகலாம். அவனைக் கவனிக்கவும். பிடிக்க வேண்டாம்' என்பதுதான் செய்தி.

விக்டோரியா காரை ஓட்டிக் கொண்டே இருந்தாள். பின்னால் போலீஸ் கார்கள் தூரம் விட்டு வருவது கண்ணாடி வழியாகத் தெரிந்தது. ஆனால் அவர்கள் வந்து உதவக்கூடும் என்ற நம்பிக்கை இல்லை.

ஒரு வளைவான திருப்பம். அவளுடைய காருக்கு முன்னே அந்தத் திருப்பத்தில் வேறு ஒரு கார் மெதுவாகப் போய்க் கொண்டிருந்தது. அதை முந்தச் சொல்லிப் பொக்காயர் தூண்டினான். ஆனால் எதிர்ப்பக்கமிருந்து ஒரு லாரி வந்து கொண்டிருந்தது. இரண்டுக்குமிடையே காரைப் புகுத்திய விக்டோரியா வேண்டுமென்றே காரை அதிகம் வளைத்து முன்னால் போய்க் கொண்டிருந்த காரில் மோதி அதைக் கீழே சாய்த்து விட்டாள். காயம் இல்லை. ஆனால் கார் ஓடாது!

அப்போதும் பொக்காயர் ஜானி கழுத்தைப் பிடித்து வளைத்துக் கொண்டே துப்பாக்கியை அவன் முதுகில் வைத்தவாறு பக்கத்துக் காட்டுக்குள் ஓடினான். பின்னால் வந்த போலீஸார் வேடிக்கைதான் பார்க்க முடிந்தது. ஆனால் கீழே ஒரு கல் தடுக்கிப் பொக்காயர் விழுந்தபோது ஜானி தப்பிக்கொண்டு ஓடினான். அந்தக் கணத்துக்காகக் காத்திருந்த போலீஸார் துப்பாக்கிகளால் பொக்காயரைச் சுட்டுத் தள்ளினார்கள். 'கடவுளும் போலீஸாரும் சேர்ந்து என் மகனைக் காப்பாற்றினார்கள்' என்று சொல்லிவிட்டு விக்டோரியா மூர்ச்சையானாள். ஆதாரம்: **ரீடர்ஸ் டைஜஸ்ட்**



அடுத்த இதழில் — நவரச நிகழ்ச்சிகள்

கோட்டை விட்ட கோபம்

○ ○ ○ ○ ○ ○

சினிமா பொழுதுபோக்குக்கு மட்டும்தானா?

டைரக்டர் ஸ்ரீ கே. எஸ். கோபாலகிருஷ்ணன் பேட்டி

சகல வீட்டு வசதிகளுடனும் சுகமான பிரயாணத்திற்கு

S C I


தி ஷிப்பிங் கார்ப்பொரேஷன் ஆப் இந்தியா லிமிடெட்

(ஒரு இந்திய அரசாங்கத்தின் நிறுவனம்)

ரிஜிஸ்டர்டு ஆபீஸ் :

ஸ்டீல் கிரீட் ஹவுஸ் 4வது மாடி, இன்ஷாவாச்சா ரோடு, பம்பாய் -1

சென்னை - நாகப்பட்டினம் - ஸ்ட்ரெயிட்ஸ்



t. S. S. ஸ்டேட் ஆப் மதராஸ்

சென்னையிலிருந்து	நாகப்பட்டினத்திலிருந்து
26-2-1966	27-2-1966

அன்று புறப்படும்

இதர விவரங்களுக்கு கீழ்க்கண்ட ஏஜண்டுகளை அணுகவும்

K. P. V. ஷேக் முகம்மது ராவுத்தர் & கோ.

41. லிங்கி செட்டித் தெரு, சென்னை-1
தபால் பெட்டி நெ. 1264
போன்: 22761-3 தந்தி: "SHIPINDIA"

பண்டகசாலை
நாகப்பட்டினம்
போன் : 272 தந்தி : "SHIPINDIA"



ஓர் அசலை
இன்னொன்றால் சுலபமாய்
நகல் செய்து
காட்டிவிட முடியலாம்.
!ஆனால் அந்த அசலே
தன்னைத்தானே நகல்
செய்து காட்ட
வேண்டுமென்றால்...?

அசலும் நகலும்

"மலர் மன்னன்"

ஆரதி பொம்மிக் இன்னும் வந்தாகவில்லை. பெல்கரியாவில் ரயிலேறி, பியால்தா ஸ்டேஷனில் இறங்கி நார்கேல் டங்காவுக்குச் செல்கிற பஸ்ஸிலோ ட்ராமிலோ பயணம் புரிந்து அவன் அங்கு வந்தாக வேண்டும். வீட்டிலிருந்து புறப்படவோ அன்றி வரும் வழியிலோ ஏதேனும் காரணமாய்க் காலதாமதமாகிவிடில், இழந்துபோன நேரத்தை ஈடுகட்ட ஒரு டாக்ஸியை அமர்த்திக் கொள்ளும் அளவுக்கு அவளது பொருளாதாரம் அனுமதிக்குமா என்பது ரமணனுக்குச் சந்தேகம்தான். இடதுகை மணிக்கட்டைச் சிறிது கவலையோடு பார்த்துக் கொண்டான். குறிப்பிடப்பட்ட காலம் கடந்து மேலும் ஒரு மணி நேரமாகி விட்டிருந்தது. இரண்டு நாட்களாய் இரவு பகல் எனும் வேற்றுமை மறந்து, ஒன்றன்பின் ஒன்றாய், ஒழுங்காய் மேற்கொள்ளும் அன்றாடக் கடன்களைத் துறந்து, நெஞ்சே ஒரு வயிறாய், நினைவே ஒரு பிரசவமாய்ப் படாதபாடுபட்டு, இன்னதை இப்படித்தான் அமைக்க வேண்டும் என்று இறுதியில் ஓர் ஏற்பாட்டுக்கு வந்து, இன்னின்ன உத்திகளை, இன்னின்ன கலவைகளைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டுமென்று தீர்மானம் பண்ணிக் கொண்டு, அதிகாலையிலிருந்தே 'மூட்' என்கிற ஊக்குவிப்பையும் தருவித்துக் கொண்டு அனைத்தும் ஆயத்தமாய்க் காத்திருப்பனவற்றுள் தானும் ஒன்றாய்க் காத்திருந்தால், இன்னும் அவள் வந்தபாடாயில்லை...

அலுப்பும், சலிப்பும் அத்துடன் நேரமும் தன் உள்ளத் தூண்டலும் விரயமாகிக் கொண்டிருக்கின்றனவே என்கிற ஆத்திரமுமாய், அறை நடுவே கடிகாரப் பெண்டுலம் மாதிரி முன்னும் பின்னுமாய் ரமணன் உலவத் தொடங்கினான். அடிக்கடி 'பால்கனி'ப்புறம் சென்று வெளியே தலைநீட்டித் 'தெரு முனையில் அவள் உருவம் தெரிகிறதா?' என்று பொறுமை இழந்த தவிப்புடன் எட்டிப் பார்ப்பதில் மேலும் சற்று நேரம் கழிந்தது. அப்படியும் இப்படியுமாகக் குட்டி போட்ட பூனை மாதிரி வளைய வந்ததில் கால்கள்கூடக் கடுக்கத் தொடங்கி விட்டன!

'சரி, சரி, இனிமேல் அவள் வந்தாற்போல்தான்' என்று எரிச்சலுடன் முணுமுணுத்துக் கொண்டவனாய் ரமணன் அறையின் மூலையிலிருந்த மேஜையை அணுகி, இழுப்பறையைத் திறந்து, உள்ளேயிருந்த சிறு மரப் பெட்டியின் மூடியை உயர்த்தி ஒரு 'பேபி கரோனா' சுருட்டை எடுத்துப் பற்றவைத்துக் கொண்டான். முகத்தில் கவிந்த சுருட்டுப் புகையைக் கையால் வீசி அப்புறப் படுத்தியவாறு அருகிலிருந்த ஆசனத்தில் முடங்கிக் கொண்டான்.

சுருட்டின் காட்டமான புகையை உறிஞ்சி இழுத்து, நெஞ்சுக் கூட்டினுள் ஒரு விநாடி அதைத் 'தம்'கட்டி, கண்ணிமைகளை இடக்கர விரல்களால் தேய்த்து விட்டுக்கொண்டபடி அவன் தன்

ஆசனத்தில் அசைவற்றுக் கிடக்கையில் மாடிப் படிகளில் திடீரெனத் துரித கதியில் காலடியோசை கேட்க ஆரம்பித்தது.

ரமணன் சரேலென எழுந்து நின்றான். இழந்த உற்சாகத்தைத் திரும்பப் பெற்ற தெம்புடன், முகம் மலர, அவன் அறை வாயிலை நோக்கி நின்றபோது சந்திரோதயமாவதுபோல் ஆரதி பொம்மிக்கின் பிம்பம் மாடி வளைவினின்று மேலே எழும்பி வந்தது.

கடு நடையாய், மூச்சு வாங்க ஆரதி பொம்மிக் அறையினுள் பிரவேசித்தாள். மேலுதட்டிலும், மூக்கு நுனியிலும் நெற்றி மேட்டிலும் வியர்வைத் துளிகள்...

''ஓனேக் தேரி ஹோயே'கேலோ ரமண்பாபு. கிச்சுமோனே கோர்பேன்னு (மிகவும் நாழியாகி விட்டது. அதை நீங்கள் ஏதும் பொருட்படுத்தலாகாது)'' என்று சுவாசத்தின் துரிதத்தில் குரல் சற்றே தடுமாற மன்னிப்புக் கோரும் பாவனையில் அவள் பேசிச் சிரித்ததும், ''நாழிதான் ஆகிவிட்டது; அதனாலென்ன, பரவாயில்லே'' என்று அவன் சம்பிரதாயமாகக் கூறினான்.

''ஒவ்வொரு நாளும் பொழுது விடிகிற போதெல்லாம் 'இன்று எந்த அவஸ்தைக்காளாகப் போகிறோமோ' என்ற விசாரத்தோடுதான் இந்தப் பெரிய கல்கத்தா நகரம் கண்விழித்தாக வேண்டியிருக்கிறது. எடுத்ததற்கெல்லாம் வேலைநிறுத்தம், தொட்டதற்கெல்லாம் போராட்டம் — எரிப்பு, உடைப்பு, கல்லெறி, கலாட்டா! இளம் மனித சமூகத்தின் மகத்தான சக்தி இந்தக் கல்கத்தா வீதிகளில் அனுதினமும் விரயமாகிக்கொண்டிருக்கிறது, ரமண் பாபு. இப்போதுகூடப் பாருங்கள், டவர் ஹோட்டலுக்கெதிரில் யாரோ ஒரு நடைபாதை வியாபாரிக்கும் 'பீட்' வருகிற ஒரு போலீஸ்காரருக்குமிடையில் முளைத்த ஒரு சின்னத் தர்க்கம் ஒரு பெரிய கலவரமாய் முற்றி இரண்டு மணி நேரத்துக்குப் போக்குவரத்தையே ஸ்தம்பிக்கச் செய்துவிட்டது! இல்லாவிட்டால் வருவதற்கு இத்தனை நாழியாகுமா?'' என்று தன் காலதாமதத்துக்கு வெகு சாதுரியமாக, அவள் சாக்குச் சொன்னபோது எங்கே பேச்சில் மேலும் நேரத்தை வீணாக்கிவிடப் போகிறாளோ என்ற கவலையுடன் ''ஓ, போகட்டும் விட்டுத்தள்ளு! இன்று சற்று சிரமமான 'தீம்'. நீ கொஞ்சம் சிரத்தையோடு ஒத்துழைத்தாக வேண்டியிருக்கும். உள்ளே போய் முகத்தைக் கழுவிக் கொண்டு பத்து நிமிடங்கள் ஓய்வு எடுத்துக்கொள்.



ஆனால் தூங்கிப்போய் விடாதே... நேரம் அதிகமில்லை!'' என்று அவன் அவளுக்கு உட்புறம் வழிகாட்டி விட்டான்.

அவள் சிரிப்புக் கலகலக்க, ''தூங்கும் அழகியாக ஒரு நாள் உங்களுக்குக் காட்சியளித்தேன் என்பதற்காக என்னை ஒரு தூங்கு மூஞ்சி என்றே நினைத்துக் கொண்டுவிட்டீர்களா ரமண் பாபு?'' என்றாள். பிறகு சற்றே கண்டிப்பான தொனியில் ''ஷுது குமாய்த்தே எத்தோ தூர் அமார்கே ஆஷ்தஹோபேறு (வெறுமனே தூங்குவதற்காக இவ்வளவு தூரம் நான் வரவேண்டிய அவசியமில்லை)'' என்று பதிலடி கொடுத்தாள்.

''சும்மா விளையாட்டுக்குச் சொன்னேன், மிஸ் பொம்மிக். வித்தியாசமாய் எடுத்துக் கொண்டு விடாதே. களைப்பும் படபடப்புமாய் வந்திருக்கிறாய். உன் முக பாவம் முற்றிலும் மாறியாக வேண்டும். 'பாத்ரூமுக்குப் போய் முகத்தை அலம்பிக்கொள். அப்படியே போட்டுக் கொண்டு வந்திருக்கிற கொண்டையையும் அவிழ்த்துக் கூந்தலை 'ஷாம்பூ' போட்டுக் கழுவி பின் விசிறிக் காற்றில் உலர்த்திக் கொண்டு வந்து சேர். இன்றைய 'தீம்' கொஞ்சம் சிரமமானது என்றுதான் முதலிலேயே சொல்லி விட்டேனே!''

''தீம் என்னவென்று சொல்லவில்லையே! அதைச் சொல்லுங்கள் முதலில்!'' என்று அவள் உள்ளே செல்லாமல் அவன் பதிலுக்காகக் காத்து நின்றாள்.

ரமணன் அவள் விழிகளை ஒரு விநாடி கூர்ந்து நோக்கினான். பிறகு கத்தியைப் பாய்ச்சுகிற வேகத்தில் சொன்னான்:

''இளம் விதவை.''

அவள் முகம் சடுதியில் இருண்டது. கத்தியைப் பாய்ச்சுகிற வேகத்தில் அவன் சொன்ன வார்த்தைகள் ஒரு பாய்ந்த கத்தியாகவே தன் மார்பில் புதையுண்ட வலியில் அவள் உதடுகள் கோணின.

''ஏன், மிஸ் பொம்மிக்? ஒருவேளை உனக்கு இதில் ஆட்சேபணை ஏதாவது....'' என்று மேலே வார்த்தைகள் வராமல் அவன் தவிக்கையில் அவள் சட்டெனத் தன்னைச் சுதாரித்துக் கொண்டு விட்டாள்.

''நா, நா! அதெல்லாம் ஒன்றுமில்லை, ரமண் பாபு; உங்களுடைய கற்பனைகளுக்கு உருவம் கொடுக்க என்னை நான் ஒப்புக் கொடுத்தான பிறகு எனக்கென்று சொந்தமான விருப்பு வெறுப்புக்களுக்கு இடமே கிடையாதே! நாய் வேஷம் போட்டுக் கொண்டான பிறகு குரைப்பதற்குத் தயக்கப்படுவார்களா?'' என்று சில விநாடிகள் மௌனத்துக்குப் பின் சிரித்தபடியே, அந்தச் சிரிப்பினுள் தன் உணர்வுகள் அனைத்தையும் மறைத்துக் கொண்டு அவள் குளியலறையை நோக்கி நடந்தாள்.

தன்னை ஒப்புக் கொடுத்தான பிறகு, தனக்கென்று சொந்தமாய் ஓர் அபிப்பிராயத்துக்கே இடமில்லை என்கிற ஒரு தீர்மானத்துக்கு வந்து ஒரு நிர்ப்பந்தத்துக்கு ஆளான மனநிலையுடன் செல்லும் அவளை — தன் 'மாடலை' — 'மாதிரிப் பெண்ணை' — ஓவியன் ரமணன் சற்றே விசாரத்துடன் — முற்றிலும் சுயநலமான விசாரத்துடன்தான் — நோக்கி நின்றான். தன் விருப்பமின்றிப் பலவந்தமாய் ஒரு பாவனையை இவள் வரவழைத்துக்கொள்கையில் அது பொய்க் கலப்பின்றி இயல்பாய்த் தோன்றும் அச்சாக அமையக்கூடுமா என்கிற சந்தேகம் அவன் நெஞ்சில் மெதுவாய், ஆனால் தீர்க்கமான அடிச்சுவட்டுடன் நத்தை மாதிரி ஊர்ந்தது.

ஆரதி பொம்மிக் அதற்கு முன் அவனுக்களித்த 'ஸிட்டிங்கு'களெல்லாம் மிகத் திருப்கரமாகவே அமைந்திருந்தன. தான் மோசம் போனதன் அதிர்ச்சி நீங்கு முன்னரே சாபத்துக்கும் ஆளாகி நிற்கிற அகலிகை, தவமியற்றும் உமை, மிதமிஞ்சிய ஜலக்கிரீடையின் மயக்கில் தன்னிலை மறந்து தனித்துப் போன கோபிகை, பிட்சையிடுகிற சுஜாதை, சிலுவையில் அறையுண்ட தேவ குமாரனைக் கடைசித்தடவையாகக் கண்ணுறும் மேரி மக்தலேன், கானகத்தே காரிருளில் தன்னை நளன் கைவிட்டுச் சென்ற பயங்கரத்தை இன்னும் உணராமல் நிச்சிந்தையாகத் துயிலும் அழகி தமயந்தி — இப்படி அவன் நகல்களுக்கு அசலாயும், அவன் தேர்ந்தெடுத்த அசல்களுக்கு நகலாயும், அவள் அளித்த தோற்றங்களில் எதுவுமே சோடை போகவில்லை. ஆயினும் இப்போது.... இந்தப் புதிய ஓவியத்துக்கு என்னதான் அவள் துணிந்து விட்டாலும், இப்படி ஓர் அமங்கலமான படைப்புக்கு — இளம் விதவைக்கு...

அவள் ஒரு 'புரொபஷனல் மாடலாக' இருக்கும் பட்சத்தில் ரமணன் இவ்வளவு தூரம் சஞ்சலப்பட மாட்டான்தான். ஆனால் இந்தத் துறைக்கே இப்போதுதான் புதிதாய் வந்திருக்கிற 'அமெச்சூர்' ஆயிற்றே அவள்!

கடந்த மூன்று மாதங்களுக்குள்ளாகத்தான் ஆரதி பொம்மிக்கின் தொடர்பு ரமணனுக்குக் கிட்டியிருந்தது. ஒரு 'ஸிட்டிங்குக்கு' முப்பது ரூபாய் வீதம் பதினைந்து 'ஸிட்டிங்கு'களுக்கு அவளை அமர்த்திக் கொண்டிருந்தான். இப்படி எதிரில் தோன்றி 'போஸ்' கொடுப்பதையே நெடுநாளாய்ப் பிழைப்பாகக் கொண்டு இயங்கி வருகிற 'புரொபஷனல் மாடல்'கள் இதைவிடக் குறைவான தொகைக்கே வெகு எளிதிலும் ஏராளமாகவும் கிடைப்பார்கள்தான்; ஆனால் இன்ன காட்சி இப்படித்தான் அமைய வேண்டும் என்று தமக்குத் தாமே உருவேற்றிக் கொண்டு ஒரு செயற்கையான தோற்றத்தை வெளியிடுகிற அந்த 'புரொபஷனல்'களை விட இந்தத் துறைக்கே முற்றிலும் புதிய ஒரு நபரைக் கொண்டு செயற்கையின் சாயல் விழாத இயற்கையான நகல்களைத் தீட்ட முடியுமென்று ஊகித்து, தினசரிப் பத்திரிகைகளில் விளம்பரம் கொடுத்ததன் விளைவாக அவனுக்குக் கிடைத்தவள்தான் ஆரதி பொம்மிக். அவன் ஊகத்தை அவள் பிழையாக்கவில்லை.

இத்தனை நாட்களாய் அவள் வந்து போகிறாளெனினும் முகத்தில் மண்டுகிற ரோமக் கற்றைகளைக் களையக்கூட முனைப்பில்லாத கர்மயோகியான ரமணன், ஓவியம்

சம்பந்தப்பட்ட விஷயங்களைத் தவிர அவளது சொந்த விவகாரங்களைப் பற்றி அவளிடம் பேசவோ, பேச நினைத்ததோ கிடையாது. அவளும் தன்னைப் பற்றின தகவல்கள் அவனுக்குத் தெரிய வேண்டிய அளவுக்கு அவசியமானவையல்ல என்பதால் தன் முகவரி ஒன்றைத் தவிர வேறெதையும் தானாக அவனிடம் தெரிவித்ததுமில்லை.

விண்ணப்பத்தைப் படித்துப் பார்த்துவிட்டு அவளை அவன் பேட்டிக்கு அழைத்தான். அவள் வந்து தன்னை அறிமுகப்படுத்திக் கொண்டபோது ஒரு கலைஞனுக்குரிய கண்ணோட்டத்துடன் அவளைப் பார்த்தான். சித்திரத்துக்குப் பயன்படுவாள் எனத் தோன்றியது. ஒப்பந்தம் புரிந்து கொண்டான். அவ்வளவுதான் — ஆயிற்று.

''ரமண் பாபு, அமி ரெடி'' என்று குரலெழுப்பிய வண்ணம் வறண்டுபோன நீண்ட கூந்தல் அலைபுரள ஆரதி பொம்மிக் உள்ளேயிருந்து வெளிப்பட்டதைக் கண்டதும், அதுகாறும் ரமணனின் நெஞ்சுகள் தவழ்ந்த சந்தேகம் இருந்த இடம் தெரியாமல் போய்விட்டது.

''ஓ, இட் இஸ் ரியலி ஃபைன்!'' என்று மலர்ச்சியுடன் அவளை வரவேற்றான் ரமணன். தொடர்ந்து தான் வரையவிருக்கிற ஓவியத்துக்காக அவள் அளித்தாக வேண்டிய தோற்றத்தைப் பற்றியும் அவளுக்கு விவரிக்க ஆரம்பித்தான்.

''மிஸ் பொம்மிக், சற்றுக் கவனமாகக் கேட்டுக் கொள். வங்கத்தைச் சேர்ந்த ஒரு கிராமாந்தர விதவைப் பெண்ணாக இப்போது உன்னை நீ பாவித்துக் கொண்டாக வேண்டும். பருவத்தின் வாசற்படியில் காலடியெடுத்து வைத்த சூட்டோடு, திருமணம், தாம்பத்யம் அனைத்தையும் முடித்துக் கொண்ட ஓர் இளம் விதவையின் ஏக்கங்கள், ஏமாற்றங்கள், மன உளைச்சல்கள், வாய் விட்டுச் சொல்ல முடியாமல் அவள் தனக்குள்ளேயே அமுக்கிக் கொண்டு குமுறுகிற அவலங்கள், தன் இளமைக் கிறுக்கின் எழுச்சிகளுடன் யாருக்கும் தெரியாமல் அவள் இடையறாது பொருதும் ஜீவ மரணப் போராட்டங்கள், இந்த உடலே ஒரு சுமையாய், உயிர்ப்பே ஒரு ஜன்மாந்தரச் சிறைவாசமாய் உணர்ந்த சலிப்பில் அவள் தனக்குத் தானே வழங்கிக்கொள்ளுகிற சாபங்கள், தன்னை மூலையில் உட்கார்த்தி வைத்துவிட்டுத் தான்பாட்டுக்கு சந்தோஷப்பட்டுக் கொண்டிருக்கிற சமூகத்தைக் குரூரமாய்ப் பழிவாங்க வேண்டுமென்கிற அவளது வக்கிரமமான ஆசைகள் — அத்தனையின் சாயல்களையும் இப்போது நீ பிரதிபலித்துக் காட்டியாக வேண்டும். சரத்சந்திரரின் நாவல்களையெல்லாம் நீ ஏராளமாகப் படித்திருப்பாய் என்று நம்புகிறேன். அவர் கதைகளில் வருகிற எந்த விதவைப் பெண்ணையாவது ஞாபகப்படுத்திக் கொண்டு — நான் சொல்வதை வித்தியாசமாக எடுத்துக் கொள்ளாதே — அந்தக் கதாபாத்திரத்தை உனக்குள் ஆவாகனம் பண்ணிக் கொண்டு, அதுவே நீயாய், நீயே அதுவாய் என் முன் தோற்றமளித்தாக வேண்டும். என்ன, சரிதானே?''

''முயன்று பார்க்கிறேன், ரமண் பாபு!'' என்று ஆரதி அமைதியாய் முறுவலித்தாள்.

ஆனால், அவள் எவ்வளவுதான் முயன்று பார்த்தும், அவளால் அந்தக் கோலத்தை உருவகிக்க முடியவில்லை என்பதைச் சற்றைக்கெல்லாம் ரமணன் வெறுப்புடன் ஆனால் மறுக்க மாட்டாமல் ஏற்றுக்கொள்ள வேண்டியதாயிற்று. பல கோணங்களில் அவளை நிறுத்திப் பார்த்து, பலவித பாவனைகளில் முகத்தை வைத்துக் கொள்ளுமாறு அவளுக்கு ஆலோசனை வழங்கி, மங்கலமிழந்தவளின் வெறிச்சிட்டுப் போன வாழ்க்கையைப் பற்றித் தொண்டை வறளக் கதை கதையாய் அளந்தும், அவள் ஒளி மயமான எதிர்காலத்தைப் பற்றிக் கனவு காண்கிற இளம் கல்யாணப் பெண் மாதிரி நிற்பதாய் உணர்ந்த எரிச்சலில், 'இனிப் பயனில்லை, யாவும் வீண் பிரயத்தனம், கால வியர்த்தம்' என்பதை ஒப்புக்கொண்டவனாய்ச் சலிப்புற்று, மனம் சோர்ந்து போய்த் தன் ஆசனத்தில் 'தொப்' பென அமுங்கிப் போனான் ரமணன்.

''மன்னித்துக்கொள்ளுங்கள் ரமண் பாபு. என்னதான் முயன்றும் உங்களுக்குத் திருப்தியாகும் விதத்தில் 'இளம் விதவை'யை என்னால் சித்திரிக்க முடியவில்லைதான்'' என்று ஆரதியும் தன் தோல்வியை ஏற்றுக் கொண்ட பாவனையில் அலுப்புடன் அவன் எதிரில் கிடந்த மற்றொரு நாற்காலியில் அமர்ந்தாள்.

'விதவையின் கோலத்தை அப்பட்டமாய் வெளியிட வைதவ்யத்தை அனுபவிக்கிற விதவைகளால்தான் இயலும்; ஒரு விதவைதான் ஒரு விதவையைத் தோற்றுவித்துக் காட்ட முடியும்; கேளிக்கையும் கொண்டாட்டமும் மிகுந்த தாம்பத்யத்தைக் கற்பனையில் ரசித்து மகிழ்ந்த வண்ணமாயிருக்கும் கன்னிப் பெண்களோ, இல்லற நுகர்ச்சியில் திளைத்திருக்கிற சுமங்கலிகளோ அதற்குப் பிரயோசனப்பட மாட்டார்கள்' என்ற ரீதியில் ரமணன் சிந்திக்கத் தொடங்கியிருக்கையில், மெல்லத் தொண்டையைக் கனைத்தபடி, ''மீன் குட்டியிடம் போய் மீனைப் போல் நீந்தச் சொல்கிற மாதிரி, மயிலை மயில் மாதிரி ஆடு என்கிறாற்போல, என்னிடம் இளம் விதவையைப் பிரதிபலிக்குமாறு கோரு

டாக்டர் ஸ்ரீ ஹரியின் சுற்றுப் பிரயாணம்

14-2-66 கிராண்ட் டிரங்க் எக்ஸ்பிரஸ்ஸில் புறப்பட்டு, 16-2-66 டில்லி சேருகிறார். தென் இந்திய கிளப்பில் தங்குகிறார். 18-2-66 டில்லியிலிருந்து புறப்பட்டு 20-2-66 ஹைதராபாத் வருகிறார். நியூ தாஜ்மகால் ஓட்டலில் (சுல்தான் பஜார் ரோடு) தங்குகிறார். 21-2-66 ஹைதராபாத்திலிருந்து புறப்பட்டு 22-2-66 சென்னை வந்து சேர்கிறார்.

கிறீர்கள் ரமண் பாபு; வேடிக்கையாயிருக்கிறது...'' என்று திடீரெனப் புதிர் போட்டாள் ஆரதி.

ரமணன் திகைப்புற்று அவளை நோக்கி விழித்தான்.

''ஆமாம், ரமண் பாபு! இளம் விதவையான என்னிடமே இளம் விதவை மாதிரி தோற்றமளிக்கச் சொன்னீர்கள். ஓர் அசலை இன்னொன்றால் சுலபமாய் நகல் செய்து காட்டிவிட முடியலாம். ஆனால் அந்த அசலே தன்னைத் தானே நகல் செய்து காட்ட வேண்டுமென்றால்... ஓ, அது ரொம்பக் கஷ்டமான வேலை! அந்த முயற்சியில் வெற்றியை எதிர்பார்ப்பதற்குமில்லை. ரமண் பாபு, நீங்கள் கேள்விப்பட்டிருக்கிறீர்களோ என்னவோ, ஒரு தடவை, சார்லி சாப்ளின் என்றுதான் ஞாபகம். அவரை மாதிரியே நடித்துக் காட்டுகிறவர்களுக்குப் பரிசு என்று எங்கோ ஒரு போட்டி ஏற்பாடு செய்தார்களாம். யாரும் அறியாவண்ணம் சாப்ளினும் அதில் கலந்து கொண்டார். ஆனால் போட்டியின் முடிவு என்னவென்று எதிர்பார்க்கிறீர்கள்? யாரோ ஒரு பேர்வழி முதல் பரிசைத் தட்டிக் கொண்டு போக, சாப்ளின் ஆச்சரியமும், ஏமாற்றமுமாய்த் திகைத்து நின்றார்! ஆமாம், நடிப்புத் திறமை கைவந்த அந்த அசலே, தன்னை அப்பட்டமாய் நகல் செய்து காட்டுவதில் பிந்திவிட்டபோது நான் அந்த முயற்சியில் தோற்றுப் போனதில் என்ன அதிசயம் இருக்கிறது?

''ரமண் பாபு, இளம் விதவை மாதிரித் தோற்றமளிக்கும் பொறுப்பை என்னிடம் அளித்த நீங்கள், என் கேச வகிட்டில் செந்தூரம் இல்லாததைக் கவனித்ததோடு என் கலகலப்பையும், இளமையையும், 'அப்-டு-டேட்'டான அலங்காரங்களையும் கண்ட நம்பிக்கையில் நானே நிஜத்தில் ஒரு விதவையாக இருக்கக் கூடும் என்ற சந்தேகம் சிறிதுமின்றி, ஒவ்வொரு தடவையும் என்னை 'மிஸ் பொம்மிக்' என்று அழைத்தபோதெல்லாம் என்னைப் பற்றிய நிஜத்தை வெளியிட நினைத்திருக்கிறேன். ஆனால் 'மிஸ்'களுக்கு இன்றிருக்கிற மார்க்கெட்டும், முதலிடமும், 'மிஸஸ்'களுக்கோ, 'விடோ'க்களுக்கோ இல்லையே என்ற பயத்தால் அதனால் எங்கே என் வருவாய்க்கு முற்றுப்புள்ளி விழுந்துவிடுமோ என்கிற கவலையால் வாயை மூடிக்கொண்டு இருந்து விட்டேன். ஏனென்றால், ரமண் பாபு, நான் ஓர் இளம் விதவை மட்டுமில்லை; இரண்டு இளம் குழந்தைகளின் இளம் அன்னையும் கூடத்தான். என்ன இப்படிப் பார்க்கிறீர்கள்? கைவிரல் நகங்களிலும், உதடுகளிலும் சாயப் பூச்சும், 'மாட்க' ஆகும்படியான ஆடை அணிகளும், கண்களுக்கு வண்ணத்திப்பூச்சிக் கண்ணாடியுமாக உங்களைத் தேடி வருகிறவளை ஒரு விதவைத் தாயாகக் கற்பனை செய்து பார்க்கக் கஷ்டமாக இருக்கிறதா? ரமண் பாபு, நீங்களே யோசித்துப் பாருங்கள். ஒரு வெள்ளைப் படுதாவைச் சுற்றிக் கொண்டு முக்காட்டையும் போட்டுக் கொண்டு, கண்களில் நீர் மல்க உங்களிடம் நான் வந்திருந்தால் என்னிடம் அநுதாபம் வேண்டுமானால் பட்டிருப்பீர்களே தவிர, இப்படி ஒரு சந்தர்ப்பத்தை எனக்குத் தந்திருப்பீர்களா? ரமண் பாபு, ஒரு விதவையின் வெளி வேஷங்களுக்கோ, மனக் குமுறல்களுக்கோ, பருவத் துடிப்புகளையொட்டிய போராட்டங்களுக்கோ பெருமூச்சுகளுக்கோ, இழந்து போனவற்றுக்கான அழுகைகளுக்கோ என் வாழ்க்கையில் இடமில்லை. என் சொந்த விவகாரங்களுக்காகச் சிறிது நேரத்தை ஒதுக்கவும் எனக்கு அவகாசமில்லை. நான் ஒரு விதவை என்பதற்காக ஒரு மூலையில் உட்கார்ந்து கொண்டு என்னைப் பற்றி நானே வருத்தப்பட்டுக் கொண்டிருக்க முடியுமானால் அப்படிப் படுகிற வருத்தமே ஒரு வகையில் ஆறுதல்தான். ஆனால் அதற்குக் கூட ஆண்டவன் எனக்கு வாய்ப்பளிக்கவில்லை... இரண்டு சிறு குழந்தைகள்...அவர்களை வயிறு காயாமல் வளர்த்துச் சொந்த பலத்துடன் இந்த மண்ணில் நிற்கிற பலத்தையும் அவர்களுக்கு அளித்தாக வேண்டும் என்கிற பொறுப்புடன், கிடைக்கிற வேலையை — அது எப்படிப்பட்டதானாலும் — ஏற்றுக் கொண்டு ஓர் இயந்திரம் மாதிரி இயங்கிக் கொண்டிருந்தாக வேண்டிய எனக்கு, என்னைப் பற்றிய உணர்ச்சிகளுக்கோ, யோசனைகளுக்கோ எங்கிருந்து நேரம் கிடைக்க முடியும்? என் வேகச் சுழற்சியில் என்னை நானே மறந்தான பிறகு 'நான் ஒரு விதவை' என்கிற நினைப்பு மட்டும் எப்படி முளைக்கும்? 'ஒரு நிராதரவான தாய்' என்கிற பிரத்யட்ச நிஜத்தில் 'ஒரு நிராதரவான விதவை' என்கிற நினைப்பை நான் எப்போதோ மறந்தாயிற்று! இப்போது எனக்கென்றிருக்கிற ஒரே நினைவு என் குழந்தைகள் அவர்களது பிரகாசமான எதிர் காலத்தைப் பற்றியதிடமான நம்பிக்கை.. அவ்வளவுதான்!

''ஆகையால், ரமண் பாபு, அகலிகையையும், தூங்கும் அழகியையும், 'இது ஒரு வரும்படி' என்கிற உணர்வுடன் என்னால் சுலபமாக உருவகப்படுத்திவிட முடியலாம்; ஆனால் 'இது ஒரு சம்பாத்தியம்' என்று என்னதான் உணர்ந்தாலும், நானே ஒரு மரத்துப்போன விதவையானதால் என் நிஜ சொரூபத்துக்கு மாறாய், ஒரு கற்பனை விதவையை என்னால் சிருஷ்டித்துக் காட்ட முடியாதுதான்! என்னை மன்னித்து விடுங்கள்!''

உடைப்பெடுத்த ஏரியாய், ஒரே மூச்சாய்த் தன்னுள் அத்தனை காலமாய்த் தேக்கியிருந்ததையெல்லாம் ஒரு பலவீனத்தால் படபடவெனப் பொழிந்து விட்டுச் சிலையென அவள் மௌனியானாள்.

இப்போது சலனமற்று — இதுவரை எதுவும் நேர்ந்ததாகவே காட்டிக் கொள்ளாத பாவனையில் சலனமற்றுப் போயிருந்த அவளது முக விலாசத்தைப் பிரமையுடன் பார்த்தபடியிருந்தான் ரமணன்.

அவளைப் பழைய சகஜ நிலைக்கு மீட்டு வரும் தோரணையில் மெல்லச் சிரித்தபடி, ''வேறு ஏதேனும் கவர்ச்சிகரமான 'தீம்'க்குச் சீக்கிரம் ஏற்பாடு செய்யுங்கள் ரமண் பாபு'' என்று சொல்லிவிட்டு எழுந்திருந்தாள் ஆரதி பொம்மிக்.



ஆரம்ப முயற்சி

''காயமே பட்டுக்கொள்ளாமல் சைக்கிள் விடக் கற்றுக் கொள்ள நினைப்பது, உடம்பில் ஜலமே படாமல் நீந்தக் கற்றுக்கொள்ள ஆசைப்படுவது போலத்தான். சைக்கிள் விடக் கற்றுக் கொள்ளும்போது படும் காயங்களையே நினைத்துக் கொண்டிருந்தால் உனக்குச் சைக்கிள் விடவே வராது'' என்று சைக்கிள் கற்றுக்கொள்ள ஆசைப்பட்ட எனக்கு நண்பன் தைரியம் சொன்னான்.

களங் கண்ட வரலாற்றுப் போர் வீரர்களுக்குப் பலப் பல விழுப் புண்களை ஏற்றால் தான் பெருமை. தொண்ணூற்றாறு விழுப் புண்களைத் தாங்கிய வீர மாமன்னர்களின் வரலாறுகளைப் படித்திருக்கிறேன். எனக்கு இன்னும் தொண்ணூற்றாறு காயங்கள் படவில்லை. ஆகவே, அதுவரையிலாவது என் சைக்கிள் பயிற்சியைத் தொடர்ந்து நடத்துவது என்று முடிவு செய்தேன்.

இரண்டொரு மாதங்களில் எனக்கு சைக்கிள் சவாரி ஒருவாறு வந்துவிட்டது. ''நீ இந்த ஏரி மைதானத்திலேயே சைக்கிள் விட்டுக்கொண்டிருப்பதில் பயனில்லை. தைரியமாகத் தெருக்களில் விட்டுப் பழக வேண்டும்'' என்ற என் குருநாதனின் உபதேசத்தைச் சிரமேற்கொண்டு துணிந்து தெருக்களில் சைக்கிள் விட ஆரம்பித்த பிறகு தான் எனக்கு அதிலுள்ள சிரமம் தெரிந்தது. தெருவில் நடப்பவர்கள் என்னைக் கண்டு பயந்து ஒதுங்கவேண்டியிருந்தது.

''பழகப் பழக எல்லாம் சரியாகப் போய்விடும்'' என்று என் நண்பன் தைரியம் சொன்னான். சின்னச் சின்னச் சந்துகளில் சைக்கிளில் சென்று வளைய வரவேண்டும் என்னும் ஆவல் உந்தவே ஒரு நாள் மாலை பெரம்பூர் ரயில்வே ஸ்டேஷனையடுத்த பனந்தோப்புச் சேரிக்குச் சைக்கிளுடன் சென்றேன். வேகமாகச் சென்றால்தான் நான் சைக்கிளுடன் கீழே விழாமல் போக முடியும் என்ற உண்மை எனக்கு நன்றாய்த் தெரியுமாதலால் வேகமாகச் சென்று ஒரு சந்தில் திரும்பினேன். எதிரே ஒரு கோழி வேகமாக வந்து கொண்டிருந்தது. அதன் மேல் ஏற்றிவிடாமல் இருக்க நினைத்துச் சைக்கிளை ஒடித்துத் திருப்பினேன். என்மேல் தவறில்லை! சைக்கிளும் கோழியும் முன்கூட்டியே பேசிக்கொண்டாற் போல் மோதிக் கொண்டன. கோழி அலறியது. நான் கீழே விழுந்தேன். எனக்கு விழுந்தது அதிர்ச்சியாக இல்லை. ஏனெனில் நான் எப்பொழுதுமே சைக்கிளிலிருந்து இறங்குவதாயிருந்தால் கீழே விழுந்துதான் இறங்குவது வழக்கம்!

மறு நிமிஷம் என்னைச் சுற்றி ஆண்களும் பெண்களுமாகக் கும்பல் கூடிவிட்டது. குற்றுயிரும் குலையுயிருமாகக் கீழே கோழி துடித்துக் கொண்டிருந்தது. என் சைக்கிளை இரண்டு முரட்டுக் கரங்கள் பற்றின. நான் செய்வதறியாது விழித்தேன்.

''கோழிக்கு உண்டான விலையைக் கொடுத்துவிட்டுச் சைக்கிளை எடுத்துக்கிட்டுப் போ ஐயா!'' என்றது ஒரு முரட்டுக் குரல். எனக்குப் பதில் சொல்ல நா எழவில்லை.

''ஏன் ஐயா, முழிக்கிறே? இல்லையென்றால் கோழியை நீயே விற்றுக் காசைக் கொடு!'' என்று கூறிக் கொண்டே கோழியைத் தூக்கிக் கொண்டு வந்து என்னெதிரில் நீட்டினான் ஓர் ஆசாமி. நான் வெலவெலத்துப் போனேன். பரிதாபமாக என்னைச் சுற்றியிருந்தவர்களைப் பார்த்தேன். என்னிடம் ஓட்டைக் காலணாவுக்கும் வழியில்லை. (அந்தக் காலத்தில் நயா பைசா வரவில்லை!)


ஆபத்பாந்தவனாக ஒருவன் தோன்றினான். ''பாவம், சின்னப் பிள்ளை. சைக்கிள் விடத் தெரியாமல் இந்தக் காரியத்தைச் செஞ்சுப்பிட்டாரு. போகட்டும். நான் இந்தக் கோழியை எடுத்துக்கிட்டு அதன் கிரயத்தைக் கொடுத்துடறேன்; அவரை விட்டுவிடு'' என்று சொல்லி அந்தக் கோழியை வாங்கிக் கொண்டு பணத்தைக் கொடுத்தான். எனக்கு அவன் சாதாரண மனிதனாகத் தோன்றவில்லை: தெய்வமாகவே தோன்றினான்.

'சந்தர்'

சைக்கிள் கற்றுக்கொள்ளும் ஆரம்ப முயற்சியில் நண்பர் சந்தருக்குச் சுவையும் சோகமும் ததும்பிய ஓர் அனுபவம் கிட்டியிருக்கிறது. இதுபோல உங்கள் வாழ்க்கையிலும் ஏதாவது ஒரு காரியத்தைத் தொடங்கும்பொழுது ஏற்பட்டிருக்கலாம். அது பல சுவைகளைத் தரக்கூடியதாகவும் அமையலாம். சைக்கிள்மட்டுமென்ன ஸ்கூட்டர், கார், தையல் இன்னோரன்ன பல ஆரம்ப முயற்சிகளில் உங்களுக்கு ஏற்பட்டிருக்கும் அனுபவங்களைச் சுவைபடக் 'கல்கி'யில் ஒரு பக்கத்துக்குள் அடங்கும்படியாக அனுப்புங்கள். பரிசு பெறும் கட்டுரைகள் 6-3-66 'கல்கி' இதழில் வெளியாகும். முடிவு தேதி 19—2—66.

★ ★

உறையின் மேல் 'ஆரம்ப முயற்சி' என்று குறிப்பிடவும். இது விஷயமாகக் கடிதப் போக்குவரத்து வைத்துக் கொள்வதற்கில்லை. பிரசுரமாகாத கட்டுரைகளைத் திரும்பப் பெற விரும்புவோர் தங்கள் விலாசமிட்ட தபால் தலையுடன் கூடிய ஓர் உறையை உடன் அனுப்பவேண்டும்.



அனஸின்
சிறந்தது ஏனெனில் அது
4 வழிகளில் வேலை செய்கிறது
௧ தலைவலியிலிருந்து விரைவாக விடுதலையளிக்கிறது
௨ ஜலதோஷத்தின்போது தோன்றும் சுரத்தைக் குறைக்கிறது
௩ ஃப்ளூவைத் தடுக்க உதவுகிறது
௪ தசைவலியினின்று நிவாரணமளிக்கிறது
அனஸின் டாக்டரின்
மருத்துவாலோசனைப்படி
தயாரிக்கப்பட்டதும்
போன்ற பத்திரமான
மருந்துகளின் சேர்க்கையாகும்
ANACIN
ANACIN
Registered user: GEOFFREY MANNERS AND COMPANY LIMITED



முருகன் புஜங்கப் பாமாலை

ஸ்ரீ சுப்பிரமண்ய புஜங்கத்தைப் பற்றிச் சிறு விளக்கம்

தமிழாக்கியவர்


கலாபாரதி

ஸ்ரீ ஆதி சங்கர பகவத்பாதரின் அறிவாற்றலையும், யோகம், தவ மகிமைகளையும் கண்டு பொறாமை கொண்ட அபிநவ குப்தர் என்ற புலவர், ஆசாரிய சுவாமிகளின் மீது ஏவல் செய்ததன் விளைவாக சுவாமிகள் காச நோயால் பீடிக்கப்பட்டார். வியாதியின் தொல்லை தாங்க முடியாமல் தவிக்கும்போது ஒருநாள் இரவில் சிவபெருமான் கனவில் தோன்றி, திருச்செந்தூர் சென்று தன் இளைய திருமகனும் செந்திற் குமாரனைத் தரிசித்து வணங்கி வழிபட்டால், வந்த வினைகளும், பிணிகளும் நீங்கும் என்றுரைத்துத் திருநீறு அருளி மறைந்தார். திருநீற்றைப் பூசிக் கொண்டு விழித்தெழுந்தார் சுவாமிகள். பிறகு தமது யோக மகிமையால் காலையில் திருச்செந்தூர் அடைந்தார்.

அங்கு முருகனைத் தரிசிக்கும்போது ஆதிசேடன் பூஜை செய்து வருவதைக் கண்ணுற்ற ஆசாரியர், உடனே ''பாம்பு'' என்ற பொருள்படும்படி தலைப்பு அமைத்து ''புஜங்கம்'' என்னும் முப்பத்து மூன்று செய்யுள்கள் கொண்ட வடமொழிக் காவியத்தைப் படைத்து, முருகனுக்குப் பாமாலையாகச் சூட்டினார்.

திருச்செந்தூர் முருகனின் முன்னிலையில் ஆதி சங்கரர் வடமொழியில் இயற்றிய பாமாலைதான் சுப்ரமண்ய புஜங்கம். 'புஜங்கம்' என்பது வடமொழியில் ஒருவித யாப்பைக் குறிக்கிறது. ''புஜங்கம்'' என்றால் ''தோளால் நகர்ந்து செல்லக்கூடிய பாம்பு'' என்றும் பொருளாகும். அதன் கவிச் சொற்களும், சந்தமும் பாம்பு வளைந்து செல்வது போல் அமைந்திருக்கும்.

'கந்தன் கருணை' இலக்கியத் தொடர் படித்து முடித்த தமிழன்பர்களும், முருக பக்தர்களும் தமிழிலும் புஜங்கத்தைப் பக்தியோடு தினசரி படித்துப் புரிந்து கொண்டு பாராயணம் செய்து, நற்பயன்களடைந்து மேன்மையுற வேண்டித் தமிழ்க் கவிதைகளாகத் தரப்பட்டிருக்கின்றன. முருகன் அருள் பெறுவோமாக.



காணமெலாம் பாலனவன் கணேசன் திருவுடையோன்
சூல மொடு ஐம்முகத்தோன் கரனோடு நான்முகனும்
சீல மிகு திருமாலும் தேடிவரும் கரிமுகத்தோன்
மூலவினை மலைநீக்கி முழுச் செல்வமருள் புரிவான் (1)

கவியறியேன் வசனமோ கண்டறியேன் யென்
செவியறியா தொனியெதையும் செப்பியுமறியேன் பொருள்
புவிபுகழும் ஆறுமுகா! உன் புனிதமுகம் நோக்குங்கால்
தெவிட்டாத தேன் தமிழ்ச்சொல் தெளிந்து வரும்
நெஞ்சிருந்து (2)

உலகமெலாம் காக்கும் கந்தா! உளம் மகிழும் ஒளி உருவே!
நலமுடை சான்றோர் நெஞ்சில் நாளெலாம் வாழும் தேவே!
பலர் போற்றும் சிவன்மைந்தா! பக்தி மிகு அந்தணர்தம்
குலதேவா! வேதத்தின் தத்துவமே! கோலமயில்
வாகனனே! பணிகின்றேன் (3)

செந்திற்கடலுடையோன் சேவடி துணையென்றே
வந்தவர்தம் பிறவியெனும் வரையில்லாக் கடலினையே
கந்தன் திருவருளால் கடந்திடுவர் பராசக்தி
மைந்தன் பதம்பணிவோம் மால்மருகன் சொன்னபடி (4)

''ஓங்கி உயர்ந்தடிக்கும் ஒய்யாரக் கடலலையும்
ஆங்கென் அடிபணிந்து அமர்ந்திடுமாம் விந்தைபோல
ஏங்கும் கவலையொடு என்முன்னே வந்திட்டால்
நீங்கும் நிங்'' கென்பான் நெஞ்சிலுறைச் செந்தூரான்.(5)

''எந்தன்மலை வந்தவர்கள் எந்தைமலை போனவர்கள்
கந்தமலை வந்தவர்கள் கைலைக்கு வந்தோ'' ரென்பான்
சிந்தும் ஒளி மதிமுகத்தோன் செந்திலுறை ஆறுமுகம்
செந்தாமரை மலரொக்கும் சேவடிகள் தாம்வாழ்க (6)

எத்தனையோ பாவமெல்லாம் எளிதினிலே போக்கவல்ல
சித்தர் வாழ்கந்தமலை சிரலைவாய் ஓரத்தினில்
புத்தொளியாய்க் குகையினிலே புனிதகுகன் வீற்றுள்ளான்
புத்துயிராய் விளங்குமவன் பொன்னடிகள்
போற்றிடுவோம் (7)

மாணிக்கக் கட்டிலென்ன மாசறுபொற் கோயிலென்ன
நாணக்கண்டிடலாம் நாற்கோடி ரவிஒளியும்
வானத்துத் தேவதேவன் வரம்வேண்டத் தான்தருவான்
காணக் கண்குளிரும் கார்த்திகேயன் தான்பணிவோம் (8)



செந்நிறப் பாதமலர் சிந்தும் தேனமுதமலர்
இன்னொலி பாதசரம் இன்பமயமாக்கும் மனம்
உன்னினைவில் நினைவாக உலவிவரும் வண்டெனவே
என்னிதயம் இருந்தங்கே எப்போதும் களித்திடுமே (9)

தங்கமய ஒளிவீசும் தகதகக்கும் பட்டாடை
அங்க அசைவினிலே அரைஞாணும் ஒட்டியாணம்
கிண்கிணிக்கும் சலங்கை ஒலி கிறங்கவைக்கும் இடுப்பழகும்
எங்கும் ஒளி வடிவாம் எழில்முருகன் நாம் பணிவோம் (10)

மங்கை குறவள்ளிதனை மால்மருகனணைத்ததுமே
கொங்கையழகிட்ட குங்குமமும் மார்புறைந்தே
அங்கும் செவ்வொளிவீச அன்பர்தமையாட் கொள்வான்
தங்கநிற மார்புடையோன் தாரகனைக் கொன்றவனும் (11)

சூரபதுமனைக் கொன்றே சுரன்பகை தான்வென்றே
தூரயமனை ஒட்டி துண்டித்த யானைதந்தம்
பாருலகம் படைத்தவனைப் பணியவைத்த வேலவனைச்
சேரும் உயிர்காக்கச் செந்தூரான் கரம்துணையே (12)

பனிக்காலச் சந்திரனும் பருவமெல்லாம் நிறைந்தாலோ
தனித்தாறு முழுமதியின் தண்ணொளிபோல் ஆறுமுகம்
தனக்குள்ளே மாகற்றும் தரணியிலே தோணும் மதி
கனிக்காக வலம்வந்த கந்தனுக்கு நிகராமோ? (13

அன்னப்பறவைகளோ? ஆறுமுகா புன்சிரிப்பு
இன்னமுத இதழழகால் இன்சொற்கள் தாம்வருமே
வண்ணமலர்த் தாமரையில் வண்டுலவும் விழியழகை
என்னசொல்ல? சிவபாலா! எழில் தாமரைமுகனே! (14)

கண்விழிகள் பன்னிரண்டும் காதுவரை நீண்டிருக்கும்
நின்கருணைப் பெருவெள்ள நீர்த்துளிதான் கிட்டாதோ
அன்பரெனத் தொழுவோர்க்கு அருள்புரிந்தால்
குறைந்திடுமோ?
உன்பார்வை படுமாயின் உய்வேனே உமைபாலா (15)

முன்னின்ற பாலகனை முகர்ந்திட்டு மகிழ்ந்த சிவன்
''என்னின்றுதித்த மைந்தா என்றென்றும் வாழ்க''வென
சொன்னதுமே ஆறுமுறை சுகவாழ்வை நிலையாக்கும்
மன்னுலகின் சுமைதாங்கும் மணிக்கிரீடசிரம் பணிவோம்(16)

மாலைமணியணிகள் மார்பில் அசைந்தாட
கோலமிகு காதணியும் குண்டலமும் தோள்வளையும்
மேலிடைபட்டாடை மென்மையொளி வீசிடுமே
வேலன், புரமெரித்தோன் வேதமைந்தா நீ வருக (17)



'இங்கு வா''வென்றதுமே இளையத் திருக்குமரன்
சங்கரிதன் மடியிருந்து சங்கரன் கரம்தழுவும்
தங்கநிற இளம்மேனி தவழும் குழந்தையவன்
திங்கள் முகமாறும் தினமும் பணிந்திடுவேன் (18)

குமரா! ஈசன்திருமகனே! குகனே! திருமயில்வாகனனே!
அமரர்பதியே! ஆறுமுகா! அடியார்துயர்கள் நீக்குபவா!
சமரில்தாரகன் கொன்றவனே! சரவணபவனே வள்ளி
மணாளா!
உமையாள்உருவாம் வேல்முருகா! உம்மைப் பணிந்தோம்
காத்திடுவாய் (19)

புலனடங்கி நினைவிழந்து பொறிகலங்கி கபமடைக்கப்
பலம்நலிந்து செயல்மறந்து பயம்மிகுந்து உடல்நடுங்க
நலம்நசிந்து உயிர்மறைந்து நமனைநாடும் போதினில்
உலகறிந்த துணைகள்வேறு உதவிடுமோ உனையல்லால் (20)

'வெட்டு, பிள, பொசு'க்கென்று வெஞ்சினமாய் யமதூதர்
திட்டவரும் காலமதில் திருமயிலும் வேலுடனே,
கெட்டலைய விட்டிடாமல் கிட்டவந்து 'அஞ்சேல்'எனத்
தொட்டுக் காத்தருளத் தோன்றிடுவாய் வேலவனே (21)


உனைப்பணிந்து கேட்கின்றேன் ''ஓம் முருகா'' என்றுனையே
கணைப்பொழுதும் சொல்லாமல் கைகளையும் குவிக்காமல்
நினைவிழந்து தவிப்பேனே நெஞ்சிலுயிர் நீங்குகையில்
துணைபுரிவாய் அப்போது துதித்திடுவேன் இப்போதே (22)

தாரகன். சிங்கமுகன், தம்பிகளின் தமையனவன்
சூரபத்மன் என்பவனும் சூழும்அண்ட மாயிரத்தை
வீரமோடு ஆளுகையில் வீழ்த்தியதும் வேலதனால்
பாரமன நோய்நீக்கிப் பார்த்தருள்வாய் வேலவனே (23)

உமையாள் திருமகனே! உன்னடியேன் துக்கமெனும்
சுமையால் தளர்ந்தவன்நான் சுந்தரவடிவேல் கொண்டு,
இமையா அமரர்தேவா! ஏழைக்கிரங்கும் வேலா!
உமையன்றி வேறறியேன். உளநோய் நீக்கிடுவாய் (24)

காசம்கயம் குட்டமொடு காக்கைவலி காய்ச்சலெனும்
நாசம்செயும் பெருநோயும் நலியவைக்கும் பைசாசம்
வாசம்செய்ய என்னுடலில் வந்திட்டால் வேலாஉன்
பூசமிலைத் திருநீறருள் போக்கிடுவாய் தீவினையாம் (25)

கந்தனைக் காணவேகண்கள், கரங்களும் அவன்பணிக்கே
செந்தில் முருகன்புகழ் செவிபடைத்த பயனும்
சந்ததமும் அவன்சரிதம் சந்தமொடு வாய்பாடும்
சிந்தனையும் உடல்வாழ்வும் சிரலைவாய்க் கந்தனுக்கே (26)



பக்திநெறி மனிதர்க்கும் பரதத்துவ முனிவர்க்கும்
முக்தி யளித்திடுவர் மும்மூர்த்தி தெய்வங்களாம்
எத்தையு மறித்திடாத எளியநிலைப் பஞ்சமரின்
சித்தமருள் முருகனன்றி சிறியேனெதையு
மறியேனே (27)

மனைவியோடு மக்களும் மனையில்வாழும் பசுக்களும்
மனிதரோடு பெண்களும் மற்றுமுள்ள சுற்றமும்
நினைந்துமையே வணங்கவும், நித்தமும் துதிக்கவும்
வினைகள்நீங்க வேள்வியை விதிப்படியே
நடத்தருள்வீர் (28)


நெடியமலைக் கிரௌஞ்சமதை நினைத்ததுமே வேல்
கொண்டே
பொடிசெய்த வேலவனே! புண்படுத்தும் நோய்களையும்
கொடியவிடப் பிராணியொடு கொத்தவரும் பறவையினம்
கடுகியோடச் செய்திடுவீர் கைகள்தாங்கும் வேலதனால் (29)


தன்மகன் செய்தபிழை தந்தைதாம் மன்னியாரோ?
உன்மகன் நானன்றோ? உலகத்தின் தந்தையேநீ
தென்பரம் கிரிதேவா! தேவசேனை பதியே!
என்பிழை மலையெனினும் எளியேனைப்
பொறுத்தருள்வாய் (30)

கந்தா! உன்மயில் போற்றி! கடம்பா வேல்போற்றி! சிவன்
மைந்தா சேவல்போற்றி! மறியாடும்தான் போற்றி!
சிந்தாகுலந்தீர் செந்தூரா! சிந்தும்சேவடியும் போற்றி!
வந்தே வரமருள்வாய் வணக்கம் வணக்கமையா (31)

வெற்றிதரும் இன்பவடி வேலவனே! சிவன்மகனே!
வெற்றியின் திருஉருவே! விளங்கும் புகழுடையோய்!
வெற்றிகொண்ட திருக்கடலே! வெள்ளப்
பெருக்கினைப்போல்
வெற்றிபுகழ் இன்பமெலாம் வேண்டுவோர்க் கருளிடுவீர்(32)

கந்தனின் புஜங்கமதைக் கவிபாடி பக்தியோடு
வந்தித்து வழிபட்டால் வாழ்ந்திடலாம் நெடுங்காலம்
சிந்தைக்குகந்த இல்லாள், செல்வம், நன் மக்களுடன்
தந்திடும் பேரின்பநிலை தரணிபுகழ் குகனருளே (33)





டாடா ஸ்டீல் அயல் நாடு செல்கிறது

ஒவ்வொரு ஆண்டும் பலமுறைகள் கல்கத்தா துறைமுகத்தினின்று கிழக்கு ஆப்பிரிக்கா, மத்திய கிழக்கு மற்றும் தூரக்கிழக்கு நாடுகளுக்குச் செல்கின்ற கப்பல்கள் இதர சரக்குகளுக்கிடையே, ஜாம்ஷெட்பூரில் தயார் செய்யப்படுகின்ற ஆங்கிள்கள், குழாய்கள், பாளங்கள், உத்திரங்கள் மற்றும் இதர எஃகுப் பண்டங்களை ஏற்றிச் செல்கின்றன. இறக்குமதி செய்கின்ற நாடுகளுடைய பொருளாதார முன்னேற்றத்திற்கு இந்த எஃகுப் பொருள்கள் மிக முக்கியமானவை.

கடந்த இரண்டு ஆண்டுகளாக, அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்ட டாடா நிறுவனங்களுக்கான ஏற்றுமதி அமைப்பாகிய கமெர்சியல் அண்ட் இண்டஸ்ட்ரியல் எக்ஸ்போர்ட்ஸ் லிமிடெட் (CIEL) வாயிலாக, டாடா ஸ்டீல் 30,000 டன்களுக்கு அதிகமான எஃகுப் பொருள்களை ஏற்றுமதி செய்துள்ளது. இதன் மூலம் நாட்டுக்கு ரூ. 1.15 கோடிக்கு மேலாக அன்னியச் செலாவணி பெற்றுத்தந்துள்ளது. நிதானமாக முன்னேற்றமடைந்து வருகிற ஏற்றுமதிகள், தேசத்தின் குறிக்கோளாகிய திட்டமிட்டத் தொழில்மய வெற்றிக்கு இன்றியமையாத் தேவையான அன்னியச் செலாவணி அபிவிருத்திக்காக டாடா ஸ்டீல் தன்னுடைய சிறிய பங்கினைச் செலுத்துவதையே குறிக்கின்றன.

டாடா ஸ்டீல்

The Tata Iron and Steel Company Limited

JWT TN 3938

அத்தியாயம் 24

முதல் கட்டம் முடிந்தது



மிருணாளினி கூறி வந்த விஷயங்களெல்லாம் தங்கப்பனை வியப்பில் ஆழ்த்தினவென்றால் அதைவிடப் பல மடங்கு அதிசயத்தில் அவன் மூழ்கினான், அவள் திட்டங்களெல்லாம் அணுவளவும் பிசகாமல் படிப்படியாக நிறைவேறி வந்தபோது. தான் இப்படிச் சொல்லி முடியாத ஆச்சர்யத்தில் ஆழ்ந்திருப்பதை லவலேசமும் பிறர் உணர்ந்து விடாதபடி நடந்து கொண்டு அவள் தனக்கு இட்டிருந்த பணிகளைச் செவ்வனே செய்து முடிக்க அவன் ரொம்பவும் சிரமப்படத்தான் செய்தான். ஆனால் அந்தச் சிரமத்தையும் வெளிக் காண்பித்துக் கொள்ளாமல் அவன் இயல்பாக நடந்துகொள்ளவேண்டியிருந்தது. இதற்கெல்லாம் தேவைப்பட்ட அசாதாரணமான துணிவு தங்கப்பனிடம் இருந்து அவனுக்குக் கைகொடுத்து உதவியது.

சிறந்ததொரு நடிகன் இயற்கையாக நடிக்கிறான் என்றால் அது உண்மையல்ல. அப்படி இயற்கையாக நடிக்க அவன் எவ்வளவோ கஷ்டப்பட்டு உழைக்கிறான். ஆனால் பார்ப்பவர்களுக்கு மட்டும் அவன் ஏதோ அனாயாசமாகத் தன் கடமையை முடித்துக் கொண்டு போவது போல் தோன்றுகிறது. தங்கப்பனுடைய நிலையும் இவ்வாறுதானிருந்தது.

மாலையில் அவன் உஷாவை டென்னிஸ் உடையில் கண்டான். தினதயாளுவின் வீட்டிலேயே தோட்டத்தின் ஒரு பக்கத்தில் 'டென்னிஸ் கோர்ட்' இருந்தது. நேற்று குடியரசு தினப் பார்ட்டியில் தங்கப்பன் சந்தித்த அந்தப் பிரெஞ்சுக்காரனுடன் அவள் விளையாடிக் கொண்டிருந்தாள். இங்கு மங்குமாகப் பாய்ந்தோடிப் பந்தடிக்கும்போது கால் இடறாமல் இருப்பதற்காக அவள் அணிந்திருந்த குறைந்தபட்ச உடை கவர்ச்சிமிகுந்த அவள் கால்களின் பெரும் பகுதியை மறைக்கவில்லை.

அவள் ஆட்டத்தில் கண்ணாக இருந்திருந்தால் அவனும் அவளுடைய திறமையைக் கண்டு அது எந்த அளவினதாக இருந்தாலும் சரி, ரசித்து மகிழ்ந்திருப்பான். ஆனால் உஷா டென்னிஸ் விளையாட நினைப்பது அந்த ஆட்டத்தில் தேர்ச்சி பெற வேண்டும் என்ற ஆர்வத்தினால் அல்ல; தேகப்பயிற்சியாக இருக்கும் என்ற கருத்தினாலும் அல்ல; முக்கியமாக டென்னிஸ் உடை ஒன்றை அணிந்து அழகுபார்ப்பதற்காகத்தான் என்பது அவள் இரண்டு தரம் பந்தைத் தட்டியதுமே அவனுக்குத் தெளிவாகப் புரிந்து விட்டது. விசனம் மிக அவன் அங்கிருந்த ஓர் ஆசனத்தில் அமர்ந்து கொண்டான்.

ஆட்டத்தில் சுலபமாகத் தோற்றுவிட்ட அவள், ''யூ ஆர் டூ குட் ஃபார் மீ'' என்று அந்த ஐரோப்பியனை நோக்கிக் கூறிச் சிரித்தாள். ''ஆனால் உன்னிடம் டென்னிஸில் தோல்வி அடைவது பற்றி அதிகமாக நான் வருத்தப்படவில்லை.'' 'டென்னிஸ்ஸில்' என்ற வார்த்தையை அழுத்தம் கொடுத்து உச்சரித்தாள் உஷா.

''எனக்குப் புரிகிறது'' என்றான் அவன். ''டென்னிஸில் நீ தோற்றுவிடலாம், ஆனால் என்னைப் போன்ற எத்தனையோ பேர்களை உன் அழகு நிமிஷமாக வெற்றி கொண்டு விடுமே!''

''இதோ, தங்கப்பனும் அப்படித்தான்'' என்றாள் உஷா. ''நேற்று ராத்திரி கோபித்துக் கொண்டு போனான்; சாப்பிடக்கூட மாட்டேனென்று சொல்லி. இன்று சமர்த்துப் பிள்ளையாகத் திரும்பி வந்து நிற்கிறான்.'' தங்கப்பனை அணுகி அவன் கன்னத்தை 'மெத்' தென்று இருக்கும் தன் உள்ளங்கையினால் தட்டிக் கொடுத்தாள் அவள். உஷாவின் பார்வை திரும்பியதும் நறநறவென்று பற்களைக் கடித்துக் கொண்டான் தங்கப்பன். வீட்டில் செல்லமாக வளர்ந்து வாலைக் குழைத்துக் கொண்டு வரும் நாயை அவள் கொஞ்சுதலாகத் தட்டிக் கொடுப்பது போலிருந்தது அவனுக்கு.

''நான் வரட்டுமா உஷா? உன்னைத் தேடிக்கொண்டு தான் யாரோ விருந்தாளி வந்திருக்கிறானே. நானே

சாயந்திரம் அசோகா ஹோட்டல் 'காக்டெய்ல் பார்ட்டி' நினைவிருக்கிறதல்லவா? அங்கே சந்திக்கிறேன்'' என்று கூறி அவன் தோளில் இரண்டு ஷொட்டுகள் கொடுத்து விட்டுக் காரில் ஏறினான் அந்த ஐரோப்பியன்.

அவன் போன பிறகும் சற்று நேரம் தோட்டத்திலேயே புல்வெளியில் போடப்பட்டிருந்த கூடை நாற்காலியில் கால் மேல் கால் போட்டுக் கொண்டு, சமையல்காரர் ராமன் அருகிலிருந்த ஓர் அலங்காரக் கண்ணாடி ஸ்டூலின்மீது வைத்துவிட்டுப் போயிருந்த எலுமிச்சம்பழ சர்பத்தை அருந்தியபடி தங்கப்பனுடன் பேசிக்கொண்டிருந்தாள் உஷா. மாலைச் சூரியனின் ஒளிக் கிரணங்கள் அவள் மேனியைத் தழுவி இதமளித்துக் கொண்டிருந்தன.

தீனதயாளுவின் வருகையை எதிர்பார்த்துக் காத்திருந்த தங்கப்பனுக்கு முன்னின் மேல் அமர்ந்திருப்பது போலிருந்தது. அதை மறைத்துக் கொண்டு அவன் சத்தியபுரி பற்றிய சில்லறை வம்புகளை அளந்தான். உஷாவுக்குஅவை ருசித்தன.

ஹாரன் ஒலி கேட்டது. உஷா துள்ளி எழுந்து 'போர்ட்டிகோ'வுக்கு ஓடினாள். தங்கப்பனும் பின் தொடர்ந்தான். கார் நின்றதும் கீழே இறங்கிய தீனதயாளு தங்கப்பனை இன்முகத்துடன் வரவேற்றார். ''அம்மா சௌக்கியம் தானே? தொழிலகமெல்லாம் நன்றாக நடக்கிறதல்லவா?''

''பெரியவர்கள் ஆசீர்வாதம் சௌக்கியமாக இருக்கிறோம்'' என்று கூறினான் தங்கப்பன், பட்டும் படாததுமாக.

''உங்க கையாலே தொடங்கி வைச்சது நல்லா நடக்காது கூட இருக்குமா என்ன? ஆளைப் பார்த்தாலே தெரியலே?'' தங்கப்பனின் உருவத்தை மேலும் கீழுமாகக் கரத்தை அசைத்துச் சுட்டிக்காட்டியபடி கூறினாள் அப்போது அங்கே வந்த மகேசுவரி.


காரில் மந்திரியுடன் வந்த 'சப்ராஸி' ஒருவன் அவரது அலுவலகத் தோல் பெட்டி, ஒரு பிளாஸ்க், ஒரு சிறு துண்டு முதலானவற்றைத் தூக்கிக் கொண்டு வீட்டினுள் நுழைவதைப் பார்த்தான் தங்கப்பன்.

தீனதயாளு அவனை அழைத்தார். அங்கேயே அவன் தன் வலக் கரத்தில் தோல் பெட்டியை ஏந்தியபடி பிடித்துக் கொண்டு நிற்க அதனை அவர் திறந்தார். அதில் மேலாக இருந்த ஒரு ஃபைல் கட்டை மட்டும் எடுத்துக்கொண்டு பெட்டியை மூடினார். தலையசைத்து சப்ராஸியை அனுப்பிவிட்டு மகேசுவரியிடம் தம் கையிலிருந்ததைக் கொடுத்தார். ''இதைப் பத்திரமாக என் ரூமிலே பீரோவில் வைச்சுடு'' என்று கூறிவிட்டு உள்ளே போனார்.

தங்கப்பன் தான் கையில் பிடித்திருந்த தோல் பை சுமக்கவே முடியாதபடி ஒரேயடியாகக் கனப்பதை உணர்ந்தான். இதே போன்ற ஒரு ஃபைல் கட்டை அந்தத் தோல் பையினுள் செருகியவாறே மிருணாளினி கூறியதை அவன் நினைத்துப் பார்த்துக்கொண்டான். வெற்றுக் காகிதங்களை வைத்து அவற்றை நாலாபுறமும் இருந்த அட்டைக் 'காது'களை மடித்துப் போட்டு மூடி மறைத்துச் சிவப்பு நாடாவினால் முடிந்தும் இருந்தாள் அவள். 'எல்லா அரசாங்க ஃபைல் கட்டுகளும் வெளிப் பார்வைக்கு ஒரே மாதிரியாகத்தான் இருக்கும். இந்த அதனிடத்தில் வைத்துவிட்டு அதை மெதுவாகக் கொண்டு வந்து விடுங்கள்!'

''உஷா! இன்றைக்கு வீடு முழுவதையும் எனக்கு நீ சுற்றிக் காண்பிக்க வேண்டும்! கனம் உள்துறை அமைச்சர் அவர்களது வீடு, தோட்டம் எல்லாம் எப்படி இருக்கின்றன என்று நான் முழுமையாகப் பார்க்க வேண்டாமா? சத்தியபுரிக்கு நான் திரும்பியதும் எல்லாரும் ஆவலோடு கேட்கக் கூடிய முதல் கேள்வி இதுவாகத் தானே இருக்கும்? என்னதான் டில்லியில் ஆயிரம் அதிசயங்கள் இருந்தாலும் நம்ம ஊர் பெரிய மனுஷர் அங்கே எப்படி வாழ்கிறார் என்பதைத் தெரிந்து கொள்வதுதான் எல்லோருக்கும் உள்ள முக்கியமான ஆசை.''

''அத்தை! அதை இங்கே கொடு, நானே வைத்து விடுகிறேன்'' என்று கூறினாள் உஷா. மகேசுவரி பதில் பேசவே அவள் இடம் அளிக்கவில்லை. அவள் கரத்திலிருந்து அவள் கொடாமலே தானாகவே அந்த ஃபைல் கட்டை எடுத்துக் கொண்டாள்.





''பயமின்மை என்பது என்ஜினைப் போன்றது. அது நமது வாழ்க்கையை மேடு பள்ளங்களிலும்கூட சரியான பாதையில் தடையின்றி இழுத்துச் செல்லுகிறது. இதில் 'பரிவு' கார்டு வண்டியாகும். அது நம்மை விபத்திலிருந்து காக்கிறது. இந்த இரண்டும் ஒருவரிடம் இருப்பது சிறந்த லட்சணமாகும் என்று நான் ''கீதைப் பேருரைகளில்'' கூறியிருக்கிறேன். சாஸ்திரி அவர்களிடம் இந்த இரண்டு குணங்களும் காணப்பட்டன. இது தெய்வீக சம்பத்து ஆகும்.'' — **வினோபா**



''டாப் ஸீக்ரெட்! பார்த்தாயா?'' என்று ஃபைலின் மீது எழுதப்பட்டிருந்ததைப் படித்ததுடன் பெருமையுடன் அவனிடம் காண்பிக்கவும் செய்தாள் உஷா. ''ஹோம் மினிஸ்டர் என்றால் சும்மாவா? அப்பாவுக்கு இத்தனை விஷயங்களையும் 'டீல்' பண்ணுகிறதற்குள்ளே மூளை எப்படிக் குழம்பாமல் இருக்கிறது என்பதே எனக்கு ஆச்சரியம்தான்!''

அதே போன்ற — பரம ரகசியம் என்று ஆங்கிலத்திலும் ஹிந்தியிலுமாக அச்சடிக்கப்பட்டிருந்த 'லேபிள்' ஒன்று தான் கொண்டு வந்திருக்கும் ஃபைலின் மீதும் ஒட்டப்பட்டிருக்கிறது என்பதை எண்ணியபோது தங்கப்பனுக்கு மிருணாளினி எத்தனை முன் யோசனையுடன் காரியங்களைச் செய்திருக்கிறாள் என்ற மரியாதை கலந்த மகிழ்ச்சி உண்டாயிற்று.

வரவேற்பு அறையில் தான் கொண்டு வந்திருந்த தோல் பையை அலட்சியமாக ஒரு நாற்காலியின் மீது போட்டு விட்டு உஷாவைப் பின்தொடர்ந்தான் தங்கப்பன்.

''இது வந்து 'கெஸ்ட் பெட்ரூம்' உன்னை மாதிரி யாராவது வந்தால் தங்குவதற்காக... தப்பு, தப்பு! உன்னைப் போன்றவர்களா யிருந்தால் இங்கே வந்து தங்குவார்களா? தன்மானம் தகர்ந்து போய்விடுமே, இல்லையா.....?''

'தன்மானத்தை ஒதுக்கித் தள்ளிவிட்டு உன் அப்பாவின் காலைப் பிடித்திருந்தால் இந்நேரம் நானும்தான் எட்டுக் கம்பெனிகளில் டைரக்டராக இருப்பேன்! ஏன், உன்னையே என் உடைமையாக்கிக் கொண்டுமிருக்கலாம்' என்று தனக்குள் முணுமுணுத்துக் கொண்டான் தங்கப்பன்.

ஒவ்வோர் அறையாகத் திறந்து காண்பித்துக் கொண்டு வந்தாள் உஷா. ''இது என்னுடைய அறை. இது அத்தைக்கு. இங்கே சமையலறை, ஸ்டோர், பின்னால் கார் ஷெட், ஸர்வண்ட் குவார்ட்டர்ஸ். அப்பாவுடைய அறைகளெல்லாம் மாடியில்'' என்று கூறியபடி திரும்பி நடந்து மாடிப்படிகளில் விரைந்து ஏறினாள் உஷா. அவருக்கென்று படுக்கும் அறையும், அலுவலக அறையும் தனித்தனியே இருந்தன. சகல விதமான வசதிகளும் பொருந்தியனவாய், எல்லா அறைகளுமே அமைந்திருந்தன. தீனதயாளுவின் படுக்கையறையை யொட்டியிருந்த குளியலறையில் ஓசை கேட்டது.

''வெய்யிலோ குளிரோ அப்பாவுக்கு நாளைக்கு இரண்டு தரம் குளிச்சாகணும்'' என்று சொன்ன உஷா அலுவலக அறையின் கதவைத் திறந்து கொண்டு நுழைந்தாள். மிகப் பெரிய மேஜையும், அதன் பின்னால் சுழலும் நாற்காலியும் பக்கவாட்டில் மூன்று வித வர்ணங்களில் மூன்று டெலிபோன்களைத் தாங்கி நின்ற நீண்ட குறுகலான மேஜையும் இருந்தன. முக்கியஸ்தர்கள் யாரேனும் வந்தால் அமர்வதற்கான நாற்காலிகளும் சில போடப்பட்டிருந்தன. சப்ராஸி கொண்டு வந்த பெட்டி மேஜையின்மீது ஓர் ஓரமாக வைக்கப்பட்டிருப்பதைக் கவனித்தான் தங்கப்பன். மேஜையின் வலப்புற மேல் டிராயரை இழுத்துத் திறந்தாள் உஷா. அதிலிருந்த காகிதங்களுக்கிடையில் துழாவி ஒரு சாவியை எடுத்து ஒரு பக்கத்தில் இருந்த உயரம் அதிகமில்லாத இரும்புப் பீரோவைத் திறந்தாள். கையிலிருந்த ஃபைல் கட்டை அதனுள்ளே வீசுவது போல் அலட்சியமாக வைத்தாள். கதவைச் சாத்திப் பூட்டினாள். சாவியைத் திரும்பவும் டிராயரில் போட்டு விட்டு இடையின் ஒரு நொடிப்பிலே அதனை உள்ளுக்குத் தள்ளி மூடினாள். அந்த மேஜை டிராயர் பூட்டப்படும் வழக்கமில்லை போலும்!

''போவோமா? எல்லாவற்றையும் பார்த்தாகிவிட்டதல்லவா?'' என்றாள் உஷா.

'திக்'கென்று இருந்தது தங்கப்பனுக்கு. கணப் பொழுதில் தன்னைச் சுதாரித்துக் கொண்டு விட்டான். ''ரொம்பவும் நன்றாக இருக்கிறதே. செல்வம் இருந்தும் சிலருக்கு வசதியாக வாழத் தெரியாது. அவர்கள் பரிதாபத்துக்குரியவர்கள். வசதிகளைச் செய்து கொள்வதுடன் மட்டும் நில்லாமல் இந்த வீட்டில் உள்ளது போல் கலையுணர்வையும் காண்பித்துக் கொள்பவர்கள் அந்த அளவுக்குப் பாராட்டுதலுக்குரியவர்கள்தான்.''

அவன் அளந்து பேசுவதை அவள் புரிந்து கொண்டதாகத் தெரியவில்லை. ''சர்க்காரில் பணம் தருகிறார்கள். வசதிகள் செய்து கொள்வதற்கென்ன? மந்திரி என்றால் அந்தஸ்துக்கேற்ற சில ஆடம்பரங்களைச் செய்து கொள்ள வேண்டியதுதானே? இந்தச் சின்ன விஷயம்கூடத் தெரியாமல் சில அசமஞ்ச எம். பி.க்கள் மூக்கால் அழுது வரிப் பணம் விரயமாகிறது என்று பெரிதாக ஒப்பாரி வைப்பார்கள்!''

தங்கப்பன் இதற்குப் பதில் சொல்லாமலே இருந்து விட்டான். தர்க்கத்தை வளர்த்துக் காரியத்தைக் கெடுத்துக் கொள்ள வேண்டாம் என்பதற்காகச் சூடாகப் பேசத் துடித்த நாவை அடக்கிக் கொண்டான்.

உஷாவைத் தொடர்ந்து கீழே இறங்கிப் போனான். அவனுடைய பை போட்ட இடத்தில் போட்டபடியே கிடந்தது. ''உட்காரு, தங்கப்பா. இன்னைக்காவது சாப்பிட்டுவிட்டுப்

போகலாமில்லையா? அப்பாவும் இன்று இருக்காங்களே!''

''ஆகட்டும்'' என்றான் அவன்.

''அஞ்சு நிமிஷம்; இதோ டிரெஸ் மாத்திக்கிட்டு வந்துடறேன்'' என்றாள் அவள். திரையை விலக்கிக் கொண்டு ''அத்தை!'' என்று அழைத்தவாறே சென்றாள்.

உடை மாற்றிக்கொள்வதென்றால் உஷாவுக்குக் குறைந்தபட்சம் அரை மணி நேரமாவது ஆகும். தினதயாளுவோ குளித்துக்கொண்டிருந்தார். டிரைவர் காரை ஷெட்டுக்குக் கொண்டு போயிருந்தான். கூர்க்கா கேட்டருகேயேதான் இருப்பான். சப்ராஸி இந்நேரம் தன் வீடு நோக்கி நடந்துகொண்டிருப்பான். மகேசுவரி? உஷாவுக்கு அலங்காரம் செய்துகொள்ள அவள் உதவிக் கொண்டிருப்பாள், அல்லது உள்ளே உஷா கூறிய காரியம் எதையேனும் நிறைவேற்றிக் கொண்டிருப்பாள். எப்படியும் அவள் தன்னிடம் முகம் கொடுத்துப் பேச வரவேற்பு அறைக்குள் வரப்போவதில்லை. சமையல்காரர், தோட்டக்காரர் எல்லோரும் அவரவர்களது வேலைகளில் கண்ணாயிருப்பார்கள். விநாடிப் பொழுதில் இப்படி நிலைமை தனக்குச் சாதகமாயிருக்கிறதா என்று சீர்தூக்கிப் பார்த்த தங்கப்பன் மேலும் இரண்டொரு விநாடிகள் தன் செவிகளைக் கூர்மையாக்கிக் கொண்டு சுற்றுப்புற ஒலிகளைக் கேட்டான்.

அடுத்த கணம் அவன் தன் தோல் பையுடன் வேகமாக ஆனால் அமைதியாக மாடி ஏறிச் சென்று கொண்டிருந்தான். கடந்த பல மாதங்களாகப் பணம் பண்ணும் ஒரே நோக்கத்துடன் பொய்க் கணக்குகள் எழுதவும் லஞ்சம் கொடுக்கவும் பழகிவிட்ட கரம்தான் தங்கப்பனுடையது. எனினும் இன்று சாவியை எடுத்த அந்தக் கரம் நடுங்கத்தான் செய்தது. இரும்புப் பீரோவின் சாவித் துவாரத்துக்குள் தன் கரத்திலுள்ள சாவி நுழையுமோ நுழையாதோ என்ற திகில் ஏற்பட்டது அவனுக்கு. அத்தனை நடுக்கம்!

ரொம்ப நேரமாகிவிட்டது போல் பரபரப்படைந்தான் அவன். இருப்பினும் ஃபைல் கட்டுகளை மாற்றவும் பீரோவைப் பூட்டிச் சாவியை இருந்த இடத்திலேயே வைத்துவிட்டுக் கீழே இறங்கி வந்து வரவேற்பு அறையில் மீண்டும் அமரவும் ஒரு நிமிஷத்துக்கும் குறைவாகத்தான் ஆகியிருந்தது. யாரும் அவனைப் பார்க்கவில்லை; சந்தேகிக்கவும் இடமில்லை. தங்கப்பனுக்கு வியர்வை அடங்கி இதயத் துடிப்பின் வேகமும் குறைந்தது. சீக்கிரமே அவன் தன்னம்பிக்கை பெற்றுத் திடமாக விளங்க ஆரம்பித்துவிட்டான். தப்பித் தவறித் தினதயாளுவோ, மகேசுவரியோ அல்லது உஷாவோ ஏதோ காரணத்துக்காக இரும்புப் பீரோவைத் திறந்தாலும் அதனுள் ஃபைல் கட்டு பத்திரமாக இருப்பதையே காண்பார்கள். மிருணாளினியின் திட்டப்படி நாளை மறுதினம்தானே அதைப் பிரித்துப் பார்க்கப் போகிறார் தினதயாளு? சாப்பாட்டின் போது பேச்சுக்கிடையில், ''ரொம்ப அசதியாக இருக்கிறது. நேற்று நீண்ட நேரம் கண் விழித்துவிட்டேனல்லவா?'' என்று தினதயாளு கூறியது தங்கப்பனுக்கு மேலும் தெம்பூட்டியது. எப்படியும் இன்று இரவு அவர் தம் அலுவல்களைக் கவனிக்கப் போவதில்லை. சீக்கிரம் படுக்கச் சென்று விடுவார். நாளைக்கு அதிகாலையிலேயே அவருக்கு மிகவும் 'வேணுங்கப்பட்டவ'ளின் அவசர அழைப்பு வந்துவிடும்!

தங்கப்பனின் ஹோட்டல் அறையில் அவன் வருகையை எதிர் நோக்கிக் காத்திருந்தாள் மிருணாளினி. ''என்ன, காரியம்



இப்பவும் வருகிற மாசி 6உ (18-2-66) வெள்ளிக்கிழமை சிவராத்திரியன்றுஒவ்வொருவரும் காலையில் ஸ்நானம் செய்துவிட்டுத் தங்கள் சமீபத்திலுள்ள சிவன் கோயிலுக்குச் சென்று கோபுர த்வாரத்தின் வெளியில் வடக்குமுகமாக உட்கார்ந்துகொண்டு வில்வதள தீர்த்தத்திலும் மூன்று முறை புரோக்ஷணம் செய்துகொண்டு ''சிவ'' என்னும் ஈசுவர நாமத்தை மூன்றுமுறை மனத்தில் நினைத்துக்கொண்டு அன்றுமுதல் தனது வாழ்நாள் முழுவதும் தினமும் காலையில் ஸ்நானம் செய்துவிட்டு நூற்றெட்டுத் தடவை இந்த நாமாவை ஜபித்து வரவேண்டும்.

ஈசுவரனிடம் பக்தி நிறைந்த ஒவ்வொரு ஹிந்து குடும்ப வம்சத்தினரும் இந்நாம ஜபத்தை ஜன்ம விரதமாகக் கொள்ள வேண்டும். ஜபம் முடிந்தவுடன் ஈசுவரனை உத்தேசித்து நமஸ்காரம் செய்து நாட்டுக்கு நலனும், சமாதானமும், லோகக்ஷேமமும் உண்டாக ஈசுவரனைப் பிரார்த்திக்க வேண்டும் என்று ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடம் ஜகத்குரு ஸ்ரீ சங்கராச்சார்ய ஸ்வாமிகள் அவர்கள் அபிப்பிராயப்படுகிறார்கள்.

வெற்றிதானே?'' என்று கேட்டபடியே தங்கப்பன் நீட்டிய தோல் பையை வாங்கி ஆர்வமும் பரபரப்பும் மிகப் பிரித்துப் பார்த்தாள். ஃபைல் கட்டை எடுத்து அதனுள்ளிருந்த தாள்களை அவசரம் அவசரமாகப் புரட்டினாள். சந்தோஷ மிகுதியினால் ஒரு முறை துள்ளிக் குதித்தாள், குழந்தைத்தனமாக. பிறகு பாதுகாப்பு மந்திரி சபையின் அங்கீகாரம் பெற்று வந்திருந்த அந்தத் தாள்களைச் சில நிமிஷங்கள் வரையில் நிதானமாக ஆராய்ந்தாள்.

அவள் புருவங்கள் நெரிந்தன. அதரங்கள் புன்னகையில் நெளிந்தன. ''இப்படி சந்தேகாஸ்பதமானவர்களின் பட்டியல் ஒன்று தயாராகிறது என்று ராணுவத்தில் யாரும் சிறிதளவும் நினைக்க இடமின்றி இந்தக் காரியத்தைச் சாமர்த்தியமாகச் செய்து முடித்திருக்கிறார்கள். பெருமளவு வெற்றி கண்டுமிருக்கிறார்கள்.... நம்மவர்களில் அநேகமாக எல்லோரது பெயர்களுமே பட்டியலில் இடம் பெற்றிருக்கின்றன! இத்தனைக்கும் இவர்கள் எல்லோரும் தங்களைக் குறித்து லவலேசமும் சந்தேகம் எழாதபடி நடந்து கொள்ள வேண்டும் என்று எச்சரிக்கப்பட்டிருந்தனர். அப்படி இருந்தும் அவர்களில் ஏழெட்டுப் பேரைத் தவிர மற்ற அனைவரையுமே இனம் கண்டுகொண்டு விட்டார்களே! ஆனால் பாவம்! நம்முடைய புரட்சி முன்னணியில் சேராத ஒருசிலரும் பட்டியலில் இடம் பெற்றிருக்கிறார்கள். மொத்தத்தில் ரொம்பவும் திறமையாகத்தான் வேலை நடந்திருக்கிறது. அதைப் பாராட்டத்தானே வேண்டும்?''

மிருணாளினி சீக்கிரமே விடைபெற்றுக் கொண்டு சென்றான். ''எனக்கு ரொம்ப வேலை இருக்கிறது. நாளை சந்திக்கிறேன்'' என்று கூறிவிட்டுப் போனான்.

மறுநாள் அவள் வந்தபோது தங்கப்பன் கொண்டுவந்திருந்த தாள்களை முன்மாதிரியாகக் கொண்டு அதேபோன்றதொரு மாற்றுப் பட்டியலை அவள் தயாரித்து எடுத்து வந்தாள். அதே மாதிரியான தாள்கள், டைப்ரைட்டர் எழுத்துக்களும் அதே அச்சாக இருந்தன. முத்திரைகள், கடிதங்களில் கையெழுத்துக்கள் எல்லாம் தத்ரூபமாக அசல் போலவே அமைந்திருந்தன. பெயர்கள் மட்டுமே மாறியிருந்தன. இரண்டையும் ஒப்பிட்டு நோக்கிய தங்கப்பன் ஏதோ சொல்ல வாயெடுத்தான்.

குறுக்கே புகுந்தாள் மிருணாளினி. ''நாம் ஒருவரை ஒருவர் புகழ்ந்து கொள்வதையெல்லாம் காரியம் முழுமையாக முடிந்த பிறகு வைத்துக் கொள்ளலாம்'' என்றாள். தான் கொண்டு வந்திருந்த மாற்று ஃபைலை மடித்துக் கட்டித் தங்கப்பனின் தோல் பைக்குள் வைத்தாள். மற்றொன்றைக் கையில் எடுத்துக் கொண்டாள். ''தலைவருக்கு நான் தகவல் தெரிவித்தாக வேண்டும், வரட்டுமா?'' என்றாள்.

கடமையிலே கண்ணாக இருக்க அவள் இப்போது விரும்புவதை உணர்ந்த தங்கப்பன், ''சாயந்திரமாக அங்கே போகலாம் என்றிருக்கிறேன் மிருணாளினி!'' என்றான்.

சட்டென்று அவனுடைய வலக் கரம் நீண்டு அவள் நெஞ்சைத் தொட்டது. ''ஜாக்கிரதையாக இருப்பீர்களல்லவா?'' என்று இலேசாக நடுங்கும் கரகரத்த குரலில் கேட்டாள். அடுத்த நிமிஷம் அவள் அங்கு இல்லை.

அவ்விதம் அவள் கேட்டது தன்னிடம் அவள் கொண்டிருந்த நட்புறவினாலா, அன்பினாலா அல்லது காரியம் திட்டமிட்டபடி நிறைவேற வேண்டுமே என்ற கவலையினாலா என்று தங்கப்பனால் அனுமானித்துக் கொள்ள முடியவில்லை.

(தொடரும்)

○ ●

இந்தியர் கடமை



சாஸ்திரி—அயூப் ஒப்பந்தம், காந்தி—இர்வின் உடன்படிக்கை போன்றதாகும். காந்தி-இர்வின் ஒப்பந்த சாஸனம் கையெழுத்தாக எவ்வாறு சாத்தியமாயிற்றெனில் அவ்விரு தனிப்பட்ட நபர்கள் இடையேயும் துவேஷமோ, அச்சமோ சற்றுமில்லாதிருந்ததே. எனினும்கூட அந்த ஒப்பந்தம் தோல்வியுறக் காரணம் அப்போதைய பிரிட்டிஷ் பிரஜைகளோ அல்லது இந்திய மக்களோ தாங்கள் ஒருவருக்கொருவர் கொண்ட துவேஷ மனப்பான்மையைத் துறக்கத் தயாராயில்லை. தாஷ்கெண்ட் ஒப்பந்தம் சாஸ்திரி—அயூப் இவர்களின் மனம் திறந்த சம்பாஷணையின் முடிவேயாகும். காந்தி—இர்வின் ஒப்பந்தத்துக்கேற்பட்ட கதி இதற்கும் நேராமல் காப்பது இந்தியப் பிரஜைகளாகிய நம்முடைய தலையாய கடமையாகும்.

(ஃபிராங்க் மொரேஸின் ரேடியோச் சொற்பொழிவிலிருந்து)

தகவல்: **ஆர். எஸ். மணி**

● ○


இப்பொழுது மிகச் சிறந்த,
தனிப்பட்ட கலவைகொண்ட, முச்செயல்-திறனுடைய
ஹேர் ஆயில் டானிக்
பிராஹ்மி
ஆம்லா
மாகா
ஆகியவை அடங்கியது
BRAHMI AMLA MAKA
BAM
NEW SPECIALLY BLENDED
TRIPLE ACTION
HAIR OIL TONIC
பல தலைமுறைகளாகப் பயன்பட்டுவரும் பிராஹ்மி, ஆம்லா, மாகா ஆகியவை இப்பொழுது ஒரு அற்புத ஹேர் ஆயிலான பேமில், உங்களுக்கென, ஒருங்கே இணைந்து கிடைக்கின்றன. பேம் கால்கேட்-பாமாலிவ் கம்பெனியாரின் புதிய, தரமான தயாரிப்பு.
பேமில் அடங்கியிருக்கும் சேர்க்கைப் பொருள்களான பிராஹ்மி-ஆம்லா-மாகா தலைமுறை தலைமுறைகளாக கேசத்தை அழகுபெறச் செய்யும் குணங்களுக்காகவும், அபரிமிதமான கேச வளர்ச்சிக்காகவும், கேசம் உதிர்வதையும், முதுமை எய்துமுன் நரைப்பதையும் தடுப்பதற்காகவும், மயிர்க்கால்களுக்கு இதமளித்து,
பேம்
அயர்ந்த நித்திரையை ஊக்குவிப்பதற்காகவும் பெரிதும் போற்றப்பட்டு வருகின்றன.
பழமைவாய்ந்த இந்தியக் கலவை முறையை நம்புங்கள்... தினந்தோறும் உங்கள் மயிர்க்கால்களில் பேம் தேய்த்து, மிருதுவான அடர்ந்த, நெளிநெளியான, செழுமையான கூந்தலைப் பெறுங்கள்.

யாத்திரை

ஏ.எஸ்.ராகவன்

1

வான வெளியில் மெல்ல மெல்லக் கதிரொளி படர்ந்தது. கிழக்கிலிருந்த நீலம் கரைந்து அந்த இடத்தில் ஒளிக் கோலம் வளர்ந்தது. உலகின் தலைவாயிலில் விடியற் காலையை வரவேற்கப் பூரண கும்பத்துடன் பகலவன் தோன்றி விட்டான். நேற்றைக்கு வந்த அதே சூரியன்தான். என்றாலும், சக்கரம் போலச் சுழலும் அந்தச் சிவப்புக் கோளத்தின் அழகில்தான் எத்தனை புதுமை! மேல் தட்டும் பின் தட்டும் மாறி மாறிச் சுழன்று ஒளியை உமிழ்ந்தன; உயிராய், வாழ்வாய், எழிலாய் மலர்ந்தன.

ஜன்னல் அருகே அமர்ந்து அந்தக் காட்சியையே பார்த்துக் கொண்டிருந்தான் நாணு. அவனுக்கு வயது பதினாறுதான் ஆகிறது. மெலிந்த உடலமைப்பும் கனவும் கவலையும் நிறைந்த பார்வையுமாக வீற்றிருந்த அந்தச் சிறுவன் இரவெல்லாம் தூங்கவேயில்லை. எப்பொழுது பொழுது விடியும் என்று காத்திருந்து, அது விடியும் முன்பே எழுந்து உட்கார்ந்து விட்டான். எழு கதிர்கள் எழும் தலை நீட்டி, அவையனைத்தும் ஒன்றாகிப் பேரொளியாய்ப் பரிணமிப்பதைக் கண்டு மகிழவேண்டும் என்கிற ஆர்வத்தால் எழுந்தவனல்ல அவன்.



அவனைப் பொறுத்தவரை 'சூரியன்' சாதாரண சூரியன்தான். மற்றபடி அதைக் காணுகின்ற ஆராய்ச்சிக் கண்ணோ, ஆத்மீகப் பார்வையோ இன்னமும் அவனுர்கு வந்துவிடவில்லை.

அவன் வேறு ஒரு விடிவை எதிர்நோக்கி அங்கே உட்கார்ந்திருந்தான்.

வேலூர் எப்போது வரும்? அம்மா வாய் ஓயாமல் சொல்லிக் கொண்டிருப்பாளே, அந்த அத்தான் எப்படியிருப்பார்? அவரோடு கமலாவும் வருவாளா ரயிலடிக்கு? அத்தான் பெரிய பணக்காரராம். 'பண்ணையார் வீடு' என்றால் வேலூரில் மட்டுமல்ல, சுற்றுப் பக்கம் இருபது மைல் வட்டாரத்தில் பிரசித்தமாம். அத்தான் பணத்தில் மட்டுமல்ல, குணத்திலும் மிகவும் பெரியவர் என்பாள் அம்மா.

வேடிக்கை. மாதா மாதம் அவனுடைய அம்மாவின் பெயருக்கு வேலூர் அத்தானிடமிருந்து பணம் வந்து கொண்டிருந்ததே ஒழிய, ஒரு தடவைகூட அவர் நேரில் வந்ததில்லை. அவர் பணம் அனுப்பாமல் இருந்திருந்தால் அவனும் அம்மாவும் எப்படி வாழ்க்கையை நடத்தியிருக்க முடியும் என்பதை அவனால் கற்பனை செய்து பார்க்க முடியவில்லை. ஐந்தாம் தேதியன்று, எந்த ராஜா எந்தப் பட்டணம் போனாலும் சரி, பணம் வருவது தவறாது.


ரயிலடியிலேயே அவரைப் பார்க்க முடியாதா என்றிருந்தது நாணுவுக்கு.

வண்டி நின்றது.

எட்டின மட்டும் செழுமை கொழிக்கும் வயல்கள் தெரிந்தன. தொலைவில் கோடுகிழித்தாற் போல, காற்றில் உலரும் புடவை போலத் தெரிகிறதே, அதுதான் காவேரி போலும்!

''பையா, நீ எந்த ஊர் போக வேண்டும்?'' என்று கேட்டார் பக்கத்தில் உட்கார்ந்திருந்த பெரியவர். தலையில் கட்டுக் குடுமியும் வயதின் தளர்ச்சி தெரியாத முகமும் பரிவோடு தன்னை அவர் விசாரித்த பாங்கும் கண்டு நாணு அவரை வியப்புடன் பார்த்து விட்டு, ''வேலூருக்கு'' என்றான்.

''நானும் அங்கேதான் போகிறேன்.....வேலூரில் யார் வீட்டுக்குப் போகிறாய் நீ?'' என்று கேட்டார் அவர்.



''அத்தான் வீட்டுக்கு.''

''பெயரைச் சொல்லு, பையா.''

''நாணு.''

''உன் பெயரைக் கேட்கவில்லை. அத்தான் என்றாயே, அவர் பெயர் என்ன?''

''பத்மநாபன்.''

''அடேடே, பத்மநாபன் வீட்டுக்கா போகிறாய்?.... அவர் எனக்கு மிகவும் வேண்டியவர், பையா..... அவர் உனக்கு அத்தானா....?''

''ஆமாம்.''

''எங்கிருந்து வருகிறாய்?''

''மதுரையிலிருந்து.''

''சுந்தரியின் பிள்ளையா நீ?''

நாணு திகைத்து விட்டான். தன் தாயின் பெயரை அந்த முன்பின் தெரியாத கட்டுக்குடுமி ஆசாமி சொல்லவும், என்னவோ தன் குடும்ப ரகசியமே அம்பலமாகி விட்டது போன்ற வெட்கம் அவனைப் பற்றிக் கொண்டது. அத்தான் ஒருவரைத் தவிர அவனைப் பற்றி அந்த ஊரில் யாருக்கும் ஏதும் தெரியாது என்று அவன் எண்ணியிருந்தான். இப்போதோ ஊருக்குள் அடி எடுத்து வைப்பதற்குள் இந்த ஆசாமிக்கு எல்லாம் தெரிந்திருக்கிறதே !

பேச்சை வளர்த்த விரும்பாமல், 'ஆமாம்' என்று மட்டும் அவருக்குப் பதில் கொடுத்து விட்டு அவன் அவசரமாக எழுந்து கதவருகே போய் நின்று கொண்டான்.

ஏனோ அவனுக்கு அப்போது வேலூருக்குப் போகாமல் வேறெங்காவது போய் விடலாமா என்றிருந்தது. மனத்தின் அடித்தளத்தில் மறைந்திருந்த வேதனைச் சுமை கட்டவிழ்ந்து விட்டாற் போல் இருந்தது. பிறரது அனுதாப விசாரணைகளே அவனுக்குப் பிடிக்கவில்லை. ஆமாம். அவன் ஏன் வேலூர் போக வேண்டும்? அம்மாவே போய் விட்ட பிறகு இனி அவன் யாரை நம்பி எங்கே போய் என்ன செய்ய வேண்டும்?

அம்மாவின் நினைவு வந்ததும் சிறுவனுக்குக் கண்ணில் நீர் துளித்து விட்டது. முதல் நாள் வரை நன்றாகத்தான் இருந்தாள். தேர்வுக்குப் படித்துக் கொண்டிருந்த அவனுக்குத் தேநீர்கூடத் தயாரித்துக் கொடுத்தாள். ''நாணு! இந்தப் பரீட்சையிலே பாஸ் செய்து விட்டாயானால் அடுத்த வருஷம் காலேஜுக்குப் போகலாம். பி. ஏ. பட்டம் பெற்றதும் பெரிய உத்தியோகம் கிடைக்கும் உனக்கு'' என்றாள் அவள். அம்மாவுக்கு ஆசைகள் மிகுதி. எப்போதுமே கற்பனையில் வாழ்கிற இயல்பு படைத்தவள். அதனால்தான் அவளுடைய வாழ்வே ஒரு கனவாய்ப் போய் விட்டதோ, என்னவோ!

வண்டி புறப்பட்டது. ஏன் நின்றது, ஏன் புறப்பட்டது என்பது நாணுவுக்குத் தெரியவில்லை. கீழே விழாமல் போகிறவரை இந்த ஆராய்ச்சி தேவையும் இல்லையே !

கட்டுக்குடுமி ஆசாமி ஒரு பெட்டியைத் திறந்து அதற்குள்ளிருந்த சிறிய குப்பிகள் சிலவற்றை வெளியே எடுத்தார். மேல்துண்டால் ஒரு முறை அவற்றை யெல்லாம் துடைத்தார். பிறகு அவற்றை வரிசையாகப் பெட்டிக்குள் அடுக்கி விட்டு மூடினார்.

''பையா, கதவுப் பக்கம் நிற்காதே ..... இப்படி வந்து உட்கார். அடுத்த ஸ்டேஷன் வேலூர்தான்'' என்றார் அவர்.

நாணு பரபரப்புடன் மேல் பலகையிலிருந்த தனது பையையும் பெட்டியையும் கீழே இறக்கி வைத்தவாறே அவரருகில் போய் நின்றான். தன்னை அவர் எதுவும் கேள்வி கேட்டுத் துளைக்காமல் இருப்பதற்காக முகத்தைத் திருப்பிக் கொண்டான்.

''உட்காரேன்.... உன் அப்பா திரும்பி வந்து விட்டாரா?'' என்று கேள்வியை வீசினார் அவர்.

கண்ணைத் திருப்பினால் பார்வையிலிருந்து தப்பி விடலாம். காதை அப்படித் திருப்ப இயலாதே!

''வரவில்லை!'' என்றான் நாணு சுருக்கமாக.

''த்சொ...... த்சொ......'' என்று அனுதாபமாகச் சூள் கொட்டினார் அவர்.

நாணுவுக்கு அவருடைய விசாரணை, அனுதாபம் இரண்டுமே பிடிக்கவில்லை. அவனுடைய அப்பாவைப் பற்றிக் கேட்க அவர் யார் ? குடும்பச் சங்கதி முழுதும் தமக்குத் தெரியும் என்பது போலக் குடைந்து குடைந்து இதெல்லாம் என்ன கேள்வி !

''மெள்ள இறங்கு...... இரு.... இரு..... வண்டி நிற்கட்டும். ஓடுகிற வண்டியிலிருந்து இறங்கக் கூடாது, பையா !'' என்றார் அவர்.

''எனக்கு இதெல்லாம் தெரியும்!'' என்று மனத்துக்குள் கூறிக் கொண்டான் அவன்.

வண்டி நின்றது தெரியவில்லை; புறப்பட்டு விட்டது.

''அதோ, பத்மநாபன் வருகிறாரே!'' என்று கூவினார் அவரோடு இறங்கியவர்.

நாணு வியப்பை உதிர்க்கும் விழிகளைப் பிதுக்கிக் கொண்டு பார்த்தான். செக்கச் செவேலென்று ஆஜானுபாகுவாய் ஒருவர் அவனை நோக்கி வந்து கொண்டிருந்தார். அவர் அருகில் இரட்டைப் பின்னலும் சிரித்த முகமுமாய் வருகிற பெண்தான் கமலாவோ?

''உங்கள் மருமானை அழைத்து வந்திருக்கிறேன்...... பையன் ரொம்பக் கெட்டி.... சுந்தரி அம்மா மகன் இல்லையா?'' என்றார் அந்த ஆசாமி சிரித்தவாறே.

''வா, நாணு....... கமலா, இவன்தான் நாராயணன்...... பார்க்க வேண்டும் என்று துடித்தாயே, நன்றாகப் பார்த்துக் கொள்'' என்றார் அத்தான். பிறகு நாணுவோடு அந்த ஆசாமியைப் பார்த்து, ''எதுவரையில் போய் வருகிறீர்கள், முதலியார்வாள்?'' என்று கேட்டார்.

''அதை ஏன் கேட்கிறீர்கள்?.... பட்டணம் போய், அங்கிருந்து சித்தூர், சேலம், கரூர் என்று ஒரு வட்டம் அடித்து விட்டு வருகிறேன்'' என்றார் கட்டுக்குடுமி முதலியார்.

''வாருங்கள், நம் வண்டியிலேயே போய் விடலாம்.''

கமலா நாணுவை ஏற இறங்கப் பார்த்து விட்டு, அப்படி ஏதும் புதுமையோ அல்லது அவன் நினைத்த வண்ணம் புதிரோ அவனிடம் தென்படவில்லை என்பதைக் கண்டு முகத்தைத் திருப்பிக் கொண்டாள். ஓர் அசட்டுச் சிரிப்புடன் அவளை எதிர் நோக்கிய நாணு, அம்மாவின் வர்ணனையில் கமலா

ளைப் பொறுத்தவரை எங்கோ குறை இருக்கும்போலிருக்கிறதே என்று எண்ணியவனுய், அவனுடைய உதாசீனத்தைக் கண்டு பெருமூச்சு விட்டான்.

ரயில் நிலையத்திலிருந்து வெளியே வருவதற்குள் அத்தானைப் பார்த்தவர்கள் எல்லாம் நமஸ்கரிப்பதையும், பயபக்தியுடன் ஒதுங்கி நிற்பதையும் கண்டான் நாணு. அப்படி ஒன்றும் பெரிய ஸ்டேஷன் இல்லை அது. கும்பல் இருபது முப்பது பேருக்குமேல் இல்லை. ஆனாலும் அத்தானின் செல்வாக்குக்கு இருந்த குறைந்த பிரதிநிதித்துவமே போதுமானதாய் அவனுக்குத் தோன்றியது. ஒரு முறுவலுடன் பரிவாக அவர் தலையசைத்தவாறே நடந்த கம்பீரமும் 'என்ன சௌக்கியமா?' என்று விசாரித்தவாறே கனிவை உதிர்த்ததும் அவனுடைய கண் முன் அவரை வானளாவ உயர்த்திவிட்டன. பெருந்தன்மை என்பது மனிதர்களுக்கு உடலுறுப்புக்களைப் போல் பிறவியோடு வருகிற ஒன்றுதான். முயன்று பெறுகிறதல்ல. இந்த அத்தானைப் பொறுத்தவரை கூட அம்மா சொல்லியிருந்தது குறைவுதான் என்றே நாணுவுக்குப் பட்டது.

''நீ எந்தக் கிளாஸ் படிக்கிறாய்?'' என்று கேட்டாள் கமலா வெளியே வந்ததும்.

''காலேஜுக்குப் போகணும்!'' என்றான் அவன்.



காதலி: என்ன கோலம் இது? பட்டாணி, முறுக்கு, கண்டலைத் தூக்கிக் கொண்டு...!

காதலன்: நாம் சுவாரசியமாகப் பேசும்போது பட்டாணி, கடலை விற்பவர்கள் வந்து தொந்தரவு கொடுக்காமல் இருக்க வேண்டுமே அதற்காகத்தான்!

''பரவாயில்லையே!'' என்றாள் அவள் வியப்புடன்.

''நீ?'' நாணு கேட்டான்.

''எட்டாவது...'' என்றாள் கமலா.

தன்னைவிட மூன்று வகுப்புகள் கீழே அவள் படிக்கிறாள் என்பதை அறிந்ததும் நாணுவுக்குச் சற்றுப் பெருமையாக இருந்தது.

பேச்சு அத்துடன் நின்று விட்டது.

முதலியாரும் அத்தானும் வழி நெடுகப் பேசிக் கொண்டே வந்தனர். முதலியார் அவருடைய நெருங்கின நண்பர் என்பது பேச்சில் புலப்பட்டது.

''இவனை என்ன செய்யப் போகிறீர்கள்?'' என்று கேட்டார் முதலியார்.

''என்ன செய்யலாம்?'' என்று எதிர்க் கேள்வி கேட்டார் அத்தான்.

''முதலில் இவனை என்னிடம் அனுப்புங்கள். பையன் ரொம்ப ஒல்லியாக இருக்கிறான்... மருந்து கொடுத்து உடம்பைத் தேற்றி விடுகிறேன்'' என்றார் முதலியார் சிரித்தவாறே.

அவர் கைதேர்ந்த நாட்டு வைத்தியர் என்பதும், அத்தானின் குடும்பத்துக்கே அவர்தான் ஆஸ்தான மருத்துவர் என்பதும் தெரிந்ததும் நாணுவுக்கு அவர் மீது மதிப்பும் வியப்பும் எழுந்தன. தோற்றத்தைப் பார்த்தால் அசல் பட்டிக்காடாக விளங்குபவர் கைபட்டாலே நோய் பறந்து விடுகிற செல்வாக்குக்கு உரியவராகத் திகழ்வதை அவனால் நம்ப முடியவில்லை.

இரு கரையும் பூரித்து ஓடிக் கொண்டிருந்தது காவேரி. புதிதாகக் கட்டப்பட்டிருந்த பாலத்தின் மீது வண்டி போகும் போது நாணுவுக்கு எங்கோ வான வீதியில் போவது போலிருந்தது. மதுரையில் வைகை நதியில் பெரும்பாலும் மணலே புரள்வதைப் பார்த்திருந்தவனாதலால் காவேரியில் புரளும் வெள்ளம் அவனுக்குப் பிரமிப்பைத் தந்தது. கரையில் சிவன் கோவில் தெரிந்தது. அருகில் படித்துறை. கிழட்டு ஆலமரம், மரத்தடியில் சிமிட்டி மேடை, ஆற்றின் குறுக்கே கொம்பனை — எல்லாம் அம்மா வர்ணித்தது போலவே காட்சி தந்தன. அம்மா சிறு வயதில் இந்தத் துறையில்தான் குளிப்பாளாம். வேறுரை அவன் வர்ணித்துக் கேட்க வேண்டும். பிறந்த ஊரைப் பற்றிப் பேச ஆரம்பித்தால் அவளுக்கு எல்லாத் துயரங்களும் மறந்து போகும். கண்ணில் அலாதி ஒளி கூடிவிடும். அம்மா சிரித்தால் எப்படி இருக்கும், தெரியுமா? தெய்வமே சிரிக்கிற மாதிரி இருக்கும்!

ஆமாம். தெய்வம் சிரிக்கிற மாதிரிதான். வேறு உபமானம் சரியாக இருக்காது. தெய்வம் சிரித்தாலோ, அழுதாலோ அது அபூர்வமான விஷயமல்லவா!

அம்மாவின் நினைவு இரண்டாம் முறையாக அவனைத் தாக்கவே கண்ணில் நீர் சுரந்து விட்டது. இனி அவளை அவன் பார்க்க முடியாது. அவளுடைய மடியில் தலை வைத்துப் படுக்க முடியாது. இந்த உலகத்தையே துச்சமாக மதித்து, யாருடனும் ஒட்டாமல் அவளையும் யாருடனும் ஒட்ட விடாமல் அவள் வாழ்ந்த அந்தத் தனி வாழ்க்கையில் அவன் பங்கு பெற

முடியாது. அவன் வாழ்ந்தது வாழ்க்கையா அல்லது துறவா? இரண்டுமேதானா? அவனுடைய முகத்தோடு முகம் வைத்துக்கொண்டு அவன் கர்வப்படுவானே, அது இனி ஏது?

கமலா அவன் அழுவதைப் பார்த்துவிட்டாள். ''அப்பா, நாணு அழறான்!'' என்றாள்.

அவசர அவசரமாகக்கண்ணைத் துடைத்துக் கொண்ட நாணு, ''இல்லையே, நான் அழவில்லையே'' என்றான். கண்ணீரைத் துடைத்தாலும் கண்ணுக்குள் இருந்த சிவப்பை எப்படித் துடைப்பது?

''பாவம், சின்ன வயசிலே பையனுக்கு ரொம்பச் சோதனை வந்திருக்கிறது'' என்றார் முதலியார். பிறகு, ஆறுதலாக, ''கவலைப் படாதே பையா! பண்ணையார் வீட்டிலே உனக்கு ஒரு குறையும் இருக்காது'' என்றார்.

வண்டி நின்றது. கமலா குதித்துக் கொண்டு இறங்கி ஓடிவிட்டாள். அத்தானுக்கு வழி விட்டு விட்டு நாணு பெட்டியும் பையுமாக இறங்கினான். முதலியார் இறங்கவில்லை. அவரை விட்டுவர வண்டி போயிற்று.

அத்தான் முன்னால் செல்ல அவர் பின்னாலே வீட்டினுள் நுழைந்தான் நாணு. கூடத்தில் அவர் உட்கார்ந்தார். அவனையும் உட்காரச் சொன்னார். பெரிய பெரிய படங்கள் சுவர்களுக்குள்ளிருந்து அவனை எட்டிப் பார்த்தன. எதிரே தெரிந்த ராமர் பட்டாபிஷேகப் படத்தின் முன்னே யானை வாயிலிருந்து ஊதுவத்திப் புகை சுருண்டு சுருண்டு வெளிப்பட்டுக் கொண்டிருந்தது. இன்னதென்று விளங்காத ஒரு பயம், பிரமை அவனை ஆட்கொண்டது. ஒரு புதிய சூழ்நிலைக்கு மாறியதால் எழுந்த அவலம் நெஞ்சில் புகைந்தது. மதுரையில் பத்தடிச் சதுர அறைக்குள் வாழ்ந்தவனுக்கு இந்த இருபதுக்கு முப்பதடிக் கூடம் வாழ்வின் ஒரு பெரிய போராட்ட மைதானமாகத் தோன்றியது.

அவன் யார்? இந்தச் செல்வ மிதப்பில் ஏழை நாணு எவ்வாறு நீந்தப் போகிறான்?

புரியவில்லை. தாமரை இலை நீர் போல ஒட்டாத் தன்மைதான் புரிந்தது.

உட்புறமிருந்து ஓர் அம்மாள் இரண்டு தம்ளர்களில் காப்பி கொண்டு வந்து வைத்தாள். நாணுவையே உற்றுப் பார்த்தாள் அவள். அந்தப் பார்வையை அவனால் தாங்க முடியவில்லை.

''ருக்கம்மா, இனிமேல் இவன் உங்கள் பொறுப்பு... தெரிஞ்சுதா?'' என்றார் அத்தான்.

அதைக் கேட்டதும் அந்த அம்மாளின் முகத்தில் எல்லையற்ற சோகம் கவிவதைப் பார்த்தான் நாணு. பளீரென்று புடவைத் தலைப்பால் முகத்தை மூடிக்கொண்டு விம்மலானாள் அவள்.

''என்ன இது, ருக்கம்மா?'' என்றார் அத்தான்.

அந்த அம்மாள் பதில் சொல்ல முடியாமல் ஒரு கணம் தவித்தாள். பதில் சொன்ன போதோ நாணு ஒரு கணம் தவித்துப் போனான்.

''எனக்கு நெஞ்சைப் பிளக்கிறாப்பலே இருக்கு, இவனைப் பார்த்தா. அந்த மகராஜியே கண் முன்னாலே நிற்கிறாப்பலே இருக்கு.'' குரல் வெடிக்க, துயரம் துளும்ப நினைவின் வேதனையை, வேதனையின் நினைவை ருக்கம்மா வழித்தேவிட்டாள்.

நாணு அதிர்ந்து போனான். தன் தாயைத் தான் அவள் குறிப்பிடுகிறாள் என்று அவனுக்குப் புரிந்து விட்டது.

ருக்கம்மாவின் பேச்சு அத்தானையும் கலக்கிவிட்டது. அவர் சோபாவில் சாய்ந்து விட்டார். கம்பீரமும் அமைதியும் தவழும் அவர் முகத்தில்கூடச் சோகத்தின் நிழல் படிவதை நாணு கண்டான். நெஞ்சை அழுத்திப் பிடித்துக் கொண்டு ஒரு பெரு மூச்சு விட்டார் அவர். அந்த மூச்சு கூடத்தையே ஒரு கலக்கு கலக்குகிறாற் போலிருந்தது.

''காப்பி சாப்பிடு, நாணு'' என்றார் அவர் நிமிர்ந்தவாறே.

ருக்கம்மா பின்பக்கம் போய்விட்டாள்.

நாணு காப்பியை ஒரு வாய் குடித்தான். தொண்டையில் அது இறங்க மறுத்தது. அங்கேதான் சற்று முன் பெரும் சோகமே அடைப்பானாகக் குடியேறியிருந்ததே!

அத்தான் சிறு சிறு விழுங்காக அந்த ஒரு தம்ளர் காப்பியை நெடுநேரம் குடித்தார். அவருடைய பார்வை கூடத்தில் இல்லை. எதிரே வீற்றிருந்த நாணு மீதும் இல்லை.

அப்படியா சமாசாரம்?



''யாருங்க?''

''ஐயாவைப் பார்க்கணும்!''

''என்ன விஷயமா?''

''ஒரு பில் விஷயமா!''

''அவர் நேத்து திடீர்னு ஊருக்குப் போயிட்டாங்களே!''

''நான் அவருக்குப் பணம் கொடுக்கணும்!''

''ஓ! ஐயா போயிட்டு இன்னைக்குத் திடீர்னு திரும்பி வந்துட்டாங்களே! உட்காருங்க!''



வேறு எங்கோ, தொலைவில், அது படிந்திருந்தாற்போலிருந்தது. அது ருக்கம்மா மூட்டிவிட்ட நினைவுப் பின்னணியைப் பின்பற்றிய பார்வை. அங்கே என்னவெல்லாம் அவர் பார்த்தாரோ, யார் அறிவார்?

திடீரென்று சிரிப்பொலி கேட்டது. நாணு நிமிர்ந்து பார்த்தான். மாடிப் படிகளில் கமலா இறங்கி வருவது தெரிந்தது. அதற்குள் உடை மாற்றிக் கொண்டு புதிதாக மலர்ந்த பூப்போல அவள் தோன்றினாள். நீலப் பாவாடையும், சிவப்புச் சோளியும், மஞ்சள் தாவணியும் அவளுக்கு எடுப்பாக இருந்தன. கமலா ஒல்லிதான். ஆனால், மெலிவே அவளுக்கு ஒரு பொலிவு போலும்!

கூடத்தின் சோக மிதப்பில் அவளது சிரிப்புப் படகு மிதந்து வருவதைக் கண்டதும் அத்தானின் கனவு கலைந்தது. அந்தப் படகில் ஏறிக்கொள்ள அவர் தயாராகி விட்டார்.

''கமலா, நாணுவுக்கு வாசல் அறையைக் கொடுத்து விடலாமா?'' என்று கேட்டார்.

கமலா தலையைப் பலமாக ஆட்டினாள். ''அந்த ரூம் அத்தைக்கு ரிஸர்வாகி விட்டது. ஞாபகமில்லையா அப்பா?'' என்றாள்.

''பார்த்தாயா, மறந்தே போய் விட்டேன். கல்யாணிக்கு வாசல் அறை இல்லாவிட்டால் தூக்கமேவராதே! நாணுவுக்கு மாடியிலேயே சின்ன அறையைக் கொடுத்து விடலாம்... சரிதானா?''

''ஓ...''

நாணு மாடிக்குப் போனான். அவனுக்கென்று பத்தடி சதுர அறை ஒன்று அங்கே இருந்தது. பழைய சூழ்நிலை அவன் நெஞ்சை விட்டு நீங்கிவிடக் கூடாதென்பதற்காகவே இறைவன் இந்தப் பெரிய வீட்டில் இந்தச் சிறிய அறையை அவனுக்குக் காட்டி விட்டான் போலும்! அறையை அடைத்துக் கொண்டு ஒடிந்த நாற்காலிகளும் பலகைகளும் கிடந்தன.



''கந்தனை விட்டு எல்லாவற்றையும் அப்புறப்படுத்தச் சொல், கமலா!'' என்றார் அத்தான்.

கந்தன் வந்தான். மளமளவென்று அப்புறப்படுத்தத் தொடங்கினான்.

''அரை மணி நேரமாவது ஆகும். வா, என் அறையில் உட்காரலாம்'' என்று அழைத்தாள் கமலா.

அவளுடைய அறையில் மூலை முடுக்குகளிலெல்லாம் துணி மணிகள் கிடந்தன. புத்தகங்கள் தாறுமாறாகக் கிடந்தன.

கமலா கேட்டாள்: ''வண்டியிலே வரபோது ஏன் அழுதே நீ?''

நாணு அசட்டுச் சிரிப்புடன், ''அம்மா நினைவு வந்து விட்டது.'' என்றான்.


''உனக்கும் அம்மா இல்லையா?'' என்று கேட்டாள் அவள்.

''இல்லை.''

''எனக்கும்தான் அம்மா இல்லை.'' இதைச் சொல்லும்போது அவள் குரல் கம்மிவிட்டது.

தனக்கும் அவளுக்குமிடையே இப்படி ஓர் ஒற்றுமை இருந்தது அவனுக்கு ஆச்சரியமாக இருந்தது. அவளைப் போலச் சிவந்த மேனியோ செல்வப் பூரிப்போ அவனுக்கு இல்லாதிருக்கலாம். ஆனால் அம்மா இல்லாத குறையில் இருவருமே ஒன்றுதான். இந்த ஒற்றுமையின் சிறப்பு, அம்மா இல்லாதவர்களுக்குத்தான் புரியும்!

சமையற்கட்டிலிருந்த ருக்கம்மா அவனை அன்புடன் விசாரித்தாள். ''என்னவோ, உன் அம்மாவின் கதை முடிந்து விட்டது... கஷ்டத்தையே அனுபவித்துவிட்டுப் போய்விட்டாள்!... நீயாவது தலையெடுத்து நல்ல பெயர் வாங்கு... அப்போதுதான் அவள் ஆத்மா சாந்தியடையும்'' என்று அவள் கூறியதும், தன் குடும்ப அந்தரங்கம்



"டேய்! நாம எல்லோருமா சேர்ந்து அப்பா அம்மா விளையாட்டு விளையாடலாமா?"

"சீ. சீ... விலைவாசியெல்லாம் ரொம்ப ஏறிக்கிட்டே போகுது. இப்ப போய் அந்த விளையாட்டை விளையாடினா ஒன்றும் கட்டுபடி ஆகாதுடா! வேறே ஏதாவது விளையாடுவோம்!"

◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆

வேளூரில் பலருக்குத் தெரிந்திருப்பதை அவன் புரிந்து கொண்டான்.

ருக்கம்மா அந்த வீட்டில் அவளுடைய பதினேழாவது வயதிலிருந்து இருந்து வருபவள். சமையற்காரிதான். ஆனால் அப்படி யாரும் அவளை எண்ணுவதில்லை. அவளும் அந்த வீட்டில் சம்பளம் வாங்குகிற நினைவில் வேலை செய்யவில்லை. கமலாவின் அம்மா அந்த வீட்டின் மாட்டுப்பெண்ணாக வந்த போது அவள்தான் விருந்து வைத்தாள். கமலாவின் பிரசவமே அவள் மேற்பார்வையில் நடந்ததுதான். ருக்கம்மாவுக்கு நிறையப் புராணக் கதைகள் தெரியும். ஒருவேளை அவளுடைய வாழ்க்கையே ஒரு புராணமாக அமைந்து விட்டதால் இந்த நாட்டமோ என்னவோ! கல்யாணம் என்று ஒன்று ஆனது தான் தெரியும் அவளுக்கு. கணவனின் முகம் கூடச் சரியாக நினைவில் இல்லாத போது கைம்மை அவளை வந்தடைந்தது. அன்று முதல் வாழ்வின் ஒரு பகுதியை இறுக மூடி விட்டுப் பிறருக்காகவே வாழ்ந்து வந்தாள் அவள். முகம் சுளித்துப் பேசி அறியாள். அரை வயிறு படைக்கவும் அறியாள். ருக்கம்மாவின் கையால் சாப்பிட்டால் உடம்பு பருத்துப் போகும்.

நாணு குனிந்த தலை நிமிராமல் சாப்பிட்டு எழுந்தான்.

"அந்தப் பெண் கமலா இன்னமும் சாப்பிட வரவில்லை. பசி எடுத்தது கூடத் தெரியாது அவளுக்கு... நாணு, அவளை வரச் சொல் இதோ" என்றாள் ருக்கம்மா.

கமலாவின் அறை மாடியில் அவனுடைய அறைக்கு அருகில்தான் இருந்தது. கதவருகில் போய் நின்றவன் உள்ளே பாட்டுக் குரல் கேட்கவே சற்றுத் தயங்கினான். தணிந்த ஸ்தாயியில், ஆனால் இனிமையின் உச்சத்தில் பாடல் வந்து கொண்டிருந்தது. கமலா இவ்வளவு அழகாகப் பாடுவாளா? அவனுக்குத் தெரியாதே! அம்மா சொல்லவே இல்லையே!

"கமலா!" என்று கூப்பிட்டான்.

பாட்டு மும்முரத்தில் அது அவள் காதில் விழவில்லை. நாணு கதவைத் திறந்தான். கமலா மட்டும்தான் இருப்பாள் என்று அவன் எதிர்பார்த்ததற்கு மாறாக அங்கே மற்றொரு பெண்ணும் இருந்தாள். அவள்தான் பாட்டுப் பாடியவள் என்று அவளுடைய உதட்டு அசைவிலிருந்து தெரிந்தது. அவனைக் கண்டதும் இனிமையான அவள் குரலொலி படிப்படியாகத் தேய்ந்து மறைந்தது. அடி உதட்டைக் கடித்துக் கொண்டு புருவங்கள் நெளிய அவனை நோக்கினாள் அவள்.

"என்ன?... ஏன் அப்படித் திருதிருவென்று விழிக்கிறாய்?" என்றாள் கமலா கோபமாக.

நாணு மென்று விழுங்கியவனாய், "ருக்கம்மா சாப்பிடக் கூப்பிட்டாள்" என்றான்.

"போய்ச் சாப்பிடேன்... இங்கே என்ன வேலை?" என்றாள் அவள்.

"நான் சாப்பிட்டாயிற்று. உன்னை வரச் சொன்னாள்."

"சரி, நீ போகலாம்."

நாணு கதவை மூடினான். அவன் மனத் துள்ளும் ஒரு கதவு மூடிக் கொண்டது போலிருந்தது. அம்மா இல்லாத ஒற்றுமைகளை நேரத்துப் போலி உணர்ச்சிதானோ!

"யார் இந்தப் பையன்?" உள்ளே வினா எழுந்தது.

"சொந்தக்காரப் பையன்... அநாதை, பாவம்!" என்ற பதில் வந்தது.

யாரோ சம்மட்டியால் தன் நெஞ்சில் அடிப்பது போலிருந்தது நாணுவுக்கு. இது வரை அவன் கேட்டறியாத வார்த்தை அது. அவன் அநாதையா? அந்த வீட்டில் அவனுடைய ஸ்தானம் அதுதானா!

"நாணுன்னு பெயர்... ரொம்பக் கெட்டிக்காரன்... காலேஜுக்குப் போகப் போகிறான்" என்று தொடர்ந்து சொல்லியவாறே கதவைத் திறந்தாள் கமலா. நாணு அங்கேயே நிற்பதைக் கண்டதும், "நீ போகவில்லை இன்னமும்?" என்று சீறினாள்.

அந்தப் பெண் பரிதாபமாகப் பார்த்தாள் அவனை. அவளுடைய விழிகள் பெரியனவாய் அழகாய், கூர்மையாய் இருந்தன. அநுதாபம் பொங்கிய அந்த விழிகளை அவனால் எதிர்நோக்க இயலவில்லை.

வேகமாகத் தன் அறையை நோக்கி அவன் நடந்தான். (தொடரும்

நீங்கள்
பொலிவுடனிருக்க
சார்மிஸ்
உபயோகியுங்கள்!



புதியது!
நேர்த்தியான டின்



புதுமை பெறுக... இதம் பெறுக...
நாள் முழுவதும் நளினமாய் இருங்கள் !

நாள் முழுவதும் நளினமாய் இருக்க, புதிய சார்மிஸ் உபயோகித்து, குளுமையையும், புத்துணர்ச்சியையும் பெறுங்கள். பளபளப்பான, புதிய டின்னில் உள்ள சார்மிஸ், வியக்கத்தக்க வகையில் உங்களுக்குப் புத்துணர்ச்சியளித்து உங்கள் அழகைச் சோபிக்கச் செய்யும் அந்த உன்னத மனோரம்மிய நறுமணத்தைக் கொடுக்கிறது.

சார்மிஸ்

உன்னத மனோரம்மிய மணத்துடன் கூடிய
டால்கம் பவுடர்

CH.TP.G.13 TM

அத்தியாயம் ஐம்பத்தோன்பது

தம்பையாவின் காதலி

மறுநாள் காலை எட்டு மணியிருக்கும். அதுவரையில் வெளியில் எங்கும் செல்லாமல் கட்டிப் போட்ட காளைபோல் தன் வீட்டிலேயே சுற்றிக் கொண்டிருந்த நச்சி, கன்னியம்மாள் வாங்கி வந்து வைத்த 'நாஸ்தா'வைக் கூடத் தொடாமல், வேதா ஊற்றிக் கொடுத்த பழைய நீராகாரத்தை மட்டும் பருகி விட்டு, ஏதோ ஒரு முடிவுடன் பயில்வான் தம்பையாவின் வீட்டை நோக்கி நடந்தான்.

''தோ, வரானே கன்போட் ஜாக்கி! இன்னடா, ரொம்ப நாளைக்கு ரொம்ப நாளு இந்தப் பக்கமே தலை காட்டலே?'' என்று அந்த வீட்டின் திண்ணைமேல் உட்கார்ந்திருந்த சீடப் பிள்ளைகளில் ஒருவன் கேட்டான். அவனோடு



இன்னும் சில சீடர்களும் பீடி குடித்த வாறு முக வாட்டத்துடன் உட்கார்ந்திருந்தனர்.

வாசற் குறட்டில் வந்து நின்ற நச்சி, 'உள்ளே இருக்கிறாரா?' என்று கைச்சாடையால் வினவினான்.

''வாத்தியார்தானே? இருக்கிறார், போய்ப் பாரு!'' என்றான் சீடன்.

'தூங்குகிறாரா?' என்று மீண்டும் கண் சாடையால் விசாரித்தான் நச்சி.

''இல்லே, கண்ணு! சும்மா படுத்துக்கினு தான் இருக்கிறார்.''

''உடம்பு சரியில்லையா?''

''எப்பவும் இருக்கிறதுதான்டா! இன்னைக்குக் கொஞ்சம் ஜாஸ்தியாப் போச்சு. தோ, இருக்கிறானே கரிவட்டைக் குப்பன்; இவனாலே வர்றதுதான். ஊர்லே விக்கிற கஸ்மாலத்தை யெல்லாம் வாங்கியாந்து குடுத்துடறான்; அவரும் ஆத்தமாட்டாம குடிச்சுப் பிடறாரு. வவுறு இன்னைக்குக்கு ஆவும்? அது சில்லிச் சில்லியா வெந்துபோய்க் கெடக்குது. ராத்திரி மூச்சுடும் ரொம்ப டேஞ்சர். ஆளு டவுனாயிடுவாரோன்னுகூட எனக்கு டவுட்டாப் போச்சு. எப்படியோ இப்ப கொஞ்சம் சமாளிச்சுக்கிட்டார். போடா, போய்ப் பாரு.''

நடுக்களித்திருந்த வாசற் கதவைத் திறந்து கொண்டு தயக்கத்துடன் உள்ளே சென்றான் நச்சி. ''வணக்கம், வாத்தியாரே!''

கயிற்றுக் கட்டிலில் படுத்துக் கிடந்த பயில்வான் தம்பையா மெல்லத் தலையைத் தூக்கிப் பார்த்துவிட்டு ஓர் அலாரிப்புச் சிரிப்புடன் இருமிக்கொண்டே எழுந்து, ''வாடா, வா! இப்படி உட்கார்!'' என்றான் ஆழ்ந்த அன்புக் குரலில்.

''இருக்கட்டும், வாத்தியாரே! நான் இப்படியே நின்னுக்கிறேன்'' என்று பணிவுடன் தலையைச் சொறிந்துகொண்ட நச்சி ஒரு தூணின் ஓரம் வந்து நின்றான்.

''இப்பத்தான்டா உன்னை நினைச்சுக் கிட்டே இருந்தேன், இன்னு இந்தப் பையன் நம்பளை வந்து கண்டுக்க மாட்டேங்கிறானேன்னு......!''

''சும்மா எதுக்கு வாத்தியாரே பார்க்கிறது?...... நான் உன்னோட நெஞ்சிலே இருக்கிறேன்; நீ என் உயிரிலே இருக்கிறே! அது போதாதா?''

துவண்டு கிடந்த தன் தலையை ஒரு சுழற்றுச் சுழற்றி நிமிர்த்தி நச்சியைப் புன்முறுவலுடன் பார்த்த தம்பையாவின் முகத்தில் ஓர் அபூர்வமான உற்சாகக் களை படர்ந்தது. ''அது போகட்டும்! எங்கே, ஒரு சலாம் வரிசை எடுத்துக் காட்டு, பார்க்கலாம்? உன் வித்தையைப் பார்த்து ரொம்ப நாளாகிப் போச்சு!'' என்றான் கட்டளையிடும் குரலில்.

''கோய்ச்சுக்காதே; வாத்தியாரே! இப்பத்தான் நாஸ்தா பண்ணிப்பிட்டு வந்தேன்; வயிறு திம்முன்னு இருக்குது!'' என்று கணங்கினான் நச்சி.

''போடா, கய்தே! இதோ பாருடா, நான் போட்டுக் காட்டுறேன்'' என்று ஒரு வீறாப்புடன் சொல்லிக்கொண்டே துள்ளி யெழுந்த தம்பையா, அடுத்த கணம் தட்டுத் தடுமாறிக் கீழே விழ, நச்சி ஓடி வந்து அவனைத் தூக்கிக் கட்டிலில் உட்கார வைத்தான்.

''ஏன்டா, என்னைத் தூக்கினே? அதுவும் ஓர் 'அடிகட்டு' வித்தை தான்டா! சும்மா கீழே விழறாப்பலே விழுந்து சுபால்னு ஒரு ரவுண்டு அடிச்சு நெம்பி எழுந்து சலாம் வரிசை போடறதும் ஒரு பந்தாதான்டா!'' என்று சிரித்தான் தம்பையா.

''ஆமா வாத்தியாரே, ஆமாம்!'' என்று சிரிக்காமல் ஆமோதித்துக்கொண்டான் நச்சி.

உடம்பை அலட்டிக் கொண்டதாலோ என்னவோ கனத்த இருமல் வந்து தம்பையாவை ஓர் உலுக்கு உலுக்கிவிட்டு ஓய்ந்தது. இருமிய களைப்பில் சற்று நேரம் மௌனமாயிருந்த அவன், ''அது சரி; வேதா எப்படி இருக்குது? என்னை வந்து பார்க்கவே மாட்டேங்குதே!'' என்றான் ஒரு வித ஏக்கத்துடன்.

''நல்லாத்தான் இருக்குது. கொஞ்ச நேரம் பேசாம இரு; இரைப்பு நிற்கட்டும்'' என்றான் நச்சி கரகரத்த குரலில்.

''நீ இப்ப என்னமோ காரியமா இங்கே வந்திருக்கிறேன்னு நினைக்கிறேன்...'' என்று அவன் முகத்தைப் பார்த்தான் தம்பையா.

''ஆமா, வாத்தியாரே!'' என்று தணிந்த குரலில் சொன்ன நச்சி, திறந்து கிடந்த வாசற் கதவை ஒருக்களித்துச் சாத்திவிட்டு வந்து கட்டிலின் விளிம்பில் உட்கார்ந்தான்.

திண்ணையில் அமர்ந்திருந்த சீடர்களில் ஒருவன், ''ஓகோ! குருவோடுகூட சிஷ்யப் பிள்ளையும் 'ஜோதி'யிலே கலக்கப் போறாப்பலே இருக்குது, டோய்!'' என்று மெல்லக் கிசுகிசுத்துச் சிரிக்கும் சத்தம் கேட்டது.

''சொல்லுடா, இன்ன விஷயம்? உன் ஆத்தாக்காரி எதனாச்சும் ராங் பண்றாளா?'' என்று வெகு அக்கறையாக வினவினான் தம்பையா.

''அதெல்லாம் ஒண்ணுமில்லே'' என்று முணுமுணுத்த நச்சி, சுற்றுமுற்றும் பார்த்து விட்டுச் சட்டென்று தன் சட்டைக்குள் மறைத்து வைத்திருந்த புகைப்படத்தை எடுத்துக் காட்டி, ''இங்கே பாரு, வாத்தியாரே! இந்த அம்மாளை உனக்குத் தெரியுமா?'' என்று தன்னை மீறிய படபடப்புடன் கேட்டான்.

தொங்கித் துவண்ட தலையை நிமிர்த்திச் சிவந்து கிடந்த கண்களை இடுக்கிக்கொண்டு அந்தப் புகைப்படத்தைக் கூர்ந்து பார்த்த தம்பையா, ஏதோ சவுக்கடி பட்டவன்போல் உடம்பை முறுக்கி நெளித்தவாறு அதை வெடுக்கெனப் பிடுங்கி மீண்டும் பரபரப்பாக நோக்கினான். அடுத்த கணம் அவன் கண்களிலிருந்து கரகரவெனக் கண்ணீர் வழிந்தது. ''இது ஏதுடா, உனக்கு?'' என்று அதட்டுவதுபோல் அடித் தொண்டையில் கேட்டான்.

''மருதமுத்துவோட வீட்டிலிருந்து அவனுக்குத் தெரியாம கிளப்பிக்கிட்டு வந்தேன்.''

''ஏன்டா, இதை எடுத்துக்கிட்டு வந்தே?''

''அந்தச் சோமாறி என்கிட்டயே கொஞ்சம் வேலை காட்டிப்பிட்டான், வாத்தியாரே!

அதான் அவனை ஒரு கை பார்த்துப்பிட்டு வரலாம்னு போனேன். அவனுக்கு நல்ல காலம்; இந்தப் போட்டோ படத்தாலே தப்பிச்சுக்கிட்டான்.''

நச்சியை வெறித்துப் பார்த்த தம்பையா, ''அவன் இந்தப் படத்தைப் பத்தி உன்கிட்ட ஏதனாச்சும் சொன்னானா?'' என்று வினவினான்.

''அவனுக்குத் தெரியாமல் இதைக் கிளப்பிக்கிட்டு வந்தேன்னு முதல்லே சொன்னேனே, மறந்துட்டியா?'' என்று கூறிச் சிரித்தான் நச்சி.

''ஓகோ! அப்ப விஷயம் வேற வழியா உனக்கு வந்திருக்குது......'' என்று முணுமுணுத்த தம்பையா, அந்தப் படத்தையே இமைக்காமல் பார்த்துக் கொண்டிருந்தான்.

''சொல்லு, வாத்தியாரே! இந்த அம்மாளை உனக்குத் தெரியுமா?''

''தெரியுமா இன்னாடா? நான் இப்ப இருக்கிற இந்த நிலைமைக்கே இவள் தாண்டா காரணம்!'' என்று கம்மிய குரலில் சொன்ன தம்பையா, சட்டென எழுந்து பக்கத்து அறைக்குப் போய், சில விநாடிகளுக்குப் பின் கரகரத்த தொண்டையைக் கனைத்து விட்டவாறு வாயைத் துடைத்துக் கொண்டு தள்ளாடித் தள்ளாடி வந்து கட்டிலில் உட்கார்ந்தான். இப்போது அவன் உடலில் ஓர் அசாதாரண முறுக்கு ஏறிக் காணப்பட்டது. ஆனால் தலை மட்டும் முன்னை விட அதிகமாகத் தொங்கித் துவண்டது. ''இன்னாடா கேட்டே?'' என்று ஒரு குலுக்குச் சிரிப்புடன் விளித்த அவன், கம்பீரமாக நிமிர்ந்து, ''இவள் யாருன்னு கேட்கிறே? சொல்றேன், கேளு!'' என்றான்.

நச்சி அவன் முகத்தையே பார்த்துக் கொண்டு மௌனமாயிருந்தான்.

''ஒரு பதினேழு, பதினெட்டு வருஷங்களுக்கு முன்னாலே, — அப்ப நான் உன்னைப் போல ஊட்டுக்கு அடங்காம ஊர் சுத்திப் பொறுக்கியா இருந்த காலம் அது!..... இன்னா தொரை? இருக்கிறதைத்தான் சொல்றேன்; கோய்ச்சுக்காதே!''

''இல்லே, சொல்லு வாத்தியாரே!'' என்று சிரித்தான் நச்சி.

''அப்ப நம்பளுக்குச் சிநேகிதக்காரனுங்க ரொம்ப ஜாஸ்தி. எல்லாம் இன்னா மாதிரி சிநேகிதம்? சொல்லி வைச்ச, சொன்ன இடத்திலே 'இனிஷியல் அறுப்பு' அறுத்துக் காட்டற ஜலா கில்லாடிங்க! ஆனால் சிநேகிதத்துக்காக உசிரையேகூடக் கொடுத்துடுவானுங்க! அந்த மாதிரி தோஸ்துகளோடு ஒரு சோனிப் பயலும் எனக்குச் சிநேகிதமானான்; அவன்தான் இப்ப தலைவர்னு மேடையிலே ஏறி மைக்கைப் பிடிச்சுக்கிட்டுப் பேசறானே, இந்த மருதமுத்து! அப்ப அவன் ஒல்லியா, கறுப்பா, ஊதினால் பறந்துடறாப்பலே இருப்பான். எத்தினியோ தபா அவனைத் தூக்கிப் போட்டுப் பந்தாடிப் பிட்டிருக்கிறேன். அப்புறம் ஓட்டலுக்குக் கூட்டிக்கிட்டுப் போயி அதை இதை வாங்கிக் கொடுத்துத் துன்ன வைச்சு ரிக்ஷாவிலே ஏத்தி ஊட்டுக்கு அனுப்பி வைச்சிருக்கிறேன். அவனுக்கு அப்ப இன்னா வேலை தெரியுமா? அதான் உனக்குத் தெரியுமே, தொரை!....... சீப்பு, கண்ணாடி, சோப்புப் பொட்டி, சேப்டி பின்னு, கிளாஸ் டம்ளர், கிலுகிலுப்பை — இதுமாதிரி சாமான்களைத் தள்ளு வண்டியிலே போட்டுக்கிட்டு, 'அ...எதை எடுத்தாலும் ஒண்ணரையணா'ன்னு ராகம் இஸ்துக் கூவிக்கிட்டே மோர்மார்க்கெட்டைச் சுத்திச் சுத்தி வர்ற வேலை!... ஆனால், பய அப்பவே படா கெட்டி. தம்பிடிக் காசு செலவு பண்ணமாட்டான். எல்லாம் ஓசியிலேயே பார்த்துக்குவான். ஒரு விஷயம் எனக்கு இன்னுங்கூட ஞாபகம் இருக்குது: பயலுக்கு ஒரு நாள் ரொம்பப் பசி. என்கிட்டே வந்தான். 'வாத்தியாரே, என்னை ஒரு குத்து குத்தறயா'ன்னு கேட்டான். 'ஏண்டா'ன்னேன். 'உன் பலம் கொண்ட மட்டும் ஒரு குத்துக் குத்திப்பிட்டுக் கால் பிளேட் பிரியாணி வாங்கிக் கொடுத்துப்பிடு வாத்தியாரே'ன்னான். எனக்கு 'ஐயோ, பாவம்'னு ஆய்ப் போச்சு. பேசாம அவனை ஓட்டலுக்கு அழைச்சுக்கிட்டுப் போய் மூக்குப் புடிக்க வாங்கிக் கொடுத்தேன்.''

தம்பையாவுக்குச் சிரிப்புப் பொத்துக் கொண்டு வந்து விட்டது. தான் சொன்னதைத் தானே ரசிப்பவன்போல் கடகடவெனச் சிரித்தான். அந்தச் சிரிப்பில், அவன் சொல்லி வந்தது அவனுக்கே மறந்துவிட்டது போலும். ''இப்ப நான் இன்னாடா சொன்னேன்?'' என்று இழுத்தாற்போல் கேட்டுக் கொண்டே தலையைத் தொங்கப் போட்டுக் கொண்டான்.

நச்சிக்குத் தன் குருநாதனின் போக்கு நன்கு தெரியும். அவன் அதிகம் பேசமாட்டான். ஆனால் பேச ஆரம்பித்து விட்டால் அது எங்கெங்கோ சுற்றி வளைத்துக்கொண்டு போகும். அதை யாரும் தடுக்கக் கூடாது; குறுக்குக் கேள்வியும் கேட்கக் கூடாது. அவனுடைய பேச்சைக் கேட்கப் பிடிக்காவிட்டாலும் கேட்பது மாதிரி பாவனை செய்ய வேண்டும். நடுவில் எழுந்து போய்விடக் கூடாது. இப்படி ஏதாவது செய்துவிட்டால் அவனுக்கு அசாத்தியமான கோபம் வந்துவிடும். சில சமயம் அடித்து நொறுக்கியும் விடுவான்.

''அவனை ஓட்டலுக்கு அழைச்சுக்கிட்டுப் போய் மூக்குப் புடிக்க வாங்கிக் கொடுத்தே!.. ம்..... அப்புறம்?'' என்று அவன் நிறுத்திய இடத்தை எடுத்துக் கொடுத்தான் நச்சி.

''ஆமாம்; அந்த மாதிரி இருந்தவன்தான் இப்ப..... அது எப்படி ஆனான்னு கேட்கிறியா? கேளு, அந்தக் கதையை: அவன் அப்பவே, எங்கே இன்னா கூட்டம் நடந்தாலும், மகாநாடு போட்டாலும் ஓடிப்பிடுவான், தன்னோட 'ஒண்ணரையணா' வியாபாரத்தைக்கூட விட்டுப்பிட்டு! அடுத்த நாள் வந்து, அங்கே கேட்ட பேச்சையெல்லாம் அப்படியே, அதே குரலில் என்கிட்ட பேசிக் காட்டுவான். எனக்கு ஒரே சிரிப்பாயிருக்கும். 'போடாங்க, சோதா'ன்னு அடிச்சு விரட்டிப்பிடுவேன். அப்புறமா அவன் அந்தப் பேச்சாளருங்க மாதிரியே தலை

வாரிக்கிறது. வேட்டி ஜிப்பா மப்ளர் போட்டுக்கிறது. வாயைக் கோணறது. மூக்கைச் சொறியறது. நடக்கிறது, சிரிக்கிறது எல்லாம் அப்படியே பண்ணிக்குவான். அதுக்கப்புறம் கொஞ்சங் கொஞ்சமா ஒவ்வொரு கட்சிக்காரங்களையும் சிநேகம் பிடிச்சுக்கிட்டு அவங்க பின்னாடி சுத்த ஆரம்பிச்சான். அது இன்னாத்துக்குத் தெரியுமா? எந்தக் கட்சியிலே பூந்தா காசு பண்ணலாம்னு நோட்டம் பார்க்கிறதுக்குத்தான்!..... ஒரு நாள் ராத்திரி ஊரைச் சுத்திப்பிட்டு ராயபுரம் ராபின்சன் பார்க் பக்கமா வந்துக்கிட்டு இருந்தேன். அங்கே ஒரு பொதுக்கூட்டம். 'தலைவரவர்களே, தாய்மார்களே, தோழர்களே, முதற்கண் என் வணக்கம்' என்ற குரல் கேட்டு, 'இன்னடாது, எங்கேயோ கேட்ட குரல் மாதிரி இருக்குதே'ன்னு கொஞ்சம் நின்னேன். பார்த்தா, நம்ம 'எதை எடுத்தாலும் ஒண்ணரையணா'பையன் மைக்கைப் பிடிச்சுக்கிட்டுப் பேசறான்! ஆங் பட்டா, எனக்கு ஒரே 'சுந்த்'தாகிப் போச்சு! அண்ணையிலிருந்து அவர் தலைவராகிப்பிட்டாரு; நான் பொதுஜனமாகிப் பிட்டேன்!........''

தம்பையாவுக்கு மீண்டும் சிரிப்புப் பொங்கிக்கொண்டு வந்து விட்டது. தலையைச் சுழற்றிச் சுழற்றிச் சிரிக்க ஆரம்பித்து விட்டான்.

இந்த விவரங்களையெல்லாம் ஏற்கனவே அறிந்திருந்த நச்சிக்கு உள்ளூறச் சலிப்பேற்பட்டாலும் அதை வெளியே காட்டிக் கொள்ளாமல் உரக்கச் சிரித்தவாறு, ''ஆ.... படா தமாஷா இருக்குது வாத்தியாரே, கதை!..... அப்புறம் இன்னா, சொல்லு!'' என்று ஊக்கினான்.

''கேட்கிறயாடா, கேளு தொரை!'' என்று பேச்சை ஆரம்பித்த தம்பையாவின் முகம் சட்டென்று கறுத்தது. ''ஆமா, நீ கேட்ட விஷயம் வேறே இல்லே?.... நான் இன்னான்னமோ சொல்லிக்கிட்டுப் போறேன்; நீயும் கம்முன்னு கேட்டுக்கிட்டு இருக்கிறயாடா, சோமாறி!'' என்று நச்சியை அடிப்பதற்காகக் கையை ஓங்கியவன் ஏதோ சுளுக்குப் பிடித்துக் கொண்டாற் போல வெடுக்கென்று இழுத்துக்கொண்டு, ''சரி; சொல்றேன், கேளு!'' என்ற ஓர் அதட்டலுடன் தொடர்ந்தான்: ''எதை எடுத்தாலும் ஒண்ணரையணா வியாபாரத்திலே அப்படி இன்னா வரும்படி வந்துடும்? மருதமுத்துவின் குடும்பம் ரொம்பக் கஷ்ட நிலையிலே இருந்துச்சு. குடும்பம்னா இன்னா? அவன் பாச்லர்; ஆத்தாக்காரி ஒருத்தி, அக்கா ஒருத்தி — அவ்வளவுதான். அந்த ரெண்டு பேருக்குமே சோறு போட முடியாமல் திண்டாடினான். ஆனாலும் அந்தப் பொண்ணு— அதான், அவனோட அக்காக்காரி — எசெல்சி படிச்சுக்கிட்டு இருந்தாள். பையன் நம்ம தோஸ்து இல்லையா? எப்பவாச்சும் ஒண்ணுலே ரெண்டுலே அவன்கூட வீட்டுக்குப் போவேன். போவேனா?.... அப்படிப் போய்க்கிட்டு இருந்தப்ப, பார்த்துப்பிட்டேன் ஒரு நாள்! யாரை? அந்தப் பொண்ணை!....ஆங், பொண்ணா அது? ரதிடா, ரதி! சும்மா தங்கப்பழம் மாதிரி தகதகன்னு இருப்பாள்! பட்டா, அண்ணைக்கே அவள் மேலே ஒரு கண்ணு வைச்சுட்டேன்! நான் மட்டுமா? அந்தப் பொண்ணுகூடத்தான் நம்பகிட்ட ஒரு 'லைன்' ஆயிடுச்சு! அப்புறம் இன்னா? லவ்வுதான்!......''

உற்சாகத்துடன் தலையைச் சுழற்றிக் கடகடவெனச் சிரித்தான் தம்பையா. உடனே அவனுக்குத் தான் இதுவரையில் சொல்லி வந்தது மறந்து போயிற்று. ''ஏண்டா, டாய்!...... இப்ப நான் இன்னா சொன்னேன்?'' என்று துவண்டு தொங்கிய தலையைத் தூக்கிக் கேட்டான்.

''.......அந்தப் பொண்ணுகூட உன்கிட்ட ஒரு 'லைன்' ஆயிடுச்சு!...... அப்புறம் இன்னா, சொல்லு வாத்தியாரே?'' என்று அறுந்து போன பேச்சின் முனையை எடுத்துக் கொடுத்தான் நச்சி.

''ஆமாம்......'' என்று அதைப் 'பிடித்து'க்கொண்ட தம்பையா தொடர்ந்து சொன்னான்: ''அதுக்கு முன்னாடி நான்

கடிகாரம் எதற்கு?

பெரிய நாதசுர வித்துவான் ஒருவரை அவரது நண்பர் கேட்டார்: ''இவ்வளவு பெரிய வித்துவானாக இருக்கிறீர்கள்; வீட்டிலே ஒரு கடிகாரம் கூட வைத்துக் கொள்ளவில்லையே?.....இராத்திரியிலே மணி தெரிய வேண்டுமென்றால் என்ன பண்ணுகிறீர்கள்..?''



''இதென்ன பிரமாதம்!.... நம்ப வாத்தியத்தை எடுத்து ஒரு தடவை ஊதினால் 'எவண்டா அவன் ராத்திரி ஒருமணி வேளைக்கு ஊதறவன்?'ன்னு அக்கம் பக்கத்திலே இருக்கிறவங்க மணியைச் சொல்லிட்டுப் போறாங்க..!'' என்று பதிலளித்தார் அவ்வித்வான்.

இன்னா, பொண்ணுகளையே பார்த்து இல்லாதவனா? அதான் கிடையாது. ஆடாத ஆட்டமெல்லாம் ஆடிக்கிட்டு இருந்தவன்தான். ஆனால், அந்தப் பொண்ணைப் பார்த்தப்புறம் — அவளைப் பார்த்த கண்ணாலே — வேற எந்தப் பொண்ணையும் பார்க்க எனக்குப் பிடிக்காமப் போயிடுச்சு. அப்படி என்னை அவள் கட்டிப்போட்டு விட்டாள். என் அம்மாக்காரி பேச்சையே காதில் வாங்காமல் இருந்தவன், அவள் சொல்றதையெல்லாம் கேட்டுக் கொஞ்ச நேரத்துக்காவது அதுபடி நடக்க ஆரம்பிச்சுட்டேன். இன்னா சேஞ்ச் பார்த்தியா?.... லவ்வுன்னா அப்படித்தான் ஆவும்போல இருக்குது!.... ஏண்டா, உனக்கு இதுபத்தி ஏதாச்சும் தெரியுமா?''

''தெரியாது, வாத்தியாரே! நீ சொல்லு!'' என்று சிரித்தான் நச்சி.

''ஆங், படா கில்லாடியாச்சே நீ!....சரி; அது போகட்டும். இப்ப நான் இன்னா சொன்னேன்?..... ஆமாம்; அந்தப் பொண்ணு உஸ்கூலுக்குப் போவும்போது, வரும்போதெல்லாம் வழியிலே மீட் பண்ணிப் பேசுவேன். ஓட்டலுக்கு நாஸ்தா பண்ணக்

கூட்டிக்கிட்டுப் போவேன். சினிமா, பீச்சு, பார்க் இங்கெல்லாம் மட்டும் அழைச்சுக் கிட்டுப் போறதில்லே. அது எனக்குப் பிடிக்காது; அவளுக்கும் பிடிக்கிறதில்லே. கொஞ்ச நாளைக்கப்புறம் டேரிங்கா வீட்டுக்கே போய் மீட் பண்ண ஆரம்பிச்சுட்டேன். பையனுக்கு விஷயம் தெரிஞ்சு போச்சு. யாருக்கு? மருதமுத்துவுக்கு! ஆனால், அப்ப அவன் அதைக் கண்டுக்கலே. ஒன்னும் தெரியாத மாதிரி போயிடுவான். கதை இப்படியே எத்தினி நாளுக்குப் போவும்? கொஞ்சம் முத்த ஆரம்பிச்சுது. அதுக்குள்ளாற மருதமுத்துவும் முத்திப் போயிட்டான். அதாவது, அவன் தலைவர் ஆகிட்டான்! கையிலே கொஞ்சம் காசு கனத்துப் போச்சு. என்னை 'இன்னா தம்பையா'ன்னு ஒரு ராகம் போட்டுப் பேர் சொல்லிக் கூப்பிடத் தொடங்கிப்பிட்டான். நான் மட்டும், 'ஏண்டா மச்சான்'னுதான் தோள் மேலே கை போடுவேன். அப்ப எனக்கு அவன் மச்சான்தானே? ஒருநாள் அந்தப் பொண்ணு-



மரியாதைக்குரியவர்!

வீட்டுக்கு வந்திருந்த விருந்தாளி வீட்டுச் சொந்தக்காரரிடம் கேட்டார்: ''ஹாலில் அவ்வளவு பெரிதாக மாட்டியிருக்கிறீர்களே, அது யாருடைய படம்?...''

''அதுவா? .....பதினைந்து வருடங்களுக்கு முன்னால் நம் வீட்டுக்கு வந்த விருந்தாளி ஒருத்தருடைய படம் அது..''

''படம் மாட்டும்படி அப்படி அவர் என்ன செய்தார்?...''

''அப்புறம் வரவே இல்லை!'' -எஸ். வி.

ஆமாம்; அவள் பேரு இன்னான்னு சொல்லலையே?.......'' என்று கேட்டுப் பேச்சை நிறுத்திய தம்பையா, சிறிது நேரம் மௌனமாயிருந்துவிட்டுத் தணிந்த குரலில், ''சிவகாமி......'' என்றான் ஒருவிதப் பய பக்தியோடு. மறுகணம், அவன் கண்கள் கலங்கிக் குளமாயின.

தம்பையா இரவு நேரங்களில் தனிமையிலே இருக்கும்போதெல்லாம் இந்தப் பெயரைத் தனக்குள் முணுமுணுத்துக் கொள்வதைப் பல முறை கேட்டிருந்த நச்சிக்கு அதன் காரணம் இப்போதுதான் விளங்கியது.

''இப்ப நான் இன்னாடா சொன்னேன்?... ஆமாம்....'' என்று பேச்சை நினைவுக்குக் கொண்டு வந்து ஆரம்பித்தான் தம்பையா: ''அந்தப் பொண்ணு ஒருநாள் என்கிட்டே வந்து, மாலை மாலையா கண்ணீர் வடிச்சாள். இன்னும்மேன்னு கேட்டேன். அவளோட தம்பிக்காரன் மருதமுத்து அவளைக் கொடுமைப்படுத்தறான்னு சொன்னாள். எதுக்கு? என்கூட அவள் பேச்சுவார்த்தை வைச்சுக்கிறது அவனுக்குப் பிடிக்கலையாம். நான் படிக்காதவனாம், பொறுக்கியாம், மொரடனாம், ரவுடியாம், ஜெயிலுக்குப் போனவனாம்- இதையெல்லாம் சொல்லி அவளைப் பயமுறுத்தினானாம். அவன் சொல்றது மெய்தான்னு நான் ஒப்புத்துக்கிட்டேன். அவளுக்கும் இதெல்லாம் தெரிஞ்ச விஷயம்தான். 'இதுக்கு இன்னா பண்ணப் போறேன்'னு அவளைக் கேட்டேன். 'என்னைக் கண்ணாலம் பண்ணிக்கோ'ன்னு சொன்னாள். அண்ணைக்கே மருதமுத்துவைப் பார்த்து, 'டேய், உன் அக்காவை எனக்குக் கட்டிக் கொடுடா'ன்னு கேட்டுப்பிட்டேன். 'அது ஒன்னு மட்டும் நடக்காது'ன்னான். 'ஏண்டா'ன்னேன். 'அது உனக்கே தெரியும்'னு சொல்லிப்பிட்டுப் போயிட்டான். அப்புறம் நாலைஞ்சு தபா அவனைப் பார்த்து, என் குணம் போக்கு எல்லாத்தையும் மறந்துட்டு, அவன் காலிலே விழுந்து கெஞ்சாத குறையாக் கேட்டேன். அப்பவும் முடியாதுன்னுட்டான். 'சரிதான் மச்சான்'னு மரியாதையா வந்துட்டேன். மக்கா நான் ராத்திரி!...... ஆமாம்; உனக்குப் பிருதிவிராஜன் கதை தெரியுமாடா?''

''தெரியும், வாத்தியாரே! சினிமாவிலே பார்த்திருக்கிறேன்'' என்று உற்சாகமாகத் தலையாட்டிய நச்சி அந்தக் கதையையே சொல்ல ஆரம்பித்து விட்டான்: ''பிருதிவிராசனுக்கும் சம்யுக்தைக்கும் ஒரு தோட்டத்திலே லவ் ஆய்ப் போச்சு. சும்மா ஜமாவா ரேயட் பாடிக்கிட்டு, ஓடிப் புடிச்சு, கட்டிப் புரண்டு, கீயே உயுந்து எயிந்து லவ் பண்றாங்க. பொண்ணோட அப்பன்காரன் இதைப் பார்த்துப்பிடறான். பிருதிவிராசனுக்கு அவன் எனிமி! இன்னா பண்ணுவான்? கம்முன்னு போயி சுயம்பரத்துக்கு நாள் வைச்சுப்பிட்டான். ஐம்பத்தாறு தேசத்து ராசாக்களும் மாப்பிள்ளையா வர்றாங்க. பிருதிவிராசனை அவமானப் படுத்தணும்னு அவனைப் போலவே ஒரு சிலை செய்ஞ்சு அரமனை வாசல்லே காவல்காரன் மாதிரி வைக்கிறான் எனிமி ராசா. சுயம்பரம் ஆரம்பமாவுது. ராசகுமாரி சம்யுக்தை பூமாலையும் கையுமா மண்டபத்துக்கு வந்து, அங்கே ஜமுத்தாவா உட்கார்ந்துக்கிட்டு இருந்த ராச குமாரன்களையெல்லாம் ஒவ்வொருத்தரா செலக்ட் பண்ணிப் பார்த்துக்கிட்டே போறான். அவளுக்கு அவன்களைப் புடிக்குமா?...இந்த இடத்திலே கேமரா படா கமால் வேலையெல்லாம் காட்டிச்சு வாத்தியாரே! ஸோலோ மியூஸிக் வேறே!..... அப்புறம் இன்னா?... அந்தப் பொண்ணு அழுதுகிட்டே போயி பிருதிவிராசன் சிலைக்கு மாலை போட்டுட்டது. அடங்க, இஸ்கி! அது இன்னா நிசமான சிலையா? பிருதிவிராசனே ஒரு கமாலா அங்கே வந்து அப்படி நின்னுக்கிட்டு இருக்கிறான்!...... ஆங் பட்டா, அடுத்த நிமிசம் கபால்னு அந்த ராசகுமாரியைத் தூக்கிக் குதிரை மேலே வைச்சுக்கிட்டுப் பிடிச்சான் சவாரி! யாரு இன்னா பண்ண முடியும்? பிருதிவிராசன் சம்யுக்தையைக் கிளப்பிக்கிட்டு ஓடியேபிடறான்!.....''

''அதே கதைதாண்டா! அண்ணைக்கு ராத்திரியே அந்தப் பொண்ணு சிவகாமியைத் தட்டிக்கிட்டுப் போயிட்டேன்!'' என்று சிரித்தான் தம்பையா. (தொடரும்)


உங்கள் குழந்தையின் ஆரோக்கிய வளர்ச்சிக்கு,
அமுல் ஒரு சிறந்த சமவிகித உணவு.
அமுலில் நிறைந்துள்ள சத்துக்கள்: புரோடீன்–உடலில் உள்ள திசுக்களின் வளர்ச்சிக்கு. கார்போ ஹைட்ரேட் மற்றும் கொழுப்பு – சக்திக்கு, எடை கூடுவதற்கு. கேல்ஷியம் மற்றும் பாஸ்பரஸ் – பற்களின் உறுதிக்கு. எலும்புகளின் வலிமைக்கு. இரும்பு – தூய்மையான இரத்தத்திற்கு. இரத்தச் சோகையைத் தடுக்க. வைட்டமின் ஏ–பழுதற்ற பார்வைக்கு. தோலின் மிருதுத்தன்மைக்கு. வைட்டமின் பி1 – நரம்புகள் உறுதியுடனிருக்க. மார்புத் தசைகளைப் பலப்படுத்த. வைட்டமின் பி2– வாய் தூய்மையுடன் ஆரோக்கியமாக இருக்க. வைட்டமின் பி 6–தசை நார்கள் இளைப்பாறிக்கொள்ள. வைட்டமின் சி–தொத்து நோய் வாராமல் தடுக்க. சொறி சிரங்கு பிடிக்காமலிருக்க. வைட்டமின் டி-பக்கவாத ரோகம் வாராமல் தடுக்க, எலும்புகளும் பற்களும் உறுதியுடன் ஆரோக்கியமாக இருக்க.
நியசினமைடு–ஜீரணத்திற்கு. உங்கள் குழந்தைக்கு மிகச் சிறந்தது.
Amul
ISI
ASP/ASF-40 TAM

ஜோதி நடனம்

''தீக்குல்தான் டைம்ஸ்'' பத்திரிகையின் சென்னைப் பிரதிநிதி திரு கே. எஸ். ராமானுஜத்தின் புதல்வி குமாரி ஜோதியின் பரதநாட்டிய அரங்கேற்றம், மிக விமரிசையாகவும் வெற்றிகரமாகவும், ஏராளமான ரசிகர்கள் முன்னிலையில் ரசிகரஞ்சினி சபை அரங்கில் சமீபத்தில் நடைபெற்றது.

சாதாரணமாகச் சிறுமியர்களின் பரத நாட்டிய அரங்கேற்றங்களில் முற்பாதி மட்டுமே சிறப்பாக அமைந்திருக்கும். பயிற்சியின் வலிமையினாலும், அடவுகளையும் ஆட்டங்களையுமே பிரதானமாகக் கொண்டுள்ள சப்தம், வர்ணம் போன்ற தானப்பிரதான அம்சங்கள் அடங்கியிருப்பதாலும் இந் நிகழ்ச்சிகளைச் சிறுமிகள் மேடையில் ஆடிக்காட்டும் போது சலிப்பு ஏற்படாது ரசித்து மகிழலாம். குமாரி ஜோதியின் நாட்டியத்தில் இந்த அம்சம் மிகவும் வெற்றிகரமாக அமைந்திருந்தது. அதே அளவுக்கு இரண்டாவது பகுதி நிகழ்ச்சிகளிலும் குமாரி ஜோதியின் நடனங்கள் மெருகு பெற்றிருந்தது விசேஷமாகக் குறிப்பிடத்தக்கது. கிருஷ்ண கர்ணாமிர்த சுலோகம், பதங்கள், ஜாவளிகள் போன்ற உருப்படிகளைச் சிறுமிகள் பாவ எழிலுடன் நிருவகிப்பது சற்றுக் கடினம்தான். என்றாலும் குமாரி ஜோதியின் நடனத்தில் அபிநயப்பகுதியும் பூரணமாக ரசிக்கத் தக்கதாயிருந்ததைப் பாராட்டிச் சொல்ல வேண்டும். உயர் குடும்பத்தைச் சேர்ந்தவராதலால், இக்கலையைக் கலைக்காகவே வளர்க்கக் குமாரி ஜோதிக்கு வாய்ப்புகள் நிரம்ப இருக்கின்றன. அவற்றை மேன்மேலும் பயன்படுத்திக் கொள்வார் என்று எதிர்பார்க்கலாம்.

அரங்கேற்றத்துக்கு அமெரிக்க கான்ஸல் ஜெனரல் டாக்டர் ஆல்பெர்ட் பார்க்களிலும் அவரது மனைவியாரும் வந்திருந்து குமாரி ஜோதியைப் பாராட்டினார்கள்.



திருவருட்செல்வர்



'அரிது அரிது மானிடராய்ப் பிறத்தல் அரிது' என்பது போல, நாடகம் ஒன்று எழுதி அது நல்ல முறையிலே மேடையேறிப் புகழ் பெறுவது என்பதும் அரிதுதான். அதுவும் பக்தி செறிந்த நாடகத்தை எழுதிப் பெயர் எடுப்பது என்பது இன்னும் அரிது. எல்லாவற்றைக் காட்டிலும் சிறு குழந்தைகளை மேடைக் கூச்சமின்றிப் பயிற்றுவித்துப் பெயரையும் புகழையும் பெறுவது அரிதிலும் அரிதான காரியம்.

அந்தக் காரியத்தைத் திருவல்லிக்கேணி பாரதி கலாசாலையினர் நிறம்படச் சாதிக்க முயன்றிருக்கின்றனர்.

பெரியாழ்வாரையும் ஆண்டாளையும் நாடகப் பாத்திரமாக்கி வசனங்கள் எழுதியுள்ள ஸ்ரீ எச். வைத்தியநாதன், ஜானுமந்தராவ் இருவரையும் பாராட்ட வேண்டும். பக்திப் பாசுரங்களும், சிறுவர் சிறுமியரின் நடிப்பும் பல இடங்களில் நாட்டிய நாடகமென மனத்தை ஈர்க்கின்றன.

பெரியாழ்வாராக வரும் ஸ்ரீ எச். வைத்தியநாதனும், ஆண்டாளாக வரும் மாஸ்டர் வி. ஸ்ரீதரும் பாத்திரத்தின் தரமறிந்து உணர்ச்சியுடன் நடித்திருக்கிறார்கள். ஸ்ரீதரின் அசைந்தாடும் நடையைத் திருத்திவிட்டால் சிறந்த நடிகையாகவே திகழ்வான். நாராயணனாக வரும் மாஸ்டர் நடராசன் தனக்குக் கொடுத்திருக்கும் பாத்திரத்தை உணர்ந்து சக்கைப் போடு போட்டுச் சிரிக்க வைக்கிறான். ஆனால் நகைச்சுவையின் தரம் உயர்ந்ததாக இல்லை. பல பாத்திரங்களை நீக்கி, சொல்லப்போனால் கண்ணன் பாத்திரத்தையே கூட நீக்கி,-நல்ல கிருஷ்ணர் படம் ஒன்றை வைத்தே, நாடகத்தைச் சமைத்திருந்தால் நன்றாயிருக்கும். மேடையேறி மெருகு பெற்று நல்ல பக்திச் சுவை நிறைந்த நாடகம் என்று பெயர் பெறும்.



மோட்டார் சுந்தரம் பிள்ளை

எட்டுக் குழந்தைகளுக்குத் தந்தை; அவருக்குப் பகிரங்கமாக ஒரு மனைவி, மறைமுகமாக ஒரு மனைவி. இவர்தான் பழங்காலத்துக் காரில் பவனி வரும் மோட்டார் சுந்தரம் பிள்ளை!

நடிகர் திலகம் சிவாஜி கணேசனின் நடிப்புத் திறமையைப் பல கோணங்களில் காண முடிகிறது — தம்மைப் பற்றிப் பேசப்படும் அவதூறான வார்த்தைகளுக்குப் பதில் அளிக்கும் பாணி ஒன்று போதும். குழந்தைகளோடு கொஞ்சி விளையாடும்போது முதிர்ந்த தந்தைப் பாசத்தை எப்படித்தான் அவரால் வெளிப்படுத்த முடிகிறதோ!

சௌகார் ஜானகி ரொம்ப ரொம்ப அமைதியாகப் பதற்றம் சிறிதும் காட்டாமல் நடித்திருக்கும் பாங்கு பிரமாதம்! தன் கணவனுக்கு இன்னொரு மனைவி இருக்கிறாள் என்னும் உண்மை அவன் வாய்மொழியாகவே உறுதிப்பட்டு விடும்போது மனைவி துடிக்கும் துடிப்பில் சௌகார் ஜானகியின் நடிப்பு தலை நிமிர்ந்து நிற்கிறது.

ஸ்ரீ. ரவிச்சந்தர் — ஜயலலிதா காதல் லீலைகள், ஜயலலிதாவின் நடனக் காட்சி இப்படியெல்லாம் என்னென்னவோ வேதனைகள் எல்லாம் வந்து படத்தைக் கனிசமாக நீட்டியிருக்கின்றன. படத்தின் முற்பகுதி தளர் நடை போடுகிறது. இடைவேளைக்குப் பிறகுதான் திரைக் கதையின் திரும்பு முனை, படத்தின் 'டெம்போ' எல்லாம் சுறுசுறுப்பாக இயங்கத் தொடங்குகின்றன. மோட்டார் சுந்தரம் பிள்ளையின் இரண்டாவது மனைவியின் மகள் பானு வந்த பிறகுதான் திரைக்கதை திடுக்கிட்டு விழித்துக் கொள்கிறது! நாகேஷ் — குமாரி சச்சு காமிக் காட்சிகள் 'தேவ'வின் ''துப்பறியும் சாம்பு''வை நினைவுபடுத்துகின்றன.

''மனமே முருகனின் மயில் வாகனம்'' என்ற கொத்தமங்கலம் சுப்புவின் பாட்டு அருமையாக இருக்கிறது.

மணிமாலா பிற்பகுதியில் சிறிது நேரமே வந்தாலும் நன்றாய் நடித்திருக்கிறார். டி. எஸ். முத்தையா தம் திறமையை நோயாளி வண்டியில் இருந்தபடியே வெளிப்படுத்திக் கண் கலங்க வைக்கிறார்.

''கிரஹஸ்தி'' என்ற ஹிந்திப் படத்தின் தமிழாக்கம்தான் என்றாலும் ஜெமினியின் தயாரிப்பு என்று பெருமிதம் கொள்ளும் விதத்தில் படம் கலையம்சங்களோடு விளங்குகிறது.





இந்திய ராணுவ சம்பிரதாயங்கள்

தமிலன்

ஒரே ஒரு ஊரில் ஒரே ஒரு மாஜி ராணுவ வீரர் இருந்தார். அவர் ராணுவத்திலிருந்து ஓய்வு எடுத்துக்கொண்ட பிறகு பால் வியாபாரம் செய்து வந்தார். ஒரு நாள் அவர் தமது தலையில் ஒரு பெரிய பாற்குடத்தை வைத்துக் கொண்டு அதைத் தமது இரண்டு கைகளாலும் பிடித்துக் கொண்டு 'டக் டக்' என்று 'மார்ச்' செய்வதுபோல் வீதியில் நடந்து சென்று கொண்டிருந்தார். அப்போது ஒரு விஷமக்காரப் பையன் அவர் பின்னால் சத்தப்படாமல் சென்று 'ஆர்டர் ஆர்ம்ஸ்' என்று தொண்டை கிழிய ஒரு ராணுவ சார்ஜெண்டைப் போல் உரக்கக் கத்தினான்.

மறுகணம் பாற்காரரது கால்கள் மேலே நடந்து செல்லாமல் நின்றன. பாதங்கள் இரண்டும் 'டக்' என்று சேர்ந்துகொண்டன. அவரது வலது கை கீழே தொங்கிற்று. இடது கை வலது கையின் பக்கம் போயிற்று; உடல் விரைப்பாக நின்றது. தலை நிமிர்ந்து, கண்கள் எதிரே நோக்கியிருந்தன. தலைமீது அநாதையாய் விடப்பட்ட பால்குடம், ஒரு பக்கமாகச் சாயவே, அதைப் பூமாதேவி ஆகர்ஷண சக்தியால் தன்பால் இழுத்துக்கொண்டாள்.

ராணுவ வீரர்களின் பழக்க வழக்கங்கள் அவர்கள் இரத்தத்தில் ஊறிப்போய் விடுகின்றன என்பதைக் குறிக்கும் பழைய துக்கடாக் கதை இது.

பழக்க வழக்கங்கள், சம்பிரதாயங்கள், சடங்குகள், மூட நம்பிக்கைகள் எனப் பட்டவையெல்லாம் சாதாரணமாக மனிதர்களின் வாழ்க்கைப் போக்கை உருவாக்கி விடும். இது ராணுவ சம்பந்தப்பட்டவர்கள் விஷயத்தில் முற்றிலும் உண்மை. அந்தப் பழக்க வழக்கங்கள் முதலியவை தொடர்ந்து பின்பற்றப்பட்டு வந்ததன் பயனாகக் காலப் போக்கில், அவை சட்டங்கள், விதிகளின் அந்தஸ்தை அடைந்து விடுகின்றன. அவை எழுதி வைக்கப்படாத சட்டங்கள், தங்கள் மத சம்பிரதாயங்களை மிகக் கடுமையாகப் பின்பற்றும் வைதிக சிரேஷ்டர்கள் கூட ஒரொரு சமயம் அவற்றைப் புறக்கணிக்கக் கூடும். ஆனால் ராணுவத்தினர் அப்படிச் செய்ய மாட்டார்கள்; அப்படிச் செய்யக் கூடாது. செய்தால் இக லோகத்திலேயே அறுபது நாழிகைக்குள் அதற்கான பிராயச் சித்தம் செய்யும்படி நேரும்!

ராணுவப் பழக்க வழக்கங்கள், உலக ராணுவத்தின் பரம்பரைச் சொத்து. பல நூற்றாண்டுகள் காலமாகப் பின்பற்றப்பட்டு வந்தவை. இன்று நமது ராணுவம் பின்பற்றி வருபவை, பிரிட்டிஷ் ராணுவ வழியில் வந்தவை. அவற்றில் நமது தேசப் பண்பாட்டுக்கு ஒத்து வராதவற்றைத் தவிர மற்றவற்றை யெல்லாம் நாம் சுவீகரித்துக் கொண்டிருக்கிறோம்.


ராணுவத்தில் மரியாதை காண்பிப்பதற்காகக் கையாளப்படும் முறைகள் எல்லாம் அநேகமாக, மனிதன், மனிதனை நம்பாததன் பயனாகத் தோன்றிய பண்டைய பழக்க வழக்கங்களின் அடையாளங்களே.

பண்டைய கால வீரர்கள் ஒருவரையொருவர் சந்திக்கும்போது, 'நான் உன்னைத் தாக்க மாட்டேன். நானும் நீயும் நண்பர்கள்' என்று வாயால் சொல்லிக் கொள்வதில்லை. அதற்குப் பதிலாகத் தங்கள் உள்ளங் கையை ஒருவருக்கொருவர் காண்பித்துக் கொள்வார்கள். 'என் கையில் ஆயுதம் எதுவுமில்லை, பார்த்துக் கொள்ளுங்கள்!' என்று தெரிவித்துக் கொள்வதாக அர்த்தம். இதிலிருந்துதான் நெற்றிக்கு மேலே உள்ளங் கையைக் காண்பிக்கும் 'ஸல்யூட்' செய்யும் வழக்கம் ஏற்பட்டது.

பண்டைய காலத்தில், வாள் தரித்த வீரர்கள் ஒருவரையொருவர் சந்திக்கும்போது தாங்கள் விரோதிகளல்லர், ஒருவரையொருவர் நம்பலாம் என்று தெரிவித்துக் கொள்வதற்காகத் தங்கள் தங்கள் வாளைக் கீழே சாய்த்துப் பிடித்துக் கொண்டிருப்பார்களாம். தற்காலத்தில் 'பிரஸண்ட் ஆர்ம்ஸ்' என்னும்போது, வீரர்கள் தங்கள் துப்பாக்கியை ஒரு பக்கமாக, அது உடனே உபயோகிக்கப்பட முடியாத நிலைமையில் வைத்துக் கொள்வது அந்தப் பழைய வழக்கத்தையொட்டித்தான்.

முன் காலத்தில் ஒரு தேசத்திலிருந்து அரசர்கள் அல்லது மிகப் பெரிய அதிகாரிகள் மற்றொரு தேசத்துக்கு விஜயம் செய்யும்போது பீரங்கிகளிலிருந்து 18, 21 என்று குண்டுகள் போடுவது வழக்கம். இப்படிச் செய்வதற்கு, 'பீரங்கியிலிருந்து குண்டுகளையெல்லாம் காலி செய்து விட்டோம். ஆகையால் உடனேயே குண்டுகளை வீசித் தாக்குவதற்கில்லை. எனவே, எங்களை நம்பலாம்' என்று அர்த்தமாம். இந்த வழக்கத்தைப் பின்பற்றித்தான் இப்போது அயல்நாட்டு ஜனாதிபதிகள்,







மன்னர்கள் முதலியவர்கள் வரும்போது குண்டுகள் வெடிப்பது சம்பிரதாயமாகி விட்டது.

இந்தக் குண்டுகள் பொழிவதில் ஒரு வேடிக்கை. இவை அநேகமாக 3, 6, 9, 12, 18, 21 இப்படி மூன்று மூன்றாகவோ ஒற்றைப்படையாகவோ இருக்கும். 'மூன்று' என்ற இலக்கம் தீமை விளைக்கும் பைசாசங்களை ஓட்டிவிடும் என்று பண்டைய மக்கள் நம்பி வந்தனர்.

[illegible] கடற்படை, விமானப் படை இவை மரியாதை செய்யும் முறைகளிலும் சந்தேகத்தைப் போக்கும் அம்சமே அடிப்படையானதாக அமைந்திருக்கிறது. கப்பலுக்குள் யாரும் பயமின்றி வரலாம் என்பதைக் குறிப்பிடுவதற்காகப் பழைய காலத்தில் பாய்மரக் கப்பலின் பாயைக் கீழே தாழ்த்தி வைப்பார்களாம். இப்போது அதற்குப் பதிலாகக் கப்பல் கொடிகளைத் தாழ்த்துகிறார்கள். விமானம் ஸல்யூட் செய்யும் தளத்துக்கு நேரே கீழாகப் பறந்து செல்லும். தன்னை நம்பலாம்; என்று தெரிவித்துக் கொள்வதற்காக அது பீரங்கிகளால் சுலபமாகச் சுட்டு வீழ்த்தப்படக் கூடியபடி அத்தனை கீழே பறந்து செல்கிறது. டாங்கிகள் தங்கள் பீரங்கிகளின் வாய்களைத் தாழ்த்திச் செல்லும்.

ராணுவ வீரர்கள் தங்கள் மேலதிகாரிகளுக்கு அடங்கி நடக்க வேண்டியவர்கள் என்றாலும்கூட, அவர்கள்



போர்முனையில் வீரத்தில் அந்த அதிகாரிகளுக்குச் சரிசமமானவர்களே என்பதைக் குறிக்கும் ஒரு பழக்கம் உண்டு. பழைய காலத்தில் தோல்வியுற்ற வீரர்களும் அடிமைகளும், தலையைக் குனிந்து கொண்டுதான் நடந்து செல்லவேண்டும். முகமூடி கவசம் தரித்துள்ள வெற்றிவீரர்கள், அந்தக் கவசத்தை எடுத்துவிட்டு ஒருவரையொருவர் நேருக்கு நேர் பார்த்துக் கொள்வார்களாம். இந்த வழக்கத்தை யொட்டித்தான், இப்போது ராணுவ அணிவகுப்பு 'மார்ச்' செய்யும் போது வீரர்கள் வலது பக்கம் திரும்பி, அங்குள்ள மேலதிகாரிகளையோ தாங்கள் கௌரவிப்பவர்களையோ நேருக்கு நேர் பார்த்து விட்டுச் செல்கிறார்கள்.

சொக்கலிங்கம் என்பவரும், கணபதி என்பவரும் கூடப் படித்தவர்கள், அல்லது நெருங்கிய நண்பர்கள் அல்லது உறவினர்கள் என்றும், சொக்கலிங்கம் மேலதிகாரி என்றும் வைத்துக் கொள்ளுங்கள். கணபதி அவரைச் 'சொக்கு! என்னடா' என்று கூப்பிடுவது வழக்கமில்லை. முதுகில் தட்டிப் பேசவும் மாட்டார். இராணுவ உடையில் இருக்கும் போது 'ஸார்' போட்டுத்தான் பேச வேண்டும். சொக்கலிங்கமும் 'ஏண்டா, கணேசு' என்று அழைத்துக் கொண்டிருக்க மாட்டார். அந்தக் 'கணேசு' அங்கே ஒரு சுபேதார் மேஜர் அல்லது ஓர் அதிகாரி அவ்வளவுதான்.

ராணுவ சேவையில் ஈடுபட்டிருப்பவர்கள் யாரும் குடையை உபயோகிப்பதில்லை. மழை பெய்தால், ரப்பர் கோட் அணிந்து கொள்வார்கள். வெயிலுக்காக கறுப்புக் கண்ணாடிகளும் அணிந்து கொள்வதில்லை.

ராணுவ வீரர்களின் தினசரி வாழ்க்கை சம்பந்தமான அறிவிப்புக்கள் எல்லாம் அவர்களுக்குச் சங்கீத மூலமாகத் தெரிவிக்கப்படுகிறதென்று கூறலாம். பித்தளையினாலான எக்காளத்தில் ஒவ்வொரு குறிப்பிட்ட காரியத்துக்கும் சில குறிப்பிட்ட ஸ்வரங்களை வாசிப்பார்கள்.

விடியற்காலையில், வீரர்களை எழுப்புவதற்காக 'ரெவல்லி' என்ற 'நோட்டு' ஸ்வரம் வாசிப்பார்கள். இதை ராணுவ வீரர்களை எழுப்பும் 'அலாரம் கடிகாரம்' அல்லது 'திருப்பள்ளி எழுச்சி நோட்' என்று சொல்லலாம். பிறகு அணிவகுப்பில் சேர்வதற்கு வரும்படி செய்ய ஒரு 'நோட்'. அப்புறம் அணிவகுப்பிலிருந்து கலைந்து செல்வதற்காக மற்றொன்று, ஆஜர் சொல்வதற்கும், சாப்பிட வருவதற்கும், இரவில் கடைசியாக விளக்கு அணைப்பதற்கும் தனித் தனி 'வாசிப்பு' உண்டு.

First Post, Last Post என்ற இரண்டு அம்சங்களும் உண்டு. 'லாஸ்ட் போஸ்ட்' என்பது இரவு படுத்துக் கொள்ளச் சொல்ல வேண்டியதைப் பற்றிய வாசிப்பு. இப்போது இதை ஒரு வீரன் சவ அடக்கத்தின் போதும் வாசிக்கிறார்கள். நேருஜி காலமான போது கடைசிச் சடங்காக இந்த 'நோட்'டை வாசித்தார்கள்.

ராணுவ வாத்திய சங்கீத கோஷ்டி 'Abide with me' என்பது போன்ற புகழ் பெற்ற பழைய ஆங்கில இசைகளின் ஸ்வரங்களை இன்றும் வாசித்து வருகின்றன. 'தேசோன்கா ஸர்தாஜ் பாரத்', 'வீர் பாரத்', 'ஹிந்துஸ்தான் ஹமாரா' என்ற புதிய ராணுவ கீதங்கள் வாசித்து வரப்படுகின்றன.

ராணுவத்தில் நல்ல வாட்டசாட்டமாய்ப் பார்ப்பதற்கு லட்சணமாய் அழகான உடை உடுத்தி யிருப்பார்கள் ராஷ்டிரபதியின் மெய்காப்பாளர்கள். இவர்கள் குறைந்தது ஆறு அடி உயரமுள்ளவர்களாய் இருந்தாக வேண்டும். இவர்கள் ஏறிக் கொள்ளும் குதிரைகளின் உயரம் குறைந்தது ஐந்து அடி, மூன்று அங்குலம் இருக்க வேண்டும். அவற்றின் வர்ணம் சிவந்த பழுப்பானதாயிருக்க வேண்டும். உடலில் ஒரு வெள்ளைப் புள்ளி கூட இருக்கக் கூடாது.

ஒரு வீரன் இறந்தால் அவர் உடலைத் தேசியக் கொடியில் சுற்றி வைப்பார்கள். அப்படிச் செய்வது அவர் தேசப் பணியில் ஈடுபட்டு உயிர் துறந்ததைக் குறிப்பதாகும்.

ஒவ்வொரு ரெஜிமெண்டும் தான் போரில் மகத்தான வெற்றி பெற்ற தினத்தை வருடா வருடம் கொண்டாடுவது வழக்கம். காஷ்மீரில் ஸ்ரீநகருக்குச் சமீபத்தில் ஷெல்லா டாங் என்ற இடத்தில்தான் 7—11—1947ல் இந்தியத் துருப்புக்கள் பாகிஸ்தானித்

துருப்புக்களை விரட்டியடித்து வெற்றி கண்டன. காஷ்மீர் பள்ளத்தாக்கிலுள்ள துருப்புக்கள் இந்தத் தினத்தை இன்றும் கொண்டாடுகின்றன.

காஷ்மீர், லடாக் ஆகிய இரண்டு பகுதிகளையும் இணைக்கும் இடத்துக்கு ஸோஜிலா கணவாய் என்று பெயர். இது 11,580 அடி உயரத்தில் உள்ளது. அத்தனை உயரமான இடத்துக்கு டாங்குகளைக் கொண்டு சென்று அதை 1–11–1948ல் பிடித்த பெருமை ஒரு பஞ்சாப் ரெஜிமெண்டைச் சேர்ந்தது. அந்தப் படை ஒவ்வொரு நவம்பர் மாதம் முதல் தேதியன்றும் ஸோஜிலா தினத்தைக் கொண்டாடுகிறது. அடுத்த வருடம் நமது படைகள் சில 'பாட்டன் டாங்கிகள் சமாதி' தினத்தைக் கொண்டாடுமென்பது நிச்சயம்.

கடற்படைக்குச் சில பிரத்தியேகமான பழக்க வழக்கங்கள் உண்டு. அந்தப் படை வீரர்கள் தரைப் படை வீரர்களைப் போல் உள்ளங்கையை உயரே தூக்கிக் காண்பித்து ஸல்யூட் செய்வதில்லை. உள்ளங்கையை உட்பக்கமாக இருக்கும்படி வைத்துக் கொள்வார்கள். மாலுமிகளின் உள்ளங் கைகள் கடினமான உழைப்பு காரணமாய்ச் சொர

◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆

"இந்தக் காலத்திலே குழாய்த் தண்ணியை நம்ப முடியாது!"

"அதுக்காக ஒரு பசு மாட்டை வாங்கிட்டு ஒன்பது கிணறு தோண்டறதா?"

◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆

சொரப்பு ஏறி முரட்டுத்தனமாய்ப் பார்ப்பதற்குப் பயங்கரமாய் இருக்கக் கூடும். அவற்றைக் காண்பிக்க வேண்டாம் என்பதற்காக இந்த ஏற்பாடு !


ஒவ்வொரு கடற்படை வீரரும் கப்பலுக்குள் நுழையு முன்னர், 'க்வார்ட்டர் டெக்' என்ற மேல்தளத்தின் பின்பக்கப் பகுதிக்கு ஸல்யூட் செய்ய வேண்டும்.

கப்பலுக்குள் வரிசையாகச் செல்லும்போது பிரதம அதிகாரி கடைசியில் செல்வார்; ஆனால் வெளியே வரும்போது அவர் தான் முதலில் வருவார்.

கப்பல் உத்தியோகஸ்தர்களின் 'பந்தி' போஜனத்தின் ஆரம்பத்திலும், முடிவிலும் தேசத்தின் ராஷ்டிரபதிக்கு வாழ்த்துக் கூறி, (Toast) பானம் அருந்தும்போது எல்லோரும் உட்கார்ந்தவண்ணமே அப்படிச் செய்வது வழக்கம். ஆனால் தரைப் படையினர் நின்று கொண்டிருப்பார்கள். இந்த வேறுபாட்டுக்குக் காரணம் ஒரு பழைய வழக்கமாகும். முன் காலத்தில் கப்பல்களில் சாப்பிடுமிடம் அதிக உயரமானதாக இராது. எழுந்திருந்து நின்றால் மேல் தளத்தின் அடிப் பகுதி தலையில் இடிக்கும். அதற்காகத்தான் நிற்பதில்லை. ஆனால், அந்தப் பழைய வழக்கம் எல்லா வசதிகளும் உள்ள இன்றையக் கப்பல்களிலும் பின்பற்றப்பட்டு வருகிறது.

கடற்படையில், மற்றப் படையினரிடம் காணப்படாத ஒரு தனிப்பட்ட கொண்டாட்டம் உண்டு. இதற்குக் 'கோட்டைக் கடப்பது' (Crossing the Line) என்று பெயர். அதாவது கப்பல் பூமியின் மத்திய ரேகை எனப்படும் கற்பனைக் கோட்டைத் தாண்டுவதாகும். அப்போது கடல் தேவதையான நெப்டியூனும், அவரது தேவி ஆம்பிட்ரைட்டும் சிம்மாதனத்தில் கொலு வீற்றிருந்து நியாயம் வழங்கும் கோமாளி நாடகம் நடைபெறும். கடற்படையில் மிக அதிக 'ஸர்வீஸான'வர்கள் நெப்டியூனாகவும், பார்ப்பதற்கு வசீகரமாயுள்ள வாலிப மாலுமி அவரது மனைவியாகவும் வேஷம் தாங்கி நடிப்பார்கள்.

மேல்நாட்டுக் கடற்படையின் இந்தப் பழக்கம் நமது கடற்படையிலும் உண்டு. இந்தியக் கடற்படையில் நெப்டியூன் ஸ்தானத்தில் வருண பகவானை அமர்த்துகிறார்கள். ஆம்பிட்ரைட் ஸ்தானத்துக்கு 'வருணி' என்ற



ஒரு தேவதையை வருண பகவானின் கற்பனை மனைவியாக்கியிருக்கிறார்கள்.

இந்த வருண தேவன் தர்பாரில் தேசத்தின் தலைமை அதிகாரிகளான ராஷ்டிரபதி, பிரதம மந்திரி போன்றவர்கள் மீது குற்றம் சாட்டப்பட்டு அவர்கள் விசாரிக்கப்படுவர். ஒரு சமயம் இவ்விதம் நேருஜி விசாரிக்கப்பட்டுத் தண்டனை வழங்கப்பட்டார்!

இத்தகைய பல பழைய பழக்க வழக்கங்கள், சம்பிரதாயங்கள் ராணுவத்தினரிடையே ஒரு விதமான ஒற்றுமை மனப்பான்மையையும், சகோதர பாவத்தையும் தோன்றச் செய்கின்றன. இந்தியாவின் பல்வேறு ராஜ்யங்களில் உள்ள பல மொழிகள் பேசும், பலதரப்பட்ட மக்களிடம் ஒருமைப்பாடு என்பது எங்கேயாவது ஏற்பட்டிருக்கிறதென்றால் அது நமது ராணுவத்தில் தான். ஏன்; அந்த அம்சம் ராணுவத்தில் பரிமளித்துக் கொண்டிருக்கிறதென்றுகூடச் சொல்லலாம்.

அத்தியாயம் முப்பத்தொன்று

பாண்டியன் தூதுவன்

மண்ணாசை, பெண்ணாசை, பொன்னாசை என்ற மூவாசைகளும் பேராசைகளாக மாறும்போது அவற்றால் பாதிக்கப்படுகிறவர்கள் அத்தகைய ஆசைகளுக்கு உட்பட்டவர்களும், அவர்களைச் சூழ்ந்துள்ளவர்களும்தான். ஆனால் அரச குலத்தவருக்கு ஏற்படும் அதிகார ஆசை இருக்கிறதே, அதைவிடக் கொடுமையானவை என்று அந்த மூவாசைகளைக் கூடக் கூற முடியாது. வரலாற்று ஏடுகளில் பெருக்கெடுத்து ஓடியிருக்கும் இரத்த வெள்ளமெல்லாம் பெரும்பாலும் அந்த ஆசைகளின் துன்பக் கதைகளையே கூறுகின்றன. மக்கள் கூட்டத்தை வழி நடத்திச் செல்கிறவர்களிடம் ஏற்படும் அந்த ஆசை, கூட்டங் கூட்டமாக மக்கள் கொன்று குவிக்கப் படுவதற்கும் அதைத் தொடர்ந்து எத்தனையோ துன்பங்களுக்கும் காரணமாக இருந்திருக்கின்றன. வரலாறு தொடங்கிய காலத்திலிருந்து இன்று வரையிலும் அந்தப் பயங்கரமான பேராசை அரச குலத்தாரையும் அவர்களை நம்பி வாழும் மனிதக் கூட்டங்களையும் ஆட்டிப் படைத்துக் கொண்டு தான் வருகிறது.

நாகம நாயக்கரும் அரச குலத்தைச் சார்ந்தவர்தாமே? சாளுவ நரசிம்மரால் தூண்டிவிடப்பட்ட அந்த ஆசைக் கனலுக்கு நாகமரின் புத்திரபாசம் நெய் வார்க்கவே, அது அவரிடம் கொழுந்து விட்டு எரியத் தொடங்கியது.

பாண்டிய நாட்டைப் பகைவரிடமிருந்து மீட்க வந்தவரே அதைக் கைப்பற்றி ஆளத் தொடங்கியது கண்டு, நம்பிக்கை முழுவதையுமே இழந்து விட்டார் சந்திரசேகர பாண்டியர். திருவல்லப பாண்டியனுக்கும் அப்துலுக்கும் மட்டிலுமே சிறிதளவு நம்பிக்கை எஞ்சியிருந்தது. சக்கரவர்த்தி கிருஷ்ணதேவ ராயரோடு திருவல்லபன் நெருங்கிப் பழகாவிட்டாலும், அவருடைய தோற்றமும், பேச்சும், அவர் பழகிய முறையும் அவருடைய பண்புகளை அவனிடம் வெளிப்படுத்தியிருந்தன. சந்திரசேகர பாண்டியரை ஓர் ஓலை எழுதச் செய்து அதை இரகசியமாகச்





திருநகர்

அகிலன்

சக்கரவர்த்தியிடம் சேர்ப்பித்து மறுமொழி பெற்று வருமாறு அவன் அப்துலை விஜய நகரத்துக்கு அனுப்பியிருந்தான். விசுவ நாதன் நாகம நாயக்கரின் குமாரனாகையால் அவனுக்குக் கூடத் தெரியாமல் சக்கரவர்த்தியைச் சந்திக்கும்படி அவன் அப்துலுக்குக் கட்டளையிட்டிருந்தான்.

விஜயநகரத்துக்கு வந்து சேர்ந்த பிறகு தான் அப்துலுக்குத் தன்னுடைய பணி எவ்வளவு கடுமையானதென்று புலப்பட்டது. சக்கரவர்த்தியைச் சந்திக்கவே முடியாது என்ற அளவுக்கு அவனுக்குச் செய்தி கிடைத்தது. அமைச்சர் சாளுவ நரசிம்மரின் துணையோ விசுவநாதனின் துணையோ இல்லா விட்டால் அங்கிருந்து தோல்வியுடன் திரும்ப வேண்டியதுதான் என்ற நிலைக்கு அப்துல் வந்து விட்டான். அமைச்சர் சாளுவ நரசிம்மரைப் பற்றி அவனுக்கோ பாண்டி யர்களுக்கோ எவ்வித சந்தேகமும் ஏற்படா திருந்ததால், அவரை அவர் மாளிகையில் சென்று தனியே சந்தித்தான்.

அமைச்சர் அவனை இன்முகத்தோடு வர வேற்று உபசரித்துவிட்டு, ''ஏதும் முக்கியமான செய்தி உண்டா?'' என்று விசாரித்தார்.

அப்துல் தயங்கினான். செய்தியை அவன் வெளியிட விரும்பவில்லை; ஆனால் வெளி விடாமலும் இருக்க முடியவில்லை.

''பெரிய பாண்டியருக்கு மீண்டும் துன்பம் வந்திருக்கிறது. அதைப் பற்றிச் சக்கரவர்த்திகளிடம் நேரில் கூறி முறையிடுவதற்காக என்னை அனுப்பியிருக்கிறார்கள்.''

''உங்கள் பாண்டியரே நேரில் வந்தால் கூட இப்போது சக்கரவர்த்திகளைக் காண முடியாது!'' என்று அப்துலின் விழிகளை ஊடுருவி நோக்கியவாறே கூறினார் அமைச்சர். அவருக்கு எல்லாம் விளங்கி விட்டன. என்றாலும் அப்துலின் வாயிலாக விவரங்களைத் தெரிந்து கொள்ள முயன்றார் அவர்.

அப்துலின் கண்கள் கலங்கி விட்டன. பத்து தினங்களுக்கு மேல் இரவும் பகலுமாக நெடுந்தொலை பிரயாணம் செய்து அங்கு வந்திருந்தான் அவன். நம்பிக்கை ஒன்றையே வழித்துணையாகக் கொண்டு, உணவையோ, ஓய்வையோ பொருட்படுத்தாமல் அவன் அங்கு வந்து சேர்ந்திருந்தான். இப்போதும் தன்னைப் பற்றிய கவலை அவனுக்கில்லை. 'பாண்டிய நாட்டுக்கு விடிவு ஏற்படுமா? பாண்டியரின் நம்பிக்கை பலன் அளிக்குமா?' என்ற கவலைதான் அவனுக்கு.

''நீ சக்கரவர்த்திகளிடம் கூறவேண்டிய செய்திகளை என்னிடம் கூறலாம்; நான் அவரிடம் சொல்கிறேன்'' என்றார் அமைச்சர்.

அப்துல் மறுமொழி கூறவில்லை. இறைஞ்சுவதுபோல் அவரை ஏறிட்டு நோக்கினான்.

''என்னிடம் கூறுவதற்கு உனக்கு விருப்பமில்லை போலும்!''

''நான் பாண்டியரின் ஊழியன். அவர் நேரில் கண்டு கூறுமாறு எனக்குக் கட்டளையிட்டிருக்கிறார். கட்டளையை நிறைவேற்றுவது என் கடமை. ஆகவே, அமைச்சர் அவர்கள் என்னை மிகவும் மன்னித்துக் கொண்டு ஒரு விநாடிப் பொழுது சக்கரவர்த்திகளைச் சந்திப்பதற்கு அனுமதிக்க வேண்டும்'' என்று அவரிடம் மன்றாடினான் அப்துல்.

அப்துலின் நெஞ்சுறுதி அவரைத் திடுக்கிட வைத்தது. சக்கரவர்த்தியின் கடமைகள் முழுவதையும் தாமே கவனிப்பதால் அவரிடம் கூற வேண்டியதைத் தம்மிடம் கூறும்படி அவர் அப்துலைப் பல வழிகளில் கேட்டுப் பார்த்தார். நயந்தும், திறமையாகப் பேசியும், வற்புறுத்தியும், அதிகாரக் குரலிலும் அவனிடமிருந்து செய்திகளை வரவழைக்க முயன்றார். அப்துலோ அவன் உயிரைக் கொடுக்கச் சித்தமாக இருந்தானே தவிர இரகசியத்தை மட்டும் வெளியிட மறுத்து விட்டான்.

''அப்படியானால் நீ சக்கரவர்த்திகளைக் காணாமலே திரும்ப வேண்டியதுதான்'' என்றார் சாளுவ நரசிம்மர்.

அவன் அவரை விடுவதாக இல்லை. அழாக் குறையாக மன்றாடினான்.

''அப்படியானால் நாளை மறுநாள் என்னை வந்து பார்! முடிந்தால் ஏற்பாடு செய்கிறேன்'' என்று கூறி அவனுக்கு விடை கொடுத்து அனுப்பினார்.

மறுநாளோ அதற்கு மறுநாளோ அவனால் அமைச்சரைக்கூடச் சந்திக்க முடியவில்லை. அவனைக் காண மறுத்துவிட்ட சாளுவ நரசிம்மர் இரண்டு தினங்கள் கழித்து விஜய நகரத்தை விட்டு அரசியல் கடமைகளுக்காக வெளியூர் சென்று விட்டார். அவர் திரும்பி வருவதற்கு ஒரு வாரம் ஆகுமெனத் தெரிந்தது.

விஜயநகரம் அப்துலுக்குப் பாலைவனமாகத் தோற்றமளித்தது. கைப்பொருள் தீர்ந்துவிட்ட நிலையில் அவன் அங்கே ஒரு நாடோடி போல் அலைந்து திரிந்தான். கிருஷ்ணதேவராயரைச் சந்திக்க முடியாவிட்டால் பாண்டிய நாட்டுக்கு உயிரோடு திரும்பிப் பயனில்லை என்ற முடிவுக்கு அவன் வந்துவிட்டான். விசுவநாதனின் கண்களில் பட்டுவிடாதபடி, அவன் அரண்மனையைச் சுற்றி வரத் தொடங்கினான். சக்கரவர்த்திக்கு உடல்நலம் சிறிது தேறிவிட்டதால், எப்போதாவது அவர் வெளியே வருவதுண்டு என்ற வரையில் அவன் கேள்வியுற்றிருந்தான். அப்படி வந்தால் கட்டுக் காவலையும் மீறிக் கொண்டு அவர் முன்னே சென்று விடுவது என்ற பிடிவாதம் அவனுக்கு.

ஒரு நாள் திடீரென்று இரண்டு அரண்மனைக் காவலர்கள் அவனைக் கைப்பற்றி உள்ளே அழைத்துக் கொண்டு சென்றார்கள். சந்தேகத்துக்கிடமான நிலையில் அவன் அங்கு உலவியதைக் கண்டு அவனைக் கண்காணித்து வந்தவர்கள் அவர்கள். அப்துலுக்கு ஒரு வகையில் அது எல்லையற்ற பூரிப்பைத் தந்தது. 'சக்கரவர்த்தி கிருஷ்ணதேவராயரிடம்தானே கொண்டு செல்வார்கள்? நன்றாகக் கொண்டு செல்லட்டும்!' என்று நினைத்துக்கொண்டான் அவன்.

''நீ யார்? உனக்கு இங்கே என்ன வேலை?'' என்று கேட்ட காவலனிடம் அப்துல், ''நான் அதைச் சக்கரவர்த்திகளிடம் சொல்லிக் கொள்கிறேன்!'' என்று துணிவோடு பதில் அளித்தான்.


ஆனால் காவலர்கள் அவனைச் சக்கரவர்த்தியின் முன்னால் கொண்டு நிறுத்தவில்லை. விசுவநாதனின் முன்னே கொண்டு போய் நிறுத்தி விட்டுப் பணிவோடு அவனை வணங்கி நின்றார்கள். விசுவநாதனுக்கு முதலில் இனம் புரியவில்லையென்றாலும், கூர்ந்து நோக்கிய பின்பு திடுக்கிட்டான். அப்துலின் தோற்றத்தைக் கண்டவுடன் அவனுடைய நெஞ்சு நெகிழ்ந்தது.

''யாரது, அப்துல்தானே?'' என்று பொங்கும் அன்போடு கேட்டான் விசுவநாதன்.

அப்துலின் விழிகள் வெறுப்பை உமிழ்ந்தன. ராமனைத் தேடி வந்த பரதனைக் கண்டு முன்பொருநாள் குகன் விழிகளில் கனலைக் கக்கினானல்லவா? அதே கோபத்துடன் நின்றான் அப்துல். 'பாண்டிய நாட்டை வஞ்சகத்தால் கைப்பற்றிக் கொண்டு, எங்கள் பாண்டியரை இந்த நிலைக்குக் கொண்டு வந்தவரின் குமாரன்தானே நீ?' என்று கேட்பதுபோலிருந்தது அவன் பார்வை.

''என்னைத் தெரியவில்லையா அப்துல்?'' என்று மீண்டும் கேட்டான் விசுவநாதன்.

''நான் உங்களைக் காண வரவில்லை. சக்கரவர்த்திகளைக் காண வந்தேன். அவர்களைக் கண்டு பேசுவதற்கான வழியுண்டா என்று தேடிக் கொண்டிருந்த என்னை உங்கள் காவலர்கள் பிடித்துக் கொண்டு வந்திருக்கிறார்கள். நான் முயன்றது சரியென்றால் என்னைச் சக்கரவர்த்திகளிடம் அழைத்துக்கொண்டு போகச் சொல்லுங்கள். இல்லையேல் உரிய



TODAY DIETARY SUPPLEMENTS ARE NEEDED MORE THAN EVER BEFORE



ஊட்டக் குறைவை நிரப்பும் உணவு வகைப் பொருட்கள் இன்று எப்போதைக் காட்டிலும் மிகுந்த அவசியமுள்ளதாக இருக்கிறது. **கோகோ மால்டீனை** விடச் சிறந்த ஊட்ட உணவுப் பொருளை உங்கள் பணத்தைக் கொண்டு வாங்கவே முடியாது. இது ஒரு முழுமையான ஆகாரம். ஊட்டச் சத்து செறிந்த லட்சிய உணவு வகைப் பொருள். முழு ஆடைப் **பாலும், கோகோவும்**, சிறந்த தரமான **பார்லி மால்ட்டும், குளுகோஸும்**, திறம்படக் கலக்கப்பட்ட **கோகோ மால்டீனில்** வலுவான தசைகளும், திடமான எலும்புகளும் அடையவும் வலிவும், உரமும் பெறவும் வேண்டிய புரதங்கள் கார்போ ஹைட்ரேட்டுகள், தாது உப்புக்கள் எல்லாம் உள்ளன. நீங்கள் சுறுசுறுப்புடன் செயல் புரிவதற்கு வேண்டிய மதிப்புயர்ந்த A. B. B.-2 மற்றும் D. வைட்டமின்கள் **கோகோ மால்டீனில்** இருக்கின்றன. **கோகோ மால்டீனை** சூடாக அருந்தினால், அது ஓய்ந்துபோன நரம்புகளுக்கு உற்சாகமளிக்கிறது. படுக்கப் போகும்போது அருந்தினால், ஆழ்ந்த உறக்கம் ஏற்பட வகை செய்கிறது.

கோகோ மால்டீன்

புத்துணர்ச்சியும் வலிவும் அளிக்கும் லட்சிய உணவு பானம்

கோகோ மால்டீன் லாபரடரீஸ்

உரிமையாளர்கள்: டிரேட் லிங்க்ஸ் பிரைவேட் லிமிடெட்., 46, பூஸா ரோடு, புது டெல்லி-5 ***போன்:*** 52835

ஏரியா சேல்ஸ் ஆபீஸ் :

76, எல்லிஸ் ரோடு, மவுண்ட் ரோடு, சென்னை - 2 Phone : 85982 Grams : SOUTHLAND


TL-NP-22

எப்பொழுதும் புத்துணர்ச்சியுடன் இருங்கள் நாள்முழுவதும் சுறுசுறுப்பாக இயங்குவதற்கான புத்துணர்ச்சிக்கு

புதிய கால்கேட் லோர்னே டால்க்

புதிய கால்கேட் லோர்னே டால்க்கின் புதுப்பிக்கும் நறுமணம் உங்களைக் குளுமையுடனும், புத்துணர்ச்சியுடனும் வைத்திருக்கிறது....நாள் முழுவதும் அந்தத் துடியான சுறுசுறுப்பைத் தருகிறது. இளமைத் துடிப்பும், சுறுசுறுப்பும், விளையாட்டுகளில் பிரியமுள்ளவர்கள் குறிப்பாக கால்கேட் லோர்னே டால்க் வியர்வையைத் துரிதமாக கிரகித்துக்கொண்டு அவர்கள், நாள் முழுவதும் உற்சாகமாக இருக்க உதவுவதை நன்கு அறிவார்கள்!

இது சிக்கனமானதும்கூட! உங்கள் குடும்பத்தினருக்கு கால்கேட் லோர்னே டால்க்கை வாங்குங்கள்.—அது சுறுசுறுப்பான நாகரீக மக்களுக்கேற்ற புதியதொரு பரவசமூட்டும் நறுமணம் கொண்டது!





புதிய
சிக்கனமான
டால்க் நவீன
டின்னில்



தண்டனையைக் கொடுத்து விடுங்கள்'' — அப்துலின் நாத்தழுதழுத்தது.

காவலன் ஒருவன் அப்துலிடமிருந்து கைப்பற்றிய ஓலைத் துணுக்கொன்றை விசுவநாதனிடம் கொடுத்தான். அதை விசுவநாதன் பிரித்தவுடன், திடீரென்று குறுக்கிட்டு அவனைத் தடுத்தான் அப்துல்.

''அது சக்கரவர்த்திகள் மட்டுமே காண வேண்டிய ஓலை.''

விசுவநாதனுக்கு ஒன்றுமே புரியவில்லை. ஓலையை அப்துலிடமே திருப்பிக் கொடுத்து விட்டு, காவலர்களை அனுப்பிவிட்டு அவனுடைய கரங்களை மெல்லப் பற்றித் தன்னருகே ஆசனத்தில் அமர்த்திக் கொண்டான். ''நான் செய்த தவறு என்ன அப்துல்? என் மீது ஏன் உனக்கு இவ்வளவு கோபம்?'' என்று கனிவோடு கேட்டான்.

அந்த அன்புகூட அப்துலுக்கு நடிப்பாகத் தோன்றியதோ, அல்லது அந்த அன்பைத் தாங்கும் சக்திகூட அவனிடம் இல்லையோ தெரியவில்லை; அவன் சிறு குழந்தையைப் போல் தேம்பி அழுதான். தான் பிறந்த மண்ணையும், தன்னை மனிதனாக வளர்த்த அந்த மண்ணின் உப்பையும் சோற்றையும் நினைத்துக் கொண்டு அழுதான்.

''அப்துல்! கலங்காதே அப்துல்!'' என்று அவனைத் தழுவிக் கொண்ட விசுவநாதன், ''சக்கரவர்த்திகளை யாரும் நேரில் காண முடியாதென்றாலும், நான் உன் பொருட்டுச் சக்கரவர்த்திகளிடம் அனுமதி பெற்று வருகிறேன்'' என்றான்.

விசுவநாதனின் குரலில் இருந்த நெகிழ்ச்சி அப்துலின் இதயத்தைத் தொட்டது.

''உண்மையாகவா?'' என்று கேட்டான்.

''கட்டாயம் நீ அவரைக் காணலாம். அதற்கு முன்பாக நீ என் மாளிகைக்கு வந்து உடை மாற்றிக்கொள். உணவை முடித்துக் கொண்டு, சக்கரவர்த்திகளைக் காண்போம்.''

''இதே உடையில், இதே கோலத்தில், நான் அவர்களைக் காண வேண்டும். அப்போது வேறு யாரும் அங்கிருக்கக் கூடாது. குறிப்பாக நீங்கள் இருக்கக்கூடாது!''

விசுவநாதனுக்கு மூச்சை அடைத்தது. அப்துலின் மனநிலையில் அவனை மாற்ற முடியாது என்று தோன்றியது விசுவநாதனுக்கு. உடனடியாக எழுந்து சென்று கிருஷ்ணதேவராயரிடம் நிலையை விளக்கி விட்டு, அவனை அவரிடம் அழைத்துச் சென்றான். அப்துல் உள்ளே சென்றவுடன் அவர்களைத் தனியே பேசவிட்டு, வெளியே கூடத்தில் காத்து நின்றான் விசுவநாதன்.

அத்தியாயம் முப்பத்திரண்டு

ஊழியமா? அதிகாரமா?

அப்துல் கொடுத்த ஓலையைப் படித்துப் பார்த்த சக்கரவர்த்தி கிருஷ்ண தேவராயருக்கு அதை நம்புவதற்குக் கஷ்டமாகத்தான் இருந்தது. ஆனால் அப்துலின் தோற்றம் அவன் கூறிய விவரங்கள் இவ்வளவும் அதை நம்ப வைத்தன. எளிதில் உணர்ச்சி வயப்பட்டு, முன்கோபம் கொள்ளும் சக்கரவர்த்தி, அப்போது தம் வழக்கத்துக்கு மாறாக அமைதியோடு யோசனை செய்தார். நாகம நாயக்கரே இப்படிச் செய்யக் கூடும் என்பதை அவர் மனம் ஏற்றுக்கொள்ள மறுத்தது.

''ஒருவேளை என் ஆணையை நாகமர் தவறாகப் புரிந்து கொண்டிருக்கலாம்'' என்றார் சக்கரவர்த்தி. ''உடனடியாக இங்கு திரும்பி வராமல், பாண்டியருக்குத் துணையாக இருந்து நிர்வாகத்தை ஒழுங்குபடுத்தும்படி கட்டளையிட்டிருந்தேன். அதைப் புரிந்து கொள்ளாமல் அவர் தவறு செய்திருக்கிறார். நாகமர் குற்றம் செய்யக்கூடியவரல்லர்; தவறு நடந்திருக்கிறது.''

''தவறு நடக்கவில்லை சக்கரவர்த்திகளே! குற்றம் புரிந்திருக்கிறார்'' என்றான் அப்துல் பணிவோடு.

தம்மிடமே குறுக்கிட்டுப் பேசத் துணிவு கொண்ட அந்த இளைஞனைக் கூர்ந்து நோக்கினார் சக்கரவர்த்தி.

''பெரிய பாண்டியர் அவர்களும் நாகமர் தமக்குத் துணையாக அங்கு இருப்பதையே விரும்புகிறார்கள். சக்கரவர்த்திகளின் அதிகாரியாக அவர்கள் அங்கு இருக்க வேண்டுமென்றே பாண்டிய நாட்டில் உள்ள எல்லோரும் விரும்புகிறோம். ஆனால் நாகம நாயக்கர் அவர்கள் பாண்டியராகவே இருந்து ஆட்சி புரிய முடிவு செய்து விட்டார்கள். பாண்டியரிடம் ஆட்சிப் பொறுப்பைக் கொடுக்க முடியாதென்றும், இனிப் பாண்டியர் அங்கு முடிசூட்டிக் கொண்டு நாடாள வேண்டிய அவசியமில்லை என்றும் கூறிவிட்டார்கள். — தங்களிடமிருந்து ஓலை வந்த பிறகுதான் நாகமரிடம் இந்த மனமாற்றம் ஏற்பட்டிருக்கிறது.''

சக்கரவர்த்திகளின் நாடி நரம்புகளில் மின் வெட்டியது போல் ஒரு பேரதிர்ச்சி ஏற்பட்டது. 'ஓ! விபத்துக்குள்ளான சக்கரவர்த்தி இனி அதிலிருந்து எங்கே மீண்டு வரப் போகிறார்' என்ற எண்ணம் வந்து விட்டது போலும்! ராமபத்திர நாயக்கரின் வாயிலாக அவர் இங்கு நடந்த விஷயங்களைத் தெரிந்து கொண்டு, தம்முடைய எதிர்காலத்தை உறுதிப்படுத்திக் கொள்ளத் திட்டமிடுகிறார்...

''விசுவநாதா!'' என்று கோபக் குரல் எழுப்பினார் சக்கரவர்த்தி. வெளியில் காத்து நின்ற விசுவநாதன் பதற்றத்துடன் உள்ளே ஓடிவந்தான். அப்துலுக்கு அவனை அங்கு கண்டவுடன் என்னவோ போலிருந்தது.

''ஓலை எழுது!'' என்ற அவருடைய குரலில் ஒலித்த கண்டிப்பு விசுவநாதனின் உள்ளத்தில் அவன் என்றுமே அநுபவித்திராத வேதனையைப் பாய்ச்சியது. அவனிடம் சக்கரவர்த்தி எப்போதுமே இப்படி நடந்து கொண்டதில்லை.

''உடனடியாகப் பாண்டிய நாட்டின் ஆட்சிப் பொறுப்பைச் சந்திரசேகர பாண்டியரிடம்

கொடுத்துவிட்டு நாகம நாயக்கர் விஜய நகரத்துக்குத் திரும்பி வர வேண்டும். வந்தவுடன் சக்கரவர்த்திகளைச் சந்திக்க வேண்டும். தாமதமின்றி நிறைவேற்றப்பட வேண்டிய ஆணை இது.''

நடுங்கும் கரத்தால் அந்த ஓலையை எழுதி முடித்தான் விசுவநாதன்.

''அப்துலோடு நம்முடைய தூதுவன் ஒருவனை மதுரைக்கு அனுப்பி வை. அவனிடம் ஓலையைக் கொடுத்தனுப்பு. அப்துலுக்கு வேண்டிய வசதிகளைச் செய்து கொடு.''

''ஒரு வேண்டுகோள்...'' என்று தயக்கத்தோடு குறுக்கிட்டான் அப்துல். கிருஷ்ண தேவராயர் திரும்பிப் பார்த்தார்.

''சக்கரவர்த்திகள் ஆட்சிப் பொறுப்பைப் பாண்டியரிடம் கொடுக்கும்படி ஆணையிட்டால் போதும். நாகமர் அங்கேயே இருக்கட்டும். அவர்கள் இங்கு திரும்பினால் பாண்டிய நாட்டில் திடீரென்று குழப்பங்கள் ஏற்படக் கூடும்.''

''ஓ! நாகமரை நம்பித்தான் பாண்டிய நாடு வாழ வேண்டுமா? நாளைக்கே அவர் இறந்து போனால்?... அப்படியே நான் இறந்து விட்டாலும் என்னோடு இந்த சாம்ராஜ்யமும் போய்விட வேண்டுமா?''

''சக்கரவர்த்திகளே!'' என்று பதறினான் விசுவநாதன்.

''சாம்ராஜ்யத்தைவிட நான் பெரிதாக மதிப்பது அதைக் கட்டிக் காக்கக் காரணமாக இருக்கும் மனிதர்களைத்தான். மனிதன் மனிதனாக வாழ்ந்தால் அவனைக் கொண்டு இந்தப் பரத கண்டத்தையே கட்டிக் காத்து விடலாம். மனிதனுடைய மனமாகிய சாம்ராஜ்யம் சீரழிந்து போய்விடக் கூடாது. பாண்டிய நாட்டில் குழப்பம் ஏற்பட்டாலும் சரி, அல்லது அது மீண்டும் பறிபோய்விட்டாலும் சரி, அதை மீட்பது என் பொறுப்பு என்று பாண்டியரிடம் சொல். நாகம நாயக்கர் இனி அங்கு இருக்கக்கூடாது.''

தம் வாழ்நாளில் அதுவரையில் கண்டிராத மிக உயர்ந்த மனிதர் ஒருவருக்கு முன்னால் நிற்கும் அநுபவம் அப்துலுக்கு ஏற்பட்டது.

''சாம்ராஜ்யத்தின் சக்கரவர்த்தி என்று இந்த உலகம் நினைக்கிறதே, இதன் அதிகாரி என்று நீங்கள் நினைக்கிறீர்களே, நான் என்னை எப்படி நினைக்கிறேன் தெரியுமா? இதன் முதல் ஊழியன் நான்! ஊழியன் என்ற எண்ணம் மாறி, அதிகார ஆசை கண்ணை மறைக்கும்போதுதான் எல்லாத் தொல்லைகளும் ஏற்படுகின்றன. நீங்கள் இருவருமே இளைஞர்கள். நீங்கள் ஊழியர்கள் என்பதை மட்டிலும் எப்போதும் மறந்து விடாதீர்கள். ஊழியத்துக்கான வெளிக் கவசம்தான் அதிகாரமே தவிர, அதிகாரம் செய்வதற்காக ஆட்சி என்று நினைப்பவன் அழிந்து போவான்.''

சக்கரவர்த்தி அவர்களுக்கு விடை கொடுத்தனுப்பிவிட்டு, தாம் மட்டிலும் விடை காண முடியாத வினாக்களை எழுப்பிக் கொண்டு சிந்தனையில் ஆழ்ந்தார். அதிகார ஆசையால் முளைத்தெழுந்த உட்பகைக்கான வித்தொன்று நாகம நாயக்கரால் தெற்கே தூவப்பெற்றது அவர் நெஞ்சை வாட்டியது.

விசுவநாதன் சக்கரவர்த்தியின் ஆணைப்படி எல்லாக் காரியங்களையும் செய்து முடித்தான். தனக்குள்ளே குமுறிய எரிமலையை அவன் வெளியில் காட்டிக் கொள்ளவில்லை. அப்துலுக்குத்தான் விசுவநாதனைப் புரிந்து கொள்ள முடியவில்லை. தந்தைக்கு எதிராகக் குற்றம் சாட்ட வந்த ஒருவனிடம் எப்படி அவனால் அவ்வளவு அன்போடு பழக முடிகிறது?

''நண்பரே! என்னை மன்னித்துக்கொள்ளுங்கள்!'' நாத் தழுதழுத்தது அப்துலுக்கு.

''நீங்கள் ஒரு தவறும் செய்யவில்லை. உங்களுடைய நிலையில் நான் இருந்திருந்தால் எப்படி நடந்து கொள்வேனோ அப்படித்தான் நீங்கள் நடந்து கொண்டிருக்கிறீர்கள். இப்படி நேர்மைத் துணிவு கொண்ட ஊழியர் ஒருவரைக்கொண்ட பாண்டியர் என் வாழ்த்துகளுக்குரியவர்'' என்றான் விசுவநாதன்.

''ஆனால் நீங்கள்?... உங்களுடைய நிலையில் வேறு யார் இருந்தாலுமே இப்படி என்னிடம் பரிவு காட்டியிருக்க மாட்டார்கள்.''

''இந்த சாம்ராஜ்யம் என்னிடம் எதை எதிர்பார்க்கிறதோ அதைத்தான் நான் செய்திருக்கிறேன்; அது என் கடமை.''

''இப்படிப்பட்ட தந்தையர் ஒருவருக்குத் தங்களைப் போல் ஒரு குமாரர்...''

''அப்துல்! தயவுசெய்து என் தந்தை யாரைப் பற்றி என்னிடம் குறை கூற வேண்டாம்'' என்று கடிந்துகொண்டான் விசுவநாதன். ''உங்களுக்கு அவரைத் தெரிந்ததைவிட எனக்கு நன்றாகத் தெரியும். ஒரு பக்கத்துச் செய்தி மட்டும் உங்கள் மூலமாக வந்திருக்கிறதே யொழிய அவர்களுடைய செய்கைக்கான காரணம் இன்னும் தெரியவில்லை. ஆகவே, இன்னும் எனக்கு என் தந்தையாரைப் பற்றித் தவறாக நினைக்கும் துணிவு பிறக்கவில்லை. என்ன இருந்தாலும் நாம் இளைஞர்கள்.''

அப்துல் திகைத்து நின்றான்.

''தங்களைப் போன்ற ஒருவரோடு பழகும் வாய்ப்புக் கிடைத்ததற்காக நான் இறைவனுக்கு நன்றி கூறுகிறேன். தங்கள் தந்தையாரிடம் இவ்வளவு அன்பும் மதிப்பும் கொண்ட தாங்களா அவர்களுக்கெதிரான ஆணைகளை இவ்வளவு சலனமின்றி நிறைவேற்றுகிறீர்கள்?''

''என் தந்தைக்கு நான் மகன் என்பதோடு, சக்கரவர்த்திகளுக்கு ஊழியன் என்பதையும் மறந்துவிடக் கூடாதல்லவா? இந்த இரண்டு உண்மைகளுக்கும் மேலாக மற்றோர் உண்மையும் இருக்கிறது. 'எது நியாயம்?' என்பதே அந்த உண்மை. அந்த நிலையான உண்மை எனக்கு இன்னும் புலப்படவில்லை.''

அப்துல் விசுவநாதனைக் கட்டித் தழுவிக் கொண்டு பிரியாவிடை பெற்றான். விசுவநாதன் அவனை வழியனுப்பிவிட்டு அரண்மனைக்குத் திரும்பியபோது, அங்கே காத்திருந்தார் அமைச்சர் சாளுவ நரசிம்மர்.

''நான் ஊரில் இல்லாதபோது நடைபெறக் கூடாத விஷயங்களெல்லாம் நடைபெற்றிருக்கின்றன. நீயே உன்னையறியாமல் உன் வாழ்வுக்கு ஆபத்துக்களைத் தேடிக்கொண்டிருக்கிறாய்'' என்றார் அமைச்சர்.

ஒரு குற்றமும் செய்யாத விசுவநாதன் அமைச்சரின் முன்பாகக் குற்றவாளி போல் நின்றான்.

(தொடரும்)



என்சாண் உடலை மட்டுமே பெற்றிருந்தாலும் மனிதனுக்குத் தான் எத்தனை சக்தி! அவன் புரியும் அபார சாதனைகளுக்குத்தான் எத்தனை மகத்துவம்!

நெய்வேலி நிலக்கரிச் சுரங்கத்தைச் சார்ந்துள்ள விஞ்ஞானம் மேலோங்கிய தொழில் வளத்தைக் காணும் பொழுது அசுர சாதனைதான் என்று சொல்ல வைக்கிறது! மனிதனின் சாதனையைக் குறித்துப் பெருமையோடு பூரிக்கச் செய்கிறது!

அசுர சாதனை

ரா.வி

"படித்துப் படித்துச் சொன்னேன். கேட்டால்தானே?"

இளங்காலையில் இனிய கனவு கண்டு கொண்டிருந்த கருணாகரனின் காதுகளில் பத்மா பாடிய பூபாள ராகம் ஒலித்தது.

கண் விழித்த கருணாகரன் கண்டதென்ன? மின்சாரச் சூட்டடுப்பைப் பற்ற வைக்கப் பத்மா ஸ்விட்சைப் போட்ட பொழுது அது பற்றிக் கொள்ள வில்லை. எங்கேயோ என்னவோ கோளாறு.

அநுபவப்பட்ட அவள் முன்தினம் படித்துப் படித்துச் சொன்னது அவன் நினைவுக்கு வந்தது. அவள் பாடிய பூபாளத்தின் பொருளும் புரிந்தது.

இளம் தம்பதிகளான பத்மா—கருணாகரன் குடி வந்த வீடு புதிதாகக் கட்டிய வீடு. நெருப்பில்லாமல் புகையாது என்ற பழமொழி தெரிந்திருந்த வீட்டின் சொந்தக்காரர்களுக்குப் புகையில்லாத நெருப்பு உண்டு என்னும் இரகசியம் எப்படியோ தெரிந்திருந்தது. அதனால் வாடகை முன்னே பின்னே இருந்தாலும் விறகு வைத்துச் சமைத்து வீட்டைக் கரியாக்கக் கூடாது என்று ஒரு நிபந்தனை விதித்திருந்தார்கள். அதன் பலனாக அவர்கள் குடும்பத்தில் விறகு எட்டிப் பார்க்க வில்லை.

அதோடு இன்னொரு காரணமும் சேர்ந்திருந்தது. பூப்போன்ற தன் பெண்சாதியின் கை, சமையலுக்காக அடுப்புக் கரியைத் தொட்டுக் கரியாகக் கூடாது என்று கருணாகரனின் கருணையுள்ளத்திலே ஒரு கரிசனம். கல்யாணப் பரிசாக என்ன வாங்குவது என்று அவன் அலுவலக நண்பர்கள் யோசித்துக் கொண்டிருந்த வேளையிலே, அவனே முந்திரிக் கொட்டையாக முந்திக் கொண்டு மின்சார அடுப்பு வாங்கித் தருமாறு ஆலோசனை கூறியதற்கு அந்தக் கரிசனமே

Λ நெய்வேலி அனல் மின்சார நிலையத் தொடக்க விழா. ராஷ்டிரபதி ராதாகிருஷ்ணன் ஆரம்பித்து வைக்கிறார்.

V 'லிக்கோ' கரிக்கட்டி தயாரிக்கும் தொழிற்சாலையின் ஒரு பகுதி.



தான் காரணம். அந்த அடுப்புத்தான் இப்படிச் சமயத்தில் ஏமாற்றி விட்டது !

''இப்பொழுது என்ன செய்வது? மண்ணெண்ணெய் இருக்கிறதோ, இல்லையோ?'' என்று தயங்கியவாறே தன் மனைவி பத்மாவைக் கேட்டான் அவன்.


'' மூன்றும் வாரம் வாங்கின மண்ணெண்ணெயில் ஒரு புட்டி பாக்கி இருக்கிறது. அரசாங்கம் ரேஷன் என்று ஒன்று ஏற்படுத்தியதே தவிர இரண்டு வாரங்களாகத்தான் கடைக்காரன் ஆளை நடையாக நடக்க வைத்துக் கையை விரித்து வருகிறானே! நீங்கள்தான் நான் சொன்னதைக் கேட்கவில்லையே!'' என்று சரணம் பாடிப் பல்லவியில் முடித்தாள் பத்மா.


''போனால் போகிறது. ஸ்டவ்வைப் பற்ற வைத்துவிடு. கோபித்துக் கொள்ளாதே!''என்றான் கருணாகரன்.

''அதைப் பற்ற வைக்க இங்கே யாரால் ஆகும்? இன்று காப்பியின் வாயில் மண்தான்!'' காப்பி இல்லாவிட்டால் தனக்கு வேலை ஓடாது என்பதைப் பேச்சிலேயே காட்டிக் கொண்டாள் பத்மா.

''சரி, நீ வேண்டாம். நானே பற்றவைத்துத் தருகிறேன். நீ போய்ப் பின், காக்கடா, மண்ணெண்ணெய் எல்லாவற்றையும் எடுத்து வை!'' என்று கூறிய கருணாகரன் மனைவிக்கு உதவப் போகிறோம் என்ற உற்சாகத்துடன் சமையலறைக்குப் போனான். சப்பணம் கொட்டிக் கொண்டு உட்கார்ந்தான். புதிய கர்ச்சீப் ஒன்றை எடுத்துக் கரியாக்கி ஸ்டவ்வைச் சுத்தமாகத் துடைத்தான். மண்ணெண்ணெய் ஊற்றிக் காக்கடாவைப் பற்றவைத்தான். மண்ணெண்ணெய் வரவேண்டிய துவாரத்தை ஊசியால் குத்திச் சரி செய்து கொண்டான். சூடேறியதும் காற்று அடித்தான். 'புச், டப்!' ஸ்டவ் பிடித்துக் கொண்டு விட்டது என்று எண்ணும் பொழுதே மண்ணெண்ணெய் பீறிட்டுக் கொண்டு வெளி வந்தது. 'ஸ்டவ்' 'ஓஹாய்' என்று பிடித்துக் கொண்டது. இன்னும் சற்றுச் சூடேறினால் சரியாகி விடும் என்று காற்றைப் பிடுங்கி அடைத்துப் பார்த்தான். அதுவும் பழைய பல்லவியையே பாடிக் கடைசிச் சொட்டு எண்ணெய் தீரும் வரை ஆடிப் பாடி அவன் பொறுமையைச் சோதித்து விட்டு ஓய்ந்தது. அது மட்டுமா? வீடு முழுவதும் ஒரே மண்ணெண்ணெய்ப் புகை, மூச்சு முட்டும் நெடி.


காலை ஸ்நானத்தை முடித்துக் கொண்டு ஜபத்தில் உட்கார்ந்திருந்த அவன் பாட்டி — அப்பாவைப் பெற்றவள், புதுக்குடித்தனம் போட்டிருக்கும் தம்பதிகளுக்குத் துணையாக வந்தவள்—இந்தக் காட்சியைக் கண்டு ரசித்து மகிழ்ந்து கொண்டிருந்தாள். அப்படியே





'யூரியா' உரம் தயாரிக்கும் தொழிற்சாலையின் ஒரு தோற்றம்.






நிலக்கரிச் சுரங்கத்தில் ராக்ஷசப் பொருட்கடத்திகள்.

ஜபத்தை அந்தரத்தில் நிறுத்திவிட்டு, ''அந்தக் காலத்திலே கருணா, இந்த நவ நாகரிகப் பொருள்கள் எல்லாம் வரவில்லை. வீட்டுக் கொல்லையிலேயே கிடைக்கும் வாழைச் சருகு, வேப்பம் தழை, தென்னை மட்டை, உரிமட்டை நார், விறகு இவற்றைக் கொண்டுதான் நாங்கள் குடித்தனம் நடத்தி வந்தோம். தீக்குச்சியைக் கிழித்து வைப்பதற்கு முன்னால் பசபச வென்று பற்றிக் கொண்டு விடும். இந்த மாதிரி சிரமமே கிடையாது. ஆனால் புகைச்சலிலே கொஞ்சம் கண்ணைக் கசக்குவோம். மாமியார் பார்த்து விட்டால், 'நான் என்னடிசொல்லி விட்டேன் உன்னை! இப்படிக் கண்ணைக் கசக்குகிறாயே !' என்பாள். புகைச்சல் தாளாமல் கண்ணைக் கசக்குகிறேன் என்றால் நம்ப மாட்டாள். அந்தப் புகை கண்ணுக்கு நல்லது. ஆனால் இந்த மண்ணெண்ணெய்ப் புகை கண்ணுக்கு ஆகாதுடா!'' என்றாள்.

''அது சரி, பாட்டி! அதற்காக அந்தப் பழைய நாட்களுக்கே எங்களையும் போகச் சொல்கிறாயா? சிக்கி முக்கிக் கற்களைத் தேய்த்து நெருப்பு உண்டு பண்ணி, அது அணையாமல் இருக்க உமியையும்



நீராவி சப்ளை நிலையத்தின் ஒரு தோற்றம்

வரட்டியையும் அமுக்கி வைத்த நாளெல்லாம் இனித் திரும்பி வருமா? வந்தால்தான் நன்றாயிருக்குமா?'' என்றான் கருணாகரன்.

''நான் அப்படி எங்கேடா சொன்னேன்? இந்தக் காலத்திலேதான் நெருப்புப் பெட்டி என்று ஒன்று வந்து விட்டதே ! ஒரு குச்சியைக் கிழித்தால் வேண்டிய நெருப்பு! எத்தனைதான் எனக்கு வயசாகி விட்டாலும் என்னை அவ்வளவு கர்நாடகமாக நினைக்காதே. நானும் காலத்தோடு ஒட்டித்தான் முன்னேறி வந்திருக்கிறேன்; வருகிறேன். அந்த நாளிலே நாங்கள் என்ன செய்வோம், தெரியுமா ? விறகு அடுப்புப் புகைகிறதோ, இல்லையோ ? இதிலிருந்து தப்புவதற்கு ஒரு வழி செய்தோம். எங்கள் கையாலேயே களி மண்ணைப் பிசைந்து கும்மட்டி அடுப்பு என்று ஒன்று போட்டுக் கொள்ளுவோம். பழைய இரும்பு ஆணி, தோசை திருப்பி இவற்றை அந்த அடுப்புக்கு நடுவில், பந்தலுக்கு விட்டம், ஆவுடை போடுவது போல் செருகி அடுப்பை உலர வைப்போம். விறகைத் தணிக்கும் பொழுது தகதகவென்று எரியும் கொள்ளிக் கட்டையைத் தட்டித் துண்டங்களாக்கி இரும்பு வாணலி போன்ற பாத்திரங்களைப் போட்டு மூடி வைப்போம். அது தணிந்தபின் கரியாகி விடும். அதை மீண்டும் பற்ற வைப்பது சுலபம். கும்மட்டி அடுப்புக்கு இடையேயுள்ள இரும்பாணிப் பந்தலில் அந்தக் கரித் துண்டுகளைப் பரப்பிக் கீழே உரிமட்டை நாரைப் பிய்த்துப் பற்ற வைத்தால் அந்தக் கரியடுப்பு மளமள வென்று பிடித்துக் கொண்டு விடும் அதோடு, அதில் இன்னொரு விசேஷம் என்னவென்றால், அது அதிகமாகப் புகையாது. கண்களைக் கசக்க வேண்டியதும் இல்லை. அதனாலே நான் சொல்வது என்ன வென்றால், இப்பொழுதுதான் கடைகளிலே அடுப்புக்கரியை, மூட்டை மூட்டைகளாக அடுக்கி வைத்திருக்கிறார்களே, அவற்றில் ஒரு மூட்டையை வாங்கி வைத்துக் கொண்டு விட்டால், இந்த வீட்டுக்காரர்களிடம் வீடு கரியாகி விட்டது என்ற பேச்சுக் கேட்க வேண்டியிராது. அதோடு சிரமத்துக்குச் சிரமமும் மிச்சம்!'' என்றாள்.

''இப்பொழுது என்ன சொல்லுகிறீர்கள்? பெண்டாட்டி சொன்னதைக் கேட்டீர்கள் என்ற அபவாதம் உங்களுக்கு வேண்டாம். பாட்டி சொன்னதையாவது கேளுங்கள்!'' என்றாள் பத்மா. அவளது பேச்சில் குறும்பு தொனித்தது.

இந்த அல்லோல கல்லோலத்தில் மணி ஏழாகிவிடவே, 'இதோ வந்துவிட்டேன்' என்று சட்டையை மாட்டிக் கொண்டு ஓடினான் கருணாகரன். போன பதினைந்து நிமிஷங்களுக்கெல்லாம் ஒரு மூட்டை வீக்கோ கரியோடு வீட்டுக்குள் நுழைந்தான். ''பாட்டி! 'வீக்கோ'வே வாங்கி வந்துவிட்டேன். இப்பொழுது பத்மாவுக்குப் பரம திருப்தியாயிருக்கும்!'' என்றான்.

''வீக்கோவா? அதென்னடா அது? புளியங்கரி, சவுக்கைக் கரி என்றெல்லாம் கேள்விப்பட்டிருக்கிறேன். நீ சொல்கிறது புதிசாயிருக்கிறதே!'' என்றாள் பாட்டி.


''அதுவா ? சொல்லுகிறேன், பாட்டி ! பத்மா ! நீ போய் முதலில் காப்பி போடுகிற வழியைப் பாரு!'' என்றான் கருணாகரன். பிறகு பாட்டியைப் பார்த்து, ''பாட்டி ! நெய்வேலி என்று ஓர் ஊர் இருக்கிறதே, உனக்குத் தெரியுமோ, இல்லையோ?'' என்று கேட்டான்.

''நன்றாகத் தெரியுமே! போயும் போயும் அந்த ஊர்க் கரியையா வாங்கிக் கொண்டு வந்தாய்? அதற்குத்தான் 'வீக்கோ' என்று பெயரா? அதைப் பற்றி அடுத்த வீட்டு விசாலம் என்ன என்னவோ சொல்லிக் கொண்டிருந்தாளே! அந்தக் கரிக்கு ஏதோ புதிசா அடுப்பு வேணுமாம். அந்தக் கரியின் தீயில் பாத்திரங்கள் எல்லாம் கெட்டுப் போய்விடுகின்றனவாம். அது பற்றிக் கொள்ளக்கூட நேரமாகிறதாம். அந்தக் கரியை அணைக்கும் போது ஏதோ நாற்றம்கூட வருகிறதாமே! அசட்டுப் பிள்ளை, அதைப் போய் வாங்கி வருவாயோடா? நாலு

எழுத்துப் படிச்சுட்டா நாலும் தெரிந்ததாக நினைப்பு !'' பத்மா பாவம், சின்னக் குழந்தை! உன் இஷ்டத்துக்கு எதை எதையோ வாங்கி வந்து அவள் சமையலில் குறை சொல்லிக் கஷ்டப் படுத்துவாய் போலிருக்கிறதே !'' என்றான்.

பாட்டியின் இந்த ரோதனை முடிவதற் குள்ளாகவே உள்ளேயிருந்து பத்மா, ''பாட்டி, பாட்டி ! இதோ பார்த்தீர்களா? கரி பிடித்துக் கொண்டு தகதகவென்று எரிகிறது!'' என்று உற்சாகத்துடன் கூவினாள்.

''இந்தக் கரி பற்றிக் கொள்ள ஐந்து நிமிஷம், பத்து நிமிஷம் ஆகும் என்று சொல்லிக் கொண்டிருந்தார்களே! ஏண்டா, கருணா! உன்னிடம் நான் அத்தனை நேரமா பேசிக் கொண்டிருந்து விட்டேன்?'' என்று கேட்டாள் பாட்டி.



''இல்லை, பாட்டி! நீங்கள் மூன்று நிமிஷம் கூடப் பேசியிருக்க மாட்டீர்கள். செய்கிற விதரணை தெரிந்தால் எதையும் நன்றாகச் செய்யலாம். முதலில் எடுத்த எடுப்பில் கும்மட்டியிலே பெரிய பெரிய கட்டிகளைப் போட்டுக் கொள்ளக் கூடாது. சிறு சிறு துண்டுகளாகப் பரவலாகப் போட்டுக்கொள்ள வேணும். தீமூ பற்ற வைப்பதற்கு நீங்கள் அந்தக் காலத்திலே என்று சொன்னீர்களே, அந்த உரிமட்டை நார் கிடைத்தாலும் நல்லதுதான். ஆனால் இந்தக் காலத்திலே 'காக்கடா' என்னும் இந்தக் கல்நார் வத்தியை மண்ணெண்ணெயில் தோய்த்து வைத்தாலும் போதும். நான் ஸ்டவ்வில் இருந்த எண்ணெயை இதன் மேல் ஒட்ட வடிகட்டித் தான் பற்ற வைத்தேன். நிமிஷத்தில் பற்றிக் கொண்டு விட்டது. உண்மையைக் கேட்டால் ஸ்டவ் பற்ற வைக்கிற நேரம் கூட ஆகவில்லை. அப்புறம் மேலே பெரிய பெரிய கரிக் கட்டிகளைப் போட்டேன். தகதக வென்று எரிய ஆரம்பித்து விட்டது. சிலபேர் தெரியாமல் நிறையக் கரித் துண்டங்களைப் பெரிது பெரிதாக எடுத்துப் போட்டிருப் பார்கள். அது பற்றிக் கொள்ள முடியாமல் திணறியிருக்கும்!'' என்றாள் பத்மா.

''ஆமாம், அப்படித்தான் இருக்கும். வயிறு புடைக்கக் குழந்தைகளுக்கு, குழந்தை களுக்கு மட்டுமென்ன, பெரியவர்களுக்குமே சாப்பாடு போட்டு விட்டால், எழுந்திருக்க முடியாமல் திணறுவார்கள் அல்லவா? அது போல நிறையக் கரியைப் போட்டு விட் டால், தீப்பற்றிக் கொள்ள முடியாமல் அவிந்து விடலாம்தான். ஆமாம், ஆனால் இந்தக் கரிக்கு உஷ்ணம் அதிகம், இந்தச் சாதாரண அடுப்புகள் கூடாது, தனியாக அடுப்பு விற்கிறது என்கிறார்களே! நீ இந்தக் கும்மட்டியிலே போட்டு விட்டாயே!'' என்று கேட்டாள் பாட்டி.

''பாட்டி, விசாலாட்சி மாமி வீட்டிலே காஸ் அடுப்பு என்று ஒன்று பார்த்திருப்பீர் களே, நம் வீட்டில் எலெக்டிரிக் ஹீட்டர், மண்ணெண்ணெய் ஸ்டவ் எல்லாம் இருக் கின்றனவே, இவற்றைக் காட்டிலும் இந்தக் கரிக்கு உஷ்ணம் ஒன்றும் அதிகம் கிடையாது. ஆனால் சாதாரண விறகு, கரி இவற்றைக் காட்டிலும் உஷ்ணம் அதிகம்தான். பாத்திர மும் வீணாவதில்லை, அடுப்பும் வீணாவதில்லை. எல்லாம் வீண் பிரமை. புதிதாக ஒரு பொருள் வந்தால் அதைச் சட்டென்று ஏற்க இந்த ஜனங்களுக்கு மனம் ஒப்புவதில்லை. அதனால் தான் அவரவர்களுக்குத் தோன்றியபடி


சொல்லு கிறார்கள். இந்த மாமியார் – மருமகள், நாத்தி சண்டையெல்லாம்கூட இந்த அடிப்படையில் எழுகிறவைதாம்!''

''சரியாகச் சொன்னாய்! அந்த நாளிலே இரயில் வண்டி வந்த புதிசிலே ஜனங்கள் ஏறவே பயப்பட்டார்களாம். வண்டி புறப்பட மணி அடித்தால் பூசைக்கு மணி அடிப்பதாக எண்ணினார்களாம். இப்போது பார், இரயில் வண்டிகளில் ஏறக்கூட முடிவதில்லை. கூட்டம் அவ்வளவு நெரித்துத் தள்ளுகிறது. அது மட்டுமா? ஏரோப்ளேன்களில்கூட, ஜனங்கள் பயமில்லாமல் சகஜமாக பயணம் போகிறார்கள்!''

''நீங்கள் சொல்லுகிறீர்களே, அந்தப் புதிய அடுப்பை நானே ஒரு படி சிமிட்டி இருந்தால் போட்டு விடுவேனுக்கும். நம் வீட்டிலே இருக்கிற ஓட்டை வாளியிலேயே கூடச்செய்து காட்டி விடுவேன். ஒன்றும் பிரும்ம வித்தை இல்லை. நீங்கள் அந்தக் காலத்திலே போட்ட மண் அடுப்புத்தான் இந்தக்காலத்திலே வாளிக்குள் ஒரு சிமிட்டி அடுப்பாகக் காட்சியளிக்கிறது!'' என்றாள் பத்மா.


''அவ்வளவுதானா? ஆமாம், இந்தக் கரியைத் தயார் செய்து அனுப்புகிறதாக அல்லவா சொல்லிக் கொள்ளுகிறார்கள்?''

''ஆமாம், நெய்வேலியிலே நிலக்கரி கிடைக்கிறதோ இல்லையோ, அதைக் கொண்டு இந்தக் கரிக் கட்டிகளைத் தயாரிக்கிறார்கள். பச்சைக் கரியைச் சுட்ட கரியாக்கும் சாதனங்கள், இயந்திரங்கள் அமைக்கும் பொறுப்பை மூன்று ஜெர்மானிய நிறுவனங்கள் ஏற்றிருக்கின்றனவாம்! இந்தத் தொழிற்சாலை ஒன்றுக்கே ஏறக்குறைய 28 கோடி ரூபாய் செலவாம்!''



< நெய்வேலி நகர அமைப்பின் எழில்மிகு தோற்றம் —

உரத் தொழிற்சாலையின் முழுத் தோற்றம் >



''அப்பாடி! இத்தனை ரூபாய் செலவுக்கு அப்படி என்ன செய்கிறார்கள் அங்கே?''

'இந்த நிலக்கரியைக் கிடங்குக்குக் கொண்டு வருகிற இயந்திரத்துக்குக் கன்வேயர் என்று பெயர். ஆரம்பக் கட்டத்தில் நிரப்பப்படும் கரி ஒரு நாடாவில் சவாரி செய்து இந்தக் கிடங்கை அடைகிறது. இந்தக் கிடங்கில் 3500 டன் நிலக்கரியைச் சேகரிக்கலாமாம். இங்கே நிலக்கரித் துண்டங்கள் ஒரே அளவு உள்ளவையாக வெட்டப் படுகின்றன. அப்புறம் ஒரு குறிப்பிட்ட அளவுக்கு ஈரம் மட்டும் இருக்குமாறு உலர்த்துகிறார்கள். அடுத்தபடியாகக் குளிர்விக்கப்பட்டு கார்பனைசர் என்கிற இயந்திரத்துக்கு அனுப்பப் படுகின்றன. இந்தக் கார்பனைசருக்கு ஒரு குறிப்பிட்ட உஷ்ணம் உண்டு. இந்த உஷ்ணத்தை 650 அல்லது 700 செண்டிகிரேட் எனக் கணக்கிட்டிருக்கிறார்கள். இதிலே வருகிற ஆவிக்குப் புகை உண்டு. இந்தப் புகைக்கும் ஆவியைச் சுத்தமாக நீக்கி விடுவதில்லை. குறிப்பிட்ட அளவுக்குக்குறைத்து விடுகிறார்கள். அப்புறம் இந்தக் கரிக் கட்டிகளுக்கு அதிகம் புகையாமல் சீரான வெப்பம் தரும் சக்தி வந்து விடுகிறது. இந்தக் கரி நின்று எரியும். வெப்பத்தைக் கொண்டு மதிப்பிடுவதென்றால் இந்தக் கரிக் கட்டி சாதாரணக் கரியைக் காட்டிலும் ஒன்றரை மடங்கு வெப்பம் தருகிறது. விறகைக் காட்டிலும் மூன்றரை மடங்கு தருகிறது!''

''அப்படியானால் இது மற்றெல்லா எரி பொருள்களையும்விடச் சிக்கனமானதுதான்!''

''இதற்குத்தான் உங்கள் பேரப் பிள்ளையிடம் முட்டிக் கொண்டேன், இந்த 'லிக்கோ' கரியை வாங்குங்கள் என்று! இந்தக் காலத்து நாகரிகத்துக்கேற்ப அதை வாங்குகிறேன், இதை வாங்குகிறேன் என்று தள்ளிப் போட்டுக்கொண்டே வந்தார். இன்றைக்குத்தான் அதற்கு நல்ல வேளை பிறந்திருக்கிறது. இந்தக் கரிக் கட்டிகளை நிறுத்து 40 கிலோப் பைகளாகத் தைத்து ஓரிடத்தில் கொண்டு அடுக்குகிற காரியத்தைக் கூட இயந்திரங்களே செய்கின்றனவாம்! வருஷம் ஒன்றுக்கு மூன்று லட்சத்து எண்பதினாயிரம் டன் கரிக் கட்டிகள் தயாராகுமாம். இப்பொழுது தமிழ் நாட்டுக்கு மட்டும் விநியோகம் செய்கிறார்களாம். நாளடைவில் தென்னகத்தின்

நான்கு ராஜ்யங்களிலுமே வேண்டிய அளவு இந்த எரிபொருள் கிடைக்குமாம்.''

''வியாபார நோக்கத்தையே குறியாகக் கொண்டு, காஸ், கிரோஸின் போல விலையை உயர்த்தாமல் இருப்பார்களானால், எந்தத் தரத்தில் உள்ள மக்களாக இருந்தாலும் இதை வாங்கி உபயோகிப்பார்கள். போகப் போக என்ன செய்வார்களோ, யார் கண்டார்கள்?'' என்றாள் பாட்டி.

''உபயோகிப்பவர்களைப் பொறுத்தவரையில் விலையை ஏற்ற மாட்டோம் என்றுதான் உறுதியளிக்கிறார்கள். அவர்கள் அளிக்கும் உறுதியை இப்போதைக்கு நாம் நம்ப வேண்டியதுதான். அதோடு மக்களின் சௌகரியத்தை முன்னிட்டு 20 கிலோ மூட்டைகள் மார்க்கெட்டுக்கு வரப்போகின்றன என்றும் கூறுகிறார்கள்'' என்றான் கருணாகரன் லிக்னோ கரியில் சூடேறிய காப்பியை ரசித்துப் பருகிக்கொண்டே.

''இந்தக் காப்பியில் கரி வாசனை — கிரி வாசனை எதுவும் தெரியவில்லையே! நன்றாகத் தானே இருக்கிறது!'' என்றாள் பாட்டியும்.

''முக்கியமாக இந்தக் கரியைத் தண்ணீர் ஊற்றி அணைக்கக் கூடாது. ஏதாவது ஒரு பாத்திரத்தைப் போட்டு மூடி அவிக்க வேண்டும். அப்போதுதான் மீண்டும் மீண்டும் உபயோகிக்க இயலும்!''

''அந்தக் காலத்திலே நாங்களும் அப்படித் தானடி செய்திருக்கிறோம், குழந்தாய்!'' என்ற பாட்டி, ''அந்தக் காலத்திலே அவர், நெய்வேலி ரயில்வே ஸ்டேஷனிலிருந்தபோது அது சின்ன ஊர். முந்திரித்தோட்டம் நிறைய உண்டு. இப்பொழுது எப்படி இருக்கிறதோ? பார்க்கணும் என்றுகூடத் தோன்றுகிறது எனக்கு!'' என்று தன் ஆசையை நாசூக்காக வெளியிட்டாள்.

''போய்விட்டு வந்தால் போயிற்று. உங்கள் பேரப்பிள்ளை கட்டாயம் அழைத்துக் கொண்டு போவார்!'' என்றாள் பத்மா.

''பாட்டிக்கு நெய்வேலிப் பயணம் கிடைத்ததாமே?''—விசாலாட்சி கேட்டாள்.

''என்னவோ, அம்மா! காசி ராமேசுவரம் போகிறது அந்தக் காலத்திலே பூர்வ ஜன்ம புண்ணியம் என்பார்கள். என்னைக் கேட்டால் இந்தக் காலத்திலே நெய்வேலியைப் போன்ற இடங்களையும் காணக் கொடுத்து வைத்திருக்க வேண்டும் என்றுதான் சொல்லுவேன். எங்களவர் வேலை பார்த்த அந்தக் காலத்து நெய்வேலியாகவா இருக்கிறது? இப்போது காண்கிற நெய்வேலி நிலவேறு மயனே சிருஷ்டித்த குபேரப்பட்டணமாக அல்லவா தோன்றுகிறது! நேர் நேர் பாதையாக நாற்சாரகப் போகும் தெருக்களிலே எந்தத் தெருவுக்கு எப்படிப் போகிறது என்பது பெரும் பிரச்னையாகத்தான் இருக்கும்போலத் தோன்றுகிறது. பட்டணவாசம் பிடித்து விட்ட ஜனங்களைப் பட்டணத்தை விட்டு நாட்டுப்புறத்திலே போய் இரு என்று சொன்னால் கேட்பார்களா? நாட்டுப்புறத்தையும் நகர்ப்புறம்போல் ஆக்கினால்தானே போவார்கள்? அதனால்தான் நெய்வேலிப் புறநகர அமைப்பு சிறந்த நகரங்களையெல்லாம் தூக்கியடிப்பதாக அமைந்திருக்கிறது! வேலை செய்கிறவர்கள் நன்றாக வேலை செய்ய வேண்டுமென்றால், அவர்களுக்கு எல்லா வசதிகளும் செய்து கொடுத்தால்தானே முழு மனத்தோடு தங்கள் அலுவல்களில் ஈடுபடுவார்கள்? இதனை உணர்ந்து எல்லா வசதிகளும் செய்து கொடுத்திருக்கிறார்கள். குற்றங்குறைகள் இருந்தால் அவற்றை நிவர்த்திக்கவும் முயல்கிறார்கள்.''

''அதிருக்கட்டும். அங்கே நீங்கள் என்ன என்ன பார்த்தீர்கள்?''

''அதுதான் சொல்லிக் கொண்டு வருகிறேனே! ஒரு பெரிய காரியத்தைப் பார்த்து மலைப்புத்தட்டினால் நாம் என்ன நினைப்போம் அல்லது சொல்வோம்?''


''இது மனிதனால் ஆகாத காரியம்; ராக்ஷஸ வேலை என்போம்!''

''சரியாகச் சொன்னாய். அசுர சாதனை தானடி அது. எண்சாண் உடம்புக்குள் அடங்கியிருக்கிற மனிதன் செய்திருக்கும் பெரிய சாதனையைக் கண்டபொழுது நிசமாகவே என் இருதயம் பூரித்துவிட்டது. அத்தனை ஆழத்திலே நிலக்கரியைப் பார்த்த பொழுது உள்ளுறை பொருளாக உள்ள ஆண்டவன் எத்தனை சக்தி வாய்ந்தவன் என்பதும் தெரிந்தது. தன்னைப் போலவே உள்ளுறை பொருளாகப் பூமிக்கடியில் எத்தனை கனிச் சுரங்கங்களைப் படைத்திருக்கிறான், பார்! பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்னாலே அங்கே மரக்காடுகள் இருந்திருக்க வேண்டுமாம். இயற்கையின் உற்பாதங்களால் சதுப்பு நிலத்தில் உள்ள அம்மரக் காடுகளை மண் மூடி மேடிட்டிருக்க வேண்டுமாம். பூமியில் புதையுண்ட மரங்கள் இறுகி மடித்து இப்படி நிலக்கரிப் படுகையாகி இருக்க வேண்டுமாம்.''

''இந்த விவரங்கள் எல்லாம் உங்களுக்கு யார் சொன்னார்கள்?''

''ஆண்டவன் படைத்துவிட்ட மானிடக் குஞ்சுகள்தான்; ஆண்டவனின் இருப்பையே கண்டு பிடிக்க முயலும் மானிடர்கள்தான்! நெய்வேலியிலே ஐந்தரைசதுர மைல் விஸ்தீரணத்துக்குப் பழுப்பு நிலக்கரி இருக்கிறதென்றும், ஏறக் குறைய இருபது கோடி டன் நிலக்கரி கிடைக்கக் கூடும் என்றும் இந்திய நில உட்கூறு ஆராய்ச்சிக் கழகம் கண்டு பிடித்துக் கூறியதாம்!''

''படித்து ஆராய்ச்சி புரிந்தவர்கள் இதைக் கூறியிருக்கிறார்கள். இதில் ஒன்றும் வியப்பில்லை. நம் நாட்டில் இத்தகைய படிப்புப் படிக்காதவர்களே கூட அநுபவத்தின் உதவி கொண்டு பல விஷயங்களைக் கூறி விடுகிறார்கள். உதாரணத்துக்குச் சொல்கிறேன். எங்கள் வீட்டுக் கொல்லையில் கிணறு தோண்டியபோது நடந்தது. நீர் கண்ட இடத்தில் வட்டா வைத்து, படை இறக்கி இருபதடி ஆழம் தோண்டிய பிறகும் நீர் வரவில்லை. எல்லோரும் எங்கே நீர் வரப்



எனக்கு இரண்டு கோலி, ஒரு பம்பரம், ஒரு காற்றாடி கொடு. நான் உனக்கு ஒரு பாரி மிட்டாய் தருகிறேன்

போக்கிரிப் பயலைப் பாருங்கள்! அதனால் என்ன, சுவை மிக்கதும் புஷ்டிசத்து நிறைந்ததுமான பாரி மிட்டாய்கள் பெரியவர்களுக்கும் குழந்தைகளுக்கும் உகந்ததாக இருக்கின்றனவே. நீங்கள் இருக்கும் இடம் எதுவானாலும், செய்யும் காரியம் எதுவானாலும் நிச்சயம் பாரி மிட்டாயை விரும்புவீர்கள். அவற்றைச் சில்லறையாகவோ, வண்ணச் சித்திரம் கொண்ட டின்களாகவோ வாங்கி, பிறருடன் ருசித்து மகிழுங்கள். பாரி மிட்டாய் இருக்கையில் வாழ்க்கை மேலும் இனிக்கிறது.

Parry's

பாரிஸ் உயர்தர மிட்டாய்களைத் தயாரிப்பவர்கள்

ருசித்திருக்கிறீர்களா? மில்க் டாப்பி—சூப்பர் பட்டர்ஸ்காட்ச்
லாக்டோ பான் பான்ஸ்—ஜிஞ்சர் கேப்ஸ்

பாரிஸ் கன்பெக்‌ஷனரி லிமிடெட் மதராஸ்

PRS-1156

போகிறது என்று எண்ணி விட்டார்கள். அப்பொழுது கிணற்றுக்குள்ளிருந்து மண் எடுத்தவன், 'கரித் துண்டு கிடைச்சிருக்குது சாமி! அதனால் இங்கே கட்டாயம் தண்ணீர் உண்டு' என்று புதிர் போட்டது போலப் பேசினான். அவன் சொன்ன முகூர்த்தமோ என்னமோ, இன்னும் இரண்டடி ஆழம் இறக்கியதும் நீர் சலசலத்து ஊறி வரத் தொடங்கியது. காரணம் கேட்டபோது அவன் சொன்னான். 'மரத்தின் வேர் இத்தனை தொலைவு இறங்கியிருக்கிறது. நீரைத் தேடித்தானே வேர் ஓடும்? அதனால்தான் கட்டாயம் நீர் உண்டு என்று தைரியமாகக் கூறினேன் என்றான்!''



''என் மாமியாருக்குத் தொண்டையிலே ஆபரேஷன் பண்ணவேண்டு மென்றீர்களே! தவணை முறையிலே நான் பணம் தரேன். நீங்களும் கொஞ்சம், கொஞ்சமாகவே ஆபரேஷன் செய்யுங்களேன் டாக்டர்!''

''உண்மைதானே? அறிவும் அநுபவமும் ஒத்துழைத்தால் ஆகாத காரியம் ஏது? 1959ம் ஆண்டு முதல், விசேஷச் சுரங்க இயந்திரங்களைப் பயன்படுத்தி இந்தக் கோடிக்கு அந்தக் கோடி மண்ணைப் புரட்டி அப்புறப் படுத்தியிருக்கிறார்கள். மலை போலக் குவிந்திருக்கும் மண்ணையும், வாமனனாக நின்று பணியாற்றும் மனிதனையும் காணும்போது மலைப்பாகவே இருக்கிறது. படிப்படியாகக் காட்சி தரும் பாதைகள் பெரும் லாரிகள் ஏறி இறங்கிப் போவதற்கு வாய்ப்பாக இருக்கின்றன. அகலமும் நீளமும் கொண்ட இந்தச் சுரங்கத்தை மேலே நின்று பார்த்தால் கிடுகிடு பாதாளமாகத் தோன்றுகிறது. தூரதர்சினியைக் கொண்டு பார்த்தால் ஆட்கள் பலர் இயந்திரங்களோடு போட்டி போட்டுக் கொண்டு வேலை செய்துகொண்டிருப்பதைக் காணலாம். இல்லாவிட்டால் கட்டெறும்போ கறையானோ ஊர்வது போன்ற பிரமைதான் உண்டாகும். பார்க்கப் போனால், இச்சுரங்கத்தில் பணியாற்றுகிறவர்கள் நிலக்கரியைக் கறையானைப் போன்ற சுறுசுறுப்புடன் அரித்தே எடுக்கிறார்கள். அத்தனை ஆழத்திலிருந்து நிலக்கரியை மேலுக்கு எடுத்து வரும் பணியைக் கன்வேயர்கள் என்னும் பொருட் கடத்திகள் புரிகின்றன. மணிக்கு 1050 டன் நிலக்கரியை இவை எடுத்துச் செல்லுமாம்!''

''இப்படி நிலக்கரியைத் தோண்டி எடுக்கிறார்கள் என்கிறீர்களே, அவ்விடத்தில் நிலக்கரி தீர்ந்த பின் அப்படியே பள்ளம் பள்ளமாகவே விட்டு விடுவார்களோ?''

''சே! மலையாகக் குவிந்து கிடக்கும் மண்ணைப் புரட்டிப் பள்ளத்தை நிரப்பி விடுகிறார்கள். சமதளத்துக்கு உயர்த்திய பின் இந்த நிலத்தை விவசாயத்துக்குப் பயன்படுத்த யோசித்து வருகிறார்கள்!''

''ஆமாம். இத்தனை ஆழத்திலும் தண்ணீரே கிடையாதா?''

''நன்றாகச் சொன்னாயே! நிலக்கரிக்கு அடியிலே ஏகத் தண்ணீர். கொஞ்சம் அயர்ந்துவிட்டால் போதும், நிலக்கரிப் படுகையையே நீர் மூழுக்காட்டி விடும். அதனால் நீரை மேலே எழும்ப விடாமல் குழாய்க் கிணறுகள் இறக்கி இரவு பகல் இருபத்து நான்கு மணி நேரமும் நீரை வெளியேற்றிய வண்ணம் இருக்கிறார்கள். இதன் பலனாக நெய்வேலிப் புது நகரத்துக்குச் சிறிதும் தண்ணீர்ப் பஞ்சமே கிடையாது. நீர் இறைக்கும் வேலையும், நிலக்கரி எடுக்கும் வேலையும் இப்படி மும்முரமாக நடந்து கொண்டிருக்கின்றன. நிலக்கரிச் சுரங்கத்தின் இந்த முனைக்கும் அந்த முனைக்கும் எங்களைக் காரிலேயே அழைத்துச் சென்று காட்டினார்கள். நிலக்கரிச் சுரங்கத்தின் அடிவரை நடந்து போய்ப் பார்க்க வேண்டும் என்று எனக்கு ஆசை. 'அதெல்லாம் நடக்க முடியாது பாட்டி, கால் கடுத்துவிடும்' என்று கூறிவிட்டான் என் பேரப் பிள்ளையாண்டான். 'இந்தக் கால் காளி கோபுரத்தையும் முழங்கால் முடிச்சு மலையையும் திருப்பதிக்குப் போன போது ஏறி இறங்கியே கடந்து வந்திருக்கிறது அப்பா!' என்று எவ்வளவோ சொல்லிப் பார்த்தேன். அவன் கேட்கவில்லை. 'உன்னைப் பொறுத்தவரையில் சரி; ஆனால் என் கால்கள் கெஞ்சுமே!' என்று கூறிவிட்டான். மெய்தானே, அவனொரு குழந்தை. எனவே, நான் என் ஆசையை அடக்கிக் கொண்டுவிட்டேன். காசிக்குப் போகிறவர்கள் கங்கை கொண்டு வருவது போலப் பத்மா மட்டும் நெய்வேலியின் ஞாபகார்த்தமாக ஒரு பச்சை நிலக்கரிக் கட்டியை எடுத்து வந்திருக்கிறாள்!''

''அப்புறம் என்ன பார்த்தீர்கள்!''

''நிலக்கரிச் சுரங்கத்திலிருந்து கார் ஏறி இன்னொரு முனைக்கு வந்தோம், அனல் மின்சார நிலையத்தைப் பார்க்க.''

''அனல் மின்சார நிலையமா? அது என்ன?''

''இந்த மின்சாரம் இருக்கிறதே, தெரியுமோ, இல்லையோ? இது மூன்று வகையாகத் தயாரிக்கப்படுகிறது. நீரைத் தேக்கி நீரின் வீழ்ச்சியைக் கொண்டு இயந்திரங்களை இயக்கி மின்சார உற்பத்தி செய்வது ஒரு முறை. அணுக் கதிர்களைக் கொண்டு இயந்திரங்களை இயக்கி மின்சாரம் தயாரிப்பது இன்னொரு முறை. அனலைக் கொண்டு நீராவி எழுப்பி மின்சாரம் தயாரிப்பது மற்றொரு முறை. இங்கு நிலக்கரி ஏராளமாகக் கிடைக்கிறதா? அதனால் இங்கே அனல் மின்சார நிலையத்தை நிர்மாணித்திருக்கிறார்கள்.

''நாங்கள் லிஃப்ட் ஏறி பன்னிரண்டாவது மொட்டை மாடிக்குப் போனோம். உச்சிப் பிள்ளையார் கோவிலிருந்து திருச்சிராப்பள்ளி நகரத்தைப் பார்த்து மகிழ்வது போல் நெய்வேலி நகரத்தைப் பார்த்து ரசித்தோம்.

ஏழெட்டு ஆண்டுகளுக்குள் எத்தனை பெரிய நகரம் உருவாகி விட்டது என்று எண்ணி வியந்தோம். வான வீதிக்குப் புகை அனுப்பிக் கொண்டிருந்த ஆறு புகை போக்கிகளைப் பார்த்துவிட்டு இடையே ஒரு மாடிக்கு இறங்கி வந்தோம். அப்பப்பா! அங்கேதான் எத்தனை பெரிய பூதாகாரமான கொதி கலன்கள்! எத்தனை பெரிய நீராவி இயந்திரங்கள்! இவற்றை இயக்கும் மனிதர்கள் உருவத்தில் சிறியவர்களாயினும் எத்தனை பெரியவர்கள் என்பதை அறிய முடிந்தது. அலாவுதீனையும், அற்புத விளக்கில் வரும் இராட்சதனையும் எண்ணிப் பார்த்தேன். அலாவுதீனின் இச்சைக்கு அரக்கன் ஆடியது போலவே இந்த மாபெரும் இயந்திரங்களும் மனிதனின் ஆற்றலுக்கு அடங்கி நடக்கின்றன! இங்கு நிறுவப்பட்டிருக்கும் ஆறு இயந்திரங்களும் இயக்கித் தரும் மின் சக்தி ஏறக்குறைய நானூறு மெகாவாட் என்கிறார்கள். ஒரு யூனிட் நமது தமிழக மின்சார சப்ளைக்காக இணைக்கப்பட்டிருக்கிறது என்றும் சொன்னார்கள்.

"வானம் பொய்த்து விட்டால், மின்சார வெட்டுப் பேச்சு அடிபடுகிறதல்லவா? இந்த அனல் மின்சார நிலையங்கள் சரிவர இயங்கி உதவுமானால் அந்தத் தட்டுப்பாடு நீடிக்காதோ என்னவோ? இது ஒரு இனிய கற்பனை. செயல் முறையில் பலன் தெரிய வேண்டும். இப்படி எண்ணி நீராவிக் குழல்களையும் கொதிகலன்களையும் அண்ணாந்து அண்ணாந்து பார்த்த எனக்குக் கழுத்து வலி கண்டுவிட்டது. ஆனால் கண்கள் சளைக்கவில்லை. பார்க்கப் பார்க்கப் பார்த்துக் கொண்டே இருக்கவேண்டும் என்று தோன்றியது.

"மாலைக் கதிரவன் மலை வாயிலில் வி ்ந்து கையெழுத்து மறையும் வேளையிலே, இன்னுமோர் இடத்தைச் சுட்டிக் காட்டிக் கேட்டேன், 'அதுவும் என்ன மின்சார நிலையமோ?' என்று. அங்கே ஒரு புகை போக்கி புகையைக் கக்கிக் கொண்டிருந்தது. 'இல்லை, இது உரத் தொழிற்சாலை. இங்கு பெரும்பான்மையாகத் தயாராகப் போகும் உரத்துக்கு 'யூரியா' என்று பெயர். 46 சத விகிதம் இதில் நைட்ரஜன் கலந்திருக்கும் என்றார்கள். நானும் எல்லாம் தெரிந்தவன் போல் தலையாட்டி வைத்தேன். அவர்கள் பேச்சிலிருந்து ஒன்று மட்டும் தெரிந்தது—உணவுப் பஞ்சத்தைத் தீர்க்க இது ஓரளவு உதவக் கூடும் என்று.

"இங்கு கிடைக்கும் சீனக் களிமண்ணைச் சுகாதா ப் பீங்கான் பாண்டங்கள் தயாரிக்கும் வண்ணம் சுத்திகரித்து வர்த்தக ரீதியில் விநியோகிப்பதற்கான ஏற்பாடும் செய்திருக்கிறார்களாம்.

"கட்ட கரித் தொழிற்சாலையில் அதாவது 'லீக்கோ' தயாராகும் இடத்தில், தார், எண்ணெய், அமிலம் போன்ற பல பொருள்களும் கிடைக்கின்றனவாம்.

"நெய்வேலிப் பகுதியில் கிடைக்கும் மூலப் பொருள் ஒன்று. ஆனால் அதைச் சார்ந்து கிடைக்கும் பயன்களோ ஏராளம். இதை எண்ணும்பொழுது கோயில் திருவிழாவோடு ஒப்பிடத் தோன்றுகிறது. சின்னஞ் சிறிய ஊராயிருந்தாலும் தேர் திருவிழாக் காலங்களில் எத்தனை கடை கண்ணிகள் ஏற்பட்டு விடுகின்றன! அதே போல் ஒரு நிலக்கரியைச் சார்ந்து இங்கே எத்தனை தொழில்கள் பெருகி விட்டன! இந்தத் தொழில் வளத்தைப் பெருக்க ருஷ்யா, ஜெர்மனி, இத்தாலி போன்ற பல நாடுகள் முன்வந்திருப்பதை நோக்கும்பொழுது உலகம் முழுவதையும் ஒரு குடும்பமாக நினைக்கும் பாரதத்தின் பெருமையும் புலனாகிறது. இந்தியாவின் சுபிட்சப் பாதையில் செல்லும் இந்த நெய்வேலித் திட்டத்துக்கு ஏறக் குறைய 141 கோடி ரூபாய் செலவிட்டிருக்கிறார்கள்."

"இத்தனை விவரங்களும் உங்களுக்கு எப்படித் தெரிந்தன, பாட்டி?" — வியப்போடு கேட்டாள் விசாலாட்சி.

"எல்லாம் குழந்தைகள் பேசிக்கொண்டிருந்ததைக் கேட்டுக் கேட்டுத்தான். முக்கியமாக ஸ்ரீ வேங்கடராமனைக் குறிப்பிட வேண்டும். பளிச்சென்று புரியும்படியாகத் தேவையானதை மட்டும் சொல்லி நிறுத்திக் கொண்டார். அவர் அங்கே பொதுநலத் தொடர்பு அதிகாரியாம்! இனிய சுபாவம். யார் யாருக்கு எப்படி எப்படிச் சொல்லணும் என்பதை நன்றாகப் புரிந்து கொண்டிருக்கிறார். புரியும்படியாகச் சொல்வதற்கு இப்படி ஒருவர் வேண்டியது தான் என்று எண்ணிக்கொண்டேன். ஆனால் ஒரே ஒரு குறை!"

"என்ன?"

"இத்தனை பார்த்தும், மகா கவி கம்பர் எழுதியிருக்கிறாற் போல, 'தோள் கண்டார் தோளே கண்டார்' என்ற கதையாகிவிட்டது. எல்லாவற்றையும் நன்றாகச் சுற்றிப் பார்த்து வர இன்னுமொருதடவை போய் வர வேண்டியதுதான்!"

"என்ன பாட்டி இது! காசி ராமேசுவரம் கூட நீங்கள் இரண்டு தடவை போயிருக்க மாட்டீர்கள் போலிருக்கிறதே!"


"ஒன்றுக் கொன்று இப்படி யெல்லாம் முடி போடாதே. நெய்வேலியும் பாரதத்தின் பெருமைக்குப் பெருமை சேர்க்கிற இடம்தான்!" என்று முடித்தாள் பாட்டி.

உடடாப்பா முதுகை !

"அப்பா! அப்பா!.. இன்னிக்கு தம்பி பாப்பா உன் புதுப் பேனாவை எடுத்து உடைச்சிட்டது அப்பா!...."

"..............."

"உன்னுடைய பேரின் சட்டை இல்லே, அதை அம்மா எவரிசில்



வர் பாத்திரக்காரனுக்குத் தூக்கிக் கொடுத்துட்டானே!......"

"..............."

"ஸ்கூல்லே யிருந்து வரப்போ காதிலே போட்டுக்கிட்டிருந்த அக்காளின் ஜிமிக்கி எங்கேயோ விழுந்து போச்சுப்பா!..."


"..............."

"புதுசா ஒரு சிலேட்டு வேணும்பா... அன்னிக்கு வாங்கிக் கொடுத்தது உடைஞ்சு போச்சு!"

"உதை ராஸ்கல்!.... முந்தா நான்தான் வாங்கிக் கொடுத்தேன். அதற்குள்ளேயா உடைச்சுட்டு வந்து நிக்கிறே!.... கழுதை!......"

இதிலென்ன ஆச்சரியம்!

சுவையும் போஷாககு சக்தியும் நிறைந்த காமதேனு வனஸ்பதியில் தயாரித்த பண்டங்களை எல்லோரும் விரும்புவது இயற்கைதானே!




காமதேனு வனஸ்பதி



வைட்டமின் A, D, கலந்த சிறந்த சமையல் சாதனம்

மேட்டூர் கெமிகல் & இண்டஸ்ட்ரியல்
கார்ப்பொரேஷன் லிமிடெட்
மேட்டூர் அணை R. S. சேலம் ஜில்லா
மானேஜிங் ஏஜெண்டஸ்:
சேஷசாயி பிரதர்ஸ் பிரைவேட் லிமிடெட்

Criterion-MC-617



சேவைக்கு ஒரு சகோதரி

மோனிகா ஃபெல்டன்
— அநுத்தமா

தென்னிந்திய பழக்க வழக்கங்களைச் செவ்வனே பின்பற்றிச் சகோதரியின் பெற்றோர்களுடைய மதிப்பை ஏற்கனவே பெற்றிருந்த மிஸ் பிரேகர் தான் செல்லும் இடங்களில் மிகவும் ஜாக்கிரதையாக நடந்து கொள்வாள். ஒரு வீட்டில் நுழைவதற்கு முன்னால் ஓர் இந்தியப் பெண்ணைப் போலவே தானும் காலணிகளைக் கழற்றிவிட்டுக் காலுறைகளுடன் மட்டிலுமே வீட்டினுள் செல்வாள். கைகுலுக்க முன் வந்து அவள் யாரையும் சங்கடத்துக்கு ஆளாக்க மாட்டாள். தன் இரு கைகளையும் குவித்து மரியாதையாக நமஸ்காரம் கூறுவாள். அனைவரிடமும் மிகவும் சரளமாகவும் இனிமையாகவும் பழகி வந்தாள். மிகவும் ஆசாரமான குடும்பத்தினருக்குக்கூட அவளைப் பிடித்திருந்தது. ஒரு வீட்டின் சொந்தக்காரர் அவர்களை அறை அறையாக அழைத்துச் சென்று காட்டினார்.

சகோதரி இன்று என்னிடம் சொன்னார்: ''முதலில் அவர் மிகவும் சந்தோஷமாகவே இருந்தார். நாங்கள் எல்லா அறைகளையும் பார்த்து விட்டுக் கடைசியில் சமையலறைப் பக்கமாகப் போகும் போதுதான் அவர் ஏதோ பயப்படுவது தெரிந்தது. எனக்கு விஷயம் புரிந்து விட்டது. எங்களுக்கு வீட்டை வாடகைக்கு விடுவதில் அவருக்கு விருப்பம் இருந்தது. அதனால் மிஸ் பிரேகரின் மனம் நோகத் தாம் பேசி விடக் கூடாதே என்று அஞ்சினார். அதே நேரத்தில் அவள் சமையல் அறைக்குள் கால் வைத்து விடுவாளோ என்றும் பயந்தார். மிஸ் பிரேகர் இலேசாகச் சிரித்துக் கொண்டிருந்தாள். அவளை நன்றாகத் தெரிந்து வைத்திருந்த எனக்கு அவள் என்ன நினைத்துக் கொண்டிருக்கிறாள் என்பது புரிந்தது. நாங்கள் சமையல் அறைக் கதவை அணுகியபோது, அந்த மனிதரைப் பார்த்து மிஸ் பிரேகர் மிகவும் இனிமையான குரலில், ''கவலைப்பட வேண்டாம்! நானும் பிராமணப் பெண்தான்'' என்றாள்!

இப்போதும் இச்சம்பத்தை நினைத்த ஸிஸ்டர் அண்ணாந்து நோக்கிவிட்டுச் சிரித்தார். ''இதில் வேடிக்கை என்னவென்றால் அவள் உண்மையிலேயே அப்படித்தான்! ஏனென்றால் அவள் ஓர் ஐரோப்பியப் பெண்ணாகவே ஒரு போதும் நடந்து கொண்டதில்லை. பழக்கம் காரணமாக எல்லா விஷயங்களிலும் முழுக்க முழுக்க எங்களைப் போலவே இருந்தாள்!''

நான் கேட்டேன்: ''வீடு என்ன ஆயிற்று? அதை வாடகைக்கு எடுத்துக் கொண்டீர்களா?''

''இல்லை. அது மிகவும் சிறிதாக இருந்தது.''

டி. பி. கோயில் தெருவில் இருந்த அந்த வீட்டைக் காலி செய்வதற்குச் சமயம் வந்து விட்டது. ஆயின், வேறு வீடு கிடைக்கவேயில்லை. சகோதரி நம்பிக்கை இழந்தவளாய், வீட்டுக்காரருக்கு எழுதிக் கேட்டாள், இன்னும் ஒரு மாதத்துக்காவது அங்கு தொடர்ந்து தங்கியிருக்க அனுமதி அளிக்கும்படி. அவர் அது சௌகரியப்படாது என்று பதில் எழுதி விட்டார். அவர் குடும்பத்துடன் உடனே சென்னைக்கு வருவதாக இருந்தார். வந்ததும் அவர்களுக்கு வீடு தேவைப்படுமாம்.

இனி, செய்யக் கூடியது ஒன்று தான் இருந்தது. சகோதரி சித்தி, பெண்கள் எல்லோரும் தங்கள் தங்கள் பெட்டி படுக்கைகளை எடுத்துக் கொண்டு எதிர்ப் பக்கத்திலிருந்த பள்ளிக்கூடத்துக்கே போய்விட வேண்டியதுதான். விடுமுறை நாட்களில் மாணவிகளில் முக்கால்வாசிப் பேர்கள் தத்தம் குடும்பத்துடன் இருக்கப் போய் விடுவார்கள். அப்போது சகோதரிக்கும் பிரேகருக்கும் வேறு வீடு தேடுவதற்கு அதிக அவகாசம் கிடைக்கும். கொஞ்சம் பரவலாகத் தேடினால், அதிர்ஷ்டம் அடித்து ஒரு வேளை வீடு கிடைக்கலாம் என்று அவர்கள் நம்பினார்கள்.

6

பள்ளிக்கூடம் நிரம்பி வழிந்ததால், ஸிஸ்டர், சித்தி மற்றும் இளம் விதவைகளுக்கென்று தனியாக ஒரே ஒரு அறையைக்கூட ஒதுக்கி வைக்க இயலவில்லை. பெண்கள் தங்களுடைய பெட்டிகளையும் பாய்களையும் கிடைத்த இடங்களில் எங்கெங்கு முடிந்ததோ அங்கெல்லாம் அடுக்கி வைத்தனர். இரவுகளில் அநேக வகுப்பறைகள் படுத்துக் கொள்ள உபயோகிக்கப்பட்டன. காலையில் எல்லோருமாகச் சேர்ந்து மற்ற மாணவிகள் வருவதற்குள் அறைகளை ஒழித்து அனைத்தையும் ஒழுங்காக எடுத்து வைத்து விடுவார்கள்.

அந்தக் கட்டிடத்தின் பின்புறத்தில் வெகுநாட்களாக உபயோகப்படுத்தப் படாமல் ஒரு பாழடைந்த சமையலறை இருந்தது. குளிப்பதற்குச் சௌகரியமான அறை ஏதும் இல்லை. குளிக்கவும் குடிக்கவும் கொல்லையிலுள்ள ஓர் இருண்ட கிணற்றிலிருந்து நீர் எடுக்க வேண்டி யிருந்தது. யானைக் காலுடன், இடையருது மிகவும் கஷ்டப்பட்டுக் கொண்டிருந்த சித்தி, இந்த மாதிரி இடைஞ்சலான இடத்தில் குடித்தனம் செய்வதைப் பற்றிச் சிரித்து வேடிக்கையாகப் பேசினாள். அவள் எதைப் பற்றியும் குறை கூறி யாருமே என்றும் கேட்டதில்லை.

சில பெரிய பெண்கள் முணுமுணுப் பார்கள். ஆனால் சகோதரியின் காது பட அவ்வாறு செய்ய அவர்களுக்குத் துணிவு கிடையாது. தாங்கள் தங்கள் வீட்டோடு இருந்திருந்தால் அனுபவித்திருக்கக் கூடிய துன்பங்களை எண்ணிப் பார்க்கையில் அங்கிருந்து மீண்டு வந்து இங்கு படும் சிரமங்கள் அப்படி ஒன்றும் பெரிதல்ல என்பதைத் தன் முக பாவத்தினாலேயே சகோதரி தங்களுக்கு உணர்த்தி விடுவாள் என்பது அவர்களுக்குத் தெரியும். ஆனால் வாய் விட்டு இவ்வாறு கூறவே மாட்டாள்.

சின்னப் பெண்கள் ரொம்பவும் சந்தோஷமாக இருந்தார்கள். சீக்கிரமே பள்ளிக்கூட ஹாலில் சாப்பாட்டை முடித்துக் கொள்வார்கள்; அவ்விடத்தையெல்லாம் சுத்தம் செய்ய உதவுவார்கள். இதற்கெல்லாம் வருத்தப்படவோ, அலுத்துக் கொள்ளவோ மாட்டார்கள். ஏனெனில் இந்த வேலைகளை அவர்கள் செய்ய வேண்டியிருந்ததால் அதற்கேற்ப அவர்கள் காலையில் படிக்க வேண்டிய நேரம் குறைந்திருந்தது. ஆரோக்கியமான உணவு அவர்களுக்குத் தாராளமாகக் கிடைத்தது. பொரித்த அப்பளாம்தான் பார்வதியைப் போன்ற சிலருக்குப் பிடிக்கும். கீரையே பிடிக்காது என்பார்கள் சிலர். சித்தி அவர்கள் இஷ்டப்படியெல்லாம் ஆடி, அவரவர்களுக்குப் பிடித்ததைச் செய்து போட்டாள்.

எல்லோரும் ஆரோக்கியமாக இருந்தார்கள். திருவல்லிக்கேணியில் டைபாய்டு ஜுரம் பரவியபோது விடுதிப் பெண்களில் ஒருவருக்குக் கூட ஜுரம் வரவில்லை. இதற்கு முக்கிய காரணம் அவர்களுக்குப் போதிய உடற்பயிற்சியும், சுத்தமான காற்றும் கிடைத்ததுதான். ஊராரின் அநாகரிகமான வம்புப் பேச்சுக்கும் பண்பற்ற பார்வைக்கும் பயப்படாமல், அந்தப் பெண்களைக் கடற்கரை வரை மாலையில் அழைத்துச் செல்வதென்று வெகு நாட்களுக்கு முன்பே சகோதரியும், மிஸ் பிரேகரும் தீர்மானித்து விட்டிருந்தனர்.

பென்ட்லண்ட் துரைக்கு முன்னால் இருந்த சென்னை கவர்னர்களுள் ஒருவர் கடற்கரைச் சாலைக்கு மெரீனா

என்று பெயரிட்டிருந்தார். விதவைகள் இல்லத்திலிருந்து பத்து நிமிஷ நடை தூரத்தில் அது இருந்தது. அப்பெண்கள் இருவர் இருவராக வரிசையாகக் குனிந்த தலை நிமிராமல், தூக்கத்தில் நடப்பவர்களைப்போல் நேராகச் செல்வார்கள். அவர்களுடன் சித்தியோ, சகோதரியோ அல்லது மிஸ் பிரேகரோ வருவார்கள். சிலசமயம் மூவருமே துணை வருவதுமுண்டு.

அந்நாட்களில் அமாவாசை, பௌர்ணமி தினங்களிலும், விடுமுறை நாட்களிலும் யாரேனும் பிரசித்தி பெற்றவர்கள் பேசப் போவதாக அறிவிக்கப்படும்போதும் கடற்கரைக்குக் கூட்டம் வரும். இதர தினங்களில் மிகச் சிலரே செல்வார்கள். ஆகையினால் அந்தப் பெண்கள் தெருவைக் கடந்து மணற்பரப்பில் இறங்கியவுடன் சகஜமாகத் தலைநிமிர்ந்து நடக்க அனுமதிக்கப்படுவார்கள்.

தொடுவானத்தைப் பார்த்துக் கொண்டு நிற்கும்போது—மெல்ல இருள் சூழ்ந்து வருவதால் கிழக்கே மங்கலாகிக் கொண்டு வரும் நீல வானத்துடன் கடல் இணை சேரும் இடத்தை நோக்கியபடி நிற்கையில் அவர்களுக்குக் கவிஞனுடைய கூற்று ஒப்புக்கொள்ள முடியாத ஒன்றாகத் தோன்றும். பல தரப்பட்ட சூழ்நிலைகளைக் கொண்டதும் அழகானதும் புதுமையானதுமான இவ்வுலகை வருத்தத்தின் இருப்பிடமாக அவர்களால் கருத முடியவில்லை. பரந்த உலகம் ஒளி பொருந்தியதாகவும், எதிர்கால ஆனந்தத்தைப் பறைசாற்றுவதுபோலவும் தோற்றமளித்தது.

பெரிய பெண்களில் சிலர் தண்ணீருக்கு அருகே சென்று வட்டமாக அமர்ந்து சமுத்திரத்தின் அலைஓசையைக் கேட்டுத் தாங்கள் படித்த மாத்யூ ஆர்னல்டின் கவிதையை நினைத்துக்கொள்வார்கள். அந்தக் கவிதையில் வருகின்றவனும் பாதி மீனாகவும், பாதி மனிதனாகவும் உள்ளவனுமான அந்த மீன் மனிதன் தான் தனித்து விடப்பட்டதால் எழுப்பும் ஏக்கக் குரலொலியைத் தங்களால் கேட்க முடிவது போல அந்தப் பெண்கள் கற்பனை செய்து கொள்வார்கள். சிலர் தண்ணீரின் விளிம்பில் சென்று அலைகள் கரையில் கொண்டு சேர்க்கும் கிளிஞ்சல்கள், சங்குகள், அழகான சிப்பிகள் முதலியவற்றைப் பொறுக்கி எடுப்பார்கள். சிலர் கட்டுமரங்களில் அலைகளிடையே மிதந்து செல்லும் மீனவர்களைப் பார்த்தபடி பேசிக்கொண்டும்



சிரித்துக் கொண்டும் இருப்பார்கள். மாலை ஆகாயத்தின் வெளியில் வண்ணத்துப் பூச்சிகளின் இறக்கைகளைப் போல் தோற்றமளிக்கும் பாய்மரங்களை மீனவர்கள் இறக்குவதையும், படகுகளைச் செலுத்திக் கொண்டு வருவதையும் பார்த்துக் கொண்டிருப்பார்கள்.

சிலசமயம் எல்லோருமாகச் சேர்ந்து ஏதாவது விளையாடுவார்கள். துணிச்சல் உள்ள சிலர் நீச்சல் அடிக்க ஆசைப்படுவார்கள். அவர்களுக்கு நீச்சல் கற்றுக்கொடுக்க ஸிஸ்டருக்கு ஆசைதான். ஆனால் பின்னால் ஈரத் துணியைக் களைந்துவிட்டு உலர்ந்த ஆடையை அணிய மறைவிடம் ஏதும் இருக்கவில்லை. சொட்டச் சொட்ட ஈரத் துணியுடன் நடந்து இல்லத்துக்குத் திரும்பிச் செல்வதும் அசம்பாவிதமாக இருக்கும்.

சகோதரி மெரினா முழுவதும் தன் பார்வையை ஓட விட்டாள்.

வடக்குப்புறத்தில் அஸ்தமன சூரியனின் வெளிச்சத்தில் மாநிலக் கல்லூரியின் செங்கற் கட்டிடம் கறுத்துக் காணப்பட்டது. மாலுமிகள் விடுதியாக இருந்து இப்போது ராணி மேரி கல்லூரியாக விளங்கிய கட்டிடம் சிறிது தூரத்தில் இருந்தது. இன்னும் சில கட்டிடங்கள் தென்பட்டன. ஆனால் அவைகளில் ஏதும் காலியாக இல்லை. சகோதரி திரும்பிப் பார்த்தாள். மண் குடிசைகள் நிறைந்த மீனவர்களின் குப்பத்தை நோக்கி, ''அவர்களைப் போல் வாழ வேண்டும் என்று விரும்ப மாட்டீர்கள் அல்லவா?'' என்று கேட்டாள்.

''இல்லை, இல்லை. அப்படியில்லை...''

''ஆனால், என்ன?''

அதற்குப் பிறகு அந்த அடுத்த கேள்வியைக் கேட்டது யார் என சகோதரிக்கு இன்றைக்குச் சரியாக ஞாபகமில்லை.



''என்னை நீங்கள் கண்டபடி திட்டி விட்டீர்கள். கௌரவப்பட்ட மனிதராக இருந்தால் அதை வாபஸ் வாங்கிக் கொள்ளுங்கள்!''

''முடியாது! நான் கொடுத்தது கொடுத்தது தான். திருப்பி வாங்கிக் கொள்ளும் பழக்கமே எனக்குக் கிடையாது!''

''அப்படியா! அப்ப ஒரு நூறு ரூபாய் கடனுக்கக் கொடுங்களேன்!''

ஒருநாள் தங்களுடைய தற்போதைய வாசஸ்தலமான பள்ளிக்கூடத்துக்குத் திரும்பிச் செல்லும் நேரம் நெருங்கியதும் ஒரு சிறுமி சகோதரியிடம் கேட்டாள்: ''ஸிஸ்டர், நாம் ஏன் இங்கேயே வந்து வசிக்கக்கூடாது?''

எல்லோரும் ஒன்றாகக் கூடி இதற்குச் சகோதரி என்ன பதில் கூறப் போகிறாள் என்று ஆவலுடன் பார்த்தனர்.

''இங்கேயா?'' என்று சகோதரி சிரித்துக்கொண்டே திரும்பக் கேட்டாள். இந்தப் பைத்தியக்காரத்தனமான கேள்விக்கு வேறு என்ன மறுமொழி கூற முடியும்?

''ஆமாம், இங்கேதான்!'' என்று பல பெண்கள் மீண்டும் கூறினார்கள். அவர்களில் சிலர் உற்சாகத்தில் குதித்துக்கொண்டிருந்தார்கள். ''என்ன அழகான யோசனை! ஸிஸ்டர், நாம் இங்கேயே வந்துவிடுவோம்! எப்போதும் இங்கேயே வசிப்போமே!''

''ஸிஸ்டர்'' என்று ஒரு குரல் கிளம்பியது. ''நாம் எல்லோரும் ஏன் 'ஐஸ் ஹவு'ஸில் போய் வசிக்கக் கூடாது?''

''ஐஸ் ஹவுஸா?'' இப்படி விநோதமாக ஒரு பெண்ணுக்குத் தோன்றியதே என்று திகைப்பும் வேடிக்கையுமாகச் சகோதரி மீண்டும் சிரித்தாள். பிறகு குரலில் சற்றுக் கடுமையை வரவழைத்துக் கொண்டு, ''பெண்களே, அசட்டுத்தனமாக உளறுகிறீர்கள்'' என்றாள் தீர்மானமாக.

அந்த அகலமான பாதையின் மறுபுறம் எதிரே உயர்ந்து காணப்பட்ட அந்தக் கட்டிடத்தை நிமிர்ந்து பார்த்தபடியே சிறு பெண்களில் ஒருத்தி ''இது எப்படி அசட்டுத்தனமாகும்?'' என்று கேட்டாள்.

''ஏனென்றால்...''— ஸிஸ்டர் மறுமொழி தந்தாள்: ''அது ஓர் அரண்மனை. அரண்மனைகள் நமக்காக ஏற்பட்டவையல்ல. வாருங்கள், போகலாம். பள்ளிக்குத் திரும்பும் நேரமாகி விட்டது.''

(தொடரும்)

YET ANOTHER FEATHER

Sankar Brand Calcium Carbide-the first make of Indian Calcium Carbide to be exported - has added yet another feather to its cap. It now proudly holds the ISI trademark, another tribute to its superb quality.

With the main use of Calcium Carbide in the manufacture of acetylene gas for welding and various other purposes Sankar Brand Calcium Carbide has made itself indispensable to industry at large.


SANKAR BRAND CALCIUM CARBIDE

SOLE SELLING AGENTS :

V. D. SWAMI & CO. PRIVATE LTD.

Calcutta • Madras • Delhi • Bombay

IS 1040



FDS/VDS-5

குறுநாவல்



“அண்ணை”



மகரிஷி

அது ஒரு பெரிய குடியிருப்புக் காலனி. எதிரெதிராகப் பத்து வீடுகளைக் கொண்ட அந்தக் காலனிக்கு ''லக்ஷ்மி கடாட்சம்'' என்ற பெயர் வழங்கப்பட் டிருப்பதையும், அதில் வாழ்கிற அந்தக் கடாக்ஷமற்றவர்களையும் இணைத்துப் பார்க்கிறவனைப் புத்திசாலி என்று சொல்ல முடியாது.

நூற்று இருபது ரூபாய் சம்பளம் பெறுகிறவன் அந்த ஸ்டோரைப் பொறுத்த வரையில் பணக்கார அந்தஸ்தை இயல்பாகவே பெற்றுவிடுகிறான். அப்படி இரண்டு பணக்காரர்கள் அங்கே உண்டு. மற்றவர்கள் மிக மிகச் சாதாரணப் பிரஜைகள்.

எதிரெதிரே பத்துக் குடும்பங்கள், அதிலே இரண்டு பணக்காரர்கள் என்றுதானே சொன்னேன். அந்த இரண்டு பணக்காரர்களில் ஒருவன் தான் சேதுராமன். மற்றொரு பணக்காரனைப் பற்றி இப்போதைக்கு நமக்கு வேண்டாம்.

'சூரியன்' என்ற தினசரியில் சேதுராமன் ஒரு ப்ரூப் ரீடர். அன்றாடச் செய்திகளைச் சுடச் சுடத் தரும் ஒரு பிரபலமான தினசரி அது. தமிழகத்தில் தனி கௌரவத்தோடு முப்பது நாற்பது ஆண்டுகளாக நிலைபெற்று நிற்கிற பத்திரிகையும்கூட.

பெயர்தான் ஸ்தாபன முறைப்படி 'ப்ரூப் ரீடர்'ரே தவிர ஓர் உதவி ஆசிரியர் செய்கிற வேலையை அவன் செய்வான். அவன் தொழிலைப் பொறுத்த வரையில் அவனளவில் கணிசமான அளவு வேலைகளைத் தெரிந்து வைத்துக் கொண்டிருந்தான். சமயோசிதப்படி பத்திரிகைப்







பத்திகளை நிரப்புவதில் அவளுடைய திறமைக்கு அங்கே நிறைய மதிப்பு உண்டு.

காலை மணி எட்டாகி விட்டது!

குழாயடியில் சண்டை நடந்து கொண்டிருந்தது. அந்தச் சண்டையைக் கண்டு கலங்கி இரக்கத்துடன் கண்ணீர் விடுகிற மாதிரி குழாயிலிருந்து தண்ணீர் வந்து கொண்டிருந்தது.

குடத்தைக் கையில் எடுத்துக் கொண்டு சேது வெளியே வந்தான். குழாய்ச் சண்டையைச் சமாளித்துக் கொண்டு அவனுக்குத் தேவையான தண்ணீரை அவன் எடுத்துக் கொள்ள வேண்டும். அந்த அமளியில் அது சாத்தியமாகுமா! பெண்களுக்கு மத்தியில்......

''என்னண்ணா வேணும்..... தண்ணீரா, அந்தச் சண்டையைப் பார்த்துக் கொண்டு நின்றால் இன்று முழுதும் நிற்க வேண்டியதுதான் நீ. கொண்டா குடத்தை.... நீ இன்னும் குளிக்கலே போலிருக்கிறதே. ஆபீஸுக்கு நேரமாகவில்லையா ?''

அபயக் குரல் கொடுத்த அடுத்த வீட்டு இந்துவைப் பார்த்தான் சேது. அவள் சேதுராமன் கையிலிருந்த குடத்துடன் குழாயடிக்குப் போனாள். அங்கிருந்த சண்டையைக் கொஞ்சம்கூட லட்சியம் செய்யாமல் குடங்களை நகர்த்தி வைத்துவிட்டுத் தண்ணீர் பிடித்தாள். பரபர வென்று நான்கு குடம் தண்ணீர் சேதுராமன் வீட்டுக் குளியலறைக்குள் சென்றது.

இந்துவிடம் அந்த ஸ்டோரில் உள்ளவர்களுக்கு ஒருவித தனிப் பயம் உண்டு. அவளுடன் வாயைக்





கொடுத்து மீண்டவர்கள் அந்தக் காலனியில் யாரு மில்லை. அந்தக் காலனியில் அவள் மதிக்கிற ஒரே யொரு நபர் சேதுராமன்தான்.

''போதுமா, இன்னும் வேண்டுமா ?'' என்றுள் இந்து குடத்தை இடுப்பில் வைத்துக்கொண்டே.

''போதும், இந்து. ரொம்ப தாங்ஸ். அந்தப் பிசாசுகள் ஏதேனும் உன்னுடன் சண்டைக்கு வந்து விடப் போகிறதுகள்!''

''முழியைத் தோண்டி எடுத்துவிடுவேன், யாராவது வாயைத் திறந்தால். என் சேதி தெரியும் அவர் களுக்கு. சண்டை போடக் குழாயடிதான் கிடைத் ததா? கொஞ்சம்கூட வியவஸ்தை இல்லாதவர்கள். காலை நேரம்; வீட்டில் உள்ள ஆண் பிள்ளைகள் அவ ரவர் ஆபீசுக்குப் போகவேண்டாமா? இப்படி ஒரு குடம் தண்ணிக்கு இங்கே குருக்ஷேத்திரயுத்தம் நடந்தால்...?''

பெரிய மனுஷி போல் பாதி சேதுராமனுக்கும், பாதி குழாயடியில் சண்டை போட்டுக் கொண்டிருந் தவர்கள் காதுக்குமாகச் சத்தமிட்டு விட்டுச் சேது ராமன் வீட்டுக்குள் நுழைந்தாள் இந்து.

இந்து போட்ட சத்தத்தைக் கேட்டுக்கொண்டிருந்த எதிர் வீட்டு வால் ஒன்று திண்ணையிலிருந்தபடியே, ''ஒன்ஸ்மோர், ஒன்ஸ்மோர் !'' என்று கத்திவிட்டு விருட்டென்று உள்ளே ஓடிவிட்டது.

சேதுராமனின் வயதான தாயார் அடுப்பில் வேலை யாக இருந்தாள்.

''மாமி, நான் குளிச்சுட்டு மடியாக இருக்கிறேன். உங்களுக்கு ஏதேனும் ஒத்தாசை பண்ணட்டுமா ?'' என்றுள் நிலைவாயிற்படியில் வந்து நின்று கொண்டு. ''வாம்மா ! நீ இல்லாம நான் எதையாவது முழுசாப் பண்ணி யிருக்கிறேனு, சொல்லு.''

தேங்காய்த் துருவியில் ஒரு தேங்காய் மூடி பாதி துருவிய நிலையில் இருந்தது. உட்கார்ந்து அதைத் துருவிக் கொடுத்தாள்.

சேதுராமனின் வீட்டில் இந்து வந்து செய்கின்ற காரியங்கள் அன்றாடம் நிறைய உண்டு. சேதுவின் தாயாருக்குச் சமையலுக்கு உதவி செய்வது, சாமி விளக்கேற்றுவது, சேது சாப்பிட்டு விட்டுப் போனபின்பு சேதுவின் தாயாருக்கு விதரணையுடன் சாதம் போடுவது, பிறகு எல்லாவற்றையும் எடுத்து வைத்து மூடுவது. பிற்பகல் அவன் தாயாருக்குப் புத்தகம் படித்துக் காட்டுவது, மாலை நேரங்களில் அவளுடன் கபாலி கோயிலுக்குப் போவது — இப்படி அதிகமான நேரத்தை அவள் அங்கேதான் கழிப்பாள்.

இந்துவின் அண்ணா விசுவநாதன் ரொம்ப நல்ல குணம் படைத்தவன். விசுவநாதனும், சேதுவும் சிறு வயதிலிருந்தே நண்பர்கள். இந்துவுக்குத் தாய் தந்தையர் இல்லை. அவர்கள் இறந்தபின் ஒரேயோர் அண்ணனை விசுவநாதனின் அரவணைப்பில் இருந்தாள் இந்து. விசுவநாதன் அவளிடம் சிடுசிடுப்பாகவே இருந்ததில்லை. ஆனால் அவனுக்கு மனைவியாக வந்த பரிமளாதான் இந்துவிடம் அன்பாக இல்லை. அன்பாக இல்லாதது மட்டுமல்ல, அவளைச் சரிவரக் கவனிப்பதில்லை. இந்துவின் தேவைகளையோ அபிலாஷைகளையோ அவள் மதித்ததில்லை. யாருமில்லாத குடும்பத்தில் தான் வாழ்க்கைப்பட்டதோடு, இந்து தனக்கும் தன் கணவருக்கும் ஒரு பாரம் என்கிற அளவுக்கு அவள் மனத்தில் நாளுக்கு நாள் ஒரு வேற்றுமை வளர்ந்து, வேர் விட்டிருந்தது. என்றாலும் அண்ணன் விசுவநாதன் இந்துவினிடத்தில் அளவுகடந்த விசுவாசமுள்ளவன்.

விசுவநாதனுக்கு ஒரு பெட்ரோல் கிடங்கில் வேலை. இரவு கிடையாது, பகல் கிடையாது. எந்நேரமும் வேலை. குறிப்பிட்ட நேரத்தில் சென்று திரும்பும் உத்தியோகமல்ல அவன் செய்வது. மாதச் சம்பளம் நூறுக்கும் குறைவு.

ஒரு நாளைக்கு ஒரு வேளைச் சாப்பாட்டை மட்டும் சர்வ சாதாரணமாக ஏற்றுக்கொண்டு இரவு வேளையில் சிக்கனமான சப்பாத்தியோடு நிறுத்திக் கொண்டு, வறுமையைக் கொஞ்சம் கௌரவப்படுத்தி வைத்திருக்கும் இன்றையக் கீழ் வர்க்கக் குடும்பங்களில் அதுவும் ஒன்று.

2

தேங்காயைத் துருவி எடுத்துக் கொண்டு இந்து எழுந்தாள். துருவிய தேங்காயைச் சேதுவின் தாய் குந்தளத்திடம் கொடுத்து விட்டு வந்து நின்றாள்.

''அண்ணா, வேலைக்குப் போயாச்சா!''

''அவன் நேத்திக்கே போயிட்டான்.''

''கழுதை! கேட்ட கேள்விக்குப் பதில் சொல்.''

''ஆமாம், அண்ணா! அவன் நேத்திக்குப் போனவன்தான். இன்னும் வீடு திரும்பவில்லை.''

''முதலாளியோடு அவன் வெளியூர் போயிருப்பான்.''

''ஆமாம் போலிருக்கு.''

சேது உள்ளே சென்று வேற்றுடை மாற்றிக் கொண்டு அங்கு வந்தான்.

அடுத்த கட்டிலிருந்து அண்ணி பரிமளாவின் குரல் கணீரென்று கேட்டது:

''காலையில் எழுந்தவுடனேயே, இப்படி ஓடுகாலியா இருந்தா குடும்பம் எப்படி உருப்படும்? வீட்டிலே வேலை தலைக்கு மேலே கிடக்கு. ஊரான் வீட்டுக்கெல்லாம் உழைக்கத்தான் நேரமிருக்கு. இதை நான் கேட்டா 'இவ பொறாமைக்காரி. சிடுமூஞ்சி. சனியன் புடிச்சவ' என்று பட்டப் பேர் வாங்கிக் கட்டிக்கணும். இந்த மூதேவிகளோடெல்லாம் கஷ்டப்படணும்னு என் தலையில் எழுதியிருக்கானே அதைச் சொல்லணும்.''

ஒரு வார்த்தைகூடச் சிதறாமல் விசுவநாதனின் மனைவி பரிமளா பேசுவது கேட்டது. இரண்டு போர்ஷனுக்கும் நடுவில் ஒரே ஒரு தாழ்ந்த சுவர்தான். நிமிர்ந்திருந்த அரிவாள்மனை சாய்ந்தால் கூடச் சத்தம் கேட்டுவிடும்.

பரிமளாவின் பேச்சு இந்துவுக்கு மட்டுமல்ல, சேதுவுக்கும், அவன் தாயுக்குங்கூட புளித்துப் போன விஷயம். மனம் போனபடியெல்லாம், நேரிடையாகவும், மறைமுகமாகவும் திட்டிவிட்டு அடுத்த நிமிஷமே ''என்ன மாமி, சமையல் ஆச்சா? பின்னே ஆபீஸ் போய் விட்டாரா?'' என்று கேட்டுக் கொண்டு வந்து நிற்கும் ஒருவித சுரணையற்ற சுபாவம் அவளுடையது.

''பரிமளா சத்தம் போடுறாளே போய்க் கூடமாட உதவி பண்ணேண்டி இந்து!'' குந்தளம் இந்துவை விரட்டினாள்.

''போங்க மாமி. பருப்புத் தொகையல் அரைக்கணுமாம். அதை அரைக்க என்றால் முடியாது. அன்னிக்கு ஒரு நாள் அரைச்சுட்டு நான் பட்ட பாடு எனக்குன்னா தெரியும். ரெண்டு தோள் பட்டை, மாரெல்லாம் வலிச்சுது....''

''அவளும் உன்னைப் போலத்தானே? தொகையல் மட்டும் வேணும். அதை அரைக்க மாட்டேன்னா என்ன அர்த்தம்?''— சேது மிரட்டினான்.

குந்தளம் சமையல் அறையினின்று வெளியே வந்தாள். ''இந்து, போய் அதை எடுத்துக் கொண்டு வா. நான் அரைச்சுத் தரேன். போம்மா......''

''பரவாயில்லை, மாமி. நானே போய்ச் செய்யறேன்'' என்று சொல்லிவிட்டு ஓடி விட்டாள்.

காலை நாடகம் முடிந்தது.

வெளி வராந்தாவின் ஓரமாகக் கிடந்த செருப்பைச் சேது காலில் மாட்டிக் கொண்டிருந்த போது தயங்கித் தயங்கி எதிரே வந்து நின்றாள் தாயார் குந்தளம்.

''இன்னிக்கு வடபழனியிலிருந்து அவர்கள் யாரேனும் வருவார்களே! என்ன பதில் சொல்லி அனுப்பட்டும்?''

செருப்பைக் காலில் மாட்டிக் கொண்ட சேது இரண்டுமூன்று விநாடிகள்மௌனமாகப் பாதத்தையே பார்த்துக் கொண்டு நின்றான். அம்மா கேட்கின்ற கேள்விக்கான பதில்

அவன் மனத்தில் எப்பொழுதோ தோன்றி விட்டதுதான் என்றாலும் அதை வாய் திறந்து சொல்ல முற்படும் போது ஒருவகை நடுக்கம் வந்து விட்டது. பிறகு அதை அடக்கிக் கொண்டவனாக, ''எனக்கு இப்போ கல்யாணம் வேண்டாம் அம்மா. இந்த வருமானத்தை வைத்துக் கொண்டு வருகிறவளின் அபிலாஷைகளையும் இதோடு சேர்த்து, இணைந்து வாழ்க்கையை ஒருவித அமைதியோடு ஓட்ட முடியும் என்கிற நம்பிக்கை என்னைப் பொறுத்த வரையில் இல்லை. வறுமைகளோடு அதை எதிர்த்துப் போராடச் சக்தி தெய்வாதீனமாக என்னிடம் இருக்கு. ஆனால் ஆசைகளோடு போராட வேண்டிய சக்தி எனக்கு இல்லை.''

சேது ஏழைதான். என்றாலும் தன்மான முள்ள வாலிபன். பத்திரிகையில் பணி யாற்றுவதாலும், பல நல்ல, இனிய இலக் கிய நண்பர்களோடு பழகுவதாலும் அவ னிடத்தில் ஒரு கனிவு என்றுமே உண்டு. வாழ்க்கையைப் பற்றிய ஒரு நிதர்சனமான நோக்கு அவனிடத்தில் இருந்தது.

குந்தளம் பதில் பேசவில்லை. காரணம் வீட்டின் நிர்வாக இயந்திரத்தின் ஜீவநாடி அவன். அந்தச் சக்கரம் பம்பரம் போலச் சுழன்றால்தான் வீட்டின் அடுப்பிலே தீயின் கணப்பு இருக்கும். அவனது நம்பிக்கையான விழிகளில்தான் அந்த வீட்டின் பார்வை மின்ன வேண்டும்.

''அப்போ நான் சொல்லிவிடலாமா? வேறு இடம் பாருங்கள் என்று.''

''சொல்லிவிடு. கடவுள் செயல் எப் படியோ அப்படி நடக்கட்டும். அநேகமாக இந்த ஆண்டுக் கடைசிக்குள் எனக்கு ஒரு பதவி உயர்வு வரும். சம்பளமும் கொஞ்சம் கூடும். அப்பொழுது பார்த்துக் கொள்ள லாம். ....நான் போய் வரேம்மா....'' திரும்பிய போது அங்கே இந்து இவர்கள் சம்பாஷணையைக் கேட்டுக் கொண்டு நின்றாள். அவனைப் பார்த்துப் புன்னகை செய்து கொண்டே போய் விட்டான் சேது ராமன்.

சாதம் பரிமாறும் போது இந்து குந்தளத் தின் முகத்தையே பார்த்துக் கொண்டிருந் தாள். அந்த முகத்தில் காணப்பட்ட சோகத் துக்கு அவளுக்குக் காரணம் தெரியும். இந்த விவரம் தெரியாத பெண் அல்லவே! பதி னேழு முடிந்து பதினெட்டு நிரம்பியவள் தானே.

''ஏன் மாமி, அண்ணா இப்படிச் சொல்லி விட்டுப் போனார்? போன வாரம் யாரோ ரொம்பத் தொந்தரவு செய்தார்கள் என்று வடபழனியிலே போய் ஒரு பெண் பார்த்து விட்டு வந்தீர்களே! அந்த விஷயம்தானே?''

''ஆமாம்.'' என்பது போலத் தலையை ஆட்டினாள் குந்தளம்.

''ஏன் இப்போ கல்யாணம் வேண்டாம் என்று சொல்லி விட்டாரா?''

''உ....ம்.... வாழ்க்கைக்குக் கல்யாணம் அவசியந்தாண்டியம்மா. அதைவிட அவசி யம் ஒரு ஸ்திரமான வாழ்க்கை. இல்லையா? இந்த அரைகுறை வருவாயில்....''



இங்கே நடப்பதென்ன புரிகிறதா?

— பின்பக்கம் பார்க்க!

படித்ததையே படிக்கிற மாதிரியான தொரு சலிப்பு குந்தளத்தின் முகத்தில்.

சாப்பிட்டு விட்டு எழுந்தாள்.

அன்று ஞாயிற்றுக்கிழமை!

சேதுவுக்கு வாராந்திர விடுமுறை அன்று.

பத்திரிகை ஆசிரியர் கொடுத்திருந்த ஆங்கிலக் கட்டுரை யொன்றை மொழி பெயர்த்துக் கொண்டிருந்தான்.

திடீரென்று அடுத்த வீட்டிலிருந்து பரிமளா இரையும் ஒலி கேட்டது. விசுவநாதன் அவளை அடக்கவும், அதையும் மீறி அவள் சத்தம் போடவும் நிலைமை கட்டுமீறிக் கொண்டிருந்தது.

சச்சரவுக்கான விஷயம் இந்து என்பதை அவள் போடுகின்ற கூச்சலிலிருந்து தெரிந்து கொள்ள முடிந்தது.

சேது எழுந்தான்:

''நீ போக வேண்டாம். அவள் உன்னை யும் ஜாடையாகச் சொல்லுவாள். பேசாமல் இரு.''—தாயார் சேதுவுக்குத் தடை போட்டு விட்டாள்.

பரிமளா சண்டைக்காரி என்பது தெரி யும். என்றாலும் அவளுடைய சுய ரூபம் தெரியாது சேதுவுக்கு. இன்று அவள்வீட்டில் கணவனையும், இந்துவையும் பேசுகிற பேச் சைக் கேட்டபோது அவளைப் பற்றிய கொஞ்ச நஞ்சமிருந்த நல்ல அபிப்பிராயங்களும் சரிந்தன.

மனைவியின் தாக்குதலுக்குப் பயந்தவனாக விசுவநாதன் சட்டையை எடுத்து மாட்டிக் கொண்டு முணு முணுத்தவாறே வெளியே கிளம்பி விட்டான். விசுவநாதன் வெளியே போன அடுத்த நிமிஷம், இந்து அழுது கொண்டே சேதுவின் முன் வந்து நின்றாள்.

''பாரமன்னு, நான் இருக்கறது இவாளுக்குப் பெரிய பாரமா யிருக்காம். யாரேனும் ஒரு ஹோட்டல் சர்வருக்கு என்னைக் கல்யாணம் செய்து வைக்கடச் சொல்ரு மன்னி. இல்லேன்னு கிராம சேவிகையாகப் போறத்துக்கு ஏற்பாடு செய்யச் சொல்ரு !''

இந்துவின் அழகிய முகம் அந்திவானமாக இருந்தது. குறுகுறுத்த அந்த விழிகளில் நிரந்தரமாக்கப்பட்டுவிட்ட சோகத்தைமாற்றுவது எழுதி வைத்த விதியை அழித்து எழுத ஆசைப்படுகிற வீண் பிரயத்தனம்தான் என்பது அவனுக்குத் தெரியும். அவ்வப்பொழுது ஏற்படுகின்ற கோபதாபங்கள், அவ்வப்பொழுது உண்டாகிற கஷ்ட நஷ்டங்கள் இவைகளை அந்தந்த நேரங்களில் சமாளித்து நிறுத்திவிடுகிற கலையை அவன் கற்றிருந்ததால் அவைகளை அவ்வப்பொழுது நிறுத்தி வைப்பது அவனுக்குக் கைவந்த பழக்கம்.

''மன்னி எனக்காகக் காட்டுகிற வழியைப் பார்த்தாயா? ஹோட்டல் சர்வரைக் கைப் பிடிக்கணுமாம். இல்லேன்னு கிராம சேவிகையாகப் போகணுமாம்.''

இந்து இங்கே சேதுவிடம் முறையிட்டுக் கொண்டிருக்கும்போதே அடுத்தகட்டிலிருந்து பரிமளாவின் தொனி பெரிதாகவேகேட்டது:

''வியவல்லதை கெட்ட சனியன். யார் யாரோட எப்படிப் பழகணும்கறதே தெரியறது இல்லே. ஆன வயசைக் கொண்டு போய் அடுப்பிலேதான் வைக்கணும். இதுகளை யெல்லாம் வீட்டிலே வைச்சுண்டு காப்பாத்தறத்துக்குள்ளே இருக்கற வருமானம் எல்லாம் போயிடும்.''

இந்துவுக்கு வேறு போக்கிடம் கிடையாது என்ற ஒரு பலவீனத்தை வைத்துக் கொண்டு பரிமளம் பேசுகிற இந்த மாதிரி அர்த்தமற்ற பேச்சுக்களைத் தடை போடச் சில வேளைகளில் விசுவநாதனைகூடத் திராணியற்றவனாகத்தான் நிற்கிறான். இந்த ஒரே ஒரு காரணம்தான் பரிமளாவின் வாய்த்துடுக்கை அதிகப்படுத்திக் கொண்டிருந்தது.



காதல் வயப்பட்ட ஒரு டான்ஸ் டீச்சரும்: டான்ஸ் மாஸ்டரும் தங்களுக்குள் திருமணம் நடப்பதாகக் கனவு காண்கின்றனர் படத்தில்!

பரிமளா ஜாடையாகப் பேசுவதில் உள்ள அர்த்தம் குந்தளத்துக்கும் புரியாமலில்லை. இந்து அடிக்கடி இங்கே வருகிறாள்; சேதுவிடம் சகஜமாகப் பழகுகிறாள் என்பதை முகாந்தரமாகக் கொண்ட ஆத்திரம் தான் அப்படி யோசனையற்ற, அர்த்தமற்ற வார்த்தைகளாக உதிர்கின்றன அங்கே என்பது அவளுக்குத் தெரியும்.

பரிமளா அடுத்த கட்டிலிருந்து பேசுவதைக் காதில் வாங்கிக் கொண்டு நின்ற சேது அழுது கொண்டு தன்முன் அண்ணாவென்று வந்து நிற்கும் இந்துவின் முகத்தைப் பார்த்து மனத்தில் எழுந்த கோபங்களைச் சிரமப்பட்டு அடக்கிக் கொண்டான்.

தன் கணவனின் தங்கை என்பதைக்கூட மறந்தவளாகப் பரிமளா, தன்னையும் இந்துவையும் இணைத்துக் கிளப்பி விடுகிற புரளி அவனுக்கும் தெரியும். அவனது ஆத்ம பரிசுத்தமும், இந்துவின் நிர்மலமான அன்பும், அவனது வேக உணர்வுகளைக் கட்டிக் காத்தன. தான் சத்தியம் மிக்கவன் என்ற உயர்ந்த உணர்வே, பரிமளாவின் கீழ்மைப் பேச்சுக்களை அலட்சியப்படுத்திவிடும் வலுவைக் கொடுத்தது.

தன் அண்ணியின் இந்தப் பேச்சு அவன் அண்ணன் காது வரை போகவில்லை என்கிறாளே இந்து. ஒரு வேளை அவன் வரையில் எட்டும் போது விசுவின் சுய ரூபம் எப்படி மாறுமோ தெரியவில்லையே. மனைவிக்குப் பயந்தவனான அவனும் பரிமளாவின் பேச்சுக்கு உரம் கொடுக்கக் கூடிய அளவுக்கு வந்து விட்டால்......

சேது குமுறினான். ஓயாமல் ஜாடை பேசும் பரிமளாவின் குரல்... விசித்துக் கொண்டு தன் எதிரே நிற்கும் இந்துவின் கோலம்..... அவனுடைய அமைதியைக் கெடுத்தன.

இந்துவைச் சமாதானப்படுத்திவிட்டுச் சட்டையை மாட்டிக் கொண்டான். அம்மாவிடம்கூடச் சொல்லிக் கொள்ளாமல் வெளியே புறப்பட்டு விட்டான்.

3

''வேலை ரொம்ப இருக்கோ !'' — பெட்ரோல்பங்கின் கண்ணாடிக் கதவைத் திறந்து கொண்டு வெளியே நின்றவண்ணம் கேட்டான் சேது.

''இல்லே, சும்மாதான் உட்கார்ந்து கொண்டிருக்கிறேன்'' என்று சொல்லிக் கொண்டே வெளியே எழுந்து வந்தான் விசுவநாதன்.

''வா, இப்படியே கொஞ்சம் வெளியே போய்விட்டு வரலாம். உன்னோடு கொஞ்சம் பேசணும்.....'' சிறிது நேரத்துக் கெல்லாம் சேதுவும், விசுவும் லஸ் சர்ச் ரோட்டில் நடந்து சென்றனர்.

''இந்துவுக்கு ஏதேனும் வரன் கிரன் பார்த்திருக்கிறாயா என்ன?''

''இல்லையே, யார் சொன்னது?..... ஓஹோ! காலையில் பரிமளா சத்தம் போட்டதை மனதில் வைத்துக் கொண்டு கேட்கிறாயா ? அதெல்லாம் ஒன்றுமில்லே. இப்போ நான் இருக்கிற நிலையிலே எனக்கு வருகிற வருமானத்திலே....... அதைப் பத்தி யெல்லாம் நினைக்கக் கூடத் திராணி கிடையாது.''

''அப்படிச் சொல்லி விட்டால் எப்படி...? கடனோ உடனோ பட்டு அவளை எவன் கையிலேயாவது ஒப்படைக்க வேண்டியது உன் பொறுப்புத் தானே! நாளைக்கு நாலு பேர்



ஆகா, பொருத்தமான ஜோடி?

காரணம் கூறவும் தேவையா? பினிக்ஸ் ஆடைகள்தான். கண்கவரும் பலப்பல ப்ரிண்ட்கள். பாப்ளின்கள். வண்ணங்கள் அனந்தம், நெசவும் அனேகம். தரம்? ஈடற்றது. நீங்களே பார்க்கலாமே! வாயில்கள் ● பாப்ளின்கள் ● ஷர்ட்டிங்குகள் ● ஸூட்டிங்குகள்.

பினிக்ஸ் மில்ஸ்

சில்லறை விற்பனைக் கடைகள்:

சென்னை: 33, ரட்டன் பஜார், 5/93, ராயப்பேட்டை ஹை ரோட், லஸ்.
மதுரை: 1, 2, & 2 ஏ, அம்மன் சன்னதித் தெரு.

"பிறருக்காகக் கவலைப்படுவது
என் தொழில்.
ஆனால் எனக்காகக் கவலைப்படுவது...?"

"இந்தத் தொழிலில், எனது முதுமைக் காலத்திற்குத் தேவையான பணத்திற்கு நான்தான் வழி செய்துகொள்ள வேண்டும். நான் வேலையிலிருந்து ஓய்வு பெறும்போது பிராவிடண்ட் பண்டோ, கிராஜுடியோ அல்லது பென்ஷனோ எவரும் எனக்குத் தரமாட்டார்கள்.
இந்தப் பிரச்சனை என்னைப் பெரிதும் வாட்டி வந்தது. இறுதியில், ஆயுள் இன்சூரன்சு வழங்கும் **என்டௌமென்ட் அஷ்யூரன்ஸ் பாலிசி** என்ற உருவில் தீர்வு கிடைத்தது."



டாக்டர்கள், வக்கீல்கள் போன்று தனித்தொழிலில் ஈடுபட்டுள்ளவர்கள், தங்கள் ஓய்வுக்காலத்திற்குத் தேவையான பணத்திற்குத் தாங்களே வழி வகை செய்துகொள்ள வேண்டியவர்களாகிறார்கள். தங்கள் வருங்காலம் வசதியுடனிருக்க **என்டௌமென்ட் அஷ்யூரன்ஸ் பாலிசி** மூலம் அவர்கள் உறுதி கொள்ளலாம். எடுத்துக்காட்டாக உங்களுக்கு வயது 30 என வைத்துக் கொள்வோம். நீங்கள் ரூ. 30,000த்திற்கான, இலாபத்துடன்கூடிய ஒரு என்டௌமென்ட் அஷ்யூரன்ஸ் பாலிசியினை 30 ஆண்டுக்காலத்திற்கு எடுப்பின் மாதந்தோறும் நீங்கள் செலுத்துவது ஏறத்தாழ ரூ. 90. பாலிசிக்காலம் முழுவதும் கணிசமான வரிச்சலுகைகளையும் நீங்கள் பெறுகிறீர்கள். 60 வது வயதில், பாலிசியின் பணத்தை இலாபத்துடன் சேர்த்துப் பெற்று உங்கள் ஓய்வுக்காலத்தைத் தொல்லையின்றி நிம்மதியாகக் கழிக்கலாம். பாலிசிக் காலம் முடிவதற்குள் உங்களுக்கு ஏதேனும் நேரிடின், உங்கள் குடும்பம் பாலிசியின் முழுத் தொகையான ரூ 30,000த்தையும் அத்துடன் சேர்ந்துள்ள போனசையும் பெறும். இதற்குச் செலுத்தப்பட்ட ப்ரீமியங்கள் அளவுகோலாகா.

உங்கள்
குடும்பத்தின் வருங்காலப்
பாதுகாப்பிற்கு
ஆயுள் இன்சூரன்சு

நாலுவிதமாகப் பேச இடம் வைத்துக் கொள்ளக் கூடாது பார்.''

விசு சிரித்தான். ஒட்டிய கன்னங்களிலே ஒரு திடீர்க் குழி விழுந்தது. மேலே போட்டிருந்த துண்டை மாலையாகப் போட்டுக் கொண்டவன் இரண்டு முனையையும் இரண்டு கைகளால் பிடித்துக் கொண்டான்.

''மற்றவர்கள் சொல்வது இருக்கட்டும். கட்டிண்ட பெண்டாட்டியே சொல்றா. காதுலே விழாமலா இருக்கு? அவள் சொன்னதைக் கேட்டுக் கொண்டு நேற்று நம் ஸ்டோரில் கோடி வீட்டுக்காரர் கேட்டார்: 'உங்க 'விஸ்டரை'க் கொஞ்சம் அடக்கி வையுங்கோ ஸார். அந்தப் புருப் ரீடர் பயலோட ரொம்ப ஓவராப் பழகறா' என்றார். 'உம் வேலையைப் பார்த்துக் கொண்டு போய்யா நீ. என் தங்கையைப் பார்த்துக்க எனக்குத் தெரியும். முதலில் உம்மோட பெண்ணின் கணவன் எவன் என்பதைத் தேடிக் கண்டு பிடியும். அப்புறமா பிறத்தியார் முதுகிலே இருக்கிறப் போல நீங்க நினைக்கிற மண்ணைத் தட்ட வரலாம்.....' என்று சொல்லி அனுப்பி விட்டேன்.''

விசு இதை மிக மிகச் சாதாரணமாகச் சொல்லிக் கொண்டு வந்தான்.

''எனக்குத் தெரியும் சேது. நாம குடியிருக்கிற ஸ்டோர் முழுவதும், உன்னையும், இந்துவையும் இணைச்சுச் செய்து வருகிற தப்புப் பிரசாரத்துக்குக் காரணம் பரிமளா தான் என்று. அதை அடக்கத் தெரியாம இல்லே. வேண்டாம் என்றுதான் விட்டு வைச்சு இருக்கேன். நான் பரிமளாவை இது விஷயமாய்க் கண்டிக்க ஆரம்பிக்கிறதுகூட இன்னும் பல வகையில் அந்தப் பொய்ப் பிரசாரம் பிரபலமாக இடமாயிடும்.....''

விசு என்ற அந்த ஏழ்மை உருவைத் திரும்பிப் பார்த்தான் சேது என்கிற ஏழை. குள்ளமான உருவம். பெட்ரோல் பங்கில் வேலை செய்வதால் அணிந்திருந்த உடையில் ஆங்காங்கு எண்ணெய்க் கறை திட்டுத் திட்டாக இருந்தது. நான்கைந்து நாளைய தாடி முகத்திலே....வாரியும் வாராமலும் இருந்த தலை. வேஷ்டியைத் தூக்கிக் கட்டிக் கொண்டு மெதுவாக நடந்து வந்து கொண்டிருந்தான்.

''சீக்கிரமா இந்துவோட கல்யாணத்தை முடிக்க வழியைப் பார் விசு.''

''வழியே இல்லே, சேது. நானும் எவ்வளவோ கோணங்களிலிருந்து யோசித்துப் பார்த்தாச்சு. முடியுமானா நீ எங்கிருந்தாவது ஓர் ஆயிரம் ரூபாய் வாங்கிக் கொடு. என்னால் ஆயிரம் புரட்ட முடியும். மாசம் கொஞ்சமா உனக்குத் தரேன். ஏமாத்த மாட்டேன். இல்லேன்னுட மாட்டேன். நம்பலாம்.''

''ஏழு வயசிலே அம்மா அப்பாவோட இங்கே சென்னைக்கு வந்தேன். என்னை உனக்கும், உன்னை எனக்கும் இருபது வருஷமா நல்ல நினைவோட தெரியும் விசு. ஏமாத்துவே என்று நான் நினைக்கவில்லே. அவ்வளவு ரூபாயை என்னால் உனக்காக எங்காவது வாங்க முடியுமா என்றுதான் மலைப்பா இருக்கு!'' என்ற போது, சேதுவின் நினைவில் அந்த இருபது வருஷத்தின் அத்யந்த பாவமும், சிநேகத்தின் இறுக்கத்தினால் உண்டான ஓர் அளவுக்கு மீறின பாச உணர்வும் இயல்பான இரக்க சுபாவத்தையே கொடுத்தன.

வாழ்வின் ஏற்றத் தாழ்வைப் பொறுத்த வரையில் இருவருடைய வாழ்க்கைச் சம்பவங்களில் ஏற்றம் இல்லை. இருபது வருஷங்களாக அருகருகில் இருந்து ஒரே புத்தகத்தின் ஏடுகளை இருவருமாகத்தான் படித்துத் திருப்பினர். இருவரின் வாழ்வின் வளர்ச்சியும் இருவருக்கும் ஒளிவு மறைவின்றித் தெரியும். விசுவின் தாயார் ஆறு வயதுக் குழந்தையான இந்துவை அழ வைத்து விட்டுப் பெரிய தூக்கம் தூங்கிவிட்டாள். வீறிட்டு அழுகிற அவளை ஒருவர் மாற்றி ஒருவர் தூக்கிக் கொண்டு சுற்றியதை இன்று இருவருமே மறக்கவில்லைதான். இருவரிடையே சண்டை உண்டு. சச்சரவுண்டு.



சமாதானமுண்டு. கோப தாபங்கள், விருப்பு வெறுப்புக்கள் எல்லாம் தனித் தனியே உண்டு. இருவரிடையே எவ்வளவோ விஷயங்களில் எவ்வளவோ முரண் உண்டு. அவை யெல்லாம் துள்ளித் திரிந்த பாலப் பருவத்தோடு சரி. இப்பொழுதெல்லாம் அவைகளை நினைக்கக்கூட நேரமில்லை. வாழ்க்கைப் போக்கிலே இருவரும் வெவ்வேறு திசையிலே போய்க் கொண்டிருக்கையில் பாலப் பருவத்துப் பேதைமைப் பேதங்களை யெல்லாம் நினைவுபடுத்திக் கொள்ள அவகாசம்தான் ஏது?

நினைவின் சிறு நிழலில் ஒதுங்கியவன் மீண்டும் சுயவெளிக்கு வந்தான். ''பார்க்கலாம் விசு. என்னால் முடிந்ததை முயற்சி செய்து பார்க்கிறேன்'' என்றான் சேது பெருமூச்சுடன்.

''இந்துவுக்குப் பதினெட்டு நடக்கிறது. அவளைச் சீக்கிரமா கல்யாணம் பண்ணிக்

கொடுத்துடத் துடிக்கறேன் சேது. பரிமளா வின் பேச்சிலிருந்து அவளை நான் காப்பாற்றிக் கரை சேர்க்கணும். நினேச்சால் இரவில் தூக்கம்கூட வருவதில்லே.....''

சேதுவின் மனம் இலேசான மாதிரி இருந் தது. மீண்டும் திரும்பி நடந்தனர். விசுவ நாதன் பெட்ரோல்பங்கிலேயே மீண்டும் போய் உட்கார்ந்து விட்டான்.

சேது மட்டும் வீடு வந்த போது இந்து கூடத்தில் சுவர் ஓரமாகப் படுத்து உறங்கிக் கொண்டிருந்தாள்.

நெஞ்சின் மேல் அன்றைய ''சூரியன்'' வார அநுபந்தம் கிடந்தது.

ஒருக்களித்துப் படுத்துறங்கும் அவளேயே சற்று நேரம் வைத்த விழி வாங்காமல் பார்த்தான். உடன் பிறவாத தங்கை இவள்.

பாசம் என்பது ஒரே ரத்தத்தில் பிறந் தால்தானு? ஒருவரை உணர்ந்து, பிணைந்து உறவாடுகிற மனேகரமான உறவிலேகூடச் சகோதர பாசத்தையும் மிஞ்சக் கூடிய வாத்ஸல்ய பாவத்தைக் காண முடியுமே!

பதினெட்டு வயது அவளுக்கு. அவ ளுடைய ஒவ்வொரு பருவத்து வளர்வின் மாறுதலேயும் உடன் இருந்து கண்டவன், ஒவ்வொரு ஸ்திதியையும் அருகிருந்து உணர்ந்தவன்.

இந்து குழந்தையாக இருந்தபோது அவளேத் தோளில் தூக்கிக் கொண்டு சுற்றியிருக்கிறன் சேது. சிறுமியாக வளர்ந்தபோது அவளேக் கிணற்றடியிலும் குழாயடியிலுமாகக் குளிப் பாட்டியிருக்கிறன். தனது பெரிய சட்டை யைப் போட்டுக் கொள்ளச் செய்துவிட்டுக் கிழிந்த பாவாடையைத் தைத்துத் தந்திருக் கிறன். தலே வாரிப் பின்னி விட்டிருக்கிறன்.

விசுவநாதன் அவளுக்கு உடன் பிறந்த அண்ணன். சேதுராமன் வளர்வின் ஒவ் வொரு ஸ்திதியிலும் கூடவே வருகின்ற அண்ணன். இந்துவுக்கு விசுவிடம் மரியாதை யுண்டு. சேதுவிடம் அளவுக்கு மீறின அன்பும் பாசமும் உண்டு. விசுவிடம் கேட்கப் பயப் படுவதைச் சேதுவிடம் கேட்டு வாங்கிக் கொள்வாள்.

விகல்பத்துக்கு அர்த்தம் தெரியாத ஓர் ஒட்டுறவு !

சேது சிரித்துக் கொண்டே அவள் நெஞ் சின் மேல் கிடந்த பேப்பரை எடுத்தான். எடுத்ததைவிட வேகமாக அதை அப்படியே போட்டுவிட்டு நகர்ந்து, திரும்பி நின்றன். சிறு அதிர்ச்சியின் சாயல் அவன் மனத்தை என்னமோ செய்தது. தவருக எதையோ செய்து விட்டவன் போல மனம் குன்றி நின்றவன் ஒருக்களித்துப் படுத்திருந்த இந்துவின் முதுகில் ஓங்கி ஓர் அடி கொடுத்து அவளே எழுப்பினன்.

''கழுதை....இதைப் போலக் கூடத்தில் படுத்துக் கொள்ளாதே என்று எத்தனே தடவை சொல்றது? நீ என்ன சின்னக் குழந்தையா! உள்ளே போய்ப் படு...போ...''

சப்தம் போட்டுக் கொண்டு நிற்கும் சேது வின் கரத்தைப் பிடித்துக் கொண்டே எழுந்த வள் மேலாடையைச் சரி செய்து கொண்டே தூக்கத்தின் தளர்வுடன் வீட்டுக்குப் போய் விட்டாள். இந்து அங்கே போய்த் தன் உறக்கத்தின் மற்றெரு பகுதியைத் தொடர் கிறள் என்பதைப் பரிமளாவின் பேச்சி லிருந்து உணர முடிந்தது சேதுவுக்கு.

4

''ஏன் அண்ணு!'' — நீ பணத்துக்கு ஏதோ ஏற்பாடு செய்யறதாகச் சொல்லி யிருக்கிறயாமே. நிஜமாகவா?'' இரண்டு நாள் கழித்து ஒரு நாள் மாலே சேது காரியா லயத்திலிருந்து வந்தவுடன் உற்சாகமாகக் கேட்டுக் கொண்டு அவன் முன்னுல் வந்து நின்றுள் இந்து. அவள் முகத்தில் தெரிந்த நம்பிக்கை, கேட்கின்ற கேள்வியில் தொனிக் கின்ற ஆர்வம் எல்லாவற்றையும் கவனித்த போது சேது கொஞ்சம் தடுமாறித்தான் போனுன்.

இரண்டு இடங்களில் கேட்டுத் தோல்வி அடைந்த களைப்பு மனத்தைப் பறித்துக் கொண்டிருந்த நேரத்தில் இந்து வந்து நம் பிக்கையோடு கேட்கிறள். அந்த நேரத்தில் அவளுடைய உற்சாகத்தைக் குலேக்க மன மில்லாதவனுக, ''ஆமாம்மா, என்னுல் முடிந்ததை வாங்கித் தரேன் என்றுசொல்லி யிருக்கேன். பணத்துக்கு என்ன; ஒருத்தன் இல்லாட்டா ஒருத்தன் தரான். இல்லேன்னு வாடிக்கையா வாங்கற செட்டியார் இருக் கார். கனிசமா வட்டி கொடுத்தால் கிடைக் கிறது. எப்படியோ கடன்பட்டோ, உடன் பட்டோ உன் கல்யாணத்தை முடித்து விட வேண்டும் என்று உன் அண்ணுவிடம் கண்டிப்பாகச் சொல்லி விட்டேன்.''

குழந்தைத்தனம் மிக்க அவளது நீண்ட முகம் லஜ்ஜையுடன் சிவந்தது.

''அண்ணு, எனக்கு மன்னி சொல்ற மாதிரி.....?'' எதையோ கூற முடியாமல் தயங்கியதைச் சேது புரிந்து கொண்டு விட் டான். ''சீ..... சீ.... அப்படியெல்லாம் நடக்காது. குமாராக இருந்தாலும், குறைந்த வருவாயாக இருந்தாலும் நல்ல இடமாகப் பார்க்கச் சொல்வேன், போதுமா?'' என்ற போது இந்துவின் முகத்தில் திருப்தியின் சாயல் பூரணமாகப் பளிச்சிட்டது.

இந்து போனபின்பு வெளியில் புறப்பட்ட சேது ஸ்டோரில் உள்ள கோடி வீட்டைத் தாண்டும்போது கால் மேலே செல்லத் தயங்கின.

''எல்லாம் உன் வீட்டுக்காரர் கொடுக் கிற இடம் பரிமளா! 'அண்ணு...அண்ணு' வென்று அவ குழையறதும் 'இந்து...இந்து' வென்று இவன் பல்லே இளிக்கிறதும் நன்றுயில்லே. என்னதான் சிறு வயசி லிருந்து பழகின குடும்பமா இருந்தாலும் இப்படி விவஸ்தை கெட்டுப் பழக வேண் டாமே! சீக்கிரமா அதை எங்கேயாவது அனுப்பிடப் பாருடி. உனக்கு இதெல்லாம் புதிசு....நீ இவரைக் கல்யாணம் பண்ணிண்டு மூணு வருஷமாச்சு. நாங்க இங்கே வந்து நாலு வருஷமாகப் போறது. வந்த நாளாத் தான் பார்க்கிறேம். குந்தளத்தைக் கேட்டால் 'கூடப் பிறந்தாத்தான் அண்ணன் தங்கை

இடதுசாரி — அரசியலில் அல்ல



நான் ஒரு குஜராத்தி நண்பர் வீட்டுக்குச் சாப்பிடப் போனேன். அந்த அம்மாளுக்கு எனக்கு விருந்து வைப்பதில் இஷ்டமில்லை போல் இருக்கிறது என்று நினைத்துக் கொண்டேன். ஏனென்றால் சாப்பாடு இடது கையினால் பரிமாறப்பட்டது. இன்னொருநாள் வேறு ஒரு குஜராத்தி நண்பர் வீட்டிலும் இப்படியே நடந்தது. மற்றொரு முறை, இன்னொரு வீட்டில்.... அட கடவுளே, இந்த குஜராத்திப் பெண்கள் எல்லாருமே ''லெப்டிஸ்ட்''தானா? என் சந்தேகத்தை நண்பரிடமே கேட்டு வைத்தேன்.

அவர் தந்த பதில் என்னவாயிருக்கும்? யோசித்துப்பாருங்கள். பிறகு 119ம் பக்கம் திருப்புங்கள்.

என்கிற உறவு வரணுமா? அவா அவா மனசு ஒன்றை எப்படி வாங்கிக்கிறதோ, அதுதான் உறவு. முன்பின் அறிமுகமில்லாத ஒருவனைப் போய் எப்படித் திடீர்னு ஒரு பெண் கணவனு ஏத்துக்கறு? அதுக்கு எப்படி அவ மனசு ஒப்பறது? அப்போ காலம் காலமா பழகற இந்த உறவை அவள் ஏன் நிஜமாகவே சகோதர பாசமா ஏத்துண்டு இருக்கக் கூடாது?' என்று புது வியாக்யானம் பேசறு. அந்த வியாக்கியானம் அவளுக்குத்தான் நன்னு யிருக்கும். மத்தவா ஏத்துக்க மாட்டா.''

சேது அதற்கு மேல் அங்கே நிற்கவில்லை. விருவிரென்று வாசலில் இறங்கி நடந்தான். கோவிலுக்குச் சென்று திரும்பிக் கொண்டிருந்த குந்தளம் எதிர்ப்பட்டாள்.

''வக்கீல் ராமதுரை வீடு வரைக்கும் போய்ட்டு வரேன்..... ஒரு முக்கிய விஷயமா போறேன்'' என்று சொல்லிக் கொண்டே போய் விட்டான்.

அவன் நெஞ்சில் ஒருவித தீவிரப் படபடப்பு வியாபித்துக் கொண்டிருந்தது.

உண்மையான பாசத்துக்கு வெளி உலகம் கொடுக்கின்ற வியாக்கியானத்தை அவனுல் புரிந்து கொள்ள முடியவில்லை.

உடன் பிறந்தால் மட்டும்தான் பாசம் வருமா! வளர்ப்பால், பிணைப்பால், சிநேகத்தால், அந்தரங்கத்தால் அதைக் கொண்டு வர முடியாதா? ரத்தத்துடன் பிறப்பது சகோதர பாசம் என்றால் உலகத்தில் மனித சமுதாயத்திடம் எங்கோ, எப்படியோ காணப்படுகின்ற அந்தப் பாசத்துக்கு அர்த்தம் கூற முடியுமா? ரத்தக் கலப்பில்லாத நேசம் வளர முடியாதா?

கோடி வீட்டுப் பெண் பேசியதை அவன் மதிக்கவில்லை. அவளுடைய பெண்ணின் பின்னணி வாழ்வில் உண்டாகிவிட்ட ஓர் அவலத்தை மூடி மறைக்கவோ, அல்லது அந்தச் சம்பவத்திலிருந்து மற்றவர்களின் கவனத்தைத் திருப்பவோ அவள் இப்படிச் சில அபவாதங்களைக் கிளப்பி விட்டு அதிலே ஆறுதல் பெறுகிறள். 'அதைப் போலப் பேசுகிறவர்களுக்கு முன்னுல் எப்படியேனும் ஒரு கணிசமான தொகையை விசுவுக்குக் கடன் வாங்கிக் கொடுத்து இந்துவின் கல்யாணத்தை நான் முன்னின்று நடத்தி வைத்து, நான் அவள் அண்ணன் என்பதை இந்த முட்டாள் ஜனங்களுக்கு நிரூபிக்க வேண்டும். நிச்சயமாக நிரூபிக்கத்தான் போகிறேன். அந்தப் பரிமளாவின் முகத்திலும் கரியைப் பூசுகிறேன் பார்....'

வக்கீல் ராமதுரையின் வீட்டுக்குப் போகும் வரையில் இப்படியே மனத்துக்குள்ளாக வீர சபதம் போடுவதும், பிறகு சாத்திய அசாத்தியங்களைப் பற்றியே யோசித்துக் குழம்புவதுமாக பயங்கர நினைவுகள் அவனை விட்டு அகலவில்லை.

ராமதுரையிடம் பணத்தேவையின் காரணத்தைச் சொன்னவுடன் அவன் பிரமாதமாக ஒரு சிரிப்புச் சிரித்தது சேது கட்டிக் கொண்டு வந்த நம்பிக்கைச் சுவரை மெதுவாக இடிக்கத் தொடங்கியது. ஏற்கனவே இரண்டு பேரிடம் கேட்டுத் தோல்வி கண்ட நம்பிக்கை! இங்கே மீண்டும், அந்த இரண்டு பேரிடமிருந்தும் வந்த பதிலே வந்து விடுமோ! ராமதுரையும் கையை விரித்து விட்டால்..... அதற்கு மேல் நடக்கவிருக்கும் விபரீதங்களை நினைத்துப் பார்க்க அவனிடம் திராணியில்லை.

''உனக்குத்தான் கல்யாணமோ என்று நினைத்தேன். வேறு யாருக்கோ என்கிறயே! பணம் ஒழுங்காகத் திரும்புமா?''

''நான் பொறுப்பை ஏற்றுக் கொள்கிறேன், துரை!''

''நீ இல்லாம வேறு யாரு பொறுப்பை ஏற்க முடியும்? நீதானே பணத்துக்கு வந்திருக்கே! இப்படிக் கடன் வாங்கிப் பிறத்தியாருக்கெல்லாம் கொடுத்துப் பின்னுல் நீ மாட்டிக் கொண்டு கஷ்டப்படாதே! — இந்த விவகாரமெல்லாம் உனக்கெதற்கு?'' என்கிற மாதிரி புத்தி சொல்ல வந்ததை, இடம் பெற்ற மனத்தோடு கடன் கேட்க வந்திருக்கும் சேதுவினுல் ஏற்றுக்கொள்ள முடியவில்லை.

''இதனுல் எனக்குத் தொல்லை வரும் என்று நான் நினைக்கவில்லை. நானும் விசுவநாதனுக்குக் கடனுகத்தான் தருகிறேன். குறித்த தவணையில் அவனுல் மாதா மாதம் கொடுக்க முடியாமல் போகலாம். என்றாலும் உனக்கு நான் ஒழுங்காகக் கொடுத்துக் கொண்டு வருவேன்.''

ராமதுரை வாய் பேசவில்லை. இன்னும் பத்து தினங்களில் பணம் தருவதாகச் சொன்னதும் சேதுவுக்குத் தெம்பு வந்தது.

''சரி, நான் விசுவநாதனிடம் மற்றக் காரியங்களில் இறங்கச் சொல்லலாமா!''

''தாராளமாகச் சொல்லலாம்!''

சந்தோஷத்துடன் ராமதுரையிடமிருந்து விடைபெற்றுக் கொண்டான்.

ஃ ஃ ஃ

சேது வீடு திரும்பிக் கொண்டிருந்த போது விசுவநாதன் எதிர்ப்பட்டான். அவனும் வீட்டுக்குத் தான் வந்து கொண்டிருந்தான்.



''ஜோதி டிரான்ஸ் போர்ட்டிலே ஓடிக் கொண்டிருக்கிறுனும். அதான் சென்னை — டு — காஞ்சீபுரம் ரெகுலர் சர்விஸ் இல்லே? அதிலே, கண்டக்டர். நான்கூட அவனைப் பார்த்திருக்கிறேன். குள்ளமா சிவப்பா இருப்பான். இரண்டு நாளைக்கு ஒரு தரம் பெட்ரோல் போட்டுக்க வருவான்......''



விசு சொன்னதை சேது உற்சாகத்துடன் கேட்டுக் கொண்டு வந்தான்.

''நான் விசாரித்ததில் பையன் ஒழுங்கானவன், கெட்டிக்காரன் என்று கேள்விப் பட்டேன். தோதாக அமைஞ்சா அந்த இடத்தையே பார்க்கலாமான்னு ஓர் உத்தேசம்.

சகுனம் நல்லபடியாக ஒத்து வருவதாக எண்ணினுன் சேது. ராமதுரை பணம் தருவதாக வாக்குக் கொடுத்ததும், விசு பையனைப் பற்றிச் சொல்வதும் ஒற்றுமையாக இருந்தன.

''தாராளமாய்ப் பார்க்கலாமே! நான்கூட இப்போ என் பிரண்டுகிட்டே போய்விட்டுத் தான் வரேன் பண விஷயமா. இன்னும் பத்து நாளில் ஆயிரம் நிச்சயமாகப் புரளும்.''

''நான்கூட என் தொகைக்கு ஏற்பாடு செய்து விட்டேன். எல்லாம் கிடைச்சு, அவ கல்யாணம் விக்னமில்லாம நடந்தால் அதுவே ஒரு பெரிய நிம்மதி எனக்கு.''

அதற்கு மேல் கல்யாணத்தைப் பற்றி இருவருமே பேசவில்லை.

5

இந்துவின் கல்யாணத்தில்தான் தீவிரமாக ஈடுபட்டிருக்கிறோம் என்பதை விசு தன் மனைவியிடம் சரிவரச் சொல்லாத ஆத்திரம் சேதுவும் அது விஷயமாகப் பிரஸ்தாபிக்காத வேகம், இரண்டுமாக அடுத்த நாள் பரிமளாவின் கோபத்துக்குக் காரணமாயின.

விசு வேலைக்குக் கிளம்பிப் போய்விட்டான். சேது உணவருந்திக் கொண்டிருந்தான். குந்தளம் கொடுத்த கடலையை உரித்துத் தின்று கொண்டிருந்த இந்து, சேதுவுக்கு எதிரே உட்கார்ந்திருந்தாள்.

''இங்கே யாருக்கு யாரை லட்சியமிருக்கு? பேசினு மட்டும் பேசரு என்று சொல்லத் தெரியறதே தவிர ஏன் பேசருங்கறது தெரியலையே! தங்கைக்குக் கல்யாணம்னு யார் கேட்டா இங்கே! நான் ஏன் கேட்கறேன். யாருக்கு என்ன நடந்தா என்ன! இதை மூடி மூடி வைப்பானேன்? ஊர் உலகத்தில் நடக்காத கல்யாணம்! ஈசுவரன் கிருபையிலே இது நடக்கணுமேன்னுதான் நானே மனசுக்குள்ளே வேண்டிக் கொண்டிருக்கேன். இது இருக்கற லட்சணம் வெளியே தெரிஞ்சு ஊர் சிரிக்கறதுக்குள்ளே.....''

''பரிமளா...... பரிமளா.....''

''.........................''

குந்தளம் கொஞ்சம் பதற்றத்துடன் இங்கிருந்தே அழைத்தாள்.

இந்துவும் சேதுவும் ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துக் கொண்டு அமர்ந்திருந்தனர்.



''நீ பேசறது கொஞ்சம் கூட நன்னுஇல்லேடி. அவ்வளவு தான் நான் சொல்லுவேன்.......''

நிலை வாயிற்படி தாண்டி உள்ளே நிழல் தட்டியது. பரிமளா உள்ளே வந்தாள்.

''ஏண்டி, உனக்கே இது, நன்னு இருக்கா? உன் நாத்தனுரை நீயே இப்படிப் பேசினு மத்தவா பேசறதை நீ தடுக்க முடியுமா? பாவம் அங்கே இங்கே கடனை வாங்கி இவளைச் சீக்கிரமா ஒருத்தனிடம் ஒப்படைக்கப்படுகிற பாட்டைப் புரிஞ்சுக்காம வாய்க்கு வந்ததையெல்லாம் பேசறயே! இவ எங்கேடி, போரு, வரு, இங்கேதானே வரு. இன்னிக்கு நேத்திக்கு இல்லேடி. நாங்க இருபது வருஷமா இங்கே வித்தியாசம் பாராட்டாமே இருக்கோம். உனக்கென்ன தெரியும்? தோளோடு தோள் என்கிறமாதிரி எங்க குடும்பமும், இவள் குடும்பமும் என்னிக்குமே எதிலுமே தனியா எதையும் அனுபவிச்சதில்லே — சுகமாகட்டும், துக்கமாகட்டும். இந்த இந்துவைச் சேது தோளில் தூக்கி வளர்த்தாண்டி. நீ நேத்திக்கு வந்தவ. உனக்கு இது விகல்பமாய்த் தெரியறது. மனுஷாளோட தாரதம்மியம் தெரியாமல் பேசாதே. நானும் எவ்வளவோ நாள் பொறுத்துப் பொறுத்துப் போய்க் கொண்டிருக்கிறேன். இந்த இந்துவோட கல்யாணம் நல்லபடியா நடக்கணும்னு தாண்டி இவன் ஆயிரம் ரூபாய் கடன் வாங்கி உன் அகமுடையானிடம் தரப் போறுன். அது தெரியுமா உனக்கு? உன்னோட சேர்ந்து வம்பளக்கறவாளிடம் போய் இதையும் சொல்லு.''

வாயாடி பரிமளா தன்னுடைய இயல்பான குணம் மறந்தவளாக நின்றாள். குந்தளத்தின் பேச்சில் பரிமளத்துக்குத் தன் கணவன் இது நாள் வரையில் சொல்லாத இரண்டொரு விஷயங்கள் தெளிவான திருப்தி தந்தன. அதோடு தன் வாதத்தை நிலைநிறுத்திவிட வேண்டுமென்ற துடிப்புமிருக்கவே, "நான் ஒண்ணும் தப்பாச் சொல்லலியே. ஊர் உலகத்திலே பேசிக்கிறதைச் சொல்றேன்" என்றாள்.

"ஊருக்கும் உலகத்துக்கும் நம்முடைய வெளி உருவந்தாண்டி தெரியும். வெளி நடவடிக்கைதான் தெரியும். நம் அந்தரங்கம் தெரியாது. இருபது வருஷ அந்நியந்தம் தெரியாது. மனசிலே நாங்க வைச்சிருக்கிற வாஞ்சை தெரியாது. இந்து என்னோட பெண்ணடி. என்னோட பெண். இதை ஞாபகத்தில் வைச்சுக்கோ! அவள் இங்கே வருவதற்குக் கண் காது மூக்கு வச்சு, சுவத்திலே அசிங்கமா உருவம் போடுவாளே, அதே போல நீயும் வரையத் தலைப்படாதே! மற்றவர்களும், நீயும் ஒன்றில்லே. நீ இந்துவோட மன்னி; தாயாருக்குச் சமமானவள். போ!"

குந்தளத்தின் கண்கள் கலங்கி விட்டன. பரிமளாவுக்கு வம்பும் வாய்ச் சண்டையும் என்றால்தான் எதிரடி அடித்து நன்றாகப் போகத் தெரியும். நியாயவாதத்தின் முன் அவளால் என்றுமே சமாளித்து நிற்க முடியாது. ஆகையால் குந்தளத்துடன் தர்க்கம் செய்யத் திராணி யற்றவளாகத் தலை குனிந்துகொண்டே போய் விட்டாள்.





சேதுராமன் ராமதுரையிடமிருந்து அரும்பாடு பட்டு வாங்கிக் கொடுத்த ஆயிரம், தன்னால் புரட்ட முடிந்த ஆயிரம் இரண்டையும் வைத்துக் கொண்டு இந்துவின் விவாகக் காரியங்களில் இறங்கும் போதுதான் அதனுடைய சிரம சாத்தியங்கள் விசுவுக்குத் தெரிந்தன. ஊசிக் காது போன்ற தேவையைக்கூட சரி செய்து கொள்ள முடியாத அளவுக்குப் பயங்கர உருவெடுத்து நிற்கும் அகவிலையின் உருவம்.

இந்த ஊசிக் காதில் இந்துவின் விவாக ஊர்வலம் நுழைந்தாக வேண்டும்!

ஒரு நாள் பையன் வந்தான்; பெண்ணைப் பார்த்தான். சம்மதம் என்று சொல்லி விட்டுப் போய் விட்டான். அதன்பின் நடந்த பேச்சுவார்த்தைகள், வெளஙிகங்கள் எல்லாவற்றுக்கும் பையன் சாதகமாகவே வந்தான். அதிகமாக அவன் ஏதும் எதிர்பார்க்கவில்லை.

மிகமிகப் பிரயாசையுடன் ரூபாய்ரூபாயாக எண்ணி ஒவ்வொன்றாகச் செலவு செய்து இந்துவின் கல்யாணத்தை எப்படியும் விக்கினமில்லாமல் முடித்து விடுவோம் என்று துடிப்புடன் இருந்த விசுவுக்குக் கல்யாணம் இன்னும் இரண்டு நாள் என்கிற போது ஒரு பெரும் அதிர்ச்சி காத்திருந்தது.

6

அவ்வளவு பெரிய அதிர்ச்சியாக அது இருக்குமென்று அவன் நினைக்கக்கூட இல்லை. ஏதேனும் சில்லறை மனஸ்தாபங்கள் வரலாம். செய்யவிருக்கின்ற சீர்வகையறுக்களில் திருப்தியில்லாமல் தாலி கட்டுமுன் புதிய நிபந்தனைகள் போடப்படலாம். இதெல்லாம் எங்கிலும் உண்டானதுதான். ஆனால் ஆனால்....... இங்கே.......

அவசரமாகப் பையனின் தகப்பனார் அழைப்பதாக யாரோ வந்து சொல்லவே பரபரப்புடன் ஓடியவன் மாப்பிள்ளையாக வரவிருந்தவனின் தகப்பனார் சொன்ன வார்த்தைகளைக் கேட்டபின் அந்த அதிர்ச்சியைத் தாங்கும் சக்தி பிறகு இல்லவேயில்லை. உடம்பெல்லாம் வியர்க்க, காது அடைக்க, கண் இருட்ட என்ன கேட்பது என்ன பேசுவது என்பதே தெரியாமல் தடுமாறிப் போனான் விசு.

"இவ்வளவு ஏற்பாடுகளும் செய்த பின்பு, இத்தனை நாள் கழித்து, இந்தக் கடைசி நேரத்தில், கேட்காத இடமெல்லாம் பல்லைக் காட்டிக் கடன் கேட்டு வாங்கி அவையெல்லாவற்றையும் எண்ணிக் கொண்டிருக்கிற போது இப்படிப் பேசறேளே, இது நியாயமா?" என்று கண்களில் கண்ணீர் விட்டான் விசு.

"எனக்கு நேற்றுத்தானே இது விஷயம் தெரியும்.....' என்றவர் மிக மிகத் தயங்குகிறவர் போலவும், பிறர் விஷயங்களில் அதிக சிரத்தை இல்லாதவர் மாதிரியுமாக முகத்தை



வைத்துக் கொண்டு பேசினார்: ''உம் தங்கையைப் பற்றி நான் கேள்விப்பட்டது அவ்வளவு நன்னா இல்லே! உங்க ஸ்டோர்லே ஒருமாதிரி பேசிக்கறா. யாரோ ப்ரூப் ரீடராமே, சேதுராமன் என்று ஒருத்தர் இருக்கிறாராமே....'' என்றவர் விஷயத்துக்கான விஷத்தை வாய் வழியே துப்பிவிட்டு அதைப் பாதியில் மென்று உள்ளே தள்ளினார். பிறகு ''எமக்கெதற்கு அதெல்லாம் வெளியே ஆயிரம் நடக்கும். அந்த மாதிரி சமாசாரங்களில் நாங்க தலையிட மாட்டோம். அந்த மாதிரி சம்பந்தமும் எங்களுக்கு வேண்டாம். பையனும் இதைவேதான் சொல்லிவிட்டான். அவன் இப்போ ஊரில் இல்லே. நேத்திக்கு ஒரு ஸ்பெஷல் டிரிப் டூரிஸ்டிலே தஞ்சாவூர் போயிட்டான். வர ஒரு வாரமாகும். இதைச் சொல்லிடச் சொல்லி விட்டான். எங்களையிட்டு நீங்க செய்திருக்கிற செலவுக்குக் கணக்குக்கொடுத்தா தொகையை ரூபாய் அணாவோட திருப்பித் தர எங்களுக்கு எந்தவித ஆட்சேபணையுமில்லே....'' என்று கூறி முடித்தார்.

சோகத்தால் நொந்த நிலையில் அவர் பேசி முடியும் வரைகூட உட்கார்ந்திருக்காமல் எழுந்தவன் வீடு திரும்பி விட்டான்.

சின்னதாகப் போட்டுக் கொண்டிருந்த கல்யாணப் பந்தலைப் பார்த்தான்; மேல் நிலையில் மட்டும் பாதி அளவு கீத்துகள் வேய்ந்திருந்தார்கள். கண்களில் நீர் மல்க அங்கே வந்து நின்ற விசு, ''இந்தாப்பா, பந்தல் போட்ட வரையிலே போதும். எல்லாத்தையும் பிரிச்சுடுங்க'' என்றான் சட்டைப் பையில் இருந்த பணத்தை எடுத்து அவர்களிடம் கொடுத்துவிட்டு, ''கணக்குப் பார்த்துச் சொல்லப்பா. குறைவா இருந்தால் கேளு.....'' என்றவன் துக்கம் நெஞ்சை அடைக்க உள்ளே போய் விட்டான்.

விசு சோகமாக வந்தது, போட்டுக் கொண்டிருந்த பந்தலை நிறுத்தச் சொன்னது எல்லாவற்றையும் குந்தளமும், சேதுவும் பார்த்துக் கொண்டுதான் இருந்தனர்.

காரணத்தை எப்படிக் கேட்பது, ஏதோ விஷயம் விபரீதமாக மாறி விட்டிருக்க வேண்டும் என்கிற அளவுக்கு அவர்களால் யூகிக்க முடிந்ததேயன்றி, அதன் பின்னால் இருக்கும் பயங்கரம் தெரியவில்லை.

''சேதுவோட பேசறே, சேது வீட்டுக்குப் போறே. அவனோட சிரிக்கறே என்று கரிச்சு கொட்டினியேடி. உன் துர்க்குறி வாய் என் தங்கை கல்யாணத்தை நிறுத்திவிட்டதுடி பாவி! என் தங்கை கல்யாணம் நின்று போய் விட்டது.'' —

விசு துக்கம் தாளாமல் வீட்டில் பொருமித் தள்ளினான்.

பரிமளம் பேச விசு பேசக் குடும்பச் சண்டை குடியிருப்பவர்கள் கவனிக்கக்கூடிய அளவுக்கு வந்து விட்டது. பரிமளம் பேச்சில் தன் சாதனையைச் சரியென்று நிலைநாட்டிக் கொண்டிருந்தாள்.

சிறுகச் சிறுக அவன் எடுத்துக் கொண்ட முயற்சிகள், சிறுகச் சிறுக அவன் சேர்த்துக் கொண்டு வந்த நம்பிக்கைகள் எல்லாம் தரை மட்டமாயின. வீண் அவமானத்தால் உடல் குன்றியது. சேதுவின் நிலை அதைவிடப் பரிதாபகரமாக மாறிவிட்டது.

கல்யாணம் நின்றதற்கு சேதுதான் காரணம் என்று ஸ்டோர் வம்பர்கள் முடிவு கட்ட அதுவே பரிமளத்தின் வார்த்தைக்குப் பக்கபலமாக நிற்கவே, அதை மாற்றும் திராணியோ, தன் அன்பில் விகல்பமில்லை என்பதை நிதரிசனமாகக் காட்டவோ, சேதுவுக்குத் தகுந்த ஆதாரமில்லை; அவனால் காட்ட முடியவுமில்லை.

எல்லாம் அந்தக் கோடி வீட்டுக்காரன் செய்கையாகத்தான் இருக்கும் என்று எண்ணிய போது மாப்பிள்ளை அந்தக் கோடி வீட்டுக்காரருக்கு நெருங்கிய உறவினன் என்பதும் அப்பொழுதுதான் தெரிய வந்தது.

விஷம் போல் அபவாதம், தீப்போல உள்ளம் தகித்தது. தாயைப் பார்க்கக்கூட வெட்கியவனாக உள்ளே கண்ணீர் விட்டுக் கொண்டிருந்தான் சேது.

''அண்ணா!'' என்று கதறி அழுது கொண்டே அவன் முன் ஓடி வந்து விழுந்தாள் இந்து. ''பாரண்ணா, என் கல்யாணம் நின்னு போச்சாம். நான் இனி என்ன அண்ணா பண்ணுவேன்...'' அவளைக் கண்ணீருடன் தூக்கி நிறுத்தினான் சேது.

''அதைரியப்படாதே இந்து. நான் எப்படியாவது இந்தக் கல்யாணத்தை முடித்து வைக்கிறேன். என்னால் உனக்கு உண்டான அபவாதத்தை நானே போக்கி வைக்கிறேன்'' என்று ஏதோ முடிவோடு வெளியே புறப்பட இருந்தவனை விசு வந்து தடுத்தான்.

''வேண்டாம் சேது, நீ போக வேண்டாம். அந்த மனுஷன் கொஞ்சம்கூட மனுஷத் தன்மையில்லாமப் பேசறான். இனி அந்தப் பாலைவனத்திலே பயிர் பண்ண முடியாது சேது. பையன் ஊரிலேயே இல்லையாம். திரும்பி வர ஒரு வாரம் பிடிக்குமாம்'' என்று சொன்னவன், ''எல்லாம் விதி..... யாரை நொந்து என்ன செய்யறது?'' என்றான்.

அடுத்த கட்டிலிருந்து பரிமளாவின் வார்த்தைகள் வரம்பின்றி, வகையின்றி வந்தன.

''தலை தலையா அடிச்சுண்டேன். என் பேச்சை யார் கேட்டா! யார் மதிச்சா. கண் கலங்கி, மனம் கலங்கி நிக்கறது இப்போ யார்? அவமானப்பட்டுச் சிரிப்பாய்ச்சிரிக்கறது யார்? எல்லாத்துக்கும் ஓர் அளவு வேணும். காலம் காலமாகப் பழகினா என்ன, தோளில் தூக்கிக் கொண்டு வளர்த்திருந்தால் என்ன? பழகறது விகல்பமாப் படறதான்னு கேட்க மட்டும் வாயிருந்ததா? இப்போ விகல்பமா மட்டுமில்லே, விபரீதமாகவும் அல்லவா மாறி விட்டது!''

விசு பரிமளத்தின் பேச்சை அடக்க முடியாதவனாக நின்றான்.

கைதவறிவிட்ட இன்பம், தொடரப் போகிற துன்பம் இரண்டுக்குமாக இந்து கண்ணீர் விட்டுக் கொண்டு நின்றாள்.

'அழகிய பெண்களின் கண்களிலிருந்துதான் அதிகமான கண்ணீர் வருகிறது' என்பதில்லை. புனிதக் கோலம் பூண்ட நிர்மலமான பெண்

புத்தம் புதிய 'டூலக்ஸ்' ஆக்ரிலிக் எமல்ஷன் —

வருங்கால வண்ணப்பூச்சான இதை இன்றே ஐ.ஸி.ஐ. வழங்குகிறது



டூலக்ஸ் ஆக்ரிலிக் எமல்ஷன் நிச்சயமாக நிலைத்து நீடிக்கவல்ல அலங்காரப் பூச்சாகும். முற்றிலும் புதிய முறைப்படி தயாராகும் இந்த கோபாலிமர் பூச்சு மிகவும் உறுதி உடையது. வெயிலில் காய்ந்தாலும் சரி, மழையில் நனைந்தாலும் சரிதான், நிறங்களின் அசல் செறிவோ அழகோ குறைவதேயில்லை. தண்ணீரால் சுத்தப்படுத்தக் கூடிய ''டூலக்ஸ்'' ஆக்ரிலிக் எமல்ஷனை ஒரு முறை பயன் படுத்தினால் போதும், மறு பூச்சு பற்றி நீண்ட நெடுங் காலத்திற்கு நினைக்கவே தேவையில்லை. ஏனெனில், இது உதிர்ந்து உதிர்வதில்லை; வெடித்து விழுவதில்லை, மங்கி மறைவதுமில்லை. எனவே, உங்கள் வீடு புது மெருகு குன்றாமல் நீடித்து பொலிவது நிச்சயம்.

''டூலக்ஸ்'' ஆக்ரிலிக் எமல்ஷன்—சம்பிரதாய ஹோமோ பாலிமர் எமல்ஷன் பூச்சுகளை பழமையாக்கிய ஒரு புதிய பூச்சு.

மிகமுன்னேறிய ஐ.ஸி.ஐ. ஆராய்ச்சியின் பயனான இந்த பூச்சு, இந்தியாவில் அதன் பிரத்தியேகத் தயாரிப்பாகும்

தயாரிப்போர் : ஆல்கலி அண்ட கெமிகல் கார்ப்பரேஷன் ஆப் இந்தியா லிமிடெட்

ஏகபோக விற்பனை ஏஜண்டுகள் : ஐ.ஸி.ஐ. (இந்தியா) பிரைவேட் லிமிடெட்
கல்கத்தா பம்பாய் டில்லி சென்னை

ICI

IGC:569 TAM

னுள்ளமும் கூடச் சதா அழுதுகொண்டே தானிருக்கிறது.

பரிமளாவின் குரல் மீண்டும் கேட்டது.

''இந்துவோட இன்னி நிலைக்கு அவர்தான் காரணம் சொல்லணும். இல்லேன்னு இந்துவை அவரே கல்யாணம் பண்ணிக்கட்டும்.''

பரிமளம் சொன்ன கடைசி வார்த்தைகள் இந்துவின் காதில் விழுந்தவுடனேயே அவள் நினைவற்றுக் கூடத்தில் விழுந்தாள்.

7

''அதுதான் சரியான வழி விகவநாதன். அப்படியே முடிச்சுடுங்கோ.''

கோடி வீட்டுக்காரர் மெதுவாகத் தம் சுய சொரூபத்தைக் காட்டினார்.

''நீர் உம்ம தங்கைக்குப் பார்த்திரே ஜோதி டிரான்ஸ்போர்ட் பையன் யார் தெரியுமா? நமக்கு நெருங்கிய பந்து ஐயா!'' சொல்லி விட்டுக் கொஞ்சம் கூட விசுவின் அந்தரங்க சோகத்தின் அருகில் வந்து அநுதாபப்படாமல் தூர நின்று நையாண்டி செய்துவிட்டுப் போய்விட்டார்.

தங்கையின் விவாகம் நின்ற செய்தி அவன் வேலை பார்க்கும் பெட்ரோல் பங்க் வரையில் கலபமாக, விரைவாகப் பரவியது. அநுதாபம் விசாரித்தவர்கள், ஆறுதல் கூற வந்தவர்கள் அத்தனை பேரும் முடிவில் அதையேதான் சிக்கல் தீர வழியாகக் கூறினர்.

''சேதுவுக்கும் உங்க தங்கைக்குமாகக் காரியத்தைக் காதும் காதும் வைத்த மாதிரி முடியுங்கள். இதுக்குப் போய் இப்படி மலைச்சுப் போவானேன். முதல்லே அப்படித்தான் இருக்கும். போகப் போக அவர்கள் சரி செய்து கொண்டு விடுவார்கள்.''

பாசம், காதல் போன்ற அதீதமான உணர்வுகளைப் பற்றி விசுவுக்கு அதிகமான விஷயங்கள் தெரியாது. மன உணர்வின் விசித்திரங்கள் பற்றியும் அதிகமான சர்ச்சைகளுக்குள் புகுந்து வந்தவனுமல்ல. ஒரு சராசரி மனிதனுடைய கோப தாபங்கள், வேட்கைகள், வேதனைகள், துடிப்புகள் போன்றவை அவனிடத்தில் என்றுமே எழும்பிப் பேசினதில்லை. அந்தமாதிரி சந்தர்ப்பங்கள் அவன் வாழ்நாளில் ஒரு தடவைகூட வந்ததில்லை. எனவேதான் ஸ்டோரில் உள்ள மற்றவர்களும், அவன் சக நண்பர்களும் சொல்லும் அந்த ஒரே வழி அவனைப் பொறுத்தவரையில் அதிகக் குழப்பத்தைத் தரவில்லை. பரிமளா கொஞ்சம் அழுத்தமாக, ஆத்திரமாகச் சொல்லுகிறாள். மற்றவர்களும் அதையேதான் நிதானமாகச் சொல்லுகிறார்கள். ஏன் அப்படியே செய்து விட்டால் என்ன?

பணம் கொடுத்த ராமதுரை உள்பட, ''சூரியன்'' காரியாலய நண்பர்கள் அத்தனை பேரும் இதையேதான் சேதுவிடம் சொன்னார்கள். 'நீதானே கடன்பட்டு ஆயிரம் வாங்கிக் கொடுத்தே! யாருக்கோ கொடுக்கப் போய் அது உனக்கே திரும்பப் போகிறது. பாசம், அது, இது என்பதெல்லாம் இருக்கட்டும். அவளை நீயே விவாகம் செய்து கொண்டுவிடு. உன்னைவிட்டு அவளுக்கு உண்டாகிவிட்ட இந்த அபவாதத்தைத் துடைக்க இதைத் தவிர வேறு வழியே கிடையாது. விஷயத்தை இந்த அளவுக்கு மேல் பரவ விடாமே இதோட தடுத்து நிறுத்திவிடச் சிறந்த வழி வேறே கிடையாது—'

ஸ்டோரில் ஒவ்வொருவர் ஒவ்வொரு விதமாகப் பேசினார்கள்.

காரியாலயத்திலிருந்து வீடு திரும்பிய சேது தயங்கித் தயங்கி விசு வந்து நிற்பதைப் பார்த்தான். ஒருவரையொருவர் நிமிர்ந்து பார்க்கவே வெட்கியவர்கள் போலத்தான் நின்றனர்.

''நீதான் சேது என்னை இந்த இக்கட்டிலிருந்து மீட்கணும். வெளியே தலைகாட்ட முடியலை. ரொம்ப அவமானமா யிருக்கு. நான் யாரையும் குறை கூறுவதாக நினைக்காதே. உன்மேல் எனக்கு அளவு கடந்த அன்பும் நம்பிக்கையும் உண்டு. அதே அன்பும் நம்பிக்கையோடும்தான் இதையும் சொல்கிறேன். இந்துவை நீயே...''

''விசு!...''

''வேறே ஒரு வழியும் எனக்குத் தோணலை சேது. ஊர் வாயை மூட, அபவாதத்தைத் துடைக்க மனசைக் கொஞ்சம் மாத்திக் கொண்டு நீ சரியென்று சொல்லு...''

பேரலையின் நடுவே நிற்கிற மாதிரி நாற்புறமும் நான்குவிதமான சர்ச்சைக்குக் காரணமாகிச் செயலற்று நின்றான் சேது.

பதினெட்டு ஆண்டுகளில் ஒரு கணமேனும் அந்த வகை எண்ணத்தை மனம் நினைக்காததை, சகோதரி என்ற வாஞ்சை ஒன்றைத் தவிர வேறு மாறுபட்ட கிளர்ச்சிக்கு ஆளாகாததைச் சொன்னால் இனி யார் நம்புவார்கள்! வில்லை விட்டு அம்பு பிய்த்துக் கொண்டு புறப்பட்டு விட்டதே! அது இனி மேல் யாரையேனும் மாய்க்காமல் விழப் போவதில்லை!

விசுவிடம் தன் நிலையை எடுத்துச் சொல்லலாமா? 'அவளை என்னால் மனைவியாக ஏற்கவே மனம் ஒப்பவில்லை என்று சொன்னால் கேட்பானா?' என்று தயங்கினான்.


வேதனையைப் புரிந்து கொள்ளக் கூடிய விவேகம் அந்தப் புகை நடுவே இல்லை என்பதைக் கண்டவுடன் கேட்டுப் பின் தோல்வி அடைவதை விட, கேட்டு அதனால் வேறு ஏதேனும் ரஸாபாஸம் உண்டானாலும் ஆகலாம் என்ற முடிவோடு சிதைந்து, நொந்து பிரியும் உணர்வுகளுக்கு ஊட்டம் கொடுத்து அதை நேர்ப்படுத்துவதில் முனைந்தான்.

குந்தளம் மௌனமாக நின்றாள். அவள் மௌனம் எதையும் ஆதரித்தோ, எதையும் எதிர்த்தோ அல்ல. அவளும் தன் மகனை அந்த அவமானத்திலிருந்து மீட்டு வரும் வழியைப் பற்றித்தான் தீவிரமாகச் சிந்தித்துக்கொண்டிருந்தாள். அவளுடைய எண்ணங்களின் முடிவைப் பொறுத்தவரையில் இந்துவைச் சேது விவாகம் செய்துகொள்ளுவதில் தார்மீக நஷ்டங்கள் ஏதும் இருப்பதாகத் தோன்றவில்லை. இதைத் தன் அபிப்பிராயமாகச் சொல்வதை விட, தன் மகன்

வாயிலிருந்தே வந்து விடட்டும்' என்ற முடிவோடுதான் மௌனமாக நின்றாள்.

சாத்திய அசாத்தியங்கள், சாதக பாதகங்கள், எதிர் முனையின் வேகம், எல்லாவற்றையும் கல்யாணம் நின்று போனதிலிருந்து கவனித்து வந்து கொண்டிருக்கிறாளாகையால் இப்போது தான் கூறப் போகிற பதிலில் ஒரு தீர்க்கமான முடிவோடு தான் சொல்கிறோம் என்ற ஆத்ம திருப்தி அவளளவில் இருந்தது.

''சரி விசு, நடக்கட்டும். இந்துவை நான் விவாகம் செய்து கொள்கிறேன்.''



8

பாதி பிரித்த பந்தல் அடுத்த நாள் போடப்பட்டது. முக்கியமான வைதிக காரியங்களில் மட்டுமே அதிக கவனம் செலுத்தப் பட்டன. வேறு எதையும் முக்கியமானதாகக் கருதவில்லை.

இந்து மணைக்கு வரவே மாட்டேன் என்று ஒரே பிடியாக அடம் பிடித்தாள். இதற்கு மத்தியில் இரண்டு தடவை அவள் நினை விழந்து விழுந்தாள்.

'லக்ஷ்மி கடாக்ஷம்' என்று அழைக்கப்படும் அந்த ஏழைகள் வாழும் ஸ்டோரில் நடுநிலைமையோடும் எந்த வித வம்புகளுக்கும் வாதப் பிரதிவாதங்களுக்கும் ஒதுங்கி வாழ்கிற நான்கைந்து குடும்பங்களுக்கு மட்டுமே பிரத்தியேக அழைப்பு. கோடி வீட்டுக்காரரைப் பரிமளம் 'பகிஷ்காரம்' செய்து விட்ட விஷயத்தை அந்த அமர்க்களத்தில் யாரும் அவ்வளவு முக்கியமாகக் கவனிக்கவில்லை.

அரை மயக்கத்தோடும் அரை பிரக்ஞையோடும் தள்ளாடிய இந்துவை விசுவும், பரிமளமும் பிடித்துக் கொண்டு வந்து மணையில் உட்கார வைத்தனர்.

ஒரேயொரு நாயனத்தோடும் ஒரேயொரு தவிலோடும், ஜாலரா, ஒத்து இவைகளோடு வந்திருந்த மிகக் குறைந்த 'ரேட்' நாயனக் கோஷ்டியொன்று திமர் திமரென்று பாட்டுக் களை உதிர்த்து ஓய, திடீரெனக் கொட்டு மேளம் முழங்க இந்துவின் கழுத்தில் புனிதமான மாங்கல்யம் ஏறிவிட்டது.

ஆரம்பத்திலிருந்தே கல்யாணத்துக்குப் பத்திரிகை அச்சிடவில்லை விசு. நெருங்கிய உறவினர்கள் என்று சொல்லிக் கொள்ளக் கூடியவர்கள் அதிகம் பேர் இல்லாததால் பத்திரிகை அடிக்க வேண்டிய பிரமேயமே உண்டாகவில்லை. விவாகத்தில் ஏற்பட்ட மாறுதலைக் கேள்விப்பட்டவர்கள் கௌரவமாக வராமலே இருந்து விட்டார்கள். விஷயம் தெரியாமல் வந்தவர்களும் தாம்பூலத்தோடு திரும்பினார்கள். முடிவாக ஐம்பது சாப்பாட்டு இலை விழுந்ததுதான் மிச்சம்.

'சூரியன்' காரியாலயத்திலிருந்து இரண்டு உதவி ஆசிரியர்கள், புரூப் ரீடர்கள் நான்கு பேர், அது தவிர, இரவு ஷிப்ட் ரோட்டரியிலிருந்து ஏழு எட்டுப் பேர்கள் வந்திருந்தனர். நெருங்கிய உறவினர்கள் என்பவர்கள் யாருமில்லை. பணம் கொடுத்த வக்கீல் ராமதுரை வந்திருந்தார்.

விசுவின் சார்பிலே 'பங்'கிலிருந்து நான்கு ஐந்து பேர்கள் வந்திருந்தார்கள். அவ்வளவுதான்.

ஃ ஃ ஃ

அடிக்கொரு முறை இந்து அழுது கொண்டே கழுத்தைக் குனிந்து பார்த்துக் கொண்டாள். கழுத்தில் தாலி இருந்தது. ஆனால் நிறைவின் பூரிப்பு முகத்தில் இல்லை. குனிந்து காலைப் பார்த்தாள். அங்கே மஞ்சளும் சிவப்பும் சேர்ந்து மின்னின. ஆனால் மனத்தில் கறுப்பு விழுந்து விட்டதே.

''நான் இந்த விவாகத்தை ஏற்றுக்கொள்ளாத நிலையிலேயே இந்த விவாகத்தை நடத்தி விட்டார்களே! இந்த வழக்கை நான் இனி எங்கே யாரிடம் போய்ச் சொல்வேன்? இத்தனை நாள், இத்தனை ஆண்டுகள் என் குறைகளையும் நிறைகளையும், கோபங்களையும், தாபங்களையும் மனத்தில் எழும் கனவுகளையும், 'அண்ணா' என்ற உரிமையுடன் யாரிடம் சொல்லுவேனோ, சொல்லி மன ஆறுதல் பெறுவேனோ அவரிடம் நான் இனிச் சொல்ல முடியாதே! அவர்தானே இந்த அநீதிக்கும் உடந்தையாகி, உடன்பட்டு நிற்கிறார். இந்த அநீதியை அவரின்றி வேறு யாரிடம் சொன்னாலும் ஏற்கமாட்டார்களே! ஆனால் இனி அவரும் ஏற்கமாட்டார். ஏனெனில் இனி அவர் என் கணவர்.

''என் கணவர்! இல்லை: இல்லவே இல்லை. நான் இதை ஏற்றுக்கொள்ளவே மாட்டேன். இது என் அனுமதியின்றியே நடந்து விட்டது. என்னுடைய பிரக்ஞை இழந்த நிலையிலேயே இது நடந்து விட்டது. என் மனம் இதைப் பூரணமாக ஏற்கவில்லை என்பதைச் சொல்ல இவர்களில் யாருமே எனக்குச் சந்தர்ப்பம் கொடுக்க வில்லை. கொடுக்கா விட்டாலும் பரவாயில்லை. இனியும் இந்த வெட்கக் கேட்டை நான் சகித்துக் கொண்டிருக்கவே முடியாது. எல்லோருமாகச் சேர்ந்து என்னை ஏமாற்றிவிட்டார்கள். எல்லோருமேதான் ஏமாற்றினார்கள். 'அண்ணா'வும்கூடவா அந்த ஏமாற்றும் கும்பலோடு சேர்ந்து விட்டார்.'' இந்துவின் மௌனப் புலம்பல் அவள் உள் இயக்கங்களோடு சேர்ந்து நடந்தன. பேச முடியாத நிலையில் அந்தரங்கத்துடன் அவள் நடத்திய போரின் இறுதியில் ''அண்ணாவும் கூடவா?'' என்று எண்ணியவுடன் அருகில் மணையில் அமர்ந்திருந்த சேதுவைக் கண்களில் நீர்மல்கத் திரும்பிப் பார்த்தாள். அடுத்த கணம் மணையிலேயே நினைவு தப்பிச் சரிந்து விழுந்தாள்.

வெளி அபவாதங்களையும் வெளிப் போராட்டங்களையும் கண்ட சேது ஓர் அவசர உந்தலில் ''நான் இந்துவைக் கல்யாணம் செய்து கொள்கிறேன்'' என்று சொல்லிவிட்டு அதன்படிசெயல்பட்டுஅதைஅடக்கிவிட்டான். இனி வெளியில் ஒரு மாதிரியாகப் பேசுவதோ வீண் வார்த்தைகளுக்கு இடம் கொடுப்பதென்பதோ பரிமளாவுக்கு அது அவளுடைய மனச்சாட்சியைப் பொறுத்த விஷயம். அந்த மாதிரி நிகழா வண்ணம் பாதுகாக்க வேண்டியது அவளுடைய முதல் கடமை என்பதைத் தேவைக்கு மீறின ஒருவித அழுத்தமுடனேயே 'எச்சரிக்கை' என்கிற மாதிரி சொல்லி வைத்து விட்டாள் குந்தளம்.

குந்தளத்தின் உருவத்தைக் காட்டிலும் அவள் வார்த்தைகளைக் கண்டு பயப்படுகிற சுபாவம் இயல்பாகவே பரிமளத்திடம் உண்டு. குந்தளத்தின் எச்சரிக்கைக்கு முன்பே பரிமளாவின் மனத்தில் ஒரு தார்மீக பயம் வந்து விட்டது. அடங்கி யிருக்க வேண்டியவள் இனி தான்தான் என்ற நினைவே அவளைப் பெட்டிப் பாம்பாக மாற்றிவிட்டது.

9

ஓர் அவசர வேகத்தில் கல்யாணம் நடந்தேறிவிட்டது. இதில் கொஞ்சம்கூட உற்சாகம் காட்டவில்லை இந்து. நேற்றுவரை அண்ணா, அண்ணா என்று சகோதர பாசத்தோடு அழைத்துக் கொண்டிருந்தவனை இன்று கணவன் என்று ஏற்றுக் கொள்ள அந்த விகல்பமற்ற உள்ளத்தினால் முடியவில்லை. அது நினைவுக்கு வருகிற ஒவ்வொரு கணத்திலும் அவள் உடம்பில் திடீரென ஒரு படபடப்பு; கண்களுக்கு முன்னே இருட்டிக் கொண்டு வந்தது. நெஞ்சை முட்டுகின்ற ஒருவித திகில் வாய் விட்டுக் கூற முடியாத உள்ளத்தின் பிரலாபம் — மயக்கம், இமை விழுதல், நினைவின்றிக் கிடத்தல், அண்ணா அண்ணாவென்ற இலேசான முனு முனுப்பு. அவள் அண்ணாவென்று உதட்டைத் தாண்டாமல் கிளப்புகிற ஒலியைக் கேட்கிறபோது தான் சேதுவின் ரத்த நாளங்களெல்லாம் ஜில்லிட்டுப் போகும். மாபெரும் தவறு செய்கிறோம் என்ற சுயப் பிரக்ஞையுடனேயே தவற்றைச் செய்துவிட்டதை உணர்கிறபோது தவிப்பையும், வேதனையையும் அவனால் அடக்கவே முடியாமல் போய்விடும்.

சோர்ந்து போய் அவள் ஜமக்காளத்தில் கிடப்பதைப் பார்ப்பான். 'இவள் என் மனைவியா? இந்து என் மனைவியா?'

மனத்தின் ரஸாயனத்தைப் பொறுத்த வரையிலே இந்து, சேது இருவர் மனத்திலும் எண்ணங்களில் மாறுதல் இல்லை.

நேற்றுவரை தங்கை, சகோதரி என்ற முறையைப் பூரணமாக ஏற்றுக் கொண்டு அந்தப் பாச உணர்வுக்குப் புனித பீடத்தில் இடம் கொடுத்துப் பழகியவளை இன்று மனைவியாக ஏற்றுக் கொண்டிருக்கிறேனே!

பதினெட்டாண்டு கால ஒட்டுறவில் ஒரு நாள், ஒரு நிமிஷம், ஒரு விநாடிகூட ஏற்படாத நினைப்பை இப்பொழுது எப்படி மாற்றிக் கொள்வது?

இந்த உடம்பைத்தானே குழாயடியில் நிற்க வைத்து எண்ணெய் தேய்த்துக் குளிப்பாட்டி விட்டேன் முன்பு!

சோப்பின் நுரையென்றால் இவளுக்குத் தனிக் குதூகலமாயிற்றே! வாசனை சோப்பை நுரை வரும்படியாகக் குழைத்து ஒரு குத்து நுரையைக் கையில் கொடுத்து விட்டால் அதைத் தன் சின்னக் கையில் ஏந்திக்கொண்டு நிற்பாளே, அதே சாக்கில் அவளைக் குளிப்பாட்டித் துடைத்து அழைத்து வருவேனே?

சிறு வயதிலிருந்து மிக வீட்டில் தங்க மாட்டான். சேது சேதுவென்று இந்துவின் தாயார் இவனைத்தானே எல்லாவற்றுக்கும் அழைப்பாள். எங்கே போனாலும் இவளையும் விரலைப் பிடித்து அழைத்துப் போகவேண்டுமே! இந்து நடக்கத் தெரிந்த நாள் முதலாக அவள் கையைப் பிடித்துக் கொண்டு எத்தனை நாள் சுற்றியிருக்கிறான்!

அவள் சாப்பிடத் தொடங்கிய நாளாகச் சேதுவின் தட்டுக்கு அருகிலேயே அவளுக்கு ஒரு தட்டுப் போட்டிருக்குமே! நெய் மணக்கப் பருப்புச் சாதத்தைப் பிசைந்து அவளுக்கும் ஊட்டிக் கொண்டே தானும் உண்ணுவான். அவன் சாப்பிட்டுக் கொண்டிருக்கும்போதே அவன் தட்டில் உள்ளதை யெல்லாம் எடுத்து இரைப்பாள். ''ஐயே! என்ன பொண்ணுடி நீ....எச்சலையெல்லாம்....'' என்று செல்லமாகக் கடிந்து கொண்டு வரும். குந்தளம் அவள் கைகளைக் கழுவி நகர்த்தி உட்கார வைப்பாள்.

சேது பள்ளிக்கூடப் பாடம் படித்துக் கொண்டிருக்கும்போதே அவன் மடியில் வந்து கவிழ்ந்து படுப்பாள் இந்து. காலை ஆட்டி அவளைத் தூங்கச் செய்து கொண்டே பாடங்களைப் படிப்பான்.

பாதி நாளைக்கு இரவுத் தூக்கம் இங்கே தான். நடு இரவில் அம்மாவை நினைத்துக்


எம்.ஜி.ஆர்
அளிக்கும்
நான் ஆணையிட்டால்
சத்யா மூவீஸ் தயாரிப்பு
திரைக்கதை, தயாரிப்பு
R.M.வீரப்பன்
ELEGANT
டைரக்ஷன்·சாணக்யா
சென்னை
மிட்லண்ட்
ஏர்கண்டிஷண்ட்
பிராட்வே
உமா
சீனிவாசா
மற்றும்
தென்னாடெங்கும்

கொண்டு அழத் தொடங்கிவிட்டால் இந்துவின் தாயார் வந்து குழந்தையை எடுத்துக் கொண்டு போவாள்.

அவள்தானே இவள்?

இந்து உள் அறையில் ஜமக்காளத்தில் படுத்திருந்தாள். விவாகத்திலிருந்து அவள் உடம்பு தேறவில்லை. அவள் அருகில் நின்று கொண்டிருந்த சேது நிகழ்ந்த நினைவின் இருட் குகையில் மெதுவாகப் போய்க் கொண் டிருந்தான்.

ஒரு சின்னச் சம்பவமொன்று அவன் நினைவுக்கு வந்தது. அவன் பள்ளிச் சிறுவனாக இருந்தபோது நடந்தது.

எதற்கோ அடம் பிடிக்கும் சின்னக் குழந்தை இந்துவை விசு அடிக்கிறான். இதைத் தற்செயலாகக் கவனித்த சேது வேகமாக ஓடி வந்து விசுவை ஓங்கி அடிக்கிறான். ''ஏண்டா இவளை அடிக்கறே? இவள் மேலே கையை வச்சே உன் மண்டையை உடைச் சுடுவேன் ராஸ்கல். இரு அம்மாகிட்டே போய்ச் சொல்றேன்.''

''நான் அடிப்பேன். இவள் என் தங்கை. இவளை அடிச்சா உனக்கென்ன?'' விசு சேதுவின் மயிரைப் பிடித்துக் கீழே தள்ளுகிறான். சண்டை வலுக்கிறது. இவர்கள் கட்டிப் புரளுவதைக் கண்டு இந்துவின் அழுகை அதிகமாக, அவளைச் சேது கிழிந்த சட்டையோடு தூக்கிக் கொள்கிறான். இந்துவின் அம்மாவிடம் புகார் போகிறது.

''இந்துவை நான் அடிச்சா இவனுக் கென்னம்மா?''

''நீ எதுக்காக இந்துவை அடிக்கணும்?''

''அவ அடம் பிடிச்சா. அடிச்சேன். அவள் என் தங்கை, நான் அடிப்பேன்.''

''உன் தங்கையாயிருந்தாலும் நீ அவளை அடிக்கக் கூடாது. சேதுவுக்கும் அவள் தங்கை!'' அவன் தாயார் கூறினாள்.

''சேதுவுக்கும் அவள் தங்கைதான்!''

இந்து திரும்பிப் படுத்து முனகினாள். ''இந்து!... இந்து!'' அவள் கண் விழிக்க வில்லை. அருகில் அடக்கமே உருவாகப் பரிமளம் நின்று கொண்டிருந்தாள்.

''சேது, மணியாகிவிட்டதே. ஆபீசுக்குப் புறப்பட வேண்டாமா?'' அடுத்த அறையிலிருந்து குந்தளம் குரல் கொடுத்தாள்.

''இந்துவைப் பார்த்துக் கொள்ளுங்கள். டாக்டரை அனுப்பறேன்'' என்று பரிமளாவிடம் கூறிவிட்டுக் கவலையோடு வெளியே வந்தான் சேது.

வியாதி தெரிந்தால்தானே மருந்து கொடுக்க முடியும்?

குந்தளத்துக்கு ஒன்றுமே புரியவில்லை. கவலை தோய்ந்த மகனின் முகத்தைப் பார்க்கிறபோதெல்லாம் தான் ஏதேனும் தவறு செய்துவிட்டோமோ என அஞ்சினாள். இதே பயம்தான் விசுவின் நெஞ்சத்திலும் சூழ்ந்து கொண்டிருந்தது. சேதுவை முகம் நிமிர்ந்து பார்க்கவே அஞ்சியவனாக ஒதுங்கி ஒதுங்கிச் சென்றான்.

சேதுவின் நெஞ்சில் எல்லோருமாகச் சேர்ந்து தனக்கும் இந்துவுக்கும் இடையே இழையோடியிருந்த ஒரு புனிதமான, மாதுரியமான பாசப் பிணைப்பை அறுத்தெறிந்து விட்டு, ஏதோ ஒருவித பலவந்தக் கட்டை முடிபோட்டு விட்டுத் தூர நின்று வேடிக்கை பார்க்கிற மாதிரியே தோன்றியது.

முற்றிலும் பயந்தவன் போல ஒதுங்கும் பரிமளாவும், குழப்பத்துடன் போகும் விசுவும் பேச முடியாமல் தவிக்கிற அம்மாவும் போகும்போதும் வரும்போதும் இறுமாப்புடன் பார்க்கிற கோடி வீட்டுக்காரரும் அவனுடைய நைந்த உள்ளத்தை மேலும் மேலும் சல்லடைக் கண்களாகக் குத்திக் கொண்டிருந்தனர்.

''எப்படியப்பா இருக்கு மனைவிக்கு உடம்பு தேவலாமா?'' — உதவியாசிரியர் ஒருவர் கேட்கிறார்.

நேற்றுவரை தங்கையாக இருந்தவளை இன்று மனைவியாக்கிவிட்ட மற்றவர்கள் மேல் சினம் கொள்ள அவனால் முடியுமா?

''உங்க ஒய்ஃபு'க்கு 'ஃபீவர்' எப்படி ஸார் இருக்கு?'' ஆபீஸ் பையன் கேட்கிறான். வேதனையுடன் தலையைக் கவிழ்த்துக் கொள்கிறான் சேது.

உடன்பிறந்தால் மட்டும்தான் பாசம் வருமா? வளர்ப்பால், பிணைப்பால், சிநேகத்தால், அந்தரங்கத்தால், அதைக் கொண்டு வர முடியாதா? ரத்தத்துடன் பிறப்பது சகோதர பாசம் என்றால், உலகத்தில் மனித சமுதாயத்திடம் எங்கோ, எப்படியோ காணப்படுகின்ற அந்தப் பாசத்துக்கு அர்த்தம் கூற முடியுமா? ரத்தக் கலப்பில்லாத நேசம் வளர முடியாதா?

இந்துவின் வாழ்க்கை இப்படி ஓர் அன்புத் தீயில் புடம் போட்டு எடுக்கப்பட்டது. மனித மனத்தின் ஆழத்தை அளப்பது போல மகரிஷி எழுதும் இந்தக் கதை சிறப்புக் கதையாக இந்தச் சிறப்பு மலரிலே வெளியாவது சிறப்புக்குச் சிறப்பு சேர்ப்பதாக அமையவில்லையா?

சிறப்புக் கதை

மனைவி என்பதைக் காட்டிலும் அதை மீறி நிற்கும் அன்பின் உணர்ச்சிக் கட்டுக்குள் தவித்த சேது மாலை ஆபிசிலிருந்து வீடு திரும்பினான்.

காலையில் எந்நிலையில் இருந்தாளோ அதே நிலையில்தான் மாலையிலும் இருந்தாள் இந்து.

''டாக்டர் வந்தார். அவருக்கும் வியாதியின் காரணம் புரியவில்லை. அவரைக் கூடக் கூட்டிண்டு போய் இதோ இந்த மருந்தைக் கொடுக்கச் சொல்லிக் கொடுத்தனுப்பியிருக்கார்!'' — மருந்து சீசாவைச் சேதுவிடம் காட்டினாள் பரிமளா.

மருந்தில் தீருகிற வியாதியா இது? வியாதி உடம்பிலா, உள்ளத்திலா? வெளியில் சொல்ல முடியாத நிலையில் இவள் உடம்பு என்று படுத்திருக்கிறாள். நான் வெளியே சொல்ல முடியாமல் நடமாடிக் கொண்டிருக்கிறேன்.

''இந்து... இந்து... இதோ பாரம்மா... அவர் வந்திருக்கிறார்.''—பரிமளா தொனியில் சோகம் கலந்திருந்தது.

''அண்ணா! அண்ணா!'' இலேசாகக் கண் திறந்தாள். அவள் வாய் அண்ணாவென்று முணுமுணுத்தது.

அருகில் அமர்ந்திருந்த சேதுவின் கரங்களைத் தடவினாள் இந்து.

''இந்து... இந்து...''

இந்துவின் கண்கள் மூடிக்கொண்டன.

அங்கேயே நிலைகுலைந்து உட்கார்ந்து விட்டான் சேது.

அவன் நினைவில் மீண்டுமொரு நிகழ்ச்சி இழை பிரிந்தது.

இந்துவின் தந்தை இறந்த வருடம் அது. ஆறு வயதில் ஒரு தடவை இந்துவுக்கு வைசூரி போட்டிருந்தது. பிஞ்சு உடம்புக்கு வலி தெரியாமலிருக்க வாழை இலையில் எண்ணெயைத் தடவி அதிலே படுக்க வைத்திருந்தாள் இந்துவின் தாய்.

சேது உள்ளே செல்ல அனுமதிக்கப்படவில்லை. எவ்வளவோ மன்றாடினான்.

''நான் இந்துவைப் பார்க்கணும் மாமி. அவளைப் பார்க்காமல் இருக்க முடியவில்லை'' என்று கெஞ்சினான்.

''உன் தங்கையை நீ இன்னும் ஒரு மாசத்துக்குப் பார்க்க முடியாது'' என்றபோது சேதுவின் பிஞ்சு உள்ளத்தில் தாபம் தவித்தது. பேசிக் கொண்டிருக்கும்போதே ஒரே தாவாகத் தாவி உள்ளே போய்விட்டான்.

வழுவழுப்பான வாழை இலையில் அவள் கண் மூடிக் கிடப்பதைப் பார்த்தவன் தேம்பித் தேம்பி அழுதுகொண்டே வெளியே வந்தான். அழுது கொண்டே வெளியே வரும் அவனை, தடையையும் மீறி உள்ளே சென்ற கோபத்தையும் மறந்தவளாக அன்புடன் அருகில் இழுத்தாள் இந்துவின் தாய். அவள் காலைக் கட்டிக் கொண்டு அழுதான் சேது. ''என்ன மாமி இந்துவுக்கு?''

''மகமாயி வந்திருக்காடா.''

''எப்போ எழுந்திருப்பா இந்து?''

''மகமாயி என்னிக்கு அருள் புரியறாளோ அன்னிக்கு. நீயும் சாமிகிட்ட வேண்டிக்கோ, தங்கச்சிக்குச் சீக்கிரமா உடம்பு தேறணும்னு. சாமி உடனே கேட்பார். உன் இந்து உடனே எழுந்திடுவா.''

சேதுவின் உள்ளம் இறைவனிடம் தங்கைக்காக அன்று வேண்டியது. அவள் குணமாக வேண்டும் என்று கோவிலுக்கு எண்ணெய் விளக்கெல்லாம் போட்டிருக்கிறான். அன்று தங்கை! — என் தங்கை என்ற பாசத்தோடு வேண்டினான்.—

இன்று!

மனைவிக்காக வேண்டிக் கொள்ளும் நிலையில் இருக்கிறான். அதே அறைதான். அன்று படுத்திருந்த அதே இடம்தான். அன்று இந்துவின் அம்மா இருந்தாள். இன்று அண்ணி இருக்கிறாள்.

பிரமை சூழ்ந்த வெளியில் அவன் உள்ளம் பாழ்பட்டு உடல் தன் சுவாதீனத்தை மறந்து கிடந்தன. சேதுவின் உயிர் இயக்கங்கள் ஒவ்வொன்றிலும் 'அவள் என் தங்கை! அவள் என் தங்கை!' என்ற ஒலியே கேட்டவண்ணமிருந்தன. இந்து தன் மனைவி என்ற உண்மை பூர்வமானதை, சத்தியமாகிவிட்டதை, சாஸ்திரங்களும், வேதங்களும் முடிவு செய்து விட்டதை மனத்தளவில் அங்கீகரித்துக் கொள்ள முடியாமல் தவித்தான்.

''இந்து, அம்மா இந்து! கண்ணைத் திறம்மா. இதோ பார், 'அவர்' உன் பக்கத்தில் உட்கார்ந்திருக்கிறார்.''

பரிமளாவின் வார்த்தைகளில் அளவுக்கு மீறின வாஞ்சையும் பரிவும் இருந்தன.

திரும்பி நின்று கொண்டு கண்களைத் துடைத்துக் கொள்ளும் பரிமளாவைப் பார்த்தான் சேது.

''நான் ரொம்பப் பாவியாயிட்டேன். இத்தனை பாவங்களுக்கும் எனக்குச் சரியான தண்டனையை ஆண்டவன் கொடுக்கத்தான் போகிறார்.''

கொலைகாரனின் கடைசி வாக்கியம் போலப் பேசினான் பரிமளம்.

''பதற்றமிருந்த அளவு நிதானமும் இருந்திருக்கலாம். உங்க ரெண்டு பேரோட மனசும் தெரியாமே ஏதோ பெரிய தப்பு செய்து விட்டதாக நினைக்கிறேன்.''

உள்ளத்தில் குமையும் சோகத்தை வெளியிட முடியாத நிலையில் இந்துவின் அருகில் உட்கார்ந்திருந்த சேது உடல் குலுங்கக் குலுங்க அழுதான்.

அருகில் வந்து நின்ற குந்தளம் சேதுவைச் சமாதானப் படுத்தினாள்.

டாக்டர் கொடுத்த மருந்துடன் உள்ளே வந்தான் விசு.

''வழியில் ஜோதி டிரான்ஸ்போர்ட் கண்டக்டரின் தகப்பனாரைப் பார்த்தேன். இதை அவர் கொடுத்தார். நான் அவரிடம் கணக்கேதும் சொல்லவில்லை. எதிர் ஜாமீனாக வாங்கிக் கொண்ட நானூறு. மற்றச் செலவுகளுக்கு வாங்கிக் கொண்ட வகையில் நானூறு — ஆக எட்டு நூறு இருக்கு என்றார்.'' — கவரைச் சேதுவிடம் நீட்டினான் விசுவநாதன்.

அழுகையினிடையே உதட்டைக் கடித்துக் கொண்ட சேதுராமன், ''நீயே கொண்டு போய் வக்கீல் ராமதுரையிடம் கொடுத்துப்



கல்கி

சந்தா விகிதம்

		ஒரு வருஷம் ரூ. பை.	ஆறு மாதம் ரூ. பை.
இந்தியா இலங்கை		18-00	9-00
பர்மா, மலேயா இதர நாடுகள்		25-00	12-50

தனிப் பிரதி விலை 35 காசு

சந்தா தொகை முன்னதாக அனுப்பப் பட வேண்டும். வி. பி. பி. கிடையாது

மானேஜர் :

கல்கி காரியாலயம், சென்னை -10

அசுத்தமான ரத்தமே சரும வியாதிகளின் காரணம்!





சரும வியாதிகள் அகல—

- சருமத்தைப் பாதுகாத்து, கிருமிகளை ஒழிக்கக்கூடிய
- உடம்பிலுள்ள ரத்தத்தைச் சுத்தப்படுத்தி சருமப் பகுதிகளுக்குப் புத்துயிர்ப்பு அளிக்கக்கூடிய வைத்தியம் தேவை. இதற்காக, டாக்டர் ரிச்லே (Dr. Richelet) என்ற பிரஞ்சு நிபுணர் மூன்று மருந்துகளைத் தயாரித்திருக்கிறார். குணமளிக்கும் தன்மைக்கு உலகப் புகழ் பெற்ற அவை:

ரிச்லேஸ் பிளட் பியூரி∴பையர் (RICHELET'S BLOOD PURIFIER) சொறி சிரங்கு, கட்டிகள், முகப் பருக்கள், படை போன்ற பெரும்பாலான சரும வியாதிகள் அகலச் சிறந்த மருந்து. ரத்தத்தைச் சுத்தி செய்கிறது, விருத்தி செய்கிறது.

கல்லாஸ் ஆயின்ட்மென்ட் (GALLA'S OINTMENT) சொறிந்துச் சீழ் வடியும் சொறி சிரங்குகள், வெட்டுக் காயங்கள், புண்களுக்கு ஏற்ற மருந்து. சக்தி வாய்ந்த கிருமிநாசினி.

ரிச்லேஸ் லாக்ஸட்டிவ் (RICHELET'S LAXATIVE) மலச்சிக்கலை அகற்றுகிறது. ஜீரண சக்தி அதிகரிக்கச் செய்து, ஆகாரம் உடலோடு ஒட்டச்செய்கிறது. அதனால் ரத்தவிருத்தி ஏற்படுகிறது.

ரிச்லேஸ்

பிளட் பியூரி∴பையர்

எல்லா மருந்துக் கடைகளிலும், ஸ்டோர்களிலும் கிடைக்கும்.
விவரங்கள் அறிவிக்கும் இலவச அறிவிப்புக்கு (FOLDER) எழுதுங்கள்.
இந்தியாவெங்கும் ஏஜண்டுகள் தேவை. விண்ணப்பிக்கவும்

இந்தியாவில் ஸோல் டிஸ்ட்ரிபியூட்டர்கள்:

மஹாஸ்வரி ஜெனரல் ஸ்டோர்ஸ்,

19/35, பெரிய கடை வீதி, கோயமுத்தூர் - 1.

த்திரத்தில் வரவு வைத்துக் கொள்ளச் செய்து விடு'' என்றான்.

''டாக்டர் வரேன் என்று சொன்னார். ராத்திரி எட்டு மணிக்கு ஓர் இன்ஜெக்ஷன் போட்டுப் பார்க்கலாம் என்றார்'' என்றான் விசுவநாதன்.

டாக்டர்களாலும் அவர்கள் கொடுக்கின்ற மருந்துகளாலும் தீருகின்ற வியாதியா இது?

இந்து இலேசாக முனகினாள்.

புகை படிந்த கருவிழிகளில் உயிர்ப்பின் ஜீவன் மின்னலில்லை. காலை நேரக் குருவிகள் போலச் சதா பேரிரைச்சலைத் தந்து கொண்டிருந்த அந்த வாய் மூடிப் போய் மௌனமாகிக் கூம்பிக் கிடந்தது.

பரிமளா அருகில் சென்று அமர்ந்தாள்.

''என்னம்மா இந்து! உடம்பை என்ன பண்ணறது சொல்லேன். எல்லாரையும் இப்படிக் கவலையில் மூழ்க அடிச்சுட்டுப் படுத்துண்டு இருக்கியேடி—''

ஈர ரப்பைகள் விடுபடப் புகைபடிந்த விழிகளைச் சுழலவிட்ட இந்து ஒட்டிக் கிடந்த உதட்டைச் சிரமப்பட்டு விடுவித்துக் கொண்டு ''அண்ணா!'' என்றாள்.

''உங்களைத்தான்; கிட்டே வாங்களேன். இந்து உங்களைக் கூப்பிடறாள்.''

விசுவை அழைத்தாள் பரிமளா. அவன் இந்துவின் அருகில் வந்து நின்றான்.

பஞ்சடைந்த விழிகளைப் பனிச் சென்றத் திறந்த இந்து வெறுப்புடன் முகத்தைத் திருப்பிக் கொண்டாள்.

''விசுவை நான் கூப்பிடலை. சேது அண்ணாவைக் கூப்பிட்டேன்'' என்றாள் இந்து.

மயக்கம் இலேசாகத் தெளிந்த நிலையில் வார்த்தைகள் தெம்பின்றி இருந்தாலும் தெளிவுடன் வந்தன.

''பேரைச் சொல்லக் கூடாதுடி. அவர் உன் கணவர் இல்லையா?''

''கணவர் இல்லை! அவர் என் கணவர் இல்லை.''

''சச்சீ, அசடு! அப்படியெல்லாம் பேசக் கூடாது.''

''பேசுவேன். யாராவது எந்தத் தங்கையாவது சொந்த அண்ணாவைக் கணவன் என்பாளா! நானா அசடு? நீங்கள்தான் அசடு. சகோதர பாசத்தை உணராத வடிகட்டின அசடுகள் நீங்கள்......''

விசுவுக்குக் கோபம் வந்தது. உடல் நலக் குறைவோடு பிதற்றும் இந்துவிடம் சினத்தைக் காட்ட வேண்டாமென்று மௌனமாக நின்றான்.



''அண்ணா!'' — என்றாள் மீண்டும் இந்து. பாசக் கயிறு அவளை எங்கிருந்தோ இழுத்தது. சேதுவை, இந்துவின் அண்ணாவென்ற ஒலி இழுத்தது.

''அப்படிச் சொல்லாதே இந்து. அவர் உன் கணவர்.''— பரிமளாவின் தொனி கொஞ்சம் கண்டிக்கிற மாதிரி இருந்தது.

''இல்லை....இல்லை....சத்தியமா அவர் என் கணவர் இல்லை.....'' என்றவள் ஆவி பிரியுமுன் வருகிற ஓர் அசுர வெறியோடு ''அ...ண்...ணா'' என்று அந்தக் கூடமே அதிரக் கத்தினாள். அடுத்த கணம் அவள் தலை சரிந்தது. கழுத்தில் சேது கட்டிய தாலியை அந்தக் கடைசி நேர மூர்த்தண்ய வேகத்தில் பிடித்து இழுத்ததால் அது அவள் கையில் இருந்தது. 'நான் சேதுவின் தங்கையாகவேதான் உயிர் விடுகிறேன்' என்பதைக் காவிய நினைவாக்கிக் கொண்டிருந்தது.

''இந்து...... இந்து.......''

அழகிய உள்ளத்தில் காதல் பிறக்கலாம். ஆனால் புனிதமான உள்ளத்தில்தான் வாஞ்சை பிறக்க முடியும்!



கிழங்கு எங்கே போனாள் ?

ஜெர்மன் மொழியில் சந்திரன் ஆண் பாலாகவும், சூரியன் பெண் பாலாகவும் வழங்கப்படுகிறது. அரேபிய மொழியிலும் அப்படியே உள்ளன. மேசை, எண்ணம், பழம், இடி முதலியன ஒரு மொழியில் ஆண் பாலாகவும், மற்றொரு மொழியில் பெண் பாலாகவும் வழங்குகின்றன.

ஜெர்மன் மொழியில் இளம் பெண்ணை உணர்த்தும்போது பால் பாகுபாடு இல்லை. ஆனால் ஒரு வகைக் கிழங்கு பெண்பாலாக வழங்கும். அம்மொழியில் ஒருவரை நோக்கி, ''அந்தக் கிழங்கு எங்கே?'' என்று கேட்டால், ''அவள் சமையலறைக்குச் சென்றிருக்கிறாள்'' என்ற விடை வரும். அவரையே, ''அந்த இளம் பெண் எங்கே ?'' என்று வினவினால், ''அது இசையரங்குக்குப் போயிருக்கிறது'' என்று விடை வரும்.

— பி. வி. கிரி

(ஆதாரம்: 'மொழி நூல்' டாக்டர் மு. வ.)

'தந்தையை வாங்கினேன்'

அது நல்ல இரவு நேரம். ஜன்னலுக்கு வெளியே எல்லாம் கருகும் இருட்டு. ஒரே நிசப்தம் எங்கும். பகல் எல்லாம் உழைத்தவர்கள் அந்த இரவில் நிம்மதியாகத் தூங்கிக் கொண்டிருந்தனர். ஆனால் ஐந்து வயது நிரம்பிய டியானுவின் கண்கள் மட்டும் அகல விரிந்திருந்தன. அவனுக்குக் கவலை. அதனால் தூங்க முடியவில்லை.

'அம்மா என்னைக் கடையில்தானே வாங்கினாய்?'

'ஆமாம்.'

'கடையில் கண்ணாடி அலமாரி இருக்கிறதே, அதிலிருந்துதானே?'

'ஆமாம்; அதிலிருந்துதான்.'

'என்னை ஏன் அம்மா பொறுக்கி எடுத்தாய்?'

'ஏனெனில் நீ அவ்வளவு அழகாய் இருந்தாய்!'

'நிஜமாக நான் அவ்வளவு அழகாகவா இருந்தேன்?'

'நிஜமாகவே நீ அவ்வளவு அழகாகத்தான் இருந்தாய்!'

'உன்னிடம் அதற்கு மேல் பணம் இருக்கவில்லையா அம்மா?'

'டியானு! நீ என்ன சொல்கிறாய்? புரியவில்லையே!'


'ஏன் அம்மா, ஒரு அப்பாவையும் ஏன் வாங்காமலிருந்துவிட்டாய்?'

[அவனுக்கு ஏன் அப்பா இல்லை? எல்லாருக்கும் அப்பா இருக்கிறார்கள். அவனுக்கு மட்டும் தான் இல்லை. அவனுக்கும் ஒரு தந்தை வேண்டும். இந்தச் சிறுவன் எப்படி ஒரு தந்தையை வாங்கிக் கொள்ளுகிறான் என்பது தான் 'நான் ஒரு தந்தையை வாங்கினேன்' என்ற ருசிகரமான ருஷ்யப் படத்தின் தொடக்கம்.]

'பணம் சம்பாதிக்க நூறு வழிகள். ஆனால் ஒன்றே ஒன்று தான் நேர்மையான வழி.'

'என்ன அது?'

'அது உனக்குத் தெரியாது என்று எனக்குத் தெரியும்!'



சத்தியாக்கிரகம் எப்படிப் பிறந்தது?

முதன் முதல் சத்தியாக்கிரகம் காந்திஜி நெட்டாலில் இருந்த போது தொடங்கியது. அதற்குப் பெயர் 'சாத்வீக எதிர்ப்பு' (Passive Resistance) இந்தப் பெயர் இந்தியரின் எதிர்ப்பினுடைய உண்மையான தன்மையை எதிரொலிக்கவில்லை என்று காந்திஜி கருதினார். எனவே அவர் நடத்திவந்த ''இந்தியன் ஒப்பீனியன்'' என்ற பத்திரிகையில் இது சம்பந்தமாகச் சிறந்த யோசனை சொல்கின்றவர்க்கு ஒரு சிறு பரிசளிப்பதாக அறிவித்தார்.

அதில் மகன்லால் காந்தி என்பவர் ''சதாக் கிரகம்'' (சத்-உண்மை; ஆக்கிரகம்; உறுதி) என்ற சொல்லை விளக்கிப் பரிசைப் பெற்றார். அதையே மேலும் தெளிவுபடுத்தி, 'சத்யாக்கிரகம்' ஆக்கினார் காந்திஜி.

—முத்துலக்ஷ்மி



காதலோ காதல்!

அமெரிக்க நாவலில் கதாநாயகனும் கதாநாயகியும் ஒருவரையொருவர் ஆரம்பத்திலிருந்தே, விரும்பிக் கடைசிப் பக்கத்தில் ஒன்று சேருவார்கள்.

பிரெஞ்சு தேசத்து நாவலில் அவனும் அவளும் முதலிலேயே ஒன்று சேர்ந்து பிறகு வேறு ஒருவரைத் தேட ஆரம்பிக்கிறார்கள்!

ரஷிய நாவலில் கதாநாயகனும் கதாநாயகியும் ஒருவரையொருவர் விரும்பாததைப் பற்றியே ஐந்நூறு பக்கங்களில் கவலைப்படுவார்கள்! -ராஜப்பா




மாடி 2! படி 4! பத்திரிகைகளின் வயதை (ஆண்டு) க்குறிக்கப் பெரும்பாலான தமிழ்ப் பத்திரிகைகள் மலர் இத்தனை இதழ் இத்தனை என்று குறிப்பிடுகின்றன. இன்னும் சில பத்திரிகைகளில் முரசு — ஒலி, மணி — ஓசை, சங்கு — முழக்கம், தொகுதி — பகுதி இப்படிப் பலவாறாக வெளியிடுகிறார்கள்.

''மாடி — படி'' இப்படி ஒரு தமிழ்ப் பத்திரிகை வெளியிடுகிறது. அது எந்தப் பத்திரிகை தெரியுமா?

தமிழக அரசின் செய்தி இலாகா வெளியிடும் **'கிராம நலம்'**

தகவல்: **குத்தாலம் வீ. சம்பந்தன்**





சுடும் சாலைகள்

கடுங்குளிர்ப் பிரதேசங்களில் வெண்பனி உறைந்து விபத்துக்கள் நேராமல் தடுக்க வழி என்ன? சாலையை உஷ்ணப்படுத்தினால் பனி விழுந்ததும் உருகி நீராகி ஓடிவிடும். இதற்குச் சாதாரண சாலைகளை விட 10 சத விகிதம் முதல் 20 சத விகிதம் அதிகம் செலவாகிறது. மின்சாரக் கம்பிகள் உள்ளடங்கிய பிளாஸ்டிக் தகடுகளைச் சாலைகளில் பதித்துச் சாலைகளைச் சூடாக்குகிறார்கள். இதன் மூலம் சாலைகளில் பனி நிறைவதில்லை. கரையும் தண்ணீரும் ஓரமாக ஓடிச் சென்று விடுகிறது. விபத்துக்களும் குறைகின்றன. **— யூ. பி. எஸ்.**

நடிகர் முன்னேற்றம்!

''என் படத்தில் நடிக்க என்ன கேட்கிறீர்கள்?'' என்று கேட்ட தயாரிப்பாளர் ஒருவருக்கு நடிகரிடமிருந்து கிடைத்த பதில்கள்:

முதல் படத்தின்போது: ''நீங்கள் என்ன கொடுக்கிறீர்களோ அதை வாங்கிக்கொள்கிறேன். பணம் பெரிது இல்லை சார் எனக்கு; கலையுலக சேவையைத்தான் பெரிதாகக் கருதுகிறேன்.''

இரண்டாவது படம்: ''முதல் படத்துக்கு ஏழாயிரம் வாங்கினேன். அதற்குக் குறையாமல் இருந்தால் சரி.''

மூன்றாவது படம்: ''உங்களுக்குத்தான் நம்ம 'ரேட்' தெரியுமே! நான் நடித்தால் நிச்சயம் ஐம்பது நாள் ஓடும் என்பதும் தெரியும் உங்களுக்கு. அப்படியிருக்கும்போது இது என்ன சார் கேள்வி?''


நான்காவது படம்: ''எழுபத்தையாயிரத்துக்குக் குறைந்து ஒப்புக்கொள்வதில்லை என்று ஒரு கொள்கை வைத்துக் கொண்டிருக்கிறேன்.''

ஐந்தாவது படம்: ''பிளாக்கிலே எவ்வளவு கொடுப்பீர்கள்?'' **— எஸ். வி.**


—□—□—□—□—□—□—□—□—

டிராம் வண்டிகள் முன்னாளில் தண்டவாளங்களில் ஓடுவதில்லை. அவுட்ராம் என்பவர் மேடு பள்ளமில்லாமல் கெட்டியாகவுள்ள தரையின் மீது ஓடினால் ஒருவிதக் கஷ்டமுமில்லாமல் சுலபமாக ஓடும் என்று கூறினார். அதனால் தண்டவாளங்கள் போடப்பட்டு அவற்றின்மீது வண்டிகள் ஓடின. எனவே அவ்வண்டிகளுக்கு முதலில் ''அவுட்ராம்'' என்றும் பின்னர் அப்பாதைகளுக்கு ''அவுட்ராம் வே'' என்றும் பெயரிடப்பட்டன! பின்னர் நாளடைவில் ''டிராம்'' என்றும், ''டிராம்வே'' என்றும் பெயர்கள் வந்தன. **— ஸ்ரீதரன்**

டிராம்



—□—□—□—□—□—□—□—□—



கடுக்கன் கழன்றது!

அவர் ஒரு நாள் ஒற்றியூர்ச்சத்திரத்திலே துயின்று கொண்டிருந்தார். ஒரு கள்வன் அவர் காதில் மின்னிக்கொண்டிருந்த கடுக்கனைக் கண்டு அதை வந்து கழற்ற ஆரம்பித்தான். அவருக்குத் தூக்கம் கலைந்து விட்டது. அவர் ஒன்றும் பேசவில்லை. பாவம், அவனுக்கு என்ன ஆபத்தோ என எண்ணி மறு காதில் உள்ள கடுக்கனையும் கழற்றத் தக்கதாக மறுபக்கம் நித்திரையில் திரும்புபவர் போலத் திரும்பிப் படுத்தார். கள்வன் கழற்றிக்கொண்டு கம்பியை நீட்டினான்.

இப்படி ஒரு காதைக் கேட்டவனுக்கு மறு காதையும் காட்டியவர் யார் தெரியுமா? அவர்தான் வடலூர் வள்ளலார் இராமலிங்க சுவாமிகள். **- கோபால்**

''அழாதே !''

வாசுகியைக் கொஞ்சம் குரலில் கண்டித்தான் ராகவன். வாசுகி சத்தம் போட்டு அழவில்லைதான். ஆனால் அவள் கண்களில் படர்ந்த ஏக்கப் பார்வை — கசிந்து தேங்கும் கண்ணீர் — பெண்களின் அந்தக் கோலம் தானே ஆண்கள் மனத்தை அறுக்கும்.

''இதோ பார், வாசுகி! இப்படியே நீ ஊருக்குப் புறப்பட்டுப் போனால் பிறகு எனக்கு இங்கு இருக்கவே பிடிக்காது. ஆபீசில் வேலையும் ஓடாது'' என்றான் அவன் ஆதங்கத்தோடு. மனைவி இருக்கிறாளே— கணவனுக்கு அவள் ஒரு பலம்தான். எங்கிருந்தாலும் சரி அவள் மகிழ்ச்சியாக இருக்க வேண்டும். இல்லையென்றால் கணவனின் நெஞ்சுரத்தில்—உற்சாகத்தில் பாதி குறைந்து தான் போகும்.

வாய்மூடி மௌனியாக நெடுநேரம் இருந்த வாசுகி இப்போதுதான் பேசினாள்: ''பிரசவமாகித் தந்தி கொடுத்த உடனேயே நீங்கள் வரவேண்டும். ஓரிரு நாட்கள் அங்கு இருந்துவிட்டு என்னை அழைத்துக் கொண்டு வந்து விட வேண்டும்.''

''அட பைத்தியமே!'' என்று அவளுடைய தாய்மையின் மெருகேறிய கன்னத்தைக் கிள்ளினான் ராகவன். ''தந்தி கொடுத்த பிறகு தானா நான் வருவேன்? தங்கக் குழந்தை பிறந்ததும் அது அழுகிற முதல்அழுகை இந்தத் தந்தையின் செவிகளில் விழாதா என்ன?''

அவளுக்கு மேனி சிலிர்த்துப் போயிற்று. ஈரக் கண்களைத் துடைத்துக் கொண்டாள். கோடிப் பொன் கிடைத்த மாதிரி குளிர்ந்து விட்டது ராகவனின் மனம். அறையை விட்டு அவன் வெளியில் வந்தான். கூடத்தில் அமர்ந்திருந்த அவளுடைய மாமனார் ''நேரமாகிறதே!'' என்று முணுமுணுத்த படியே கைக்கடிகாரத்தைப் பார்த்தார்.

''இதோ ஒரு நிமிஷம் மாமா. டாக்ஸி கொண்டு வந்து விடுகிறேன்'' என்று கூறிய படியே வெளியேறிய ராகவன், சில நிமிடங்களில் டாக்ஸியோடு திரும்பி வந்தான். தயாராக இருந்த வாசுகியும், அவள் தந்தையும் அதில் ஏறி அமர்ந்தார்கள். அடுத்த ஒரு மணி நேரத்தில் அந்த மெயில் பெங்களூர் ஜங்ஷனை விட்டுச் சென்னைக்குப் புறப்பட்டது. வாசுகி தன் தலைப் பிரசவத்துக்கெனத் தாய் வீடு போகிறாள்.

முதல் வகுப்புப் பிரயாணம். அந்தப் பெட்டியில் வாசுகியும், அவள் தந்தையும் மட்டும்தான். இருவரும் எதிர் எதிராக அமர்ந்து கொண்டார்கள். வாசுகி, ஜன்னல் விளிம்பில் இடது முழங்கையை ஊன்றி, உள்ளங்கையில் மோவாயைப் பதித்து, ஓடி மறையும் காட்சிகளில் ஏதோ ஒன்றைப் பார்த்தபடி யிருந்தாள்.

ஆனால் அவளுடைய தந்தை? — அவளையே பார்த்தபடி இருந்தார். மகளென்றாலும், அந்தத் தாய்மையின் மலர்ச்சி — அந்தத் தெய்வீகம். அதற்குத்தான் எத்தனை அழகு? அவர் பார்த்தபடியே யிருந்தார். சட்டென்று அவர் பார்வை மங்கியது. ஏதோ ஒன்று திரையிட்டது. வேறொன்றுமல்ல; கண்ணீர்த் திரைதான். மகள் முழு மனத்தோடா வருகிறாள்? தயக்கம், சஞ்சலம், வேண்டா வெறுப்பு இவைகளுக்கு முக்கால் மனத்தைத் தீனியாகக் கொடுத்துவிட்டு மீதியுள்ள கால் மனத்தோடு — அவருக்குக் குமுறிக் குமுறி அழ வேண்டும் போலிருந்தது. ஆனால் அழலாமா? அவரே அழலாமா?

''சந்தோஷமா வாம்மா!'' என்றார் அவர். குரல் கிணற்றுக்குள்ளிருந்து வருவதுபோல்



தீனமாக ஒலித்தது. செருமிக் கொண்டார். அந்தச் செருமலைக் கேட்டுத்தான் வாசுகி திரும்பினாள். ''என்னப்பா!'' என்றாள்.

''நீ மனசில்லாமலே என்னோடு புறப்பட்டு வர்றே!'' என்று பரிதாபமாகப் புன்முறுவல் பூத்தபடியே அவர் சொல்லி முடிப்பதற்குள் ''அதெல்லாம் ஒன்றும் இல்லேப்பா!'' என்று வாசுகி இடைமறித்தாள்.

சிறிது நேரம் அவர்கள் பேசவில்லை. தந்தை—மகள் என்ற உறவில் — அந்த உணர்வில் ஏதோ ஒரு தொய்யல்.

''நீ தயங்கறதுக்குக் காரணம் இருக்கு. உனனோட சித்தி எப்படி நடந்துக்குவாளோ என்ற பயம் உனக்கு. அதுவும் நியாயம்தான். ஆனால் அதற்காக நீ வராமலே இருந்துட்டா எனக்கும் உன் சித்திக்கும் எவ்வளவு கெட்ட பேரு'' என்று அவர் முணுமுணுத்தார். முணுமுணுப்புத்தான். ஆனால் உள்ளத் துடிப்பில் — உயிரின் வாதையில் எழும் அந்த மெல்லிய ஓசை மற்றச் சத்தங்களையெல்லாம் அடக்கிவிட்டு மேலோங்கித் துடித்தது.

ஆயிரந்தான் ஆனாலும் தந்தை. அவர் கலங்குவதைக் காண வாசுகிக்குப் பொறுக்கவில்லை. ''என்னப்பா நீங்க?'' என்று கேட்டபடியே அவர் அருகில் வந்து அமர்ந்து கொண்டாள். ''நான் சந்தோஷமாத்தான் அப்பா வர்றேன். தாய் வீட்டுக்குப் போறதுன்னு ஒரு பொண்ணுக்குச் சந்தோஷமா இருக்காதா அப்பா?'' என்று அவள் கேட்டபொழுது, அவர் தமது மூக்குக் கண்ணாடியைக் கழற்றிவிட்டுக் கண்களைத் துடைத்துக் கொண்டிருந்தார்.

எங்கேனும் ஒன்று...

டி.கே.டி.துரைராசன்



ஆம். அவர் அழத்தான் செய்கிறார். ஆனால் சத்தம் போட்டு அழவில்லை. இருபத்திநான்கு ஆண்டுகளுக்கு முன்பு ஒரு நாள் அவர் கூச்சல் போட்டு அழுதார். ''லக்ஷ்மி, லக்ஷ்மி'' என்று தமது முதல் மனைவியின் சவக்களை படர்ந்துவிட்ட முகத்தை மார்போடு அணைத்துக் கொண்டு அழுதார்; துடித்தார்; புரண்டார். பிறகென்ன? திருமணமான இரண்டு ஆண்டுகளாக, அவர் அவளோடு வாழ்ந்த வாழ்க்கையின் மகத்துவம் அவருக்கு மட்டும்தான் தெரியும். விநாடிக்கு விநாடி அவர் நெஞ்சில் பெருமிதம் பொங்கச் செய்த ஒரு ஜீவன் — வாசுகியைப் போன்ற அழகிய ஓர் உயிர்ச் சிதறலைப் பெற்றெடுத்துத் தந்த அந்தப் பேருயிர் கேவலம் ஒரு நோயினால் அடிபட்டுப் போவதென்றால், அதைத் தாங்கிக்கொள்ளக் குறைந்தது ஆயிரம் நெஞ்சங்களாவது வேண்டும். ஆனால் அவருக்கு இருந்தது ஒரே ஒரு நெஞ்சம். அழாமல் வேறு என்ன செய்வார்?

''என்னப்பா சின்னக் குழந்தை மாதிரி அழறீங்க!'' என்று ஆதுரமாகக் கேட்ட வாசுகி, பிளாஸ்கை எடுத்துக் கொஞ்சம் காப்பியை ஊற்றிக் கொடுத்தாள். மிடறில் அது பாய்ந்த பிறகு அவருக்குக் கொஞ்சம் தெம்பு வந்தாற்போலிருந்தது.

வண்டி தன்பாட்டில் போய்க் கொண்டிருந்தது. அழுகையும் சிரிப்பும் அதற்கென்ன தெரியும்?

''வாம்மா வாசுகி'' என்று வரவேற்றது ஒரு குரல். சித்திதான். வாசுகி அவளைப் பயபக்தியோடு பார்த்தாள். திருமணமாகிக் கணவன் வீட்டுக்குப் போன இந்த மூன்று ஆண்டுகளுக்குப் பிறகு இப்போதுதான் அவள் தன் சித்தியை மீண்டும் பார்க்கிறாள்.

''சௌக்கியமா இருக்கீங்களா சித்தி?'' என்று கேட்டாள் வாசுகி. நறுக்கென்று பதில் வந்தது.

''என்னமோ நானே எண்ணிக்கிட்டிருக்கேன்.''

வாசுகி தன் உதட்டைக் கடித்துக் கொண்டாள்.

கேட்டது சுபாவமான கேள்வி. அந்தக் கேள்விக்கேற்ற பதில் இல்லை. பிறகு எப்படி ஆளுக்கேற்ற உபசாரம் நடக்கும்?

''வாம்மா வாசுகி, நீ போய்க் கொஞ்ச நேரம் தூங்கு. அசதியா யிருக்கும்'' என்று தந்தை பேச்சைத் திசை திருப்பினார். வாசுகி அறைக்குப் போனாள்.

இருபது, இருபத்தியொரு ஆண்டுகளாக அவள் இருந்து வளர்ந்த அறை. கைக் குழந்தையாக இருந்தபோது அவள் தூளியில் தூங்கியது அந்த அறையில் தான். பள்ளிச் சிறுமியாக இருக்கையில் செய்யாத குற்றத்துக்கெல்லாம் சித்தியிடம் குட்டு வாங்கியபின் பம்மிக் கொண்டது அந்த அறையில்தான். நன்றாக விவரம் தெரிந்த நாள் முதல் பெற்றெடுத்த அன்னையின் புகைப்படத்தை

வைத்துக் கொண்டு ரகசியமாக அவள் அழுதது அந்த அறையில்தான். கடைசியில் இப்பொழுது, தானும், தன்னுள் வளரும் ஓர் உயிருமாய், ஏதேதோ நினைவுகளெல்லாம் அலை புரளக் கட்டிலில் சாய்ந்து கொண்டதும் அந்த அறையில்தான்.

கண்களை மூடிக்கொண்டாளே தவிர வாசுகிக்கு உறக்கம் வரவில்லை. அசதிதான். ஆனால் மன ஊசலாட்டம் எங்கே தூங்க விடுகிறது? கணவனை விட்டு வந்து சரியாக ஒரு நாள் ஆகவில்லை. ஆனால் ஒரு யுகத்தை வாழ்ந்து முடித்த சலிப்பு. சித்தி சொன்ன வார்த்தைகள் அவருக்குத் தெரிந்தால்... ஒரு நிமிஷம் இங்கே தங்க விடுவாரா? அவருக்கும் அனுப்ப மனமில்லைதான். ஆனால் உலக வழக்கென்று ஒன்றுக்கு முன்பு விருப்பு வெறுப்புகள்—கோப தாபங்கள் எம்மட்டில்?

ராகவன் சொன்னதை வாசுகி இப்போது நினைவுகூர்ந்தாள்.

''இதோ பார் வாசுகி, உன் சித்தியின் முகத்தில்கூட நீ விழிக்கக் கூடாது என்பதுதான் என் எண்ணம். ஆனால் அழைத்துக் கொண்டு போவதற்கு உன் அப்பாவே வந்து விட்ட பிறகும் அடம் பிடிப்பதில் அர்த்தமில்லை. தலைப் பிரசவம் தாய் வீட்டிலேயே இருக்கட்டும். அதுவரையில் பல்லைக் கடித்துக் கொண்டு இருந்துவிடு. பிறகு மெட்ராஸ் பக்கமே நீ தலை வைத்துப் படுக்க வேண்டாம்.''

ஆம். அவர் சொன்னபடி பல்லைக் கடித்துக் கொண்டுதான் இருக்க வேண்டும். ஆனால் எத்தனை நாட்களுக்கு? முழுதாக இன்னும் ஒரு மாதம். முப்பது நாட்கள். அதுவரை இங்கேயே இருந்து இந்தச் சித்தியின் வார்த்தைகளைக் கேட்டுக் கொண்டு எப்படிக் காலந் தள்ளுவது? உடனேயே குழந்தை பிறந்து விட்டால்கூடத் தேவலாம் போலிருந்தது வாசுகிக்கு. ஆனால் மறுவிநாடியே, குறைப் பிரசவத்தால் குழந்தைக்கு ஏதாவது ஆகி விடுமோ என்ற பயமும் அவளைப் பிடித்துக் கொண்டு விட்டது.

அதுதான் தாயன்பின் தனித்தன்மை. உருவோடு வெளியில் வரும் முன்பே அந்தச் சின்னஞ் சிறு உயிரின் மேல் எத்தனை பாசம்!

அந்தத் தாயன்பும், தாய்ப் பாசமும் வாசுகிக்கு அனுபவிக்கக் கிடைத்திராதவை. அம்மா என்று அவள் வாய் நிறைய—மழலை ததும்ப அழைத்தது சித்தியைத்தான். வெகு காலம் சித்தி அவளுக்கு அம்மாதானே தவிரச் சித்தியல்ல. திருமணமாவதற்கு ஓரிரு ஆண்டுகளுக்கு முன்புதான் வாசுகி அவளைச் சித்தி என்று அழைத்தாள். இஷ்டத்துக்கு விரோதமாக—வேண்டுமென்றேதான் அப்படி அழைக்கத் தொடங்கினாள். தன்னைப் பெற்றெடுத்த சொந்தத் தாய்க்காகக்கூட அவள் ஏங்கவில்லை. சித்தியின் அன்புக்காக — அம்மா என்ற வார்த்தைக்கு ஈடாகக் கிடைக்க வேண்டிய பாசத்துக்காகத்தான் அவள் தவமிருந்தாள். அதைத் தராதபோது சித்தி எப்படி அம்மாவாக முடியும்? அம்மா என்று அழைப்பதற்கு வாசுகி ஒருத்திதானே இருந்தாள். மற்றபடி சித்திக்குப் பிள்ளைப் பேறு ஏது? அதையாவது உணர்ந்தாளா? உணராதவளை உணர வைப்பதற்காக — ஒரு வீம்புக்காக — அன்றிலிருந்து இன்றுவரையில் சித்தி என்று அழைத்தாலும் உள்ளத்தினுள்ளே சித்தி அவளுக்கு அம்மாதான். அந்த அம்மாவின் அன்புக்காக அவள் விநாடிதோறும் ஏங்குவது உண்மைதான்.

அன்று மாலை சித்தி ஏதேதோ அரற்றிக் கொண்டிருந்தாள். ''என்ன சித்தி?'' என்று கேட்டாள் வாசுகி. சித்தி பிடித்துக்கொண்டு விட்டாள்.

''எல்லாம் என் தலையெழுத்து. இந்த வேலைக்காரங்களை யாரு கட்டி மேய்க்கிறது? நான் ஒண்ணு சொன்னால் இவங்க ஒண்ணு செய்யறாங்க. இந்த லட்சணத்திலே நீ வேறே வாயும் வயிறுமா வந்துட்டே. எல்லாத்துக்குமாச் சேர்த்து என் பிராணன் தான் போகுது.''

வாசுகி ஒடுங்கி விட்டாள். அவள் பயந்தது சரிதான். ஆனால் சித்தி அதற்குள்ளாகவே தன் சுய சொரூபத்தைக் காட்டிவிட்டாளே என்று விக்கித்துப்போனாள். வந்த சுவடு தெரியாமல் திரும்பிவிடலாமா என்று நினைத்தாள். ராகவனின் வார்த்தைகள் வழிகாட்டியாக வந்து நின்றன. 'ஒரு மாதம் பல்லைக் கடித்துக்கொண்டு இருந்துவிட வேண்டியதுதான்' என்று திரும்பவும் தன் அறைக்கு வந்து படுத்துக் கொண்டாள்.

எப்போதையும் விட இப்போதுதான் அவள் சித்தியின் அன்புக்காக அதிகமாக ஏங்கினாள். ஆனால் இந்த நிலையிலும் சித்தி இவ்வாறு நடந்து கொள்வதை நினைக்க, நினைக்கத் துயரம் அவள் மனத்தைச் சூறையாடிக் கொண்டிருந்தது.

இதெல்லாம் இன்னும் முப்பது நாட்களுக்குத்தானே!

முப்பத்தி மூன்றாவது நாள்.

இயற்கையின் கெடு மூன்று நாட்கள் தள்ளி விடவே, வாசுகியை நர்ஸிங் ஹோமில் அட்மிட் செய்திருந்தார்கள். வாசுகிக்கு உணர்வு இருந்தது. ஆனால் அதில் தெளிவு இல்லை. பேச்சுக் குரல்கள் கேட்டன. ஆனால் அவற்றின் பொருள் விளங்கவில்லை. அப்படியொரு மயக்க நிலை.

வாசுகியின் தந்தை நர்ஸிங் ஹோமையே வட்டமிட்டபடி இருந்தார். என்ன நடக்குமோ என்ற வேதனை. ஏதேனும் நடக்கக் கூடாதது நடந்து விட்டால் எத்தகைய பழிச் சொல் வருமோ என்ற பயம் — இந்த இரண்டுமாய்ச் சேர்ந்து அவருடைய நைந்த உள்ளத்தை இப்படியும் அப்படியுமாகப் போட்டுத் துவைத்துக் கொண்டிருந்தது. அதிலும் ஒரு நிம்மதி அவருக்கு என்னவென்றால் வாசுகியின் சித்தி வழக்கம் போல் இல்லாமல் இரவு பகல் எந்நேரமும் நர்ஸிங் ஹோமில் இருப்பதுதான். முணு முணுப்போடும் — வேண்டா வெறுப்போடும்தான் அவள் இருக்கிறாளென்றாலும், எப்படியோ அவள் இருக்கிறாளே, அது போதும்.

உச்சிப் பகல் காய்ந்து கழிந்து மாலை நெருங்கிக் கொண்டிருந்தது. நர்சிங் ஹோம் காம்பவுண்டுக்குள் இருந்த பூந்தோட்டத்தில்

டிவிஎஸ் ரீடிரெடிங்கின் உயர்தரத்திற்குச் சிறந்த சான்று

டிவிஎஸ் ரீடிரெட் செய்த ஒரு டயர் 56,394 மைல் உழைத்தது - இன்னும் உழைக்கக்கூடிய நல்ல நிலைமையில் இருக்கின்றது *

இணையற்ற சாதனை *	
புது டயர் டிரெட்	36,987 மைல்
டிவிஎஸ் முதலாவது ரீடிரெடிங்	41,073 மைல்
டிவிஎஸ் இரண்டாவது ரீடிரெடிங்	15,321 மைல்
இன்னும்	10,000 மைல் ஓடக்கூடும்



இப்பொழுது இது இரண்டாவது முறை ரீடிரெட் செய்யப் பட்டது. மூன்றாவது முறையும் இது ரீடிரெடிற்கு உகந்தது. இவ்வித உழைப்பு, டிவிஎஸ் ரீடிரெட் செய்த டயர்களில் சாதாரணம். இதற்கு அடிப்படைக் காரணம் விஞ்ஞான ரீதியில், துளியும் பிசகாமல், கண்ணும் கருத்துமாக டிவிஎஸ் பணி செய்வதே.

நாங்கள் கையாளும் முறை:

(1) டயர்களை சுத்தம் செய்து, சிறு கண்ணாடித் துண்டுகள், ஆணிகள், கற்கள், முதலியவற்றை அப்புறப்படுத்தி, உள்ளும் புறமும் சுத்தப்படுத்தி, புதுப்பிப்பதற்கு வேண்டிய பக்குவம் செய்கிறோம்.

(2) கேஸிங்குகளுக்கு தேவையான இடங்களில் புதிய வலைவுகளை (plies) கொடுத்து பலப்படுத்துகிறோம்.

(3) எக்ஸ்ட்ரா-திக் காமெல்-பாக் ரப்பரை உபயோகப்படுத்துகிறோம். இந்த ரப்பர் கெடாமல் இருக்கும்பொருட்டு, குளிர்சாதன அறையில் அடைத்து வைத்திருக்கிறோம்.

டிவிஎஸ் ரீடிரெடிங் செய்வதால் ஒரு டயருக்கு அதிக மைல்கள் கிடைக்கின்றன. அதனால் ஒரு ரூபாய்க்கு இன்னும் அதிக டயர் மைல்கள் கிடைக்கின்றன.

TVS

டிவிஎஸ் —

இந்தியாவிலேயே மிகப்பெரிய ரீடிரெடிங் ஸ்தாபனம்

சுந்தரம் இண்டஸ்ட்ரீஸ் பிரைவேட் லிமிடெட் (டிவிஎஸ் ஸ்தாபனம்)

தொழிற்சாலைகள்: பங்களூர் · கோயமுத்தூர் · சென்னை · புதுக்கோட்டை · செகந்திராபாத் · திருநெல்வேலி

குறிப்பு: தற்பொழுதும் உழைக்கும் டயரின் படம் இது. இந்த ரிகார்டுகளை எங்கள் சென்னை ஆபீஸில் என்றும் பார்வையிடலாம்.

JWT-TVS 54-3946

அமர்ந்திருந்தார் வாசுகியின் தந்தை. சித்தி அவரை நோக்கிப் பரபரப்போடு வந்தாள்.

''என்ன பார்வதி?'' என்று எழுந்தார் பெரியவர்.

''டாக்டரம்மா கூப்பிடறாங்க. கல்லாட்டம் இங்கே உட்கார்ந்திருக்கீங்களே'' என்று அவரை இழுத்துக் கொண்டு போனாள் அவள்.

''வாங்க பெரியவரே!'' என்று வரவேற்ற டாக்டரம்மாள் மெல்ல மெல்லச் செய்தியைச் சொன்னாள். அது செய்தியா? அதைவிடத் 'தீ' என்று சொல்லலாம்.

குழந்தை உள்ளேயே இறந்திருக்கிறதாம். அறுவைச் சிகிச்சை செய்துதான் வெளியில் எடுக்க வேண்டுமாம். விக்கித்துப் போன வராய் டாக்டரம்மாளேயே வெறிக்கப் பார்த்தபடி நின்றார் அவர்.

''என்ன சொல்றீங்க?'' என்று கேட்டாள் டாக்டரம்மாள்.

சொல்வதற்கு என்ன இருக்கிறது?

அறுவைச் சிகிச்சை தொடங்கியது. நேரம் கல்லைச் சுமந்திருப்பது போல் கனத்து நகர்ந்தது. பெரியவர் மூலை சேர்ந்துவிட்டார். சித்தியின் குரல் கேட்டது. ''என்னங்க! வாசுகியின் வீட்டுக்காரர் வர்றாரு!''

இடி இறங்கி வந்து அழுத்தியதுபோல் இருந்தது. பெரியவர் எழுந்து வந்து வாசலை நோக்கினார். ராகவன் பரக்கப் பரக்க வந்து கொண்டிருந்தான்.

அவன் அவர்களை நெருங்குவதற்கும், அறுவைச் சிகிச்சை அறையிலிருந்து டாக்டரம்மாள் வருவதற்கும் சரியாக இருந்தது. ''நீங்கதான் வாசுகியோட ஹஸ்பெண்டா?'' ராகவனை அவளால் இனம் கண்டுகொள்ள முடிந்தது.

''எஸ் டாக்டர்'' என்று கூறிய ராகவன் ஆள் மாற்றி ஆள் மூன்று பேரையும் கேள்விக் குறியாகப் பார்த்தான்.

''குழந்தை வயிற்றுக்குள்ளேயே இறந்து போச்சு. ஆபரேஷன் செய்து வெளியே எடுத்துட்டோம். ஆனால் அதில் இன்னொரு சிக்கல். இனியொரு முறை வாசுகிக்குக் கருத் தரிச்சால் பிறகு வாசுகியின் உயிருக்கே ஆபத்து வரலாம். அதனாலே...''

டாக்டரம்மாள் மேலே சொல்லவில்லை.

''அதனாலே என்ன பண்ணணும் டாக்டர்?'' என்று ராகவன் துடித்தான்.

''கர்ப்பப் பையைத் திருப்பி வைச்சுத் தைக்கணும். உங்களுக்குச் சம்மதமா?''

ராகவனுக்குக் கண்கள் கலங்கி விட்டன. ''அப்படியே செய்யுங்கள் டாக்டர். குழந்தைகளைவிட எனக்கு வாசுகிதான் அதிகமாக வேண்டும்'' என்று கூறியபடியே, ஓரமாக இருந்த பெஞ்சின் மீது நிலை குலைந்து அமர்ந்து விட்டான்.

இருள் விழுந்து வெகு நேரமான பிறகு நர்ஸிங் ஹோம் வெறிச்சோடி விட்டது. ராகவனை அழைத்துக் கொண்டு வாசுகியின் தந்தை வீட்டுக்குப் போய் விட்டார்.

சித்தி...?

இடதுசாரி! - அரசியலில் அல்ல!

விடை: இடக்கரத்தால் அவர்கள் விருந்து படைத்ததற்குக் காரணம், குஜராத்திப் பெண்கள் வலது பக்கம் மாராக்குவிட்டுப் புடவை கட்டுவதால் எந்த வேலை செய்யும்போதும் வலது கைத் தலைப்பு சரிந்து விழுந்து விடுகிறது. ஆகவே 'ப்ரீ'யாக இயங்கும் இடது கையால் வேலை செய்து செய்து, அதே பழக்கமாகி விடுகிறது!

அவள் போகவில்லை. மாறாக, வாசுகி படுத்திருந்த அறையில், அந்தக் கட்டிலில் வாசுகியின் கால்மாட்டுக்கு அருகே அவள் ஏன் கல்லாக அமர்ந்திருக்க வேண்டும்? எப்போதும், வெறுப்பும், சலிப்பும், ஆணவமும், அகங்காரமுமே நிறைந்த அந்த முகத்தில் இப்போது ஏன் சவக்களை படர்ந்து போய்...?

அயர்ந்து உறங்கிக் கொண்டிருந்த வாசுகியின் அமைதியான முகத்தைப் பார்வதி இப்போது ஏறிட்டுப் பார்த்தாள். அது வாசுகியின் முகமா? அவளுக்கு அப்படித் தெரியவில்லை. ஒரு சாதாரணப் பெண்ணின் முகம். தாய்மை என்ற வரப்பிரசாதம் சித்திக்கப் பெற்றும், கைக்கு எட்டியது வாய்க்கு எட்டாமற் போன துர்ப்பாக்கியத்தின் வடிவம். தனக்கு 'இல்லவே இல்லை' என்ற விதி. வாசுகிக்கு இருந்தும் இல்லாமற் போய்விட்ட காலகதி. தன்னைவிட அவள் எவ்வளவு அபாக்கியசாலி?

பார்வதியின் கண்கள் துயரத்தில் கரைந்து கொண்டு வந்தன. புடவைத் தலைப்பால் அதைத் துடைத்துக் கொள்ளப் போன போது, 'அம்மா' என்ற முனகல் கேட்டது. அதைத் தொடர்ந்து வாசுகியின் நைந்த உடல் புரண்டு கொடுத்தது. மறுபடியும் 'அம்மா!' என்ற அவல ஒலி.

துயரம் மீறி வரப் பார்வதி வாசுகியின் கசங்கிப் போயிருந்த மலர் முகத்தை அள்ளி எடுத்து 'வாசுகி' என்று குரல் இழையக் கூப்பிட்டாள். கண்களைத் திறந்த வாசுகி 'சித்தி' என்று முனகினாள். ''இல்லேடி வாசுகி... நான் உன் அம்மாதாண்டி. சித்தி இல்லேடி...'' என்று புலம்பியபடியே பார்வதி வாசுகியை இறுக அணைத்துக்கொண்ட போது, வாசுகியின் வாயிலிருந்து 'அம்மா!' என்ற சொல்லும் எழுத்தெழுத்தாய்ச் சிதறி வந்தது.

வாசுகி இப்போது அம்மா இல்லை. இனி மேலும் ஆகப் போவதில்லை. ஆனால் அவளுக்கு ஓர் அம்மா கிடைத்து விட்டாள்.

ஏதேனுமொன்று கையை விட்டுப் போகும் போது அதற்கு நஷ்டஈடாக ஏதேனுமொன்று கிடைக்கத்தான் செய்கிறது.

வட்ட மேஜை

- ''ராஜாஜி என்ன சொல்கிறார்?''
- சங்கீத விமர்சனம்

ஆனந்த விகடன் ஜனவரி 30ந் தேதி இதழில் பிரசுரித்த ''ராஜாஜி என்ன சொல்கிறார்?'' என்ற தலையங்கத்தைப் பார்த்தேன். அது பற்றிச் சில வார்த்தைகள்:

நாட்டுக்குப் பிரதம மந்திரியாக வருபவரைக் குறித்து நடந்த ஒரு தேர்தல் பற்றிக் காங்கிரஸ் கட்சியும், காங்கிரஸ்காரர்களும் தான் பேசலாம், மற்றவர்களுக்குப் பேச உரிமையில்லை என்று நினைப்பது சரியில்லை. நாட்டின் பிரதம மந்திரியாக யார் இருந்தால் நல்லது, யார் இருக்கக் கூடாது என்று அபிப்பிராயம் தெரிவிக்க நம் நாட்டு மக்கள் யாவருக்கும் உரிமை உண்டு. ராஜாஜிக்கும் உரிமை உண்டு. ராஜாஜி சொன்ன புத்திமதியை ஏற்று நந்தா அவர்களைப் பிரதமராக ஏற்றுக் கொண்டிருந்தால், மத்திய காங்கிரஸ் பார்லிமெண்டரிக் கட்சியில் உள்ள பிளவும், இந்திரா காந்தியை எதிர்க்கும் 169 காங்கிரஸ் பார்லிமெண்ட் அங்கத்தினர்கள் இருக்கிறார்கள் என்பதும் பொதுமக்களுக்குத் தெரியாமல் இருந்திருக்கும். இப்பொழுது இந்திரா காந்தி பிரதம மந்திரியாக நிலைத்திருப்பாரா என்று பொதுமக்கள் சந்தேகப்படுகிறார்கள். காங்கிரஸ்காரர்களுக்கு மந்திரி சபையை அமைப்பதும், அழிப்பதும் ஒரு பொழுது போக்காக இருக்கலாம். நிலைத்திருக்கும் சர்க்காரை விரும்பும் பொதுமக்கள் காங்கிரஸ்காரர்களின் விளையாட்டில் விபரீதத்தைத்தான் காண்பார்கள். ராஜாஜி கூறியதுபோல் நந்தாவே நீடித்திருந்தால் இந்தக் குழப்பம் ஏற்பட்டிராது.

இருப்பவர்களுக்குள் அனுபவம் அதிகமுள்ள நந்தா நீடித்துப் பிரதமராக இருந்தால் நல்லது என்று ராஜாஜி அபிப்பிராயப்பட்டதால் காங்கிரஸின் அடிப்படைக் கொள்கைகளை அவர் மாற்றிவிடுவார் என்று கருதியதாகப் பொருளாகாது. எனவே காங்கிரஸின் அடிப்படைக் கொள்கைகள் மாறாத வரை யார் பிரதம மந்திரியாக வந்தாலும் திருப்திப்படுவதற்கோ, அதிருப்திப்படுவதற்கோ ஒன்றும் இல்லை என்று ராஜாஜி சொன்னதில் முரண்பாடு ஏதுமில்லை.

பதவிப் போட்டியை ஜனநாயக ரீதியில் நடத்துவதாக ஒப்புக்கொண்டு, அதற்கு ஒரு தேதியையும் குறிப்பிட்டுவிட்டு, பின்னர் பதவிப் போட்டியைத் தவிர்ப்பதற்குக் காங்கிரஸ் அக்கிராசனரும் மாநில முதல் மந்திரிகளும் தங்களுடைய செல்வாக்கையும் அதிகாரத்தையும் பிரயோகித்தபோது ஜனநாயகப் பண்பே அழிந்துவிடுமோ என்ற அச்சம் மக்களுக்கு ஏற்பட்டது. ஆகவே, விலகாமல், துணிவுடன் போட்டியிட்டதற்காக மொரார்ஜியையும் அவரை ஆதரித்த 169 நபர்களையும் ஜனநாயகப் பண்புள்ள ஒவ்வொருவரும் நிச்சயம் பாராட்டவே செய்வார்கள். ராஜாஜி பாராட்டியதில் ஒன்றும் ஆச்சரியமில்லை.

ராஜாஜி சாபம் கொடுத்துக் காங்கிரஸ் கட்சி அழியவேண்டிய நிலையில் இல்லை. காங்கிரஸ் கட்சியை அழிப்பதற்குக் காங்கிரஸுக்குள்ளேயே போதிய சக்திகள் இருக்கின்றன. கேரளத்தில் காங்கிரஸ் கட்சியை ஆட்சி பீடத்திலிருந்து விரட்டியது, காங்கிரஸ் கட்சியில் உருவான போட்டிக் காங்கிரஸ் கட்சி என்பது யாவருக்கும் தெரிந்த விஷயம்.

மதராஸ்—5
30—1—1966 த. ப. ராமநாதன்

ஜனவரி 30ம் தேதி ஆனந்த விகடனில் வெளியான ''ராஜாஜி என்ன சொல்கிறார்?'' என்ற தலையங்கத்தில் பிரதம மந்திரியைத் தேர்ந்தெடுக்கும் விஷயம் காங்கிரஸையே சாரும் எனவும் எதிர்க் கட்சித் தலைவர் ராஜாஜி இதில் கருத்துத் தெரிவித்தது தவறு எனவும் குறிப்பிடப்பட்டிருந்தது. இக்கருத்துத் தவறானது எனக் கருதுகிறேன். காரணம் நடந்து முடிந்த தேர்தல் அகில இந்தியக் காங்கிரஸ் கட்சித் தலைவர் தேர்தல் அல்ல. — காங்கிரஸ் கட்சி எப்படியோ போகட்டும் என்பதற்கு. ஒரு பெரிய ஜனநாயக நாட்டை நல்ல முறையில் நடத்திச் செல்ல ஒரு தலைவரைத் தேர்ந்தெடுக்கும் தேர்தல் இது. இதில் அக்கறை காட்டுபவர்கள் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர்களாகத்தான் இருக்க வேண்டும் என்ற அவசியமில்லை. இந்தியப் பிரஜை ஒவ்வொருவருக்கும் இதில் அக்கறை காட்டவும் யோசனைகள் கூறவும் உரிமை உண்டு. அதிலும் இவ்விஷயத்தில் யோசனை கூறியவர் சாமானிய இந்தியப் பிரஜை மட்டுமன்று. இந்திய உபகண்டத்தின் கவர்னர் ஜெனரலாயிருந்தவர், தமிழ் நாட்டின் முதல்வராயிருந்தவர், மகாத்மா, ஆசிய ஜோதி, படேல் முதலியோரின் நெருங்கிய நண்பர். காந்திஜியால் 'தமது மனச்சாட்சியின் காவலர்' என்றும், 'மனச்சாட்சிப்படி நடப்பவர்' என்றும் பாராட்டப்பட்டவர். ஏன்? பழைய காங்கிரஸ்வாதி என்ற ஓர் உரிமையிலேயே அவர் யோசனைகள் கூறத் தகுதி உள்ளவர். அவரது தகுதி பற்றிக் கேள்வி கேட்பது, விந்தையிலும் விந்தையாய் உள்ளது.

சென்னை,
27—1—66 ஜி. கே. மூர்த்தி

சமீபத்தில் சென்னையில் நடந்த சங்கீத விழாக்களில் பங்கு பெற்றோரின் கச்சேரிகளைப் பற்றி விரிவானதொரு விமரிசனத்தை வெளியிடக் கூடாதா? 'கல்கி' ரா. கி. உயிரோடிருந்தால் கட்டாயம் நான்கு வாரங்களுக்கு விருப்பு வெறுப்பின்றி விமரிசித்து வெளுத்து வாங்கியிருப்பார்.

திருவையாறு
24—1—66 'கங்காநாத்'

Edited printed & published by T. Sadasivam on behalf of Messrs. Bharathan Publications Private Ltd., at the Kalki Press, Kilpauk, Madras-10



MTP-1-P-1-65/66 TM

REGISTERED No. M. 4392
Registered as a Newspaper in Ceylon

